# செந்தமிழ்

| தொகுதி | திருவள்ளுவராண்டு 2006 | பகுதி |
|---|---|---|
| 70 | ஆனந்த பங்குனி மார்ச் 1975 | 1 |

1 **காலமும் — கோலமும்** — 1

திருமிகு. கவியோகி சுத்தானந்த பாரதியார்.

2 **அறிஞன் காட்டும் மேற்கோள்** — 4

திருமிகு. இராம. சண்முகம்.
திராவிட மொழிகள் துணைப்பேராசிரியர்,
மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.

3 பராபரக்கண்ணியில்
**(3) தத்துவம்—இறைமை** — 9

திருமிகு. பு. மு சாந்த மூர்த்தி எம். ஏ,

4 சிலம்பு- **பெருங்கதை ஓர் ஒப்பாய்வு** — 15

திருமிகு. இரா. காசிராஜன் எம். ஏ,
கேரளப் பல்கலைக் கழகம்.

5 **நாடகத் தந்தை** — 19

செஞ்சொற் பாவலர் ப. சங்கரலிங்கம்.

6 **அகம் வீடளிக்கும்** — 23

திருமிகு. ப. இராமன் எம். ஏ,
துணைத்தமிழ்ப் பேராசிரியர்,
விவேகானந்தா கல்லூரி, சென்னை.

7 தமிழிலக்கியங்களில்
**வேலன்** — 33

புலவர் திருமேனி நாகராசன், காரைக்கால்.

8 "அல்ல" "இல்லை" எனும் எதிர் மறை வினைகள் — 38

திருமிகு. கோ. சுப்பையா எம்.ஏ. பி. எச்டி,
இந்திய மொழிகளின் நடுவண் நிலையம்,
மைசூர்-570006.

9 திராவிட மொழிகளில்
வண்ணனை அமைப்பும்
வரலாற்று அமைப்பும் — 42

திருமிகு இரா. கோதண்டராமன்
எம். ஏ, எம். ஏ,

10 சங்கச் செய்திகள் — 46

நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வு முடிவுகள்

# காலமும் - கோலமும்

( புதிய தொடர் கதை )

கவியோகி
சுத்தானந்த பாரதியார்

நடந்த கதை

[ அறிவொளி (ஞானப்பிரகாசம்) சிறந்த சிந்தனையாளன். மாணவர் சங்கத் தலைவன். அவனது நண்பன் பேச்சழகன், நல்ல புலவன். இருவரும் மதுரைக் கல்லூரி மாணவர். விஞ்ஞானமும் இலக்கியமும் கற்பவர். அறிவொளி அடக்கமாகச் சிந்தித்துத் தன் கருத்துக்களைப் பேச்சழகனிடம் சொல்லுவான். பேச்சழகன் மேடையில் அனைவரும் அறியப் பேசுவான். இருவரும் இணைபிரியாமல் காலவேகத்தையும் காலத்தால் வந்த தீமைகளையும் கண்டு சிந்தித்து நல்வாழ்வுக்கு வழி தேடுகின்றனர். இவர்கள் ஆளைச் சுற்றி அமர்க்களம் செய்யும் மதங்களை ஒப்பவில்லை. உருக்கடவுளை நம்பவில்லை... கடவுள் என்றால் நமக்குள்ளே இருந்து நம் அறிவைத் தூண்டி நடத்தும் சுத்த சக்தி என்பது இவர் உறுதி. இருப்பினும் இவர்கள் கோவில் சாமி, சமயங்களை வெறுப்பதில்லை. சித்ரா பௌர்ணமியன்று பேச்சழகனுடன் அறிவொளி மீனாட்சி-சுந்தரேசர் கோவிலுக்குச் சென்றான். பொற்றாமரையில் நிழலும் முழுமதியைப் பார்த்து நின்றான்-பிறகு தனிமூலையில் அமர்ந்து சிந்தித்தான். ''உள்ளம் பெரும் கோயில்-ஊனுடல் ஆலயம்'' என்ற திருமூலர் சொல்லை நினைத்தான் ...... தனக்குள் சிந்திப்பது யார்? கனவு காண்பது யார் என்று ஆய்ந்தான்... அப்போது மீனாட்சி சந்நிதியில் அமுதம் பாடினாள் — வீணை யாழிசைத்தாள். ஒலிப்பெருக்கியால் பாட்டு கோயிலெங்கும் பரவியது. ஏராளமான அன்பர் கேட்டு இன்புற்றனர்... அறிவொளி அந்தப் பாட்டில் தன்னை இழந்தான். குயிலான குரலில் ஈடுபட்டு... உணர்ச்சி கொண்டான். தாயுமானவர், அருணகிரியார் பாடல்கள் அவன் மனதை உருக்கின.. பாடிய அழகி-அமுதத்தினிடம் தெய்வ சக்தியைக் கண்டான். அதுவே நினைப்பானான்...(இத்தொடர் கதையில் இடையிடையே வரும் இன்னிசைப் பாடல்கள் சுத்தானந்தர் பாடல்களே அவை வாழ்விற்கு விருந்தாகும்.)

### 4. மாணவர் கூத்து

அருட்கோயிலைக் கண்டோம்; அறிவுக்கோயிலைக் காண்போம். மாணவருடன் மாணவராகப் பழகினல் நமக்கும் மறுமலர்ச்சி பொலிகிறது. தேர்வு முடிவுகள் வந்துவிட்டன. வெற்றி பெற்ற மாணவர் பட்டம் பெற்று வீரநடை போட்டு நாட்டுக்கொடியைச் சுற்றிப் பவனி வருகின்றனர் மாணவர் ஒருவட்டம்; மாணவியர் ஒரு வட்டம்; சுற்றிப்பாட்டுக் கேற்றபடி அடிபெயர்த்து அழகாக நடக்கின்றன. பாட்டு தாள ஒழுங்குடன் அதோ முழங்குகிறது. ஒருவர் அங்கேபாடியதும் இங்கே இருநூறு குரல்கள் பின்னே பாடுகின்றன ......

**எல்லாரும் :** புதுநலமும் முதுநலமும்
பொருந்தி வாழ்வோரும்

எதுநலமோ பொதுநலமோ
இயற்றி வாழ்வோமே

**ஆண்கள் :** ஒற்றுமையாய் ஒருகுலமாய்
உலகில் ஓங்குவோம்

கற்றுழைத்து வளம்பெருகக்
கலந்து வாழுவோம்

**பெண்கள் :** அருணனிலே கிரணமென
அழகில் ஒன்றுவோம்
கருணையுள்ள தாயினைப்போற்
கடமை செய்குவோம்

**ஆண்கள் :** ஆண்மையுடன் வீரமுடன்
அன்பு செய்வோம்
மாண்மையுடன் மாந்தர் மறு
மலர்ச்சி எய்தவே

**பெண்கள் :** ஆணும் பெண்ணும் ஆடல்புரியும்
அமுதச் சோலையில்
காணும் இன்பக் கனிகளுண்போம்
கவலையில்லையே

எல்லாரும் : ஏழிசையும் கருவிகளும்
இணைந்த பாட்டுப்போல்
ஆழியுலகில் அகமும் புறமும்
அமுதமுறவே - சுத்
தானந்தம் பெறவே - வாழ்வோம்
ஆன்ம நேயர்காள்

அறிவொலி அதோ பேச்சழகனுடன் ''தக்கு தகிட தக்குத் தகிட'' என்று தாளம் போட்டு அடிபெயர்த்து நடக்கிறான். கொடிமரத்தடியே தலையுயர்த்தி நின்று பேசுகிறான்.
நண்பர்களே! பண்பர்களே, அன்பர்களே,

நெடுங்கனவினன்று என் மனம் எழுந்தது. இதுகாறும் நூலறிவே நுவன்றேன்; அச்சு வரிகளை மெச்சினேன்; ஆனால் கண்ணைத் திறந்து உலகைப் பார்க்கும் போது நூலறிவுக்கு மிஞ்சிய இயலறிவு காண்கிறேன். இதுகாறும் கல்லூரியின் உள்ளிருந்து அறிவைப் பருகினேன். என் பசி அடங்கவில்லை. வெளியே நோக்கினேன்: எத்தனையோ புதிர்கள் சிந்தனைப் புதர் களில் ஒளிந்து நெளிந்து எழுந்து என்னை முற்றுகையிட்டன. இதோ பட்டப் பெற்றோம், பரிவட்டம் பெற்றோம், வரலாறு, இலக்கியம் அறிவியல், உள்ளியல் அனைத்திலும் தேர்ந்தோம். ஆனால் உலகியல் நம்முன் மயக்குந் தெய்வமாக நிற்கிறது. கலையில் தேர்ந்தோம்-உலக வலையில் தேர்வோமா? கலையை வென்றோம் கவலையை வெல்வோமா? எத்தனை இளங்கலை, வளங்கலை வாணர் வேலையின்றி வருந்துகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் போகுமா? படித்தவரெல்லாம் பாடுபட்டுப் பிழைக்க வாய்ப்புக் கிடைக்குமா? இந்தக் கேள்வியை உங்களுக்குப் போடுகிறேன் விடையை நாடுகிறேன்.

—தொடரும்

# அறிஞன் காட்டும் மேற்கோள்

**இராம. சண்முகம்**
*திராவிட மொழிகள் துணைப்பேராசிரியர்,*
*மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை.*

பொதுவாக மனிதஉள்ள வளர்ச்சியின் பல்வேறு நிலையங்களில் அவ்வவ்வற்றின் இயல்பிற்கேற்பமாற்றமும் திருத்தமும் கொண்டு பொருந்திவரும் உட்துடிப்புக்களும் ஒரு சில உள்ளங்களிலே மட்டிலும் விளங்கும் உட்துடிப்புகளும் வேறுபட்ட இயல்புடையன. கணிதத்தில் விளங்கும் ஒரு விதியை கணக்கறிவு படைத்த ஒரு மூளை உணர்ந்து பெறும் உட்துடிப்பினின்றும் முற்றிலும் வேறானது. சிறப்பான அனுபவமும் அறிவுமின்றி உருபெறாத இந்த உட்துடிப்புக்களின் எதிர் துலங்கலைப் பயன்படுத்தும் பொழுது கலைஞனது வெளிப்பாட்டு நிலையும் சுருங்குகிறது; பொதுவாகப் படிப்போனுக்கும் சிறப்பாக கற்போகனுக்குமிடையே உள்ள இடைவெளியும் விரிகின்றது.

எடுத்துக்காட்டாக பாரதியின் பாட்டை எடுத்துக்கொள்வோம். 'தொண்டு செய்யும் அடிமை உனக்குச் சுதந்திர நினைவோடா?' என்ற பாட்டு எழுதப்பட்ட காலத்தில் அது அனைவருக்கும் இன்பம் தந்தது. காரணமென்னவெனில் அக்காலத்தில் பெரும்பான்மையான மக்கள் கோபாலகிருஷ்ணபாரதியின் நந்தன் சரித்திர கீர்த்தனைகளில் விளங்கும் 'மாடு தின்னும் பறையா உனக்கு மார்கழித் திருநாளா?' என்ற கீர்த்தனையை நாடகங்களின் வாயிலாகவும் இன்னிசை நிகழ்ச்சிகள் வாயிலா, கவும் செவிமடுத்திருக்கிறார்கள். பாரதி அதே மெட்டில்தான் அதே ஆண்டான் அடிமைக்குக் கூறும் நிலையில் வைத்துத்தன் பாடலைப் பாடினான். அதனால் மற்ற வேறு எந்த மெட்டிலும், வேறு எந்த நிலையிலும் பாடித் தன் உட்துடிப்புக்களை வெளியிட முடிவதைக் காட்டிலும் அம்முறையில் மிகவும் வன்மையாகவும், எளிமையாகவும் அவனால் வெளியிட முடிந்தது. எனவே அந்தப்பாடலைப் படித்து அவனது உட்துடிப்புக்களைப் புரிந்து கொள்ளக் கூடிய உள்ளங்களின் தொகை பெருகிற்று.

ஆனால் இன்றோ நந்தன் கீர்த்தனையை அறியாத ஒருவன் பாரதியின் மேற்சொன்ன பாடலைப் படிக்குங்கால் பெறும் உட்துடிப்புக்களைப் பெறுவது இயலுமா? இயலாதன்றோ? நந்தன் கீர்த்தனையை அறியாதோர் பெருகின் பாரதியின் பாடலில் உட்துடிப்புக்களை முழுவதும் எதிர்துலங்கி காட்டுவோரின் தொகை குன்றும்; அதனால் கவிஞனது வெளிப்பாட்டு நிலையும் சுருங்குகின்றது. அத்துடன் நந்தன் பாடலைக்கற்றுப் பாரதியின் பாட்டைப்படிப்போனுக்கும், கல்லாது படிப்போனுக்கும், இடையே உள்ள இடைவெளியும் விரிகின்றது. இத்தகையதொரு நிலையிலுள்ள சிக்கலைக் கடக்கவோ மேற்கொள்கைகளைக் கையாள்வது கவிஞர்களிடையே வழக்காக இருக்கிறது. அவ்வாறு மேற்கோள்களைத் தம் பாடல்களிற் கையாளும் பொழுது முன்னோர் மொழி பொருளையோ அல்லது அவர் மொழியையோ பொன்னேபோல் பேரற்றுவதுண்டு.

"முன்னோர் மொழிபொருளே யன்றியவர் மொழியும்
பொன்னே போற் போற்றுவ மென்பதற்கும் முன்னோரின்
வேறு நூல் செய்துமெனு மேற்கோளில் லென்பதற்கும்
கூறு பழஞ் சூத்திரத்தின் கோள்"

என்று நன்னூற் பொதுப்பாலிலும் கூறுகிறது. மணிமேகலையில்

"தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யென பெய்யும்மழை யெனும்
பொய்யில் புலவன் நன்மொழி தேராய்'

என்று பொன்னேபோல் போற்றப்பெற்றுளளமையும் அதே குறளின் மணிமொழிப்பொருள் சிலம்பில் 'பீடன்று' என்ற ஒரே சொல்லில் போற்றப் பெற்றுள்ளமையும் காண்க,

பொதுவாக இவ்வாறு மேற்கோள் பெற்றுள்ளது எத்தகையது என்று அறியாது கற்பவன் படிப்பின் அதனால் வரும் கேடொன்றுமில்லை.

"மெய்யெலாம் வெண்ணீறு சண்ணித்த
மேனியான் தாள் தொழாதே
உய்யலாமென்றெண்ணி யுறிதூ சகி
யுழிதந்தென் உள்ளபபிட்டு
கொய்யுலா மலர்ச்சோலைக்குயில கூவ
மயிலாலும் ஆருரைக்
கையினல் தொழாதொழிந்து கனியிருக்கக்
காய் கவர்ந்த கள்வனேனே"

என்ற திருநாவுக்கரசரின் பாடலில்

"இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று'

என்ற மணிக்குறள் கையாளப்பட்டுள்ளமை நோக்குக.

அப்பாடல் மேலும் பல நுண்மையான உட்துடிப்புக்களை நம் உள்ளத்தில் உண்டாக்கி இனிமைபயக்கின்றது. எனினும் மேற்சொன்ன குறளை அறியாத ஒருவன் அந்தப் பாடலைப் படிப்பினும் சுவை குன்றவில்லை; அப்பர் பாடலையும் ஒப்பவே உணர்ந்து சுவைக்க முடிகிறது.

இனிச் சில இடங்களில் பாட்டிலுள்ள மேற்கோளைப் புரிந்துகொள்ளாவிடின் கற்பவன் இழப்பது மிகப் பெரிதாகி விடுகிறது.

'வானின் றிழிந்து வரம்பிகந்த மாபூதத்தின் வைப்பெங்கும்
ஊனுமு யிருமுணர்வும் போலுள்ளும் புற முமுளனென்ப
கூனும் சிறியகோத்தாயும் கொடுமை இழைப்ப கோல் துறந்து
கானும் கடலும், கடந்திடு யோரிமைக்கண் தீர்த்த
..................கழல் வேந்தே'

என்ற கம்பனது பாட்டில் தனது இராமாவதாரக் கொள்கையை வடித்து எடுத்து வைத்திருக்கிறான் என்ற உண்மையைப்புரிந்துகொள்ளாதவர்கள் இப்பாடலின் முழுசுவையையும் பெறுதல் அரிதாகும். இங்கு கற்பவன் இழப்பது சாலப் பெரிது.

இவ்வாறு கவிஞர் எடுத்தாளும் மேற்கோள்களைப் பற்றிச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அவற்றைக் கையாள்வதிலும் சுவைப்பதிலும் பொருத்தமான நோக்கமும், பொருத்தமற்ற நோக்கமும் இருக்கலாம்.

ஒருமேற்கோளைப்புரிந்து கொள்வதோ அல்லது புரியாமல் இடருறுவதோ பெரிய செயல் அன்று. அத்துணை உறுதிப் பொருளும் இல்லை. அதனை இலக்கியத்தின் உறுதிப் பொருளுடனே அன்றிப் பாட்டின் உறுதிப் பொருளுடனே கூட்டிக் குழப்புதல் கூடாது.

பொதுவாக கம்பனுடன் தொடர்புடைய ஒருவன், அவன் முன்னோர் மொழிப் பொருளையோ அன்றி அவர் மொழியையோ மேற்கொள்கிறன் என்று உணராமலேயே அவனது (கம்பனது) கவிதையைச் சுவைத்தல் இயலும். ஆனல் சுற்றறிந்த பண்டிதனே அந்த உண்மையைப் பெரும்பாலும் மறந்து விடுகின்றன்.

கற்றறிந்த சுவைஞனைப் போலவே கவிஞனும் மேற்கோளை ஒரு வலிமை வாய்ந்த பொறியாகப் பயன்படுத்து கிறன். அப்பொறி ஈடுபாடின்மையைத்தன்பால் வரவேற்று அழைத்துக் கொள்கிறது. சோம்பலை வளர்த்து மறைத்துக் கொள்கிறது இது ஒருவழக்கமாகப் போய்விடின் ஒரு நோயாக முடிந்து விடும். எனினும் மேற்கோள் பாட்டில் ஒரு தனிச் சிறப்புற்ற நிலையைப் பெறுகின்றது. யாரும் மறுக்க முடியாது.

மேற்கொள்களைக் கையாள்வதால் பாட்டுத் தனது அனுபவத்தின் வடிவங்களையும் கூறுபாடுகளையும் தொழிற்படுத்திக் காட்ட மிகச் சிறந்ததோர் நெறியிற் செல்கிறது. அந்த அனுபவ வடிவங்களும் கூறுபாடுகளும் வாழ்க்கைக்கு இன்றியமையாதனவாக இல்லாவிடினும் அவற்றைச் சிறப்பாகத் தெளிந்து உணருவதற்காக வேண்டியாவது தேவைப்படுகின்றன. மேற்கோளால் ஏற்படும் இடர்பாடு பொதுவான வெளிப்பாட்டில் உள்ள இடர்பாட்டில் ஒரு சிறப்பு நிலையாகத்

தான் இருக்கிறது. இன்றுள்ள மனிதனின் எண்ணமும் உணர்ச்சியும் அவனவனது தனிப்பட்ட வாழ்க்கை அனுபவத்தைப் பொறுத்தே இருக்கின்றன. இந்த அனுபவங்கள் முற்கால மனிதனது அனுபவங்களை விடத் தனிச்சிறப்புடையவை.

கவிஞன் அப்படிப்பட்ட நிலையில் பலதிறப்பட்ட வாழ்க்கை அனுபவங்களைக் கற்போன் உள்ளத்தில் உருவாக்குகிறான். பெரும்பான்மையோர் அவன் கவிதையை உணரமுடிவதில்லை என்பதற்காகக் கவிஞனுடைய இயற்கையான அனுபவத்தையும் பெருக்கத்தையும் மறுக்கஇயலாது. அது அவனுடைய குறையன்று; சமுதாய அமைப்பின் குறையேயாகும்.

---

## அன்னை வாழ்க!

நீல வானின் உயரத்தை
நெஞ்சங் கவரும் நீலப்பரப்பைக்
கோலக் கடலின் ஆழத்தைக்
குன்றத் தமைந்த பேரூரத்தைச்
சாலத் துளிக்கும் பனி நீரைச்
சாந்தில் தொடுத்த தீந்தேனை
மூலச் சொல்லாய் முகிழ்த்தோங்கும்
முன்னைத் தமிழே வாழியவே

புலவர் **இரா. இளங்குமரன்**

பராபரக் கண்ணியில்

# (3) தத்துவம்- இறைமை

திருமிகு. பு. மு. சாந்தமூர்த்தி எம். ஏ

இறையுணர்வால் உந்தப்பட்டுத் தாயுமானவர் பாடும் பராபரக் கண்ணிகள் எளிமையும் இனிமையும் நிறைந்தனவாய் அமைகின்றன; நுண்மையான இறைத்தத்துவங்களையும் சிறப்பாக உணர்த்துகின்றன.

'சீராரும் தெய்வத் திருவருளாம் பூமி' எனத்தொடங்கும் முதல்வரியே முப்பத்தாறு தத்துவங்கட்கும் ஆதாரமாயுள்ள சிவசக்தியினைக் கூறுகிறது. இறைப்பேரறிவு அளந்து காண முடியாது என்பதை 'ஆரறிவார் என்ன அனந்தமறை ஓலமிடும் பேரறிவே' எனும் தொடர்கூறுகிறது. மறைகள் யாவற்றையும் கடந்தவன் முழுமுதற் பரம்பொருள் என்பதிதன் தத்துவம்.

'சும்மா இருக்கின்ற' சுகமறிந்த-மௌனமுற்ற அடியார்களாக மாறினல், அவர்தம்மனத்தில் பேரொளியாய் வளர்ந்து அளவற்று நின்று இன்பம் தருவான் என்னுங் கருத்தை,

'உரையிறந்த அன்பருளத் தோங்கொளியா யோங்கிக்
கரையிறந்த இன்பக் கடலே' என்னுங் கண்ணி கூறும்.

'தொண்டர் அகமலால் கோயிலில்லை ஐயன் ஐயாறனார்க்கே' என்பது தேவாரம்.

எண்டிசையும் எவ்விடத்தும் நிறைந்திருக்கும் இறைவன் திருவருள் உண்மையைத் தெளிவாக உணர்ந்து கொண்டால் 'பொற்பறிந்தோர் கைக்குள் வளர் நெல்லிக்கனி' யாவான் இறைவன். இறைவனை அறிந்தால்-உணர்ந்தால் அவன் எவ்வளவு எளியவனுவான் என்பதை விளக்குவதே இங்குத்தத்துவம். இறைவன் அனைத்துமாவான் என்பதை, 'வாக்காய் மனதாய் மனவாக் கிறந்தவர்பால் தாக்காதே தாக்கும் தனி' என்னும் கண்ணி கூறும். சொல்லும் நினைவும் கடந்த ஞானிகளாகத் திகழ்ந்தால் இறைவன் அவர்தம் அகத்தில் நிறைந்து விளங்குவான் என்பது தேற்றம். உயிர்களுக்குத் தகுதியான சுற்றமாக

இறைவன் வாய்க்க வேண்டுமெனின், உயிர்கள் எவ்வாறமைய வேண்டும் என்டதைக் கூறும் கண்ணியார்,

'சித்த நினைவும் செயும்செயலு நீயெனவாழ்
உத்தமர்கட் கான உறவு' என்கிறார். எனவே, எண்ணமும் செயலும் இறைவனை நோக்கியே அமைய வேண்டும் என்பது அறிவுறுத்தப்படுகிறது இவ்வறிவு நிலையில் உயிர் சிறப்புறும் போது இறைவன் வருகை எவ்வாறமையும்? முத்திப் பேரில்லத்தில் விளங்கும் இறைவன் திருவடித் தாமரையை வணங்கும் அன்பருக்காகவே சித்தாந்த வீதியில் அவன் எழுந்தருளுவான் என்பதை,

'முத்தாந்த வீதி முளரிதொழு மன்பருக்கே
சித்தாந்த வீதிவரும் தே' - என்னுங் கண்ணி பாடுகிறது.

'யான்' 'எனது' எனச் செருக்குற்ற நிலையில் உயிர் வாழ்ந்திருந்தால், இறைப்பேரருள் வாய்க்காது என்பதைக்கூறும் போது 'ஈனந் தருமுடலம் என்னதியா னென்ப' என்னும் தொடரமைக்கிறார்.

'பழியுடை யாக்கை தன்னில் பாழுக்கே நீரிறைத்து
வழியிடை வாழமாட்டேன் மாயமும் தெளிய கில்லேன்'
எனப்பாடுவார் திருநாவுக்கரசர்.

'மாறா அனுபூதி வாய்க்கினல்லால் என் மயக்கம்
தேறாது' என்பதன் மூலம் வேறுபடாத சிவானுபவம் வாய்த்தால்தான் மன மயக்கம் தெளியும் என்கிறார். இதனையே'
சுத்த அறிவாய்ச் சுகம்பொருந்தி னல்லாலென்
சித்தம் தெளியாது' என்பதிலும் கூறுகிறார்.

'வஞ்சனையும் பொய்யுமுள்ளே வைத்தழுக்கா றுயுளறு.
நெஞ்சனுக்கு முண்டோ நெறிதான்?'
என வினவுதன் மூலம் இறைநெறியை அறியுமுறை உணர்த்தப் பெறுகிறது. தாயுமானவரே மற்றோரிடத்தில் இதனையே வலியுறுத்துவார் போலப்

'பொய்கண்டார் காரைப் புனிதமெனும் அத்துவித
மெய்கண்ட நாதனருள் மேவுநாள் எந்நாளே'
எனப் பாடுவார்.

'சொல்லும் பொருளுமற்றுச் சும்மா இருப்பதற்கே
அல்லும் பகலுமெனக் காசை'

என்பதன் மூலம் மௌன நிலையின் உயிர்த்தன்மையைக் கூறு கிறார். இம்மௌனநிலை அடையும்போது இறையருள் நிறை வேறும் என்பது தத்துவமாகும்.

'அறிவாக நின்ற நிலையில்
சிந்தையற நில்' என்று சும்மா இருத்திமேற்
சின்மயா னந்த வெள்ளம்
தேக்கித் திளைத்து நானதுவா யிருக்கநீ
செய்சித்ர மிகநன்றுகாண்'

என்று அவரே மௌனகுரு வணக்கத்தில் பாடுவார்.

உயிர் இறைவனுக்கே என்றெண்ணும் நினைப்பைக் கூறும் முறையில், தாயுமானவர் 'அடியேனைக் காத்தருளல் இறை வனுக்கே கடனென்றெண்ணி வாழும் பழக்கத்தினையே அழியாத வரமாகத் தந்தருள வேண்டும்' என்கிறார்.

'பரமுனக்கென் றெண்ணும் பழக்கமே மாறா
வரமெனக்குத் தந்தருள்' என்பது கண்ணி.

'துறக்கப் படாத உடலைத் துறந்துவெந் தூதுவரோ
டிறப்பன் இறந்தால் இருவிசும் பேறுவன் ஏறிவந்து
பிறப்பன் பிறந்தால் பிறையணி வார்சடைப்
பிஞ்ஞகன்பேர்
மறப்பன்கொ லோவென்றன் உள்ளங் கிடந்து மறுகிடுமே'

எனத் தேவாரம் இசை பாடும்.

'புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா உன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரம்தர வேண்டும்'

என்றுதானே திருநாவுக்கரசர் வேண்டுகிறார்.

இறையருள் கூடும் நிலையைப் பாடுங்கால், 'இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்' என்று குறிக்கின்றார். இரவு பகலற்ற இடத்தைத் 'துரியாதீதம்' என்பர். இத்துரியா தீதத் தில் முழுமைச் சிவயோகம் என்பர்.

'எப்பொருளும் நீயெனவே எண்ணிநான் தோன்றாத வைப்பு'

எனக் கூறுங்கால் இறைவன் எவ்விடத்தும் நிறைந்தவன் என்னும் மெய்ப்பொருள் தோன்றுகிறது;

'எல்லா வுலகும் ஆனாய் நீயே' என்கிறது தேவாரம்.

நினைப்பற நினைந்தால் நீயலால் பிறிதுமற்றின்மை'

என்கிறது திருவாசகம்.

புறக்கரணம், அந்தக்ரணம் ஆகியவற்றின் தொழிலில் லாமல் சும்மா இருப்பதே சுட்டுதல் இல்லாத முழுமைநிலை (பரிபூரண நிலை) என்றறிதலே உயிருக்கு வேண்டுவதாகும் என்பதைச் 'சும்மா இருப்பதுவே சுட்டற்ற பூரணம்' என்னுந் தொடர் கூறும்.

'சரண மாம்படி யார்பிற ரியாவரோ
கரணம் தீர்ந்துயிர் கையிலி கழ்ந்தபின்
மரண மெய்திய பின்னவை நீக்குவான்
அரண மூவெயில் எய்தவ னல்லனே'

என்பார் திருநாவுக்கரசர்.

ஆனந்தநிலை யாருக்கு வாய்க்கும் என்பதற்கு விடை தரும் போது தாயுமானவர்,

'சிந்தை அவிழ்ந்தவிழ்ந்து சின்மயமா நின்னடிக்கே
வந்தவர்க்கே இன்பநிலை வாய்க்கும்' என்கிறார்.

அதாவது சிவபெருமான் சிந்தையைத் தெளிவித்தருளின் அதுவே சிவலோக நெறியாகும் என்பதே இதன் உட்பொருள். அந்நெறியில் நிற்பார் அகத்தும் புறத்தும் திருவடியின்பத்தில் திளைப்பர்.

'தந்தையாய்த் தாயு மாகித் தரணியாய்த் தரணியுள்ளார்க்
கெந்தையும் என்ன நின்ற ஏழுல குடனு மாகி
எந்தையெம் பிரானே என்றென் றுள்குவார் உள்ளத் தென்றும்
சிந்தையும் சிவமு மாவார் திருப்பயற் றூர ரனாரே'-

என்பதும் திருநாவுக்கரசர் மொழியாகும்.

மெய்யுணர்வுச் சாதனையில் மிக வல்லவர் என்றுல கோரால் சொல்லப்பட்ட அடியார் ஆணவ மலத் தொடர்பு ஒழியப்பெற்று அயர்ந்து ஒப்பற்ற முழுமை (பரிபூரண) நிலை யாகிய தொட்டிலிலே (சிவப்பேரானந்தப் பெருநிலையிலிருந்து) பாலர்போல் துயில்கின்றூர் என்பதைக்

'கெட்டிபென்றுன் னன்பர் மலங் கெட்டயர்ந்தோர்
பூரணமாம்
தொட்டிலுக்குள சேய்போற் றுயின்றூர்' என்னுங்

கண்ணி விளக்குகிறது. மற்றுமொரு அன்னைவயிறெனும் தொட்டிலில் துயில்வதற்கு மாருகச் சிவஞான மெய்யுணர்வுத் தொட்டிலில் துயிலவே உயிர் விரும்ப வேண்டும். இவ்விருப் பம் நிறைவேற வேண்டுமாயின் 'ஆணவமலம்'கெடவேண்டும் என்கிறூர்.

'ஒருபொருளுங் காட்டா திருளுருவங் காட்டும்
இருபொருளுங் காட்டா திது' எனக் காரிட்ட ஆணவத்

தைத் 'திருவருட் பயன்' கூறும். இவ்விருளைப்போக்கிய இறை யருளைப் பாடுங்கால்,

'இருளாய உள்ளத்தின் இருளை நீக்கி
இடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போல்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த

அருளானை' என்பார் திருநாவுக்கரசர். எனவே, இறைய ருள் தொட்டிலில் கண்வளர ஆணவமலக் கட்டு விடுவிக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது.

ஏனெனில், தன்னருள் காட்டத் தானிருப்பான். அவ்வாறி ருந்தும் உள்ளம் இருளுருவாகிய ஆணவம் உள்ளிட்ட மலத் தின் கண் நாட்டங் கொள்ளும். ஆதலால் விடுவித்துக் கொள் ளல் என்பதும் எளிதன்று. அவனையே சார்ந்தாலன்றி விடுதலை இல்லை திருவாசகப் பெருநூலும்

'சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கி எனையாண்ட
அத்தனெனக் கருளியவா றூர்பெறுவார் அச்சோவே'

எனப்பெருமிதங் கொள்ளக் காணலாம்.

'எங்கெங்கே பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்
அங்கங் கிருப்பதுநீ யன்றோ' என்பதும்

'அனைத்துமாய் நின்றாயே யான்வேறோ' என்பதும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைமையைக் கூறுகின்றன. கொன்றை மலர்க் கொத்துடன் விளங்கும் தோற்றத்தைக் கண்டவுடன் ஆனாயர் கண்களுக்குச் சிவபெருமானாகத் தென்படவில்லையா? அக்காட்சியைப் பெரியபுராணம்,

மருங்குதாழ் சடையார்போல்,
நின்றநறுங் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி'
என்றன்றோ பாடும் !

'ஒன்றைநினைந் தொன்றைமறந் தோடுமன மெல்லா நீ

என்றறிந்தால் எங்கே இயங்கும்? - என வினவுவதன் மூலம் இறைவனை அறிந்தால்தான் மனம் ஒருமுகப்படும் என்றும், இன்றேல் ஒன்றைப்பற்றி மற்றொன்றிற்குத் தாவும் என்றும் அத்தாவுதலில் பயனே இல்லை என்றும் கூறிவிடுகிறார் இதனால் மனத்தைக் கட்டுப்படுத்த வேண்டியதன் இன்றியமையாமை விளக்கம் பெறுகிறது.

'வைத்த பொருள்நமக் காமென்று சொல்லி
மனத்தடைத்துச்
சித்த மொருக்கிச் சிவாய நமவென் றிருக்கினல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பா திரிப்புலியூர்
அத்த னருள்பெற லாமோ அறிவிலாப் பேதைநெஞ்சே'
என்பார்;

திருநாவுக்கரசர்,

'மன்மனம் எங்குண்டு வாயுவும் அங்குண்டு
மன்மனம் எங்கில்லை வாயுவும் அங்கில்லை
மன்மனத் துள்ளே மகிழ்ந்திருப் பார்க்கு
மன்மனத் துள்ளே மனோலய மாமே'
எனத் திருமந்திரமும் கூறும்.

சிலம்பு-

# பெருங்கதை ஓர் ஒப்பாய்வு

திருமிகு. **இரா. காசிராஜன்**. எம். ஏ.
கேரளப் பல்கலைக் கழகம்

3:10:1

சிலம்பில் ஊழ்வினைக் கொள்கை பேசப்படினும் அவை துன்புற்ற பாத்திரங்களின் துயர் ஆற்றுப்படுத்தவும் அப்பாத்திரங்கள் மேல், படிக்கின்றவர்கட்கு வெறுப்புணர்ச்சி தோன்றாதவாறு காக்கவுமே, அடிகளாலும் பிறத்துணைப் பாத்திரங்களாலும் பேசப்படுகின்றது. ஊழ்வினையை உணர்ந்து சிலப்பின் முக்கியப் பாத்திரங்கள் செயல் பட்டனவாகத் தெரியவில்லை. மேலும் இன்ப நிலையில் ஊழ்வினை சிலப்பின்கண் பேசப்படவில்லை. பெருங்கதையில் உதயணன், பிரச்சோதனன் ஆகியோர் தாம் செய்கின்ற செயலுக்கு (தவறுகட்கு) ஊழ்வினையே எனக் காரணம் காட்டிச் செயல்படுகின்றனர் (1:34:155-156, 4:6:58:60). 'உதயண குமார காவியம்' 'யசோதரகாவியம்; ஆகிய இடைக்காலத்திய இலக்கியப் படைப்புகளில் அமைகின்றது. ஊழ்வினையே வெல்ல முடியாது என்ற கொள்கையும் பெருங்கதையில் பேசப்படுகின்றது.

3:10:2

உயிர் கெட வருவழி ஒழுக்கத்தில் பிறழ்ந்து உயிரைப் பாதுகாத்துக் கோடல் வேண்டும். உயிரை விட்டு ஒழுக்கம் பேணுர் குற்றமற்ற நூற்கேள்வியை ஆய்ந்துணர்ந்த அறிவுடையோர் அங்ஙனம் ஒழுக்கத்தை விட்டுழி வென்றாலும் தோற்றாலும் அஃது ஊழ்வினைப் பயன் எனக் கோடல் அரசியலறம் (7) எனக்கொங்கு வேளிர் காட்டுகின்ற அறமும் பிற்பட்ட சிந்தனையாகவே தோன்றுகின்றது.

3:11

சிலம்பில் மூன்று கனவுகள் இடம்பெறுகின்றன. பெருங்கதையில் உதயணன் கனவு நான்கு. தத்தை கனவு ஒன்று ஆக ஐந்து கனவுகள் இடம் பெறுகின்றன. கனவுகளை ஆளுகின்ற போக்கில் இவ்விரு இலக்கியங்களும் வேறுபடுகின்றன. இளங்

கோவின் ஆட்சியிற் கனவுகட்குப் பலன் கேட்கப்படவில்லை. இக்கனவுகள் பின்னிகழ்வுகளைச் சுட்டுகின்ற இலக்கிய உத்தியாகவே ஆளப்படுகின்றன. பெருங்கதையில் உதயணன் கனவு கண்டு, காலையில் எழுந்து தனிப்பெருந் தவத்தவர் பள்ளி சென்று அருகனை வணங்கிப் பின்னர்த் தவமுனிவர்களையும் வணங்கி தான் கண்ட கனவின் பயன் யாது எனக் கேட்கப் பயன் உரைக்கப்படுகின்றது. (4 : 5 : 85-122) இக்குறிப்புக் கனவில் மிக்க நம்பிக்கையும் கனவுகட்குப் பலன் உரைக்கின்ற கணிகர்களும் நிறைந்திருந்த ஓர் சமுதாயச் சூழலையே விளக்குகின்றது.

3:12 சகுனம் பார்க்கின்ற வழக்கம் இருந்ததென்பது இரு காவியங்களிலும் சுட்டப்பெறுகின்றது. சிலம்பு விற்க மதுரை செல்லும் கோவலன் 'இமிலே றெதிர்ந்த திழுக் கென அறியானுப் 16:100) செல்கிறான். ஆயர் பாடியில் குடத்துப் பால் உறைபாமை, இமிலேறு கண்ணீர் வடித்தல், உறிக்கண் வெண்ணெய் உருகாமை, ஆட்டுக்குட்டி துள்ளிவிளையாடாமை, பசுக்கணம் மெய் நடுங்கி அரற்றுதல் முதலான கண்டு வருவதோர் துன்பமுண்டெனத் தேர்ந்து கண்ணனை வழிபட ஏற்பாடு செய்யப்படுகின்றது. (16:1;2,3) இவை சிலம்பு எழுந்த காலத்துச்சகுனம் பார்க்கின்ற வழக்கம் இருந்தமைக்குச் சான்று பகர்வன. உதயணன் தான் ஏறிவந்தபிடியானை வீழ்ந்து இறப்ப, அதுகிடக்கும் திசை நோக்கி, அடுத்துத் தனக்கு ஓர் துன்பம் வரவிருக்கின்றது என்பதைத் தேர்கின்றான் (1:53:27-39) காட்டிடைத் தங்கி இருக்கின்ற உதயணன், வயவன் என்ற புள் பலகாலும் ஒலி செயக் கேட்டுத் துன்பம் வரவிருப்பதையுணர்ந்து அதனை எதிர்க்கத் தயாராகின்றான் (1:55:18-43). வாய் சிறுபுதுப்புள், உதயணனைத் துன்புறுத்த வருகின்ற வேடற்கு முதற்கண் நல் நிமித்தமும் (1:55:89) அடுத்து முதற் குரற் பறவை தீய நிமித்தமும் (1:56:231-234) உரைக்கின்றது இந் நிமித்தக் குரல் கேட்டுப் பெருங்கதையில் உதயணனும் வேடர்களும் செயல்படுகின்றனர்.

4. சிலம்பில் அறியப்படாத சில புதிய சொல் வழக்கு - பெருங் கதையில்

4:1

அகணி (அகப்பட்டவன்) (3:26:29) அதி நாகரிகி-(அதி நாகரிக முடையவன்) (3:9:152) அந்தணி-(பார்ப்பினி) (3:32:54), ஆசனம்- (இருக்கை) (2;5;136), உசுவை (மகிழ்ச்சி)- (3:20:128) உபகாரம்(5:2: 39,40, 5:3:143) உயரி-உயர்த்தி (3:27:205) உயாத்துணை (உசாத்துணை) (4:13:140), ஊன்பால்- (உப்பால்) (3:26:3) ஏல் (இயலுதல்) (3:19:28) கத்திரிகை - (மயிர் குறை கருவி) (4:14:7:41)-கம்மம் (தொழில்) (2:4:172). கயக்கம் (கலக்கம்) (2:8:83), கயத்தி (கயமையுடையவள்) (4:7:206), கவான்- (தொடை)(4:15:56). கானம்-(பண்) (5:3:98) கோத்திரம் (3:6:185), சமழ் (3:27:94, 186) சனம்- (மக்கள்) (3:27:190; 4:1:194, 9;6;4;10;99;4;16; 29; 5:9:34) சாவம் (சாபம்) (5:3:104); சாதகப்பட்டிகை (5:6:82), சிகரி - (சிகரம்) (5:1:182), சிள்-(இளமை) (3:17:19); சேலம்-(சேலை) (4:12:97), ஞாழ்-(யாழ்) (3:5:17); தமிழச்சேரி (3;4:11), திமிரம் - (இருள்) (3:27:190) தோழிச்சி (தோழி) (3:21:39); நகரி-(நகரம்) (4:10:124), நிச்சயம் - (நாள் தோறும்) (4:9:45), நுனக்கு - (உனக்கு) (5:3:208), பட்டிகை-(பட்டயம்) (4:1:12,13) பாடை - (மொழி) (4:13:59), பாயிரம் (4:12:63), பானு - (கதிரவன்) (4 : 13 : 217), புட்வி - (உலகம்) (4 : 13 : 53), பெலிக்கொடை - (பலிக்கொடை) (5 : 1 ; 62), மந்திரி (3:27;6), மயர்வு (மயக்கம்) (3 : 1 : 205) மலரி-(மலர்ந்து) (4 : 15 : 90), மார்வன்-(மார்பன்)(2:17:125;5:3:42) மாஞர் நோக்கி-(மானேர் நோக்கி) (4 : 13 : 213) மிலேச்சன் (3 : 17 : 235), மெச்சாரி (பகைவர்) (3 : 17 : 71) (5 : 3 : 4), மெச்சுவனன்-[புகழ்பவன் [5 : 4 : 61], மேக்கு [மேலே] [5:4:102], மோக்கம் - [மோட்சம்] [4 : 15 : 38], ராசன் [அரசன்] [3 : 1 : 4], வாக்கியம் [3:19:162;5:7:100], விச்சை-[வித்தை][3:1:59], விசயம்-[வெற்றி] [2 : 8 : 20 ; 220 ; 24] வெற்றம் - [வெற்றி] [3 : 11 : 29 ; 3 : 10 : 6] 3 : 20 : 130 ;

3 : 27 : 182 ; 4 : 7 : 160 ; 5 : 2 : 10] ஆகிய இன்னோரன்ன பல புதிய சொற்கள் பெருங்கதையில் பயன்படுத்தப்படுகின்றன. இவை சங்க இலக்கியங்களிலும் [உயரி, விசயம், நிச்சம், மிலேச்சன் தவிர்த்த ஏனைய] சிலப்பதிகாரத்திலும் பயன்படுத்தப்படவில்லை. மணிமேகலை, நாலடி, பரிமேலழகர் உரை முதலானவற்றில் இங்கு எடுத்துக்காட்டப்பட்ட சொற்களில் சிலபயன்படுத்தப்படுகின்றன.

4 : 2

எதிர்மறை முன்னொட்டு (prefix) பெருங்கதையில் பயன்படுத்தப்படுகின்றது. (அன்-அங்கண் ! அநங்கன் - 3 : 5 : 116). அறம், பொருள், இன்பம் குறிக்கக் காவ்யாதர்ச சுலோகம் 'தர்மார்த்த காமம்' என்பது அப்படியே பெருங் கதையில் (தருமமும் அருத்தமும் சுாமமும் இழந்த - பெருங் 3 : 1 : 48) பயன்படுத்தப்படுகின்றது. இவ்வாறு அமைகின்ற பல சொல் வழக்குகளை மேலும் ஆழமாக ஆராய்ந்தால் பெருங்கதை காப்பியம் சிலம்பிற்குப் பிற்பட்ட காலகட்டத்திலே எழுந்திருக்கவேண்டும் என்னும் கருத்து வலிவு பெறலாம்,

(தொடரும்)

---

## நூல் மதிப்புரை

**முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ்**

(மூலமும் — உரையும்)

ஆசிரியர் : திருமிகு. புலவர் அ. அரங்கசாமி

இ. ஆர். உயர்பள்ளி, திருச்சி-2.

விலை உருபா. 1-80

நெல்வளம் கொழிக்கும் தஞ்சை மாவட்டம் புள்ளிருக்கும் வேளூர் கோயில் குடி கொண்டுள்ள முத்துக் குமாரசுவாமி மீது பாடப்பெற்றுள்ளது இந்நூல்.

தெய்வ மணம் கமழும் நூல் என்று பாராட்டியுள்ளனர் தமிழ்ச் சான்றோர்கள் : நாமும் பாராட்டுகின்றோம்.

ஆ. ஆண்டியப்பன்

# நாடகத் தந்தை

செஞ்சொற்பாவலர் ப. சங்கரலிங்கம்

ஆங்கிலம் தன்னில் பேசல்
அழகென நினைத்த நேரம்!
ஈங்குள மேடை யெல்லாம்
தெலுங்கதே வாழ்ந்த காலம்!
மாங்கனி கசக்கு மென்ற
மடையரே உயர்ந்த போழ்து
தேங்கனி நிகர்த்த எம்மன்
தீந்தமிழ் வளர்த்த தென்னன்

சங்கர தாசே என்னும்
செந்தமிழ்ச் செம்ம லாவர்!
மங்கிய இருட்கா டாக
முத்தமிழ் வளர்த்த நாடு
தங்கிய தவித்த காலை
தமிழர்செய் தவத்தால் தோன்றி
பொங்கிய நிலவாய்! தென்றல்
புகுகாவாய்ச் செய்த அண்ணல்!

முடிமன்னர் என்று சொன்னால்
மூவரைக் குறிக்கும்! நல்ல
அடிகளார் என்று சொன்னால்
இளங்கோவைச் சுட்டும்! வல்ல
நடிப்பினில் 'சாமி' என்றால்
நாடகக் கலையின் மேன்மை
முடியெனத் திகழ்ந்த சான்றோன்
சங்கர தாசைச் சொல்லும்!

தீந்தமிழ் நாட்டில் தேனாய்
திகட்டாத கற்கண் டாக
மாந்தமிழ் நாட கங்கள்
பதினெட்டைத் தந்தார் சாமி!
தேங்கிய நடிப்பு பாடல்
இயக்குதல் அனைத்தி னிற்றம்
ஆங்கில நாட்டுச் சாவும்
அருஞ்சேச்சுப் பியரும் ஈடோ?

அடித்தலோ திருத்த மின்றி
அழகான நாட கத்தை
விடியலுள் எழுது கின்ற
வீரனை! மேதை தன்னை
விடிவெள்ளி! நாடகத்தின்
வேந்தனை! ஆசான் தன்னை
படியதே பார்த்த தில்லை!
பைந்தமிழ்மேல் ஆணை சொல்வேன்!

அபிமன்யு நாட கத்தை
அரிக்கன்நல் விளக்கின் முன்னர்
புவியினில் நடிப்பில் வல்ல
புலவனும் சண்மு கத்திற்
கவிநூறு! ஆடல்! பாடல்!
நகைச்சுவை! உரையா டல்கள்!
சுவைசேரும் கற்ப னைகள்!
சுழன்றிட ஓர் இரவில் செய்தார்!

நாடகம் எழுது வோராய்
நடிகராய் இயக்கு வோராய்
ஆடலும் பாடல் தானும்
இயற்றிடும் ஆசா னுக
ஊடவே மின்னும் நல்ல
நகைச்சுவை வேந்த னுக
நாடகத் தந்தை யாக
நறுந்தமிழ் மேதை யாக

---

தமிழரின் உள்ள மெல்லாம்
தமிழக இல்ல மெல்லாம்
அமிழ்தினை தேனைப் பாய்ச்சி
அறிவொளி ஏற்றி வந்த
தமிழனும்! தாயே தந்த
தவத்திரு அடிக ளாரை
இமிழ்கடல் ஈழம் ஏற்று
வலம்புரிச் சங்கம் ஈய்ந்தார்!

தான்வரை நாட கத்தில்
தன்பாட்டில் உரைந டையில்
தான்மறந்தும் பெயர்பொ றிக்கா
தரமிககோன்! சங்கச் சான்றேன்!
மாண்பொருளை மதித்தி டாத
முனிவனும்! கலைஞர் கோமான்!
வாணுளைக் கலைத்து றைக்கே
வழங்கிட்ட வள்ளல் பாரி!

---

மனிதனைப் பாடி டாத
மறவனும்! தமிழை என்றும்
அணிசெய்த பொருநை யாரும்!
அறிஞனும்! கலைத்து றையின்
மணிமன்னன்! தமிழை விற்காப்
புலவனும்! புதுமை செய்த
புனிதனும்! புகழே மிக்க
பெரியனும்! அடிகள் வாழ்க!

---

பூ பாளம்

## (பாகம்பிரியாள் பாமாலை)

ஆசிரியர். திருமிகு. அருட்கவி.
கு. செ. இராமசாமி. எம்.ஏ.
விலை உருபா. 1,

வீரசரிதத்தை தனக்கே உரித்தாகப் பெற்ற சின்ன மறவர் நாடாம் சிவகங்கைச் சீமை. ஆங்கு காவல் தெய்வமாகக்காட்சி. தரும் அன்னை பாகம் பிரியாள் மீது தெவிட்டாத தீந்தமிழ் நடையில் 30 பாக்கள் அணி செய்கின்றன இந்நூல்.

"திருநீறு பூசும் அடியார்கள் தொட்ட செந்தீயும் கூடக் குளிரும்" "தேடாது வாய்ந்த அமுதே எந்நாளும் தீராத இன்ப நிலையே" என்று உமையின் பெருமைகளை பக்திச்சுவை ததும்பும் கவிதையாகத் தந்துள்ளார் அருட்கவி இராமசாமி அவர்கள்.

கருத்தோட்டம் சிறப்பாக அமைந்துள்ள இந்நூலைப் பாராட்டுகிறோம்.

ஆ. ஆண்டியப்பன்.

---

# அகம் வீடளிக்கும்

திருமிகு. ப. ராமன் எம். ஏ.,
துணைத் தமிழ்ப்பேராசியர்
விவேகானந்தா கல்லூரி, சென்னை

(தொகுதி 69. பகுதி 1ன் தொடர்ச்சி)

இனித் திருக்குறளில் இல்லறவியல் எனும் பகுதியில் இதன் விளக்கம் காணபாம். இல்வாழ்க்கை முதல் புகழ் என்பது ஈருக இருபது அதிகாரங்களில் தலைமகன் தலைமகட்கு உரிய இன்றியமையா இன்பச்சடங்களைத் திருவள்ளுவர் வரைந்துள்ளார். 'இல்லறமல்லது நல்லறமன்று' என்ற ஔவையார் மொழிக்கிணங்க தலையாயறம் இல்லறமே யாதலின் இதனைத் திருவள்ளுவரும் துறவறத்திற்கு முன்வைத்தார். மாந்தர் எத்தொழிலைச் செய்தாலும் எதவத்தைப்பட்டாலும் வீடு பேறடைதலே குறிக்கொண்டிருக்க அதனை அளிக்கவல்ல ஆற்றல் இல்லறத்திற்கில்லையேல் அதனைத் தலைமையறமென்று கூறுர் என்க.

இவ்வில்லற இயலின் அதிகாரங்களினின்றும் வீடுபேறடைதற்குத் திருவள்ளுவர் கூறும் நெறிகளை முறையே ஆய்வாம். இல்வாழ்க்கை என்னும் அதிகாரத்தில் இல்வாழ்வான், துறந்தார், துவ்வாதார், இறந்தார், தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான், இயல்புடைய மூவர், ஆகியோரை ஓம்புதல் கடன் என்றார். பழியஞ்சிப் பகுத்துண்ணல், அன்பும் அறனும் கோடல் வேண்டும் என்றார். இங்ஙன் அறத்தின வழி இல்லறம் நடத்துபவன் வானப்பிரத்தமும், துறவும் கொண்டு வருந்த வேண்டுவதில்லை. இல்லறத்திலேயே வீடு பேறு கிட்டும் என்றார். புலன்களை வீட முயலும் துறந்தாரினும் இல்வாழ்க்கையின் இயல்புடன் வாழ்பவனே தலையாயினன் தவஞ் செய்வாரையும் அவ்வொழுக்கத்தில் நிற்கச்செய்து தானும் அறத்தின்வழி நிற்பின்நோற்பாரின் நோன்மையுடைத்து. இல்லறமே சிறந்த அறம் ; துறவறமும் பழிக்சப்படாதிருந்தால் அறமென

ஏற்கலாம் என்று இல்லறத்தின் மாட்சி கூறினர். இறுதியாக இவ்வதிகாரத்தில்,

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் "

எனக்கூறி இல்லத்திற்கு மறுமையிற் பயன் 'தேவருலகிற் போகம்' என்பது பெறவைத்தார்.

'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரத்தில், இல்லறத்தின் மாட்சிக்குரிய மனை பற்றி விளக்குகின்றார். தன் கணவனையும் இல்லத்தையும் தனக்குக் கற்பித்தவாறு நடத்திச் செல்லும் மனையாளுக்கு எல்லாச்சிறப்பும் உண்டு. தெய்வத்தைத் தொழாமல் கணவனையே தெய்வமாகத் தொழுது எழும் பெண்டிர் மறுமையில் தேவர்களால் வானுலகில் பெருஞ்சிறப் பெய்துவர்.

ஏனைய அதிகாரங்களில் முறையே, விருந்தோம்புவான் 'செல்விருந்தோம்பி வருவிருந்து காத்திருப்பின் வானவர்க்கு நல் விருந்தாவான்' என மறுமைப் பயன் கூறினர். அடக்கம் ஒருவனைத் தேவருலகத்திற் செலுத்தும். பற்றுவிட்டுத் துறவறத்தில் அடங்குதலைக் காட்டினும், ஐம்புலன்களிலும் இன்பங்களை நுகர்ந்தவாறே அடங்கியிருப்பவன் மலையினும் உயர்ந்தவன். புலன்களை வலிந்தடக்கும் துறவியினும் உயர்ந்தவன் என்க. பிறர் இன்னாச்சொற் பொறுக்கும் இல்லறத்தார் துறந்தார்போல் தூய்மையுடையவர். உண்ணாது நோற்கும் பெரியாரினும் உயர்ந்தவர்,

" நிலவரை நீள்புகழ் ஆற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு "

என்பதால், இம்மண்ணுலகில் இல்லறத்திலிருந்தவாறே புகழை ஈட்டியவரையே தேவருலகம் பெருஞ் சிறப்புச் செய்யும். அங்ஙனன்றி இம்மையில் புகழ்தேடாது துறவறத்தில் நின்று வானுலகம் சென்ற ஞானிகளைத் தேவர்கள் போற்றுவதில்லை.

மேற்கண்ட குணஞ்செயல்களுடன், அழுக்காருமை, பிறனில்விழையாமை, பொருள்வெஃகாமை, அன்புடைமை, ஒப்புரவறிதல் போன்ற பல்வேறு பண்புகளும் இல்லறத்தான் போற்றுவது அறமாகும். அவண் வாழ்க்கைத்துணை நலம் கணவன் கற்பித்தவாறே, 'அறவோர்க்களித்தலும் அந்தணரோம்பலும், துறவோர்க்கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும் ஆகிய நல்லறங்கள் நடத்த வேண்டும். ஔவையாரும்,

"ஈதலறம் தீவினைவிட் டீட்டல்பொருள் எஞ்ஞான்றும்
காத லிருவர் கருத்தொருமித்-தாதரவு
பட்டதே யின்பம் பரனைநினைந் திம் மூன்றும்
விட்டதே பேரின்ப வீடு."

என ஈதலறத்தையும், அதற்குதவும் பொருளை நன்னெறியில் நின்று ஈட்டல் வேண்டுமென்றும், ஈட்டிய ஒண்பொருளை வைத்து இல்லறம் நடத்துவோர் உளமொன்றிய காதலராயிருத்தல் வேண்டுமென்றும், இம்மூன்றனையும் அறம், பொருள், இன்பம்- விட்டுப் பரனையே நினைப்பதே வீடென்றும் சுருங்கக் கூறி விளங்க வைத்தார். இவர் தம் வீடு பேறு பற்றிய கருத்து நச்சினர்க்கினிய கருத்துக்கு வேறுபட்டதே. அவனருளாலே அவன்தாள் வணங்குவதற்கு ஔவையார் காடுபோதலும். துறத்தலும் கூறிற்றிலர். இல்லிருந்து இறைவனை நினைத்தலே போதும் என்றூர். திருவள்ளுவர் கூறியாங்கு அறவழி ஒழுகவே வேண்டற்பாலது.

இனி, இல்லறத்தான் அறவழியில் ஈட்டிய பொருளனைத்தும் தக்கார்க்கு வேளாண்மை செய்தற் பொருட்டே. ஊருணி நீர் நிறைந்தாற்போலவும், பழுமரம் உள்ளூர்ப் பழுத்தற்றும், மருந்தாகித் தப்பா மரம் புரையவும் வேற்றுமையின்றி யாவர்க்கும் பயன்படும் அவன் செல்வம். அவனுல்தான் கல்வி கற்கும் மாணக்கனும், துறவியரும், பசிக்கு உணவும், பிணிக்கு மருந்தும் பெற்றுத் தத்தம் ஒழுக்கங்களை ஓம்புகின்றனர். திருக்கோயில்களும், அறச்சாலைகளும், தேவர்க்குச் சிறப்பொடு

பூசனையும் அவனுல்தான் அமைகின்றன. சுருங்கக் கூறின் உலகில் எல்லா அறங்களும் நடைபெறுவதற்கு இயற்றுதற் கருத்தாவாக விளங்குபவன் இல்லறத்தானே.

ஒத்த தலைமகனும் தலைமகளும் நெஞ்சத்தே கொண்ட நிறைந்த அன்பினைப் பிற்காலத்தோர் உடலுறவைக்குறிக்கும் காமம் என இழிவாகக் கருதினர். களவொழுக்கத்தையும் கற்பொழுக்கத்தையும் அன்புப் பயிர் தழைக்கும் அறப்பழனங் கள் எனக் கருதாமல் கடும்பாலையும் கானல் நீருமாகக் கருதித் துறக்கவே கற்பிக்கத் தொடங்கினர், நிறைந்த அன்பைக் குறிக்கும் சொல் காமம். 'கமம் நிறைந்தியலும்' எனத் தொல் காப்பியம் கூறும். இவ்வுயர்ந்த கருத்துடைச் சொல்லையே இழிவுடைச் சொல்லாகப் பிற்காலத்தார் ஆக்கினர். மாதர் என்ற பெண்பாற் பெயர் 'அன்பு' என்னும்பொருளது என்பது 'மாதர் காதல்' எனும் தொல்காப்பிய நூற்பாவான் உணர லாம். இவ்வன்பின் வடிவாக மகளிரைத் தொல்காப்பியருக்கும் முந்திய பழந்தமிழர் கண்டு வாழ்வில் மகிழ்வு கொண்டு வாழ்ந்தனர்; இவரைவஞ்சனையின் கொள்கலம் எனப் புல்லுரை பகன்றனர். பிற்காலத்தார். ஆசையால் வருவதே துன்பம் ; இவ்வாசைக்கு வித்து பொன்னும் பெண்ணுமேயாகையால் அவரை நீக்குவதே துன்பம் நீங்க வழியாம் என்றனர்; பற்றுல் வருவது பிறப்பு ;பற்றறுத்து வீடுபெற வேண்டும் என்றனர். இங்ஙனம் மனைவி, மக்கள் சுற்றம், பொருள் ஆகியவற்றை வெறுக்கும் உள்ளத்தைத் தோற்றுவித்தவர் பௌத்தரும் சமணருமே யாவர். இளமையில் துறத்தல் நல மென நவின்றனர். ஆனல் இச்சமயங்கள் தம் கொள்கையில் எங்கும் வெற்றிபெறவில்லை. தமிழர்சமயம் இக்கோட்பாட்டை ஏற்கவில்லை என்க. சைவசமய சமய குரவர்களும் நாயன்மார் களும் வைணவ சமய ஆழ்வரர்களுமாகிய பல்லோர் வாழ்க்கை வரலாறுகள், இல்லறத்தின் மூலம் வீடு பெற்றதையே தெரிக் கின்றன. அவர் நடத்திய இல்லறம் அவருக்கும் தடையில்லை இன்றவனுக்கும் தடையில்லை. சூடிக்கொடுத்த நாச்சியார் மனைவாழ்வைத் துறவாது,

"ஊனிடை ஆழிசங்கு உத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழ கில்லேன் கண்டாய் மன்மதனே!"
(நாச்சியார் திருமொழி)

என அன்பின் திண்மையால் திருவரங்கப் பெருமான் கரம் பற்றினார். திருமங்கையாழ்வார் தன்னைத் தலைவியாகவும் கண்ணனைத் தலைவனாகவும் அமைத்து உளமுருகுகின்றார்.

"நைவளம் ஒன்று ஆராயா நம்மை நோக்கா
நாணினார் போல்இறையே நயங்கள் பின்னும்
செய்வளவில் என்மனமும் கண்ணும் ஓடி
எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்
கனமகரக் குழைஇரண்டும் நான்கு தோளும்
எவ்வளவுண்டு எம்பெருமான் கோயில்? என்றேற்கு
இதுஅன்றோ எழிலாலி என்றார் தாமே!
(பெரிய திருமொழி)

நம்மாழ்வாரும் தன்னையோர் தலைவியாகவும் கண்ணனைத்தலைவனாகவும் அமைத்துப் பாடித் தன் அளவிலா அன்பினைப் புலப்படுத்துகின்றார் :

"சுங்குலும் பகலும் கண் துயி லறியாள்
கண்ணநீர் கைகளால் இறைக்கும்
சங்கு சக்கரங்கள் என்று கைகூப்பும்
தாமரைக் கண்ணென்றே தளரும்
எங்ஙனே தரிக்கேன் உன்னை விட்டு
என்னும் இருநிலம் கைதுழா விருக்கும்
செங்கயல் பாய்நீர் திருவரங்கத்தாய்!
இவள் திறத்து என் செய்கின்றாயே"
(திருவாய்மொழி)

தலைவனை நினைந்து வருந்தும் தலைவி, கிளி, வண்டு, நெஞ்சு முதலானவற்றைத் தூதாகத் தலைவனிடம் அனுப்புவது அகப்பொருள் இலக்கியத்திற் காணலாம். இங்குத் திருஞான சம்பந்தர் தலைவிபோல் சிவபெருமானிடம் மடக்கிளியைத் தூது விடுவது கண்டின்புறத் தக்கது. சிறகுடைய இளங்கிளிக்குத் தேனும் பாலும் உண்ணத் தருவதாகவும் தனக்காகத் திருத்தோணி புரத்து ஈசனிடம் தூதாகச் செல்லவேண்டு மென்றும் தலைவி கிளியை வேண்டுகின்றாள் :

"சிறையாரும் மடக்கிளியே இங்கேவா தேனொடுபால்
முறையாலே உணத்தருவன் மொய்பவளத் தொடுதரளந்
துறையாருங் கடல்தோணி புரத்தீசன் துளங்குமிளம்
பிறையாளன் திருநாமம் எனக்கொருகாற் பேசாயே."

(சம்பந்தர் தேவாரம்)

இது போன்றே சுந்தரமூர்த்தி நாயனாரும் பாடியுள்ளார். அணுக்கத் தொண்டரான இவர் திருநாவலூரில் மாணிடராய்ப் பிறந்து மணத்தின்போது இறைவனால் தடுத்தாட் கொள்ளப் பட்டு அவனருளால் பின்பு பரவையாரையும் சங்கிலியாரையும் மணங் கொண்டு இனிது வாழ்ந்தார். இல்லறத்தில் இரு மனைவியரொடு வாழும் இவ்வன்பர் ஏவலை எப்பொழுதும் இறைவன் ஏற்று நடந்தான். தன் பெருங்காதலை ஒரு தலைவியாக இருந்துதான் காட்டவியலும் என்று உணர்ந்த சுந்தரர் தன் தலைவனைக் கூடாமையால் மறக்க இயலாமையும், உடல் மெலிவால் வளைகள் கழலுவதையும், உறக்கமில்லாமையும் சென்று கூற வேண்டுமென்று தம் எதிரிலே பறக்கின்ற கிளிகளையும் நாகணவாய்ப் புட்களையும் வேண்டுகின்றார்.

"பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கண் என்னத்தகும் அடிகள் ஆரூரரை
மறக்ககில் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்த வல்லீர்களே"

(சுந்தரமூர்த்தி தேவாரம்

அடியார் இறைவனை வழிபடுங்கால் ஆண்டான் - அடிமை எனும் தாசமார்க்கம், தோழன்-தோழன் எனும் சகமார்க்கம், தந்தை-மகன் எனும் சற்புத்திரமார்க்கம், தலைவன் - தலைவி என்ற சன்மார்க்கம் ஆகிய நெறிகளைப் பற்றியொழுகினர். இந் நால்வகை நெறிகளும் தலைவன் தலைவி முறையேதனது பெருங் காதலைப் புலப்படுத்தற்கேற்றதென்று எண்ணினர். அதனாற் றான் சைவ வைணவ அடியார்கள் பெரும்பான்மையினர் இம் முறையைப் பின்பற்றியுளர். திருவாசகம் எனும் செழுந்தமிழ்ப் பனுவலைத் திருவாய் மலர்ந்தருளிய மணிவாசகர் எத்துணை வகையில் இறைவனிடம் காதல் செய்கின்றார் என்பதைக் கற்றார் கண்டு களிப்பெய்துவர். திருவெம்பாவையில் 'ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியைப்' பாடுதற்குத் தோழியர் கூட்டம் தலைவியைத் துயிலெழுப்புவதாகப் பாடியுள்ள இருபது பாடற் பொருளையும் உன்னுக. மகளிரின் பல்வேறு விளையாட்டுக்களை அமைத்து அம் மகளிருள் தன்னையும் ஒருவராக்கி ஈசனை நினைந்து விளையாடும் எழிலை என்னென்பது! திரு அம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம் திருச்சாழல், திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம், திருப்பொன்னூசல், ஆகிய திருப்பாடல்கள் மூலம் வாதவூரடிகள் எம்பெருமானைப் பெண்ணாய் நின்று அன்பு செய்தலையே பெரிதும் உகந்தார் என்பது புலப்படும். சில பாடல்களினால் மன நிறைவு காணாத இவர் அகப்பொருள் இலக்கியமாகத் திருக்கோவையாரையே பாடியுள்ளமை காண்க. 'பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக' எனச் சிற்றம் பலக் கூத்தனே இவரிடம் வேண்டினான் எனில் அவன் விரும்பியதும் தலைவன் தலைவியருக்குள்ள பேரன்பு போன்றே தனக்கும் அடியார்க்கும் இருத்தல் வேண்டும் என்பதுதான். இத்திருக்கோவையாரை வேதம், ஆகமம், காமநூல், தருக்க நூல், இலக்கணநூல் என அவ்வத்துறையிற் சிறந்தார் கூறுவர், இத்தகு பெருமைமிக்க நூல் களவொழுக்கத்தையும் கற்பொழுக்கத்தையும் அழகுற விளக்குகின்றது. இதிற்காணும் ஒப்பற்ற தலைவனும் தலைவியும் இறைவனும் மணிவாசகருமே.

மெய்யுணர்ந்தோர் இறைவன் படைப்பு உண்மைகளை உணர்ந்தனர். உலகிலுள்ள பொருள்கள் ஒவ்வொன்றும் பயன்படுதற்கன்றி வீணே அழிதற்கன்று அவன் படைத்தது. அவன் அமைப்பில் மனித தத்துவம் மிக உயர்ந்தது. அதற்கு ஐம்புல நுகர்ச்சிகளை அமைத்தான். நுகர்வதற்கேற்ற பொறிகளையும் புலன்களையும் படைத்து நுகர்தற்குரிய பொருள்களைப் படைக்காமல் விட்டால் புலன்களால் வரும் பயன் ஒன்றுமில்லை. அதனால்தான் இருவகைப் பொருளையும் இயற்றினன். இங்ஙன் அமைந்ததே ஆண் பெண் தத்துவம். திருக்கோவையாரில் தலைவி அமுதாவாள். தலைவன் 'சுவை' ஆவான் எனச் சிறப்பித்துக் கூறுகின்றார்.

"சொற்பா லமுதிவள் யான்சுவை யென்னத் துணிந்
திங்ஙனே
நற்பால்வினைத் தெய்வந் தந்தின்று நானிவளாம் பகுதிப்
பொற்பாரறிவார் புலியூர்ப் புனிதன் பொதியில்
வெற்பிற்
கற்பாவிய வரைவாய்க் கடிதோட்ட களவகத்தே"
(கலவியுரைத்தல்)

"சுவையையுடைய பொருட்கும் சுவைக்கும் வேறுபாடில்லாதவாறு போல தலைவனுக்கும் தலைவிக்கும் வேறுபாடில்லை. இவ்வாறு வேறுபாடில்லையாயினும் புணர்ச்சியான் வரும் இன்பந் துய்த்தற் பொருட்டு இன்று யான் என்றும் அவள் என்றும் வேறுபாட்டோடு கூடிய அழகை இதனை அனுபவிக்கின்ற யானே அறியினல்லது வேறு யார் அறிவார்?

நல்வினைத் தெய்வம் இவளைக் களவின்கட் கூட்ட அமுதமும் அதன்கட் கரந்து நின்ற சுவையுமென்ன என் னெஞ்சம் இவள் கண்ணே யொடுங்க யானென்பதோர் தன்மை காணாதொழிய இருவருள்ளங்களும்ஒருவேமாறு கரப்பஒருவேமாகிய ஏகாந்தத்தின்கட் பிறந்த புணர்ச்சிப் பேரின்ப வெள்ளம் யாவரானறிப்படும் என்று மகிழ்ந்துரைத்தான்; உரைப்பக்

கேட்ட தலைமகளும் எம்பெருமான் என் கண் வைத்த அருளினனன்றே இவ்வகையருளியதென்று இறப்பவும் மகிழ்வாள்" — (நச்சினார்க்கினியர் உரை,-
(திருக்கோவையார்)

இவ்வுரையானும் பாட்டானும் முற்கூறிய பல்வேறு சான்றுகளாலும் இறைவனை அடைதற்கு, வீடு பேறு பெறுவதற்கு ஆண் பெண் அன்பு வாழ்வு, எட்டுணையும் இடையூறன்று என்பது தெளிவு. மேலும் இறைவன் படைப்பாற்றலில் உயிரை ஆண் பெண் என கூறுகப் பிரித்து ஒன்றற்கு ஒன்று இணையும் தன்மைகள் பலவற்றையும் பொதிந்து ஈருடலும் ஓருயிருமாக, 'இருதலைப்புள் ஓருயிரம்மே' என்றாற் போல வாழச் செய்கின்றான். அவன் காமத்தின் பொருட்டுப் படைக்கவில்லை. உலகம் நடைபெறுதற் பொருட்டே படைத்துளான், இல்லையெனில் தலைவியைப் பிரிந்து செல்லும் தலைமகன். அவள் பூப்பெய்தி மூன்றுநாட் கழிந்து பன்னிரண்டுநாட்களில் பிரியக் கூடாதென்றும், அக்காலம் தலைவிக்குக் கருத்தோன்றும் காலம் என்றும் அதன் காரணமாகப் பிரிதல் தகாதென்றும் வகுத்திரார். இதன் நோக்கம் என்னை? உலகம் நடைபெறுதற்கு மக்கட் தோற்றம் இன்றியமையாததாகின்றது. இதற்காகவே இறைவன் ஆண் பெண்ணைப் படைத்தால் அதனைப் பொல்லாதது என வெறுக்கக் கூறும் சமயம் போலிச் சமயம் என்க. மனோன்மணீய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்களும் இல்லறமே வீடு பேற்றை அளிப்பதற்கான நல்லறம் நடத்தப் பயிலும் பள்ளிச்சாலை என வரைந்துளார்.

"இகத்துள சுகத்திற் களவு கோலாகி
பரத்துள சுகத்தை வரித்த சித்திரமாய்"

என, இல்லறம் இம்மண்ணுலகவாழ்வின் இன்பத்திற்கு அளவுகோல் போன்றதென்றும், பின்னுள்ள வீடு பேற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளதென்றும் அழகுற விளக்குகிறார்

இதுகாறும் கூறியவற்றால் துறவு பூண்டு உடல்வருத்தித் தவஞ் செய்து. இறைவனை அடைவதற்குமாறாக இல்லிருந்து நல்லறம் நடத்தி வருந்தமின்றி இனிது வாழ்ந்து வீடு பேறடையலாம் என்பது கண்கூடு. அதனால் இன்ப அன்பே எங்கும் வேண்டுவது. அன்பே சிவம்.

●

# வாழ்வின் மாண்பு

இளமையிலேயே நமது தாயுமான அடிகளார் திருவருள் வயமான மனமுடையர்களாக இலங்கினார்கள். அருள் நலம் பழுத்த அந்தணாளர்தம் நூல்கள் யாவும் அடிகளார் ஊன்றி உணர்ந்து படிக்கும் நூல்களாயின. அப் பெரியோர்கள் பெற்ற பெரும்பேற்றை என்று நாம் பெறுவது என்னும் ஏக்கமே அவர்களது ஏக்கமாயிற்று. நம்மில் நன்றாகப் படித்தவர்கள் என்பவர்களிலேயே எத்தனை பேர் நமது அடிகளாரைப்போல ஊன்றிப் பார்த்து உணர்ந்து உருகுகிறவர்களாக இருக்கின்றார்கள்? ஒருவரையும்காண இயலவில்லையே !

அருணகிரியாரை-அவர் பரடிய கந்தரநுபூதியை, எப் படிப் போற்றி உளங்கனிகின்றார்கள் பாருங்கள் :

'ஐயா ! அருணகிரி அப்பா ! உனைப்போல
மெய்யாக ஓர்சொல் விளம்பினர் யார்?'

'கந்தரநு பூதிபெற்றுக் கந்தரநு பூதிசொன்ன
எந்தை யருள்நாடி இருக்கும்நாள் எந்நாளோ?

தமிழிலக்கியங்களில்

# வேலன்

புலவர் திருமேனி நாகராசன்
காரைக்கால்

படைப்புக் காலம்தொட்டு மேம்பட்டு வருகின்ற பண்டைத் தமிழிலக்கியங்களில் வேலன் என்னும் ஒரு பாத்திரப் படைப்பொன்று உண்டு. அவ்வேலனை ஆய்வின் அடிப்படையில் வரன்முறையாய் ஓரளவுக்கேனும் அறிதலே இக் கட்டுரையின் கருத்தாம்.

வேலன் வெறியாடும் மரபினன். அவன் படிமத்தான் எனவும் அழைக்கப்படுவான் ; முதிய தோற்றம் உடையவன் ; 1) துண்டு போட்டுக் கட்டிய உச்சிக் குடுமியைக்கொண்டவன்; கையில் சிறுபைகள் தொங்கும் பல தலைகளை உடைய வளைந்த கோலினைப் பிடித்திருப்பான் ; வென்றி நெடுவேளையே வழி படும் வாழ்க்கையினன் ; வெறியாடும் காலத்தில் மட்டுமே வேல் பிடித்து ஆடுவான். அவனைப் பிற்காலத்தார் பூசாரி என்பர்.

இலக்கிய நெறிப்படி, தலைவனும் தலைவியும் ஊழான் கூட்டப்பெறுவர். அவர்களிடையே உள்ளுறு புணர்ச்சியும், மெய்யுறு புணர்ச்சியும் முறைமையாக நிகழும். இடங்கள் பல குறித்து ஆண்டுக் கூடிக் களிப்பர். இரவினும் பகலினும் இன்பம் எய்துவர். அவர்களின் பழுதறு தொடர்பால் தலைவியின் அகத்தும் புறத்தும் வேறுபாடுகள் !பல தோன்றும். அக வேறுபாடு புறத்தார்க்குப் புலனுகாது போயினும். புற வேறுபாடு செவிலிக்கும் பிறர்க்கும் புலப்பட்டே நிற்கும். 2) தலைவியிடத்துப் பண்டு பயின்றறியாததோர் நாற்றம் கமழும் ; அவளிடத்துப் புதியதோர் பொலிவு பொதிந்து தோன்றும், அவள் தெய்வம் முதலியன தொழாமல் நிற்பாள், அவள் பண்டை உணவில் பாதியும் உண்ணுள், எப்பொழுதும் தனிமையை நாடுவாள், பேச்சினைக் குறைத்து மௌனத்தை

மேற்கொள்ளுவாள். தலைவியின் இப்புற மாற்றங்களைக்கண்டு அவளின் வளர்ப்புத் தாயாம் செவிலி தலைவி காணுதன கண்டு அஞ்சி உருமாறுபட்டாள் எனக் கவலையுற்றுப் பரிகாரம் தேட வேலனை அழைத்து வருவாள். 3) வேலன் வந்து கழற்காய்களை முருகன் திருமுன்னர்வைத்து அள்ளி எடுக்குங்கால், கணக்கிட்டு குறி கூறுவான். 4) அக்குறியால் தலைவியை வருத்தியவன் முருகனே என்று மொழிவான்.

இனி வேலனை ஒன்றித் தலைவியினுடைய நோயை அறிய மாட்டாத தாயர் அவள் வேறுபாட்டின்காரணத்தை ஆராயும் பொருட்டு அகவன் மகளாகிய கட்டுவிச்சியை அழைத்துக் கட்டுப்பார்ப்பது வழக்கமுமாகும். 5) கட்டுவிச்சிமுறத்தில் நெல்லையிட்டு அதனை எண்ணி அதனால் போந்த சில நிமித்தங்களை அறிந்து "இவள் முருகனால் பயமுறுத்தப்பட்டாள்" என்று கூறுவாள். அதுகொண்ட தாயர் வேலனை அழைத்து வெறியாட்டு எடுப்பர்.

வேலன் கட்டுப்பார்ப்பது சிறுபான்மை; அகவன் மகள் கட்டுப் பார்ப்பது பெரும்பான்மை தலைவியைப் பயமுறுத்திய வன் முருகனென முடிவாகியதும், தலைவியைக்காக்கயா துசெய்வ தென வேலனை வினவுவாள் செவிலி. அவன் 'வெறியாட்டு' எடுக்க வேண்டுமென மொழிவான். "வெறியாட்டு" எடுப்பின் முருகன்மகிழ்வான் அதனால், தலைவியின் துயர் நீங்கும்" என்பது வேலனின் கருத்து.

வெறியாட்டு வெறியயர்தல் என்பன ஒரு பொருள் குறிக்கும் இரு சொற்கள். 6"வெறி என்பது மணம் என்னும் பொருள் படுவதொரு பழந்தமிழ்ச்சொல். அழகும் ஒளியும் இளமை நலமும் திகழும் செடிகொடிகளின் பூக்களிடையே சிறந்து நிற்கும் மிகு மணம் வெறி." முருகனை வெறி என்றும் சான்றோர் குறிப்பர். அயர்தல் என்பது கொண்டாடுதல் எனப் பொருள் விளங்க நிற்கும்.

வேலன் ஆடுகின்ற இடம் 7. வெறியயர் களம் எனப் படும். 8 அது அகன்றிருக்கும்; 9 பருந்தின் வட்டம் போல முழு

வட்டமாக இருக்கும்; 10 சாலைகள் சந்திக்கும் சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருக்கும்; 11. மேலே அழகிய பெரிய பந்தர் வேயப்பட்டிருக்கும்; 12. வெண்மணல் பரப்பிச் செந்நெற்பொரி தூவப்பட்டிருக்கும்; 13. பசுந்தழையும் கடம்பின் மலரும் அங்கே காணப்படும்; 14 அவ்விடத்தில நறுமணங் கமழும் பூக்களும் சொரியப்பட்டிருக்கும்.

வேலன் வெறியாடும்போது 15. வேம்பின் பசிய இலைகளுடன் நீலப்பூக்களையும் சூடிக்கொண்டு 16. மாலை மார்பில் அசைய 17. வெண்மையான பனந்தோட்டினையும் கடப்ப மாலையையும் கையில் அணிந்து 18. கைகளைத் தொழுது கொண்டு, முருகனது கடம்பினையும் களிற்றையும் புகழ்ந்து பாடி இரவு முழுவதும் ஆடுவான் 19. இப்படித் தனியே வேலன் ஆடுதல் இன்றிக் கணிகாரிகையோடு கூடி ஆடவும் பெறுவான். 20 "காந்தளை உடைமையானும் பனந்தோடுடைமையானும் மகளிரை வருத்துதலானும் 'வேலன் வெறியாட்டயர்ந்த' என்பதனாலும் வேலன் ஆடுதலே பெரும்பான்மை; ஒழிந்தோர் (மகளிர்) ஆடுதல் சிறுபான்மையென்றுணர்க"

வேலன் வெறியாடும் களத்தின் நடுவில் முருகன் பதுமையை முன்னுற நிறுத்தி அவன் திருமுன்னர்ப் பல்வகை உணவும் படைப்பான்; நெல், பயிறு முதலிய தானியங்களையும் பரப்பிக் காண்பார் கருத்தைக் கவரும்கணக்கற்ற மலர்களையும் தூவி வேலனை வழிபடுவான், வேலன். இவையெலாம் பலிபடு பொருளெனப் பகரப்படும். வேலனையே அன்றி 21" வேற்றுப் பெருந்தெய்வம் பலவுடன் வாழ்த்தி" ஆடவும் செய்வான். அதன் உதிரம் கலந்த மண்ணைக் கையில் எடுத்துத் தலைவியின் தலையில் தடவி ஆவேசித்து ஆடுவான். அவன் ஆடுங் காலத்துச் சூழ்ந்து நிற்கின்ற மகளிரும் பூக்கொண்டு தூவி தலைவியது நோய் நீங்க வேண்டுமென நெடிது வேண்டி நிற்பர்.

இத்துணை ஆரவார நீர்மையனுகிய வேலன் உண்மையில் தலைவி நோய்க்குரிய மருந்து யாதென அறிய மாட்டான்' இதனை, 23 "வேலன் நோய்மருந் தறியான்" என்பதனானும்'

24 " அறியா வேலன் வெறியெனக் கூறும்" எனும் கூறருலும் "25 அறியா வேலற் றரீஇ அன்னே" எனும் மொழியாலும் அறிக.

இவ்வாறு நோய்த்திறம் அறியா வேலன் வெறியாடும் பொழுதில் தலைவியை முருகனைத் தொழுமாறு சொல்லுவான். அப்பொழுது தலைவி நிலை இருதலைக் கொள்ளி எறும்பு நிலையே யாகும். தெய்வத்தைத் தொழுதால் அவள் கற்புக்குக் கேடு! ஏன்? தலைவன் ஒருவனைத் தழுவிக் கொண்டவள் பிற தெய்வங்களைத் தொழலாகாது என்பது தமிழ்மறை அன்றோ? தெய்வம் தொழாமல் இருந்தாலோ தாய்க்கும் பிறர்க்கும் ஐயம் உண்டாகும். எனவே "தெய்வம் தொழுவதா? தொழாமல் இருப்பதா?" என எண்ணி மனத்துள் மாழ்குவாள் தலைவி என்க.

26. சில வேளைகளில், வேலன் தலைவியினிடத்தில் நோய்க்கு மருந்தாகா முருகனுக்குரிய பூக்களைத் தந்து அவள் கூந்தலில் முடிக்கச் செய்தலும் உண்டு. 27. சில நிலைகளில் நோய் தணிதற்பொருட்டாக மந்திரத்தகடு உள்ளே வைத்துப் பண்ணிய பொன்னலான தாயத்தைத் தந்து அதனைத் தலைவியை அணிந்துகொள்ளவும் செய்வான். ஆனல் இவ் வழக்கும் பெரிதாகப் பயின்று வரவிலை.

இவ்வாறு வேலனின் அறியாமையால் அலைப்புறும் தலைவியின் தாங்கருரா துயரை நீக்கி அவளின் உயிரனைய கற்பினைக் காக்க முற்படுவாள். ஆண்டு அவளின் வேறுபடாத தோழி. அவள் வெறியாடிக்கொண்டிருக்கும் வேலனை. பார்த்து 28. "வேலனே! உன்னை ஒன்று கேட்பேன்; ஆட்டுக் குட்டியைக் கொன்று. பல்வகைச் சோறும் பலியிட்டு முருகனுக்குப் படைத்தாயே, இப்பொழுது இங்கே தலைவிக்கு நோய் கொடுத்த தலைவனது மாலை புரளும் மார்பு வந்து இப்பலியை உண்ணுமோ?" என்று கேட்பாள். அப்படி அவள் வேலனைப் பார்த்து வினவும்போதே கேட்டுக் கொண்டிருந்த தாய்க்கு

'அத்தலைவன் யாவன்?'' என வியப்பும் அவனை அறியும் அவலும் உண்டாகும். உண்டாகவே தோழியைத் தனியே அழைத்து அவள் வழியாகத் தலைவியைக் கவர்ந்த தலைவனை இன்னவன் என்றறிந்து அவனையே தலைவிக்குக் கடிமணம் செய்விப்பாள். தலைவியின் நோயும் பணத்தின் முன் பஞ்சம்போல பறந்துவிடும் என்க.

இனித் தலைவனோடு களவொழுக்கம் பூண்டிருந்த தலைவி யாரும் அறியாமல் அவனுடன் அவனூர்க்குப் போய்விடுதலும் மரபே அப்படி அவள் போன செய்தி அறிந்த தாய், அவள் மீண்டும் வருவாளா மாட்டாளா என்பதை அறிய வேலனிடம் வினவுதலும் உண்டு. 29'' இரவில் தூங்காது கண்ணீர் கலங்க அழும் எம் கண்கள் இனிமை உறக்கம் கொள்ள என் மகளைக்கொண்டுசென்ற தலைவன் அவளை என்னில்லில்கொண்டு வருவானோ அல்லது தன்னில்லத்தே வைத்துக்கொள்வானோ அவனது மனக்குறிப்புத்தான் யாது என்று திட்டவட்டமாகக் கூறுவாயாக!'' என்று கேட்பாள்.

இவ்வாறு வேலன் பண்டைக்காலத்து, இன்றியமையா இடம் பெற்றிருந்தான் என்பது வெளிப்படை. எனினும், அவன் வெற்று ஆரவார நீர்மையனாய், நோய்த்திறம் அறியாப் பேதையாய் ஆடுவதும் பாடுவதும் மட்டுமே அறிந்திருந்தான் என்பதுதேசாலும். இன்று அவன்வழியினர்பூசாரி எனும்பெயரிலும் மந்திரவாதி எனும் போர்வையிலும் வழங்கி வருகின்றனர்.

---

# 'அல்ல', 'இல்லை' எனும் எதிர்மறை வினைகள் *

திருமிகு. கோ.சுப்பையா, எம் ஏ , பி.எச் டி ,
இந்திய மொழிகளின் நடுவண் நிலையம்,
மைசூர் – 570006

எதிர்மறை அமைப்பு தமிழில் காணும் இலக்கணக்கூறுகளில் (Grammatical Categories) ஒன்றாகும் எதிர்மறை உருபுகளாலும் (Suffixes) வினைச்சொல்லாலும் (Verb) உணர்த்தப்படுகிறது. அல்ல, இல்லை என்பன எதிர்மறை வினைகளாகும்.[1]

இவ்விரு வினைகளும் பொருளியல் அமைப்பில் (Semantic Structure), பொருள் வேறுபாடு (Semantic difference) உள்ளன என்று மொழி இயல் அறிஞர்கள் (Linguists) கூறுகின்றனர். உண்மையில் இவைகளிடையே இத்தகைய-பொருள் வேறுபாடு-வேறுபாடு கிடையாது மேலோட்டமாக (Formal level) காணப்படுகின்ற இவ்வேறுபாட்டை மாறி வரும் இயல்பின் (Complementary Distribution) அடிப்படையில் விளக்கலாம். மேலும் ஒலியியல் விதிகள் (Phonological rules) இவ்வேற்றுமைகளை நன்கு விளக்கும். இக்கருத்துக்களே இக்கட்டுரையின் உட்கருவாகும்.

---

*. இக்கட்டுரையின் ஆங்கில படிவம் ஆக்ராவில் நடைபெற்ற இந்திய மொழியியல் அறிஞர்கள் கருத்தரங்கில் படிக்கப் பெற்றது. இக்கட்டுரை எழுதும் போது பல வகையில் கருத்து பரிமாறி உதவி புரிந்த டாக்டர் திரு. இ. அண்ணாமலை அவர்களுக்கும் டாக்டர். திரு. கி. ரங்கன் அவர்களுக்கும் என் நன்றி

1) தற்கால பேச்சு வழக்கில் இல்லை எனும் வினைமட்டும் தான் வழங்கப் படுகிறது. இலக்கியத் தமிழில் அல் எனும் வினை பாலெண் இன விகுதிகளைக் கொண்டு வழங்கப்பெறும். ஆனால் சாதாரண வழக்கில் அல்ல எனும் வினை எல்லாப் பெயர்களுடன் வருகிறது.

அல்ல எனும் எதிர்மறைவினை ஒப்புமைப்பண்பை (Identity) உணர்த்துகிறது நிலைமைப்பண்பை (Existentiality) இல்லை எனும் வினைக் குறிக்கிறது. இப்பாகுபாட்டை மொழி இயல் அறிஞர்கள் கூறுகின்றனர்.

எ கா : (1) அது நாய் அல்ல

(2) அங்கே நாய் இல்லை

கீழ்வரும் வினைப்படிநிலைத் தொடரன்களை இல்லை எனும் வினை எதிர்மறையாக்குவதைக் காணலாம். இல்லை எனும் வினை வினையெச்சத்துடன் (Infinitive) வருவது நோக்கத்தாகும்.[2]

3. a. அவன் வந்தான் (இறந்தகாலம்)

3. b. அவன் வரவில்லை (இறந்தகாலம்)

4. a. அவன் வருகிறான் (நிகழ்காலம்)

4. b. அவன் வரவில்லை (நிகழ்காலம்)

5. a. அவன் வருவான் (எதிர்காலம்)

5. b. அவன் வரமாட்டான் (எதிர்காலம்)

இல்லை எனும் வினை இறந்த. நிகழ்கால முற்றுவினையுடன் மிக குறைந்த அளவில் பேச்சு வழக்கில் வழங்கப்படுகிறது; எதிர் கால முற்றுவினையுடன் வரா.

6 a. அவன் வந்தான் இல்லை

6 b. அவன் வருகிறான் இல்லை

2) எதிர் மறைவினை இரு காலங்களைத்தான் பகுத்துணர்கிறது. அதாவது எதிர் காலம் (future) என்றும் எதிர்காலம் அல்லாதனவு (Non-Future) என்றும் இரு காலங்களாகப் பகுத்துணரப்படுகிறது. எதிர் காலம் அல்லாதனவையில் இறந்த காலமும் நிகழ் காலமும் அடங்கும். எதிர் காலத்தில் எதிர் மறையைக் குறிக்க மாட்ட் — எனும் வினைப்பகுதி பயன்படுத்தப்படுகிறது. மாட்ட் எனும்வினை. பாலெண் இன விகுதிகளை மேற்கொள்ளும்.

6. c * அவன் வருவான் இல்லை. [3]

பெயராக்கத் தொடர்களுடன் (Nominal predicates) அல்ல வினைவருவதைக் கீழ்வரும் தொடரன்கள் விளக்கும்.

7. a. அவன் ராமன்

7. b. அவன் ராமன் அல்ல

8. a. கண்ணகி அழகானவள்

8. b. கண்ணகி அழகானவள் அல்ல

9. a. அது பாம்பு

9. b. அது பாம்பு அல்ல

மேலேயுள்ள தொடரன்களை ஆய்வோமானால் ஒப்புமைப் பண்பு எதிர்மறை யாக்கப்படவில்லை என்பது விளங்கும் தொடரன் 7.b—லுள்ள ராமன் ஒருமைத் தன்மை விளக்கு (Unique reference) உடையதாகும். இத்தொடரனை "அவன் வேறு யாரோ ஆனால் (அவன்) ராமன் அல்ல" என மாற்று தொடரனாக் (Paraphrase) கூறலாம். ஒருவனை ராமன் என் குறித்துக் கொள்ளல் எனும் மொழிபவனின் (Speaker) கருத்து தவறு உடையதென்று விளங்கப் பெறுகிறது. இதே போன்றே தொடரன் 9. b. க்கும் பொருள் விளக்கம் (Semantic Interpretation) கொண்டு விளக்கலாம். ஆனால் தொடரன் 8 b. சற்று வேறுபாடு உடையதாகும். இத்தொடரனில் அழகு எனும் தன்மைப்பெயர் (abstract Noun) ஒருவருக்கு உருவகப் படுத்தப்பட்டு கூறப்படுகிறதே ஒழிய ஒருவருடன் ஒப்புமைக் கொண்டதல்ல. இத்தொடரனில்

---

3) எதிர்கால் முற்று வினையுடன் இல்லை எனும் எதிர் மறைவினை எதிர்மறைப் பொருளில் (Negative meaning) வழங்குவது இலக்கண வழுவு (Non-Grammatical) ஆகும் ஆனால் இணை வினா அமைப்பில் (tag question level) இத்தொடரன் - இல்லை எனும்வினை எதிர்கால முற்று வினையுடன் வரும் தொடரன், இலக்கணம் (Grammatical ness) உடைத்தாகும். இக்கட்டுரையில் இதை விவரிக்கவில்லை

எதிர்மறை ஒப்புமையைக் குறித்தது அல்ல என்பது தெளிவாக்கப்படுகிறது. எனவே அல்ல எனும் வினை எப்பொழுதும் ஒப்பு புமைப் பண்பைத்தான் எதிர் மறையாக்கிறது எனும் கூற்று தவறுனது என்பது விளக்கப் பெறுகிறது.

அல்ல, இல்லை எனும் வினைகளுக்கிடையே பொருள் வேறுபாடு கிடையாது எனும் கருத்தைக் கீழ்காணும் தொடரன்கள் நன்கு விளக்கும்.

10. a. முனியண் குமாரைக் கத்தியால் [குத்தினன்]

10. b. முனியன் குமாரைக் குத்தியது [கத்தியால்]

கத்தியால் எனும் தொடரில் அழுத்தம் (Emphasis) காணப் படுகிறது. இவ்வழுத்தம் பெற்ற இத்தொடர் Consitmeut பயனிலைத் தொடர் நிலைக்கு (Predicate phraee position) நகரப்பெற்று, வினையைப் பெயராக்கப் (Nominalizing) பெற்று, தன் தன்மையை இழக்காமல், பொருள் மாறுபடாமல் விளக்குவதை உணரலாம். இவ்விரு பொருளொப்புமை (Synon-Ymous) தொடரன்கள் எதிர்மறையாக்கப் படும் போது, முறையே இல்லை, அல்ல எனும் வினைகள் பயன்படுத்தப் படுகின்றன.

தொடரும்......

---

# நாடும் ஏடும்

## மதிப்புரை

ஆசிரியர் : திருமிகு. பா. வளன் அரசு எம்., ஏ.
பாளையங்கோட்டை

விலை உருபா : மூன்றரை.

சுவைமிகு தமிழில் வகை, வகையாக அமைத்துள்ளது பன்னிரு கட்டுரைகள், பள்ளிச்சிறுவர் முதல் பார்புகழ் அறிஞர் வரை படிப்பவர்களுக்கு உணர்ச்சியூட்ட வல்ல உரைகள் மிளிரக் காணப்படுகிறது நூலில்.

இளமைப் பருவமுதல் கசடறக் கற்றுத் தெளிந்த எழுத்தாளரான திருமிகு. வளன் அரசு அவர்களது சீரிய தமிழ்த் தொண்டினைப் பாராட்டுகிறோம்.

ஆ. ஆண்டியப்பன்

# திராவிட மொழிகளில் வண்ணணை அமைப்பும் வரலாற்று அமைப்பும்

திருமிகு. இரா. கோதண்டராமன்
எம், ஏ; எம்; ஏ.

## வினையாலணையும் பெயர்கள்

தமிழில் வழங்கும் தெரிநிலை வினையாலணையும் பெயர்களும், குறிப்பு வினையாலணையும் பெயர்களும் இப்பகுதியில ஆராயப்படும். இறந்தகாலப் பொருண்மையை உணர்ததும் வினையாலனையும் பெயர்களை செய்தவன், செய்தவள், செய்தவர் செய்தவை, ஆகிய வாய்ப்பாடுகளின் கீழ் கொணரலாம் இவ் வாய்ப்பாட்டு வினைகளின் அமைப்பை முதலில் *செய்தவு-அன்/ அள்/அர்/ ஐ எனக் கொண்டு ஈற்றில் நிகழும் விகுதிகளை நீக்கி விட்டு எஞ்சி நிற்கும் பகுதியாகிய *செய்தவு-வாய்ப்பாட்டு வினைகளின் வரலாற்றுஅமைப்பைப் பின்வருமாறுஆராயலாம்.

*செய்தவு- < *செய்தபு < *செய்தம்பு < *செய்தம்-பு.
*செய்தம் < *செய்தய்ம் < *செய்தய்-உம்
*செய்தய் < *செய்து-அய்.

இவ் ஆய்வில் *செய்து, *செய்தய், *செய்தம், *செய்தவு ஆகிய நான்கு வினையமைப்புக்களை நாம் சந்திக்கின்றோம். இவற்றுள் செய்து வாய்ப்பாட்டு வினையமைப்புக்கள் மலையாளத்திலும், தமிழிலும் முற்றுப் பொருண்மையையும் எச்சப் பொருண்மையையும் உணர்த்தி நிற்கின்றன. *செய்தய் வாய் பாட்டுவினைகள் செய்தெ வாய்பாட்டின வாகி, க்ாணிக்காரர் மொழியில் முற்றுப்பொருண்மையையும், பெயரெச்சப் பொருண்மையையும், உணர்த்துகின்றன 1 பழந்தமிழ்பல வின்

1. *செய்தய் வாய்பாட்டு வினைகளின் திரிபாகிய செய்தெ வாய்பாட்டு வினைகள் காணிக்காரர்மொழியில் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கு பொதுவாக நின்று முற்றுப் பொருண்மையைக் குறிக்கின்றன. (காணிக்காரர் மொழி குமரிமாவட்டத்திலுள்ள குலசேகரம், அழகியபாண்டியபுரம் ஆகிய காட்டுப் பகுதிகளில் வாழும் காணிக்காரர்களால் பேசப்படுகின்றது)

பால் முற்றுப் பொருண்மையையும், பெயரெச்சப் பொருண்மையையும் உணர்த்தும் செய்த வாய்ப்பாட்டு வினைகள் மேற்குறித்த *செய்தய் வாய்பாட்டு வினைகளினின்றும் தோன்றியவையாகும்.

* செய்தம் வாய்ப்பாட்டு வினைகள் பழங்கன்னடத்தில் ஆண்பாற் - பொருண்மையை உணர்த்தும் வினைமுற்றுக்களாக நிகழ்கின்றன (HKL பக்கம் 128 & 129) எ-டு பெத்தம் ( < * பெற்றம்) 'பெற்றான்', கொட்டம் 'கொடுத்தான்' பொத்தம் ( < * பொற்றம்) 'பொறுத்தான்', கொந்தம் ( < * கொன்றம்) 'கொன்றான்', நிந்தம் ( < * நின்றம்) 'நின்றான்', பந்தம் (bandam) 'வந்தான்', கெட்டம் 'கொடுத்தான்', பாழ்தம் (baildam) ( < * வாழ்ந்தம்) 'வாழ்ந்தான்', கல்தம் (kaltam) 'கற்றான்', பிழ்தம் (bildam) ( < * 'விழுந்தம்) 'விழுந்தான்', ஆழ்தம் ( < * ஆழ்ந்தம்) 'ஆழ்ந்தான்', கழிதம் ( < * கழிந்தம்) 'கழிந்தான்', உண்டம் 'உண்டான்', கொண்டம் 'கொண்டான்', சுட்டம் 'சுட்டான்', பொக்கம் 'புக்கான்', கண்டம் 'கண்டான்' இவ் எடுத்துக்காட்டுகளில் உள்ள * செய்தம் வாய்பாட்டு வினைகள் அனைத்தும் * செய்தய் வாய்ப்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும் கன்னடத்தில் ஆண்பாற் பொருண்மையை உணர்த்தும் * செய்தம் வாய்பாட்டுவினைகள் தமிழில் செய்தமை ( < * செய்தம்-ஐ) வாய்பாட்டு வினைப்பெயரின் பகுதிகளாக நடைபெறுகின்றன. பழந்தமிழில் வழங்கும் செய்தமாறு ( < * செய்தம் ஆறு) என்னும் வாய்பாட்டு வினைகளிலும் * செய்தம் - வாய்பாட்டு வினைகள் பகுதிகளாகின்றன. எ-டு.

பிறந்தமாறு ( < * பிறந்தம்- ஆறு. நற்றிணை )40.12.
'பிறந்தால்'

புணர்ந்த மாறு ( < * புணர்ந்தம் - ஆறு. ஷை 219.10)
'புணர்ந்ததால்'

வந்த மாறு ( < * வந்தம் - ஆறு ஐங்குறு நூறு. 120)
'வந்ததால்,

இதேபோல் காடர் மொழியில் வழங்கும் இருதிணை ஐம்பால் மூவிடங்களைக் குறிக்கும் செய்தன் வாய்பாட்டு வினைமுற்றுக்களும், தமிழில் - என்/- அம்/- ஐ/- இர்/ - அன்/-அள்/ - அர்/-அ ஆகிய விகுதிகளின் முன் நிகழும் செய்தன் - வாய்பாட்டு வினையமைப்புக்களும் * செய்தம் வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றிய செய்தி இக்கட்டுரையின் போக்கில் உணர்த்தப் படுமாதலால், * செய்தம் வாய்பாட்டு வினைகள் ஒரு நிலையில் இடப்பொருண்மை எதனையும் உணர்த்தாத பொதுவினைகளாக நடைபெற்றிருக்கக் கூடும் என்று கருதத் தோன்றுகிறது.

* செய்தவு வாய்பாட்டு வினைகள் இன்றைய கன்னடத்தில் பலவின் பாற்பொருண்மையினவாகிய இறந்தகால வினைமுற்றுக்களாகும். * செய்தம்பு வாய்பாட்டு வினைகளின் திரிபாகிய * செய்தவு வாய்பாட்டு வினைகள் * செய்தம் வாய்பாட்டுவினைகளின் அடியாகத்தோன்றியவையாகும். * செய்தவு வாய்பாட்டு வினைகள் தமிழில் - அன்/ - அள்/ - அர்/ -ஐ ஆகிய வேறுபட்ட பொருண்மைகளை உணர்த்தும் விகுதிகளை ஏற்று வினையாலணையும் பெயர்களாக வழங்கும் நிலையை நோக்கும் போது அவை கன்னடத்தில் உள்ளது போல் அல்லாமல் ஒருநிலையில் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் உரிய பொது வினைகளாக நடைபெற்றிருக்கலாம். இவ்வாறு கொள்வதற்குக்காரணம் செய்தவன், செய்தவள், செய்தவர்கள் ஆகிய வாய்பாட்டு வினையாலணையும் பெயர்கள் மூவிடங்களுக்கும் பொதுவாக அமையும் நிலைகாணப்படுகின்றது. எ–டு.

அ, நான் நேற்று வந்தவன்
நீ நேற்று வந்தவன்
அவன் நேற்று வந்தவன்

ஆ. நான் நேற்று வந்தவள்
நீ நேற்று வந்தவள்
அவள் நேற்று வந்தவள்

இ. நாம் நேற்று வந்தவர்கள்

நீங்கள் நேற்று வந்தவர்கள்

அவர்கள் நேற்று வந்தவர்கள்

* செய்தவு வாய்பாட்டு வினைகள் தமிழில் வழங்கும் செய்தவாறு (< * செய்தவு-ஆறு) என்னும் வாய்பாட்டு வினையடை (Adverbs) களின் கண்ணும் பகுதிகளாக நடை பெறுகின்ற. செய்தவாறு வாய்பாட்டு வினையடைகளில் நிகழும் வகரமெய்யை மொழியியலார் வண்ணனை இலக்கணங்களில் உடம்படுமெய்யாகக் கருதுவர். வரலாற்று நிலையில் அதனை அவ்வாறு கொள்வதற்கில்லை.

தெலுங்கில் வழங்கும் சேஸினவாண்டு 'செய்தவன். சேஸினவாரு 'செய்தவர்', சேஸினவி 'செய்தவை' ஆகிய வாய்பாட்டு வினையாலணையும் பெயர்களும், கன்னடத்தில் வழங்கும் மாடிதவனு 'செய்தவன்', மாடிதவளு 'செய்தவள்', மாடிதவரு 'செய்தவர்', ஆகிய வாய்பாட்டு வினையாலணையும் பெயர்களும், தமிழில் வழங்கும் பாடியவன், பாடியவள்/ பாடினவள், பாடியவர்/பாடினவர், 'பாடியவை/ பாடினவை போன்ற அமைப்பினவாகிய வினையாலணையும் பெயர்களும் முறையே * சேஸினவு-, * மாடிதவு-, * பாடியவு-/* பாடினவு - ஆகிய வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும் இவ்வினையமைப்புக்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

தெலுங்கு

* சேஸினவு < * சேஸினவு < * சேஸினம்பு

< * சேஸினம் – பு

* சேஸினம் – < * சேஸினய்ம் < * சேஸினய்–உம்

* சேஸினய் – < * சேஸினு–அய்

* சேஸினு - * சேஸிங- < * சேஸிந்து

< * சேஸிந்து < * சேஸிம்-து

* சேஸிம் - < * சேஸிய்ம் < * சேஸிய்-உம்

* சேஸிய் < * சேஸ-இப்

தொடரும்.

# சங்கச் செய்திகள்

## 1974 ஆம் ஆண்டு மேதிங்கள் மதுரைத் தமிழ்ச்சங்கம் நடத்திய நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வுகளின் முடிவுகள்

### நுழைவுத் தேர்வு

முதல் வகுப்பு:

இல்லை

இரண்டாம் வகுப்பு:

590, 596—598, 651, 652. 659. 686, 696. 704. 715, 719. 734, 751, 773.

மூன்றும் வகுப்பு:

568. 570—574. 577--580. 584, 588. 589. 592, 594. 600. 601, 604, 606, 607, 612 -- 614, 616. 617, 623, 624. 627. 629, 631. 633. 637—642, 644, 646, 647. 649. 650. 653. 655, 657, 658, 662.--667, 669. 670, 673, 675. 677--682. 684, 685, 687-- 689. 691--695. 697. 699, 701--703, 705, 707--710. 712, 713, 720--722., 725--727, 730. 732. 733, 735--739 741. 742. 745. 748--750. 752, 753, 755. 761. 762. 764, 767, 769--772, 774--780. 782.

### இளம்புலவர் தேர்வு

முதல் வகுப்பு:

இல்லை

இரண்டாம்வகுப்பு :

2512, 2516. 2522, 2531. 2563, 2566. 2581, 2643. 2649, 2686, 2687, 2692, 2698,

2702, 2716, 2727, 2733, 2774, 2775, 2777, 2782, 2783, 2786, 2795 2804, 2845, 2981, 2988, 3008, 3035, 3060, 3157, 3199, 3222.

மூன்றும் வகுப்பு :

2513---2515, 2517, 2519, 2520, 2524--2530, 2632---2538, 2540---2542, 2548---2556, 2559---2562, 2264, 2565 2567---5576, 2578---2580, 2582---2597, 2601---2613, 2615---2620, 2622---2624, 2626, 2627, 2629, 2631---2642, 2644--2648, 2650, 2651, 2654--2685, 2688, 2690, 2691 2693—2697, 2699--2701 2703---2706, 2708---2715, 2717, 2 7 1 9, 2720, 2722---2726, 2728---2732, 2735, 2742, 2744, 2749, 2751---2753, 2755, 2758---2760, 2762 -- 2773, 2776, 2778---2781, 2787---2794, 2796--- 2799, 2802, 2803, 2805---2809, 2811---2817, 2820, 2821, 2823--2825, 2827, 2829---2831, 2837, 2842---2844, 2847, 2851, 2859, 2861, 2863, 2865, 2866, 2869---2871, 2 8 7 3, 2874, 2879---2887, 2889---2898, 2902---2905, 2910, 2912--- 2918, 2925, 2928, 2933, 2941, 2945---2947, 2950, 2954, 2955, 2 9 6 0, 2964, 2 9 6 5, 2969--2971, 2975, 2978, 2982, 2984 2985 2989--2994, 2996, 2997, 3002, 3004, 3006, 3007, 3009, 3011--- 3014, 3016---3021, 3025, 3028---3031, 3033, 3034, 3036, 3037, 3040, 3 0 4 3, 3046---3048, 3050, 3052, 3055---3057, 3059,

3062, 3063, 3065--3067, 3071, 3076, 3085, 3088--3091, 3093-3100 3102 3107,3110, 3112,-- 3115, 3117, 3121, 3127-3129, 3134, 3137, 3138, 3142, 3144, 3150 - 3153, 3155, 3156, 3158—3160, 3163, 3167, 3171, 3173—3184, 3188--3192, 3194—3196, 3198, 3200 3205,

3211, 3213, 3215, 3217—3221, 3223—3229 3231 - 3255, 3258, 3259, 3263.

புலவர் தேர்வு

முதல் வகுப்பு:

இல்லை

இரண்டாம் வகுப்பு:

3156, 63, 76, 78 80 86, 87, 98, 3214, 86, 3300, 01, 24, 26, 38, 71, 72, 88, 3412, 52, 53, 94, 3664, 71, 3740, 91, 92, 3807, 10, 18.

மூன்றும் வகுப்பு:

2941, 42, 46, 47, 50, 51, 53, 57--60, 62, 64, 65, 68, 69, 72, 73, 75--79, 90, 94--3002, 04--09, 12--14, 16 -- 24, 27, 29 - 33, 36, 37, 40 - 47, 53, 56 - 58, 62, 63, 65, 67, 68, 71, 72, 74, 78, 81 - 84, 86 93, 97, 99, 3108, 09, 13, 18, 20, 21, 24, 25, 28—30, 33—37, 39, 45 46, 48, 50, 51, 53, 57 - 62, 64—66, 68—75 79, 81—83, 85, 89—91, 93--95 99--3204, 06—12 15, 16, 20--25, 32, 35—37, 39, 40, 43, 45, 47, 49, 50, 52—57, 59—65, 68, 70, 72, 76, 77, 81, 82, 89—92 94, 96, 98, 99, 3302, 03, 15 -- 19, 22, 25, 27—30, 36, 37, 39, 46, 49, 50 53, 57, 59—61: 64, 66—70, 73, 74, 76—79, 81 - 83, 93—98, 3403—09, 13, 15, 20, 24, 25, 37, 39—43, 47, 54, 57, 61—63, 66, 67, 70, 73—75, 77—85, 89, 90, 92, 96, 97

3503—07, 14, 17, 23, 24, 26—28, 31, 33, 35—38, 41, 42, 44, 47, 48, 50, 52, 55, 56, 60—62, 66—68, 70, 72, 74, 77, 80, 86, 88—91, 94—97, 99—3603 05, 08—12, 14—16, 19-21, 24—26, 28, 30—34, 36, 42, 44, 46, 50, 53, 57, 62, 63, 65, 67—70, 72—80, 82, 85, 87—89, 92, 97—3714, 16—22, 24, 28, 34, 37—39, 42, 43, 48—50, 54—64, 68—70, 76, 77, 82, 86, 87, 93, 98, 99, 3803, 05, 06, 08—09, 11—17, 20—25, 27, 28, 30, 31, 33 35—37, 39, 40, 42 43 45

## தேர்வுக் குழுவினர்

1. மா தனிக்கோடிபாண்டியன் பி.ஏ; பி.எல்.

2. து ஆ தேவசிகாமணி பி. ஏ; பி எல்.

3. ஆ ஆண்டியப்பன்

8—5—75

28—3—75 ஆம் நாள் காலை 10 மணிக்கு மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் ஆட்சிக் குழுக் கூட்டம் உயர்திரு து. அ. தேவசிகாமணி பி. ஏ. பி எல். அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அதுபோழ்து அடியில் கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

1. மதுரைத் தமிழ்ச்சங்கத் துணைத்தலைவர் திரு. இரா. செல்லத் தேவரவர்களின பதவி ராஜிநாமா கடிதம் ஏற்றுக் கொள்ளப்பட்டது 28-3-75 ஆம் நாள் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

2. முந்திய செயலாளர் ராஜிஞமா செய்ததால் இதுவரை துணைத்தலைவர் பார்த்து வந்த தமிழ்ச் சங்க நிர்வாக சகல பொறுப்புகளையும் இதுமுதல் செயலாளர் அவர்கள் பார்த்து வரவேண்டியது.

3. மதுரை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, ஆந்திரவங்கி இராமநாதபுரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி ஆகிய வங்கிகளில் உள்ள தமிழ்ச் சங்கக் கணக்குகளை இதுகாறும் சங்கத் துணைத்தலைவர் ஆர். செல்லத்தேவர் அவர்கள் செயல்படுத்தி வந்ததை மாற்றி இது முதல் மேலே குறிப்பிட்டுள்ள வங்கி கணக்குகளை தமிழ்ச்சங்க செயலாளர் திரு டி பி. எம். பெரியசுவாமி அவர்களும் செந்தமிழ்க் கல்லூரி தாளாளர் திரு. மா. தனுக்கோடி பாண்டியன் அவர்களும் கூட்டாக செயல்படுத்த வேண்டியது. இதன் மூலம் 25-2-72 ஆம் உ 11வது தீர்மானம் மாற்றி அமைக்கப்படுகிறது.

4 ஆட்சிக்குழு உறுப்பினர் திரு. நாகமணி அவர்கள் தன் உறுப்பினர் பதவியை ராஜிஞமா செய்து விட்டதால் அந்த இடத்தில் இராமநாதபுரம் திரு. ஆர். காசிநாதத் துறையவர்களை ஆட்சிக்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

5. இதுவரை பதவியில் இருந்து வந்த துணைத்தலைவர் திரு. இரா. செல்லத்தேவர் அவர்கள் தனது பதவியை ராஜிஞமா செய்து விட்டதால் அந்த இடத்தில் இராமநாதபுரம் திருமிகு ஆர். காசிநாததுறை அவர்களை துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. சங்க விதி முறைகளின்படி துணைத்தலைவர் தன் பொறுப்புக்களை செயல்படுத்தி வருவது

6. உயர்திரு. ஆ. ஆண்டியப்பன் அவர்களை சங்கத் துணைச் செயலாளராக தோந்தெடுக்கப்பட்டது.

து. அ. தேவசிகாமணி பி.ஏ; பி எல்.

கூட்டத்தலைவர்

# காலமும் - கோலமும்

தொடர்கதை

கவியோகி

சுத்தானந்த பாரதியார்

(தொகுதி-70 பகுதி-1ன் தொடர்ச்சி)

........ அறிவொளி சுற்றிக் கண்ணைத் திருப்பும்போது மற்றொரு மாணவர்கூட்டம் எழுந்தது. அதில் பி.ஏ., எம்.ஏ., பி. எஸ்ஸி. மாணவர் - பட்டம் பெற்றவர் படிப்பையே மட்டம் தட்டித் தம்பட்டமடித்து ஆடினர். கேளுங்கள், பாருங்கள், இந்தக்கூட்டத்தில் முன்னணிவகிப்பது பெரியதம்பி

''நான் பெரியதம்பி; என் ஆசிரியர் சின்னத்தம்பி. அவரிடம் ஷேக்ஸ்பியரும் ஷெல்லியும் மில்டனும் படித்து எம்.ஏ. தேறினேன். எனக்கு அம்மே வந்தாள். பிள்ளைகள் நான்கு. இங்குமங்கும் ஓடினேன், அலுவல் தேடினேன்... அகப்படவில்லை- ஒரு வேலைக்கு விளம்பரம் வந்தால் நாலாயிரம்பேர் விண்ணப்பம் போடுகின்றனர். இருக்க வீடு கிடைக்கவில்லை- பாருங்கள்...

எல்லாரும்: வீட்டு நெருக்கடி - நாட்டு நெருக்கடி
வேலை நெருக்கடியே
ஏட்டு நெருக்கடி தேட்டு நெருக்கடி
ஓட்டு நெருக்கடியே—எங்கும்
போட்டி நெருக்கடியே

''படித்தவர் படும்பாடு,, என்ற தொடர்கதை எழுதி இதழுக்கு அனுப்பினேன். அனுப்பியது கூடத்திரும்பி வரவில்லை. எழுதினேன். தங்கள் தொடர்கதை இங்கே வந்ததாகத் தெரியவில்லை என்று விடை கிடைத்தது. மறுஆண்டு அதேகதை இங்குமங்கும் மாற்றம் செய்து, கொச்சைத் தமிழில் ''படிச்ச மாப்பிள்ளை'' என்ற பெயரில் வெளிவந்தது. ''சொக்கு'' என்ற புனைபெயரில் என் கதையை வதைசெய்தவனுக்கு ரூ 1000 கிடைத்தது. காலம் எப்படிப் போனது பாருங்கள்.

'நான் சொல்லுகிறேன் கேளுங்கள்' என்று கோலப்பன் எம். எஸ்ஸி எழுந்து நின்றான். பின்னால் அவன் மனைவி, மக்கள், மாமன்மாமி, பெற்றோர், உற்றோர் எல்லாம் இருபது பேர், அநியாயப்படிப்பு—அநியாயச்செலவு—வீடுநிலம்நகை நட்டெல்லாம் ஒழிந்தன ''பட்டத்துணுக்கே மிச்சம்'' என்றனர். இன்னும் பல பட்டதாரிகள் எழுந்து ஆர்வக் கனலுடன் அலறியபாட்டைக் கேளுங்கள். காலத்தின் கோலத்தைக் கதறும் பாட்டை எல்லோரும் உடன் பாடினர்.

கலிகாலம் நாளுக்குநாள் கடுமை யானதே
கற்றகல்வி கவலையிலே கரைந்து போனதே
புலிபோலே துயரம் வந்து புலனைக் குதறுதே
போராட்டப் புயலினிலே புத்தி சிதறுதே
அரிசியில்லை பருப்புமில்லை யானைவிலையே
அலைந்தலைந்து பார்த்தாலும் அகப்படவில்லையே
சரிசமனாய் மண்ணைக்கலந்து சரக்குமடிக்கிறான்
சண்டாளப் பாவிமகன் கொள்ளையடிக்கிறான்

ஒரு பெண்: பெரியபடிப்புக்காரனுக்குப் பிழைக்கத்தெரியலை
பேச்சுமேடைப் புலிகளுக்கோ உழைக்கத் தெரியலை
அரிய புலமைக் கவிகளுக்கோ ஆடத்தெரியலை
ஆளுக்கேற்ற ஆதிதாளம் போடத்தெரியலை

ஆண்: மாயமினுக்குச் சாயமுகம் மயக்கம் காட்டுது
வாலிபரை எல். எஸ். டி. (L S D) வலையில் மாட்டுது
நாய்மனமும் நோய்களுடன் நடனமாடுது
நாகரிகம் பச்சை கொச்சையாகப் பாடுது

எழுந்தாள் மலைவளர் காதலி—மனங்குளிர எங்களை வைத்து காப்பாற்ற ஆண்களுக்கு ஆண்மையில்லை. இவர்கள் அழகுக்கு வரதட்சிணைவேறு. ஐயாயிரம் பதினாயிரம் திருமணச் சந்தையில் இந்த மாப்பிள்ளைக் காளைகளுக்கு எத்தனை கிராக்கி! இவர்கள் கொடுமையால் எத்தனை பெண்கள் மணம் புரியச் செயலில்லாது வாடுகின்றனர். முப்பது முப்பத்தைந்து நாற்பது தாண்டிய எத்தனை பெண்கள் தனியே தவிக்கின்றனர் நான் ஏழை; பி. யூ. சி. படித்து ஆசிரியர்வேலைக்குப் படித்து எப்படியோ ஒரு வேலையில் ஒட்டிக்கொண்டேன். அந்தப்பள்ளிக்கூட ஆசிரியர் இரண்டாவது மனைவியாக என்னைக்கொண்டார். நான்கு ஆண்பிள்ளைகள் பிறந்து

நாலுபேரும் கல்லூரியில் கலகம் செய்து வெளியேறி வேலை யில்லாது என் பையைக் காலிபண்ணி படம் பார்த்து டப் பாப்பாட்டுப் பாடித் திரிகின்றனர். ஐயோ விதியே

படம் பார்க்கும் பயல்களுக்குப் புத்தி மாறுதே
பத்திரிக்கைப் பத்தியெல்லாம் பச்சை நாறுதே
கடவுள்கோவில் சமயமென்றால் கேலியானதே
கலிகாலக் கொடுமையிங்கே கடுமையானதே

எழுந்தான் இளஞ்சிறுத்தை; நிறுத்தம்மா கடவுள் பேச்சு! பசி கிண்டுது; வயிறு வாடுது; நான் எஞ்சினீயர் வேலைக்குப் படித்து, ஊரைச் சுற்றுகிறேன். என் மனைவி பள்ளியிறுதி தேறி தொலைப்பேச்சியாகி மாதம் முன்னூறு சம்பாதிக்கின் றாள். நான் வீட்டில் சமைத்து ஐந்து குழந்தைகளைப் பார்த் துத்தாய்ச்சி வேலை செய்கிறேன். பெண்களுக்கு விரைவில் வேலை கிடைக்கிறது ஆண்கள் என்ன படித்தும் என்ன என்ன .. என்ன! எனக்குப் பாட வராது. அகவலாக என் தகவலைச் சொல்லுகிறேன்.

வீட்டுவேலை எனக்குத் தந்தாள்
நாட்டுவேலை நங்கை புரிந்தாள்
ஆண் இப்படி பெண் அப்படி

அவ்வளவுதான் சரக்கு! இப்படிப் பல வேலையில்லாப் பட்ட தாரிகள் வீறிடும்போது மற்றொரு கூட்டம் எழுந்தது. தேர் வில் தவறிய திருவாளர் தார்பட்டனார் அரசியலிற் புகுந்து மேடை மாலை சூடினர் தோழர்களே! இன்று காணும் இன்னல்களுக்கெல்லாம் காரணம் நீங்களே.

வெத்துவேட்டு விளம்பரத்தை ஒத்துபாடுறீர்
வீணர்களின் கிண்டலுக்குத் தாளம் போடுறீர்
எத்துக்கடைக்காருக்கு ஓட்டுப் போடுறீர்
எனக்கேயினி ஓட்டுப்போட்டால் இன்பமாகுவீர்.

வரியேற்றம் விலையேற்றம் கடனேற்றம்! எங்கும் வேலை நிறுத்தம், கேரோ, தர்ணா எங்கும் ஊழல் எல்லாம் ஊழல் எங்கள் பொதுநலக் கட்சிதான் உங்களுக்கு நன்மை செய் யும். போடுங்கள் எங்களுக்கே ஓட்டு.

வாயடியால் இப்படிக் காசடிப்பவர் சிலர் அரசியலிற் புகுந்தனர் இவர்களுடன் வில்லுப் பாட்டுக்காரர் டும் டும் டும் போட்டு அலறினர்.

காசடி மோசடி ஜேப்படி டும்டும்டும்
கள்ளச்சந்தைக் குள்ளநரி டும்டும்டும்
பேசடிகாளீ பேய்நிலைமாற டும்டும்டும்
பேய்நிலைமாறி தாய்நிலைசேர டும்டும்டும்

இப்படிப் பல காட்சிகள் பல வேடம் போட்டுத் தற்காலப் படிப்பின் குறைகளைவிரிட்டன முடிவில் பாயில் (Boil) நளபாகம் ஒரு நீளக் கரண்டியைத் தூக்கி வந்ததும் கூட்டம் எக்காளம் போட்டுச் சிரித்தது.

நளபாகம் பேசினான்

''நான் பௌதிகப் பட்டத்திற்குப் படித்தவன். Boyle's Theory of Compression பாயிலின் இறுக்கம்பற்றி எழுதும் போது Boil என்று போட்டுவிட்டேன். எனது விஞ்ஞானக் குருநாதருக்குப்பைரவர் வந்துவிட்டார் 'அடசீ நீ Boilபண்ணத்தான் தகுதி சமையல்காரனாக இரு போடா' என்று சாபம் கொடுத்தார். சாபம் பலித்தது. பரீட்சையில் கோட் அடித்தேன்! அப்பா அம்மா அண்ணா எல்லாரும் திட்டினர். என்னை மணக்கத் துடித்த பெண் இன்னொரு எம். ஏ. யை மணந்து அவன் விலக்கி, இன்னொருவனைச் சேர்த்துக் கொள்ள இவள் இருக்கிறாள் இன்னொரு நடிகனுடன் நான் அங்குமிங்கும் வேலைக்கு அலைந்தேன். முடிவில் மீனாட்சி லாட்ஜ் ஐயராமய்யரிடம் கணக்கு வேலை செய்து, கரண்டி பிடித்தேன். பாருங்கள் இந்தக்கரண்டியால் எனக்கு யோகமடித்தது. ஐயராம் காலமசென்றார். அவர் மனைவி ஒட்டலை என்னிடம் விடுத்தாள். இப்போது மீனாட்சிபுரமே உருவானது இட்லி காபி உப்புமா தனிப்பகுதி பெரிய கட்டிடத்தில் சாப்பாடு தனிப்பகுதி. மெதுவடை முதல் அல்வா, லட்டு, ஜீலேபி, பர்பி, ஜாங்கிரி, கேசரி வரையில் பட்சணவகைகள் தனிப்பகுதி படித்து வேலையில்லாத பட்டதாரிகள் என்னிடம் நூறுபேர் வேலை செய்கின்றனர். நான்ஏழை மாணவருக்குப் பள்ளிக்கூடம் நடத்துகிறேன். அவர்களுக்கு என்னிடம் சமையல் வேலை செய்யும் பட்டதாரிகளே ஆசிரியன்மார். இவர்களுக்கு ஏழைக் கன்னிகளையும் இளம் கைம்பெண்களையும் கட்டிக் கொடுத்து, குடும்பம் நடத்தச் செய்திருக்கிறேன். சுமார் ஐநூறு பேர் என்னால் சுகமாக வாழ

கிறார்கள். அவர்களிற் சிலரைப் பாருங்கள்... எப்படியிருக் கிறார்கள். ஏ கை மடக்கிக் காட்டுங்கள். மாணவர் ஆசிரியர் அனைவரும் கை தட்டி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

இந்தச் சமயம் தேர்விலே தோற்ற மாணவர் பட்டை நாமம் போட்டுக் கொண்டு, தீபபந்தம் பிடித்து, சங்குஊதி, சேகண்டி தட்டிக்கொண்டு திருப்பதியாத்திரை நடித்தனர். அவர்களுக்குத் தேர்ந்த மாணவர் உண்டியல் போட்டனர்.

அவர்கள் பாட்டில் சில வரிகள் தருவோம்.

ஏழுமலை ஆண்டவனே கோவிந்தா!
ஏகாதசிப் பட்டாளம் கோவிந்தா!
வாழும்வகை வகுத்திடுவாய் கோவிந்தா!
வயிற்றுக்கு வழிசெய்வாய் கோவிந்தா!

ஏட்டுப் படிப்பாலே—கோவிந்தா
எந்தப் பயனுமில்லை கோவிந்தா
பாட்டுடனே சேகண்டி தட்டிவந்தோம்
பட்டாவுக்கு வேலையில்லை கோவிந்தா!

சமுதாய வாழ்வினிலே கோவிந்தா
சாதிவந்து முட்டுதடா கோவிந்தா
அமுதுபிடி அருள்புரிவாய் கோவிந்தா
அடிபிடித்து வேண்டுகிறோம் கோவிந்தா!

படிப்புவேண்டாம் பரிட்சை வேண்டாம் கோவிந்தா
பள்ளிக்கூடக் கதவடைப்போம் கோவிந்தா
நடிப்படிமை வேலை வேண்டாம் கோவிந்தா
நாமஜெபம் போதுமடா கோவிந்தா!
கோவிந்தா—கோவிந்தா—சாதந்தா—சாதந்தா!

இதுவரையில் மாணவர் விளையாட்டாக நடித்தனர். இப்போது ஒரு புரட்சிப் பட்டாளம் அதோ தீக்கொழுந்துடன் வருகிறது: அறிவொளியும் பேச்சழகனும் அன்புமணியும் புரட்சித் தலைவன் ரௌடிராமன் உற்றுக் கேட்கின்றனர்.

— தொடரும்

# புலவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள்

டாக்டர், வ. சுப. மாணிக்கம்
தலைவர், தமிழ்ச் சங்கம்
தலைவர்: இந்தியப் பல் தமிழ்க் கழகம்,

அ) புலவர்களுக்கு வேலை வாய்ப்புக்கள் ?

ஆ) புலவர் வகுப்புக்களின் எதிர்காலம் ?

இ) தமிழ்க் கல்லூரிகளின் எதிர்காலம் ?

தமிழன்புடையீர்,

தமிழுக்காக ஒன்றுகூடிச் சிந்திப்போம்.

தமிழகத்தில் தமிழின் நிலை பற்றி நாம் அடிக்கடி கவலைப்பட்டுச்சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். இடைநிலைப் பள்ளிகளில் முதனிலைத் தகுதி பெற்றிருக்கும் தமிழாசிரியர்களும், பத்தாண்டு உழைப்புடைய தமிழாசியர்களும் இனி முதனிலைத் தமிழாசிரிய ஊதியம் பெறுகுவர் என்ற தமிழக அரசின் குறிப்பைப் பார்த்தோம் அதனோடு இரண்டாம் நிலைத் தமிழாசிரியப் பதவி இனிமேல் இராது என்ற செய்தியையும் கேட்கின்றோம. பிற்செய்தி பற்றியே பலருக்குப் பெருங்கவலை. இத்தகைய செய்திக் குறிப்பைக் கண்ணுற்ற புலவர் வகுப்பு மாணவ உள்ளங்களில் தங்கட்கு எதிர்கால வேலை வாய்ப்பு இனி இராது என்ற அச்சம் புகுந்துவிட்டது புலவர் வகுப்புக்குப் தமிழ்க்கல்லூரிகட்கும் மாணவர்கள் இனிமேல் சேராரோ என்ற அச்சம் எம்போல்வார்க்குத் தோன்றியுளது. எல்லோரும் ஒருநிலை என்ற கோட்பாட்டில் புலவ இளைஞர் பலர் தம் வாழ்வுநிலை பாதிக்கப்படுமோ என்று கவல்கின்றேன். 'நன்று ஆற்றலுள்ளும் தவறுண்டு' என்பர் வள்ளுவர். எல்லாத் தமிழாசிரியர்களும் முதனிலையினர் என்பது கேள்விக்கு இனிதாக இருக்கலாம் அவ்வினிமையில் மயங்கித் தமிழுக்கும் எதிர்காலப் புலவ இளைஞர்கட்கும் தமிழ்க்கல்லூரிகட்கும் ஊறு இழைக்கக் கூடாதல்லவா ?

அண்மையில் வந்த மாற்றத்தால் சில தமிழ் வளர்ச்சிகள் கலங்கியுள்ளன. அவற்றை எழுதுவன் நாம் எல்லோரும் சிந்தனை செய்வோம். தவறு புகாது வளர்ச்சி காப்போம் புலவர் வகுப்பிற் சேர்வோர் இருநிறத்தினர். 1 புகுமுகத்

தேர்வில் (Entrance) தேர்ந்து சேர்வோர் ஒரு சாரார் 2. பதினோராம் வகுப்புத் (S.S.L.C.) தேர்ந்து சேர்வோர் இன்னொரு சாரார் என்பதனை நினைவு கொள்வோமாக.

இரண்டு கவலைகள்

1, இடைநிலைப் பள்ளிகளில் இரண்டாம் நிலைத்தமிழாசிரியப் பதவி என்பது இனிமேல் இராதா? 6-ம் வகுப்பு முதல்8 ஆவதுவரை தமிழ் சொல்லிக்கொடுக்க முன்போல் தமிழாசிரியர்கள் அமர்த்தப்படுவார்களா? இரண்டாம் நிலையும் இல்லை. இவ்விடை நிலை வகுப்புகளுக்குத் தமிழாசிரியர்களும் இனி சேர்க்கப்படார் எனவரின் (சேர்ப்பது மெல்ல மெல்லக் குறைந்துவிடும் என்பதே என் அச்சம்) மாணவர்களின் எதிர்காலமும் புலவர் வகுப்புக்களின் எதிர்காலமும் நம் கண்கள் பார்க்கவே இருண்ட காலமாகிவிடும் ஆதலின் இடை நிலைப் பள்ளிகளில் எந்த நிலையாயினும் தமிழாசிரியர்கட்கு முன்போல் இடமிருத்தல் வேண்டும். இருப்பின் ஒரு பகுதிக் கவலை நீங்கும்.

2 அடுத்த கவலை பின்வருமாறு: S. S. L. C. புலவர் பட்டம், ஆசிரியப் பயிற்சி என்ற தகுதியுடையவாகள் இனித் தமிழாசிரியர்களாகப் பள்ளிகளுக்கு அமர்வுப் படுவார்களா? புகுமுகம், புலவர் பட்டம், ஆசிரியப்பயிற்சி என்ற தகுதியுடையோர்க்கும் அத்தகு வாய்ப்புண்டா? ஒத்த வாய்ப்பு உண்டெனின் அதனைத் தமிழாசிரியர் கழகங்களும் தமிழக அரசும் விரைவில் தெளிவு படுத்தவேண்டும்- ஒத்த வாய்ப்பு உண்டென்பது தெளிவு செய்யப்படின் எவ்வகைக் கவலைக்கும் இடமில்லை, இப்போது பரவியுள்ள கருத்து புகுமுகம், ஆசிரியப் பயிற்சி, புலவர் பட்டம் என்ற இத்திறத்தகுதி இருந்தாலும் S. S. L. C. இல்லை எனின். அவ்வகையினர் தமிழாசிரியராகச் சேரமுடியாது எனவும் இனி S. S. L. C. தேர்வெழுதித்தான் சேரவேண்டும் எனவும் ஒரு கருத்துப் பரவி வருகின்றது; அச்சுறுத்தி வருகின்றது. புகுமுக வழிப் புலவர் பற்றிய சில விளக்கங்களை அவர்கட்கு ஆதரவாக எழுதுவது என் கடமையாகும்.

3. இப்போது முதலாண்டு முதல் நான்காண்டு வரை தமிழ்க்கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவிகளில் கணிசமான ஒருசாரார் புகுமுகத் தேர்வு எழுதி வந்திருப்பவர்கள். அரசின் அறிக்கைக்குப்பின், தமிழுக்கு வந்த

தங்களின் எதிர்காலம் இருளா ஒளியா என்று இந்த இளைஞர் இளைஞியர் கையாறு கொள்வது இயல்பே, புலவர் பட்டமும் பயிற்சியும் பெற்றபின் S.S.L.C படித்து விட்டு வாருங்கள் என்று கூறுவது அறமும் ஆறுதலும ஆகா. தமிழாசிரியருள் முதனிலை, இரண்டாம்நிலை என்ற பிரிவு கூடாது என்று கருதித் தொண்டாற்றும் அன்பர்கள் S S L.C வழிப் புலவர், புகுமுக வழிப்புலவர் என்ற பிரிவை பெருக்கிப் புகுமுகவழிப் புலவர்களுக்கு ஒரு நிலையும் இல்லாது உள்ளநிலைக்கும் வாயிலடைப்புச் செய்தல் பொருந்துமா? தமிழன்பர்கள் நினைத்துத் துடித்துப் பார்க்க வேண்டிய அவலம் இது

4 இனிமேல் புகுமுகத் தேர்வு வேண்டாம் எனவும் புலவர் வகுப்புக்கு S.S.L.C அடிப்படை வைக்கவேண்டும் எனவும் பலர் கொண்டிருக்கும் கருத்தினை உளத்திற்கொண்டே இதனை எழுதுகின்றேன். வித்துவான் அல்லது புலவர் வகுப்பு நாற்பதாண்டுகளாக இருந்து வருகின்றது. முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாகப் புகுமுகம் தேர்ந்தவர்களே புலவர் வகுப்பிற் சேர்ந்து நிலைக்கச் செய்தனர். இப்போது ஐந்தாறு ஆண்டுகளாக S.S.L.C தேர்ந்தோர் மிகுதியாக வருகின்றனர் என்பது உண்மையே. ஆனால் இவர்கள் என்றைக்கும் போது மளவு நமக்கு வந்து கொண்டிருப்பார்கள் என்று நம்புவதோ, அந்நம்பிக்கையில் புலவர் வகுப்புக்கே வாயிலான புகுமுகத் தேர்வினையும், அங்ஙனம் தேர்ந்து வரும் இளைஞர்களையும் புறக்கணிக்கப் பார்ப்பதோ கல்தாங்கிய கோபுரத்துக்குச் சிமிண்டுவைப்பதுபோலாகும். மேலும் இன்று புகுமுகத் தேர்வு எழுதும் மாணவ மாணவியர் பொதுத்தரம் குறைந்தவர்கள் இல்லை பத்தாவதில் அல்லது பதினோராவதில் பெரும்பாலும் ஆங்கிலத்திலோ கணக்கிலோ குறைமதிப்பெண் பெற்றவர்தாம் புகுமுகத் தேர்வை நாடிப் புலவர் வகுப்பிற் சேர்கின்றனர். அண்மையில் வந்த புதுவரவை நம்பிப் பல்லாண்டு புரந்த புகுமுக வழியை அடைத்துவிட்டால் மீண்டும் இத்தமிழகத்தில் அதனை உயிர்ப்பித்தல் ஒண்ணாது ஆதலின் புலவர் வகுப்பும் தமிழ்க் கல்லூரிகளும் நிலைபெறுவதற்கு இருவகை வழியையும் இருகண்களாகப் பேணிக் கொள்ளவேண்டும் என்பது என் துணிபு

5 இன்று முதனிலைத் தகுதி பெற்றுள்ள தமிழாசிரியர்கள் எத்தனை பேர் முதலிலேயே S.S.L.C. படித்தவர்கள்?

ஆசிரியராகச் சேர்ந்துகொண்டு S. S. L. C. தகுதிப்பாடு எய்தியவர்களே பலர். தகுதிக்கு நம்மை உய்த்த ஏணியைப் புலமைவழிவரும் நம் இளைய இனத்தவர்களுக்கு அப்புறப் படுத்தாது இருப்போமாக. இரண்டாம் நிலைத் தமிழாசிரிய வருவாய் பெற்றேனும் இவ்வேணியில் ஒருநாள் ஏற வாய்ப்பு அளிப்போமாக.

முடிபுக் கருத்துக்கள்

அ) குடியரசில் தமிழ்ப் புலவர் எண்ணிக்கை பெருகுதல் வேண்டும்.

ஆ) புகுமுக வழி, S.S.L.C வழி என்ற இரு வாயில்களும் புலவர் வகுப்புச் சேர்க்கைக்கு முன்போல இருத்தல் வேண்டும்.

இ) உயர்நிலைப் பள்ளியிலேயன்றி, இடைநிலைப் பள்ளியிலும் ஏன் தொடக்கப் பள்ளியிலுங் கூடப் புலவர்கள் தமிழ் கற்பிக்கும் முழுநிலை வருதல் வேண்டும். முதனிலை, சமநிலை என்று ஒரு நிலையையே வலியுறுத்திக் கொண்டிருந்தால், தமிழாசிரியர் தம் நடமாட்டம் உயர்நிலைப்பள்ளியில் ஒதுங்கிவிடும். இடைநிலைப் பள்ளியும் தொடக்கப் பள்ளியும் கை நழுவிப் போகும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

ஈ) எல்லாப் புலவர்களும் முதற்கண் ஒருவேலை பெற்று ஓரளவு ஊதியம் பெற்று உயிராரவும் தமிழாரவும் வாழும் பரந்த வாய்ப்புக்களை உண்டாக்குவோம். மூவகைப் பள்ளிகளுக்குத் தக்கபடியும் ஏனை ஆசிரியர்களுக்கு ஒப்பவும் ஊதியத்தரங்கள் இருப்பது தமிழ்க்குறைவாகாது. புலவர் பட்டம் பெற்றவர்கள் வேலையின்றித்திண்டாடுகின்றார்கள் என்ற செய்தியே தமிழ்க்குறைவாகும்.

உ) ஏதோ ஒரு நிலையில் ஆசிரியனாக அமர்ந்துகொண்டு விட்டால், தகுதிகள் மேலும் மேலும் தனியாக எழுதிப் பெறுவதற்குக் கல்வியுலகில் எவ்வளவோ ஏணிப்படிகள் உள்ளன. 'கற்க' என்று வள்ளுவர் வழி காட்டியது போல் முதற்கண் பள்ளியில் எந்நிலையிலாயினும் நிற்க; அதன்பின் நிலைகளையும்

வருவாயையும் உயர்த்திக்கொள்க. ஒரே ஒரு நிலை பற்றி முதலிலேயே வலியுறுத்த வேண்டா. தமிழ் வளர்ச்சிக்கு ஒரு நிலையூதியம் பெரிதன்று. புலவர் பல்லோர் வேலை வாய்ப்புப் பெறுதலே பெரிது.

அரசு புலவர்களுக்கு ஊதியம் பெருகக் கொடுப்பதை நான் மடை செய்வதாக நல்லன்பர்கள் எண்ணவேண்டா. வளமாகப் பேரூதியம் கொடுக்க அரசு முன் வருக, வருக, எதுவும் சாலும் தமிழ் முழுதறிதல் புலவர் பட்டம் பெறுவோர் எல்லாம் பரந்த வேலை வாய்ப்புப் பெறல் வேண்டும். தமிழ்க்கல்லூரிகளைப் போற்றி மடிய விடாது காக்கவேண்டும் என்பதுவே என்னெழுத்தின் நோக்கம். எழுததின் எச்சரிக்கை ஆற்றலுடைய தமிழ்ப் பெருமக்கள் அரசுக்கு தங்கள் கருத்தை எடுத்துச் சொல்லிப் புலவர்களுக்கு வேலை வாய்ப்பைக் காத்துத் தர வேண்டுகின்றேன்.

இவ்வெழுத்தினைக்கண்ணுற்ற அன்பர்களின் கருத்துத் திறனை வரவேற்கின்றேன்.

# படித்துப் பார் புரியும்

பா. கங்காபரமேஸ்வரன் எம். ஏ.,
துணைப்பேராசிரியர்
அருள்மிகு பழனியாண்டவர் கலைக்கல்லூரி, பழனி.

1. உலகத்து மொழிகளிலே உயர்ந்தமொழி தமிழே
உண்மையொடு வண்மையினை வளர்த்த மொழி
அழகில் கலை பெற்றுள்ள அரியமொழி தமிழே தமிழே
அன்புவழி அருள் வளர்த்த அழகுமொழி தமிழே
புலவருக்குப் புகழ்தந்த பொய்யில் மொழி தமிழே
புவியாண்ட மன்னர்மடி தவழ்ந்த மொழி தமிழே
துலங்குபொருள் தனித்துணர்த்தும் தூயமொழி தமிழே
துன்பினிலும் இன்பளிக்கும் தொன்மை மொழி தமிழே

2. அகத்துறையும் புறத்துறையும் வாழ்வினிலே கனிய
ஆருயிரின் வாழ்வதனை அமைத்தமொழி தமிழே
சிகரத்தின் இயல்பதனை எடுத்துரைத்து என்றும்
இன்னுயிர்க்குத் துணையான இனியமொழி தமிழே
இகல்கொண்டு தனைவீழ்த்த வந்த மொழி பலவும்
இல்லாது மறைந்திடவே இருக்கும் மொழி தமிழே
புகலரிய புதிய வரம் பூண்டிடவே இன்று
புவிக்கணியாம் அறிவியலைப்பயிலும்மொழி தமிழே

3 கண்மணியாம் பெண்குலத்தின் கற்புநலன் பேணிக்
கடவுளரும் ஏவல்செயக் களித்தமொழி தமிழே.
மண்புரக்கும் மன்னருக்கு அறமுரைத்துக் காத்து
மணிநாட்டின் நலன்வளர.மலர்ந்த மொழி தமிழே
விண்ணிறைந்த இறைவனுக்கு இணையாக வாழ்ந்து
வீறுபெறக் குறள்கொடுத்த வெற்றிமொழி தமிழே
உண்ணமுதைப் பங்கிட்டு உடனமர்ந்து உண்டு
உலகனைத்தும் உறவாக உயர்ந்தமொழி தமிழே

4. ஒப்பில்லா இலக்கணங்கள் உடையமொழி தமிழே
உருவருவாம் இறைவனவன் உகந்தமொழி தமிழே
செப்பரிய செயல்செய்த செம்மைமொழி தமிழே
சிறுமைகளை வேரறுத்துச்சிறந்தமொழி தமிழே.
முப்பிரிவாய்ப் பிரிந்திலங்கும் முதியமொழி தமிழே
மூவாத இளமைநலம் முகிழ்த்தமொழி தமிழே
எப்படித்தான் அதன்பெருமை தனையுரைப்பேன் தம்பி
ஏடெடுத்துப் படித்துப்பார் அப்போது புரியும்.

# தமிழ் இலக்கியத்தில் கவிஞர் சிரிப்பு

**R. பத்மநாபன், B A. B T.**
தலைமையாசிரியர், வேலூர்.

தமிழ்த் தென்றலில் உலவும் நாம் தமிழை இன்பமய மாக்கிய புலவர்களைப் பற்றி அறிந்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். தமிழர் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை யாகவிருந்த பெருமக்கள் எத்தனையோ பேர் செய்யுள் நடை யிலும் வசனநடையிலும் தமிழுக்குச் சீர் அளித்த செம்மல் கள் எல்லோரையும் நன்கு அறிவதற்கு உகந்த உண்மை யான ஆதாரங்கள் பொதுவாக இல்லை எனினும் அவர்கள் இயற்றிய இலக்கண நுணுக்களிலிருந்து அவர்கள் எத் தகையார் என்று ஒருவாறு அறிந்து கொள்ளலாம்.

தமிழில் கவிஞர் சிரிப்பு எத்தனையோ விதம். கோபச் சிரிப்பு சிரிப்பார்கள்; இதை நாம் அசுரச்சிரிப்பு என்றும் கூறலாம். சிலர் ஏளனமாகச் சிரிப்பதைக் காணலாம். இதை நையாண்டிச் சிரிப்பு என்றும் கூறலாம், மற்றும் சிலர் தங்கள் இன்னல்களைக் கண்டு சிரிப்பதும் உண்டு; சிலர் கடவுளைத்தரிசிக்கும் போது சிரிப்பது வழக்கம்; ஒரு சிலர் ஒன்றுமில்லாததற்கு விழுந்து விழுந்து சிரிப்பார்கள், மேதை களாகிய கவிஞர்களும் இப்படியெல்லாம் சிரிப்பதைக் காண் கிறோம்.

கவிஞர் பலர் சிரிப்பதைக் கலையாகக் கருதி, மகிழ்ச்சிச் சிரிப்பு, கோபச்சிரிப்பு, கிண்டல் சிரிப்பு, சோகச் சிரிப்பு. முதலியவற்றையும் அவ்வப்பொழுது தத்தம் கவிதைகளில் வடித்திருக்கிறார்கள். சில கவிஞர்களின் தனிப்பாடல்களி லிருந்து இப்படிப்பட்ட வெவ்வேறு சிரிப்புகளை யெல்லாம் எடுத்துக் காட்டுகிறது இக்கட்டுரை.

## 1. ஈயார் இகழ்ச்சி

அக்காலத்தில் புலவர் பெருமக்கள் பெரும்பாலும் பரிசில் வாழ்க்கையே நடத்தி வந்தார்கள் என்பதை நாம் அறிவோம். அதாவது வள்ளல்களையும் பணக்காரப் பெரு மக்களையும், மன்னர்களையும், நம்பித்தான புலவர்கள் வாழ்ந்துவந்தார்கள் அக்காலத்தில் கவிகளைப்பாடுவதற்குப் பணம்கொடுக்கச் செய்தித்தாள்கள் இல்லை; நூல் வெளியிடு வோரும் அச்சகத்தாரும் இல்லை; வயிற்றைக் கழுவுவதற் காகக் கவிகள் நடுநடுவே நரஸ்துதியும் செய்வதுண்டு; நரஸ்

துதியையே கடிமந்திரமாகக் கொண்டு வாழ்ந்த கவிஞர் பலர் உண்டு; வாரி வாரி வழங்கிய வள்ளல் பெருமக்களும் உண்டு கிடைத்ததை வாரிச் சுருட்டி எழுந்து கதவடைத்துக்கொண்டு, உள்ளே பதுங்கிக் கொண்ட செல்வர்களும் உண்டு. சிறிதளவும் ஈயாத கருமிகளைக் கல்நெஞ்சர்களையும் புலவர்கள் சும்மாவிட்டு விடவில்லை. அதற்குத் தமிழ் மொழி பெருந்துணை புரிந்தது அப்படிப்பட்ட கருமிகளைப் புலவர்கள் ஒரு பாட்டுப் பாடித் திட்டிச் சிரித்து விட்டுத்தான் போவார்கள், ஈயாதவர்கள் மனம் எப்படிப்பட்டது என்பதைப்பற்றியும் அவர்களுடைய கல்போன்ற மனமும் கரையக் கரையப்பாடி அலுத்துப்போன கவிஞர் பலர் உண்டு. அப்படிப்பட்ட கவிஞர்களின் முழக்கங்களுள் சில வற்றைக் கவனிப்போம்.

'வணக்கம் வரும் சில நேரம் குமர கண்ட
வலிப்பு வரும் சில நேரம் வலியச் செய்யக்
கணக்கு வரும் சில நேரம் வேட்டை நாய்போற்
கடிக்க வரும் சில நேரம் கயவர்க்கெல்லாம்
இளிக்கவரும் படித் தமிழ்ப் பாடிப்பாடி
எத்தனை நாடி ரிற்று திரிந்துழல் வேனையா
குணக் கடலே யருட் கடலே யசுரரான
குரை கடலை வென்ற பரங்குன்று ளானே
என்று திட்டிச்சிரிப்பதைக் காணலாம்.

மற்றொரு கவிஞர்,

'கட்டி அடிப்போர்க்கும் கல் மீதிலேற்றுவர்க்கும்
எட்டி யடிப்போர்க்கும் ஈவரே—திட்டமுடன்
பாடுவோர்க் கீயாரே பல்லுதிரத் தாடையினிற்
போடுவோர்க் கீவார் பொருள்.'

என்று பாடுவதைக் காணலாம். இத்தகைய பாட்டுக்களை நூற்றுக்கணக்கில் தமிழிலக்கியத்தில் காணலாம்.

## 2 நிந்தா ஸ்துதி

கடவுளரையும் வள்ளல்களையும் பாடும்போது திட்டுவதுபோல் துதி செய்வது கவிஞரின் மரபுகளில் ஒன்று. பக்தி, நகைச்சுவை, ஏளனம், எல்லாம் ஒருங்கே ஒலிக்கும், இதை வஞ்சப் புகழ்ச்சி என்றும் கூறுவர்.

இந்தத் திறமையில் காளமேகம் போன்ற சில புலவர்கள் சிறந்து விளங்குகிறுர்கள்.

இவற்றில் சில பாடல்களை நாம் கவனிக்கவேண்டும், இத்தகைய பாடல்கள் விறுவிறுப்பானவை.

'அப்பன் இரந்துண்ணி ஆத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாமன் உறிதிருடி—சப்பைக்கால்
அண்ணன் பெருவயிறன் ஆறுமுகத்தானுக்கிங்
கெண்ணும் பெருமை இவை,'
என்று முருகனை இகழ்ந்து துதிக்கிறுர்
கவி காளமேகம்.

இவரே,

'நச்சரவம் பூண்டதில்லை நாதரே தேவரீர்
பிச்சை எடுத்துண்ணப் புறப்பட்டும்—உச்சிதமாம்
காளமேன் குஞ்சரமேன் கார்கடல்போல் தாள்
மேளமேன் ராஜாங்க மேன்; [முழங்கும்

என்று பவனி வரும் தில்லை நாயகப்பெருமானை ஏசிப் புகழ்கிறுர்.

திருக்குறளில்:-

வள்ளுவரும் வஞ்சப்புகழ்ச்சி அணியை உபயோகிப்பதைக் காணலாம்.

பொருட்பாலில் 'கயமை' என்ற அதிகாரத்தில்,

'தேவர் அனையர் கயவர் அவருந்தாம்
மேவன செய்தொழுக லான்'!

என்ற குறள் (1073) இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாகும். இக்குறளில் கயவர் தேவருக்கு ஒப்பானவர் என்று புகழ்வதுபோல் கூறி, அவர்கள் தம்மனம் போனவாறு வாழும் மக்கள் என்று பழித்துக் கூறுகிறுர் வள்ளுவர்.

3 சிலேடை

இருவிதமான பொருள் தோன்றுமாறு அமையும் பாட்டு வகையே சிலேடை எனப்படும். கவிகாளமேகம், சொக்கநாதப்பிள்ளை முதலியோர் இதில் மிகச்சிறந்து விளங்கினுர்கள்.

'நஞ்சிருக்கும் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்த்
தேம்பாயும் சோலைத் திருமலைராயன் வரையில்
பாம்பாகும் வாழைப்பழம்;

என்று பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடை வைக்கிறார் காளமேகம்.

'கல்லாலடி யுறலால் கண்மூன் றிருப்பதனால்
எல்லோரும் பூசைக் கெடுத்திடலால்—வல்லோடு
கொள்ளுகையால் கங்கா குலமுத்து சாமிமன்னா
கள்ளிதழி யானிகர் தேங்காய்,'

என்று சிவனுக்கும் தேங்காய்க்கும் சிலேடை வைத்துப் பாடுகிறார் அழகிய சொக்கநாதர் என்ற கவி.

## 4 மற்றொரு நகைச்சுவை - சோகம்

சோக நகைச்சுவைக்குப்படிக்காசுத்தம்பிரான் வள்ளல் சீதக்காதியைப்பற்றிப்பாடியபாடல் ஒன்றை எடுத்துக்காட்டாகக்கூறலாம். காயல்பட்டினத்தில் சீதக்காதி தன் புகழ்க் கம்பம் நாட்டி வாழ்ந்தான். இப்படி வாழ்ந்தவன் புலவர்களை ஓட்டாண்டியாக்கி, அவர்கள் வாயில் மண்ணைப் போட்டு இச்சமாதிக் குழியில் மறைந்துள்ளானோ? இனி இலக்குமியும் கலைமகளும் இருந்து யாதுபயன்? நாம்தான் இருந்து பயன்என்ன? சீதக்காதி இறந்தபிறகு எம்போன்ற புலவர்களுடைய புலமை இறந்தது அல்லவா?' என்று கல்லும் கரையும் முறையில் கவிபாடினார். பாட்டு நின்ற சிறிது நேரத்திற்குள் சவக்குழி பிளந்து மோதிரம்இட்டகை வெளியில் தோன்றியது. தம் வருத்தத்தைத் தெரிவிக்க வந்த புலவருக்கு வெகுமதி கிடைத்தது.

— தொடரும்

சிலம்பு

# பெருங்கதை ஓர் ஒப்பாய்வு

திருமிகு. இரா காசிராஜன் எம்.ஏ.
கேரளப் பல்கலைக் கழகம்

(தொகுதி-70 பகுதி-1ன் தொடர்ச்சி)

5 சிலம்பு-பெருங்கதை-ஒப்புமை அடிகளும் கருத்துக்களும்

5 : 1 நகரநம்பியர் திரிதருமருங்கின் [சிலப் 3 : 168—பெருங் 1 : 35 : 219]

5 : 2 நாவொடு நவிலா [சிலப் 5:137 பெருங் 1:36:2667]

5 : 3 "ஐம்பெருங் குழுவும் எண் பேராயமும்"
(சிலப்5 : 157 பெருங் 2 : 5 :6)

5 : 4 "ஆயிரத் தோரெட்டரசு தலைக் கொண்ட
தண்ணறுங் காவிரித் தாதுமலிப் பெருந்துறைப்
புண்ணிய நல்நீர் பொற்குடத்தேந்தி
மண்ணகம் மருள வானகம் வியப்ப
விண்ணவர் தலைவனை விழுநீராட்டி"
சிலம்பு – இந்திரனை நீராட்டியது (5 : 165-169)

"அத்துமுறை யுரிஞ்சி ஆயிரத்தெண்குடம்
முத்துறழ் நல் நீர் முறைமையின் ஆட்டி"
பெருங்கதை வாசவதத்தையை நீராட்டியது
1 : 42 : 135–36)

5 .5 "ஈராறுண்டக வையள்"
கண்ணகி வயது-திருமணத்தின்போது (சிலப் 1:24)
"பதினேராண்டினுட்பாற்படக்கிளந்த"
தத்தை வயது திருமணத்திற்கு முன்பு
(பெருங் 1 : 42 : 151)

5 : 6 "எண்ணான் கிரட்டி இருங்கலை பயின்ற
பண்ணியல் மடந்தையர் பயங்கெழு வீதித்
தண்ணுமை முழவம் தாழ்தரு தீங்குழல்
பண்ணுக்கிளை பயிரும் பண்ணியாழ் பாணியொடு
நாடக மகளிர் ஆடரங் கிழந்தாங்கு"
-கண்ணகி கற்புக் கனலில் எரிந்தன (சிலப் 22:138 42)

"பாடற்றண் ணுமைப் பாணியிற் பிழையா(து)
ஆடல் மகளிர் அரங்கம் புல்லெனச்
சுவை சோர்ந்தழிய நவை கூர்ந்து நடுங்கி
மஞ்சிடைப் புகூஉ மகளிர் போல"
உஞ்சைத்தீயில் எரிந்தன (பெருங் 1 : 44:47–50)

5 : 7 "அரிமான் ஏந்திய அமளி" (சிலப் 20 : 23)
"சீயம் சுமந்த செம்பொன் ஆசனம்"
(பெருங் 1 : 47 : 50)

5 : 8 "முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல்காண்குறூஉம் பெற்றியகாண் (சிலப்21:3-4]
முற்பகல் செய்வினை பிற்பகல் உறுநரின்
(பெருங் 1 : 56 : 259)

5 ; 9 திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டுகொல்"
(சிலம் 5 : 207)

"மண்ணக மருங்கின் மதிபல பயின்றன
விண்ணகம் என்னையும் விடுக்குங் கொல்லென
மதியகம் வெள்க வனப்பொடு புணர்ந்த
கதிர்விடு திருமுகத் தெதிர்வன போலச்
சென்றுவந்துலாவுஞ் சேயரிக் கண்ணினர்"
(பெருங் 2 : 2 : 217-21)

5 : 10 நெடியோன் மார்பின் ஆரம் போன்று
பெருமலை விலங்கிய பேரியாற்றடை கரை
( சிலப் 26 : 21–22)

மாயோன் மார்பின் மன்னுபு கிடந்த
ஆரப்போல" (அருவி) [பெருங் 2 : 14 : 3-4]

5 : 11 "மலைத்தலைக் கொண்ட பேரியாறு போலும்
உலக இடைக்கழி ஒருங்குடன் நீங்கி"
(சிலப் 10 : 26 27)

"தேர்ச் செலத் தேய்ந்த தெருவுகளெல்லாம்
நீர்செல் பேரியாறு நிரந்திழிந்தாங்கு"
[பெருங் 3 : 16 : 22–23]

5 : 12 "அறை போகு அமைச்சர்" - (சிலப் 5 : 130)
"அறை போக்கமைச்சன்" (பெருங் 3 : 17 : 53)

5 : 13 "கவவுக்கை ஞெகிழாமல்" [சிலப் 1 : 61]
"கவவுக்க க விடா"

5 : 14 ''வானோர் தங்கள் வடிவின் அல்லதை
ஈனோர் வடிவிற் காண்டலில்லென'' சிலப் 23:175-76
''வானோர் உலகின் அல்லது மற்றவட்கு
ஈனோர் உலகில் இணைதான் இல்லென''
–(பெருங் 5 : 8 : 62 63)

5 : 15 ''ஒன்பான் விருத்தியுட்டலைக்கண் விருத்தி''
(சிலப் 8 : 25)
''எண்மெய்ப் பாட்டினுள் இரக்கமெய்ந்நெறீஇ
ஒண்வினை ஓவியர் கண்ணிய விருத்தியுள்
தலையதன் உம்பர்த் தான்குறிக் கொண்ட
பாவை நோக்கத் (து) ஆரணங்கெய்தி
(பெருங் 1 : 35 : 43-48)
ஒன்பது விருத்தி நன்பத நுனித்த''
(பெருங் 2 : 7 : 40)

5 : 16 கணவனை அடிகள் என விளித்தல்
(சிலப் 6 : 43 பெருங் 4 : 14 : 87 : 137)

5 : 17 அன்புடைக் கணவர் அழிதகச் செயினும்
பெண்பிறந் தோர்க்குப் பொறையே பெருமை
(பெருங் 4 : 14 : 98-99)

என்று பெருங்கதை பேசுகின்ற பெண் பெருமை சிலப்பதிகாரக் கண்ணகியை நினைக்கச் செய்கின்றது.

இவ்வாற்றான் அமைவுறும் சிலம்பு பெருங்கதை காப்பிய அமைப்பு – காப்பியப் போக்கு – காப்பியங் காட்டும் பண்பாடு – காப்பியச் சொல்லாட்சியில் மாற்றம் – காப்பிய ஒருமைப்பாடுகள் – இன்னபிறவற்றை நோக்கும்போது சிலப்பதிகாரத்திற்குப் பின்னரே பெருங்கதை எழுந்திருக்க வேண்டும் என்று எண்ணத் தோன்றுகிறது.

அடிக்குறிப்புக்கள்

1. அரைசியல் பிழைத்தோர்க் கறங்கூற்றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்து வந்தூட்டு மென்பதூஉம்
(பதிகம் 55–57)

2. "அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
... ... ... ... ... ... ...
ஆர்புனை சென்னி அரசற் களித்து
செங்கோல் வளைய உயிர் வாழாமை
தென்புலம் காவல் மன்னவற்களித்து
வஞ்சினம் வாய்த்த பின் அல்லதையாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை
... .. .. ...
குடதிசை வாழும் கொற்றவைக் களித்து
(சிலப் : 28 : 207–17)

3 "யானும் சென்றேன் என்னெதிர் எழுந்து
... ... .. ...
என் திறம் உரைத்த இமையோர் இளங்கொடி"
(சிலப் 30:171--183)

4.
1. வனப்பு வீற்றிருந்த வாசவதத்தை
வதுவைச் செல்வம் விதியிற் கூறுவென்
(பெருங் 2 : 2 : 8-9)

2 " போகம் புணர்ந்த பொன்னகரவ்வயின்
... ... .... ....
யூகிக் கிப்பா லுற்றது கூறுவென்" (பெருங் 2 8 : 1-5)

3 "தண்டாக் காதலி னுண்டாட்டுரைப் பேன்"
(பெருங் 2 : 12 : 34)

4 "ஆங்கினிதிருந்த காலை யீங்கினி
வேந்துபடக் கடந்த வேந்து சுடர் நெடுவேல்
உதயண னில்லை யிதுவென வுரைப்பேன்"
(பெருங் 3 : 1 : 1–3)

5. "ஒழுகா நின்ற வொருமதி எல்லையுள்
வழி நணிகழ்வின் வண்ணங் கூறுவேன்"
(பெருங் 3 : 16 : 1–2)

6 'கட்டி லேறிய காவல் வேந்தன்
... ... ... ...
கருமிய காதலொடு கவவுக்கை விடா
தொழுகுங் காலை நிகழ் பொருள் கூறுவேன்"
(பெருங் 3 : 23 : 1 11)

7. " பள்ளி யெய்திய நள்ளிருணிங்கலும்
... ... ... ... ... ...
செருமுன் செய்துழிச் சிறைகொளப்பட்ட
உரு மண்ணுவாவிற் குற்றது கூறுவென்"
(பெருங் 4 : 4 : 1-13)

5. "விச்சையால் முடியா விழுவினையில்லெனல்
பொய்ச் சொலென்பர் புன்மையோரே"
(பெருங் 3 : 1 : 59-60)

6. 'மாரியுந் திருவு மகளிர் மனமும்
தாக்குழி நில்லாது பட்டுழி படுமெனும்
கட்டுரை" -(பெருங் 1 : 35 · 156-58)

7. " உயிர்கெட வருவழி ஒழுக்கங் கொள்ளார்
செயிரறு கேள்வி தேர்ந்துணர்ந் தோரென
வெல்லினும் தோற்பினும் விதியை வகுத்தல்
பொருணூலாயும் புலவோர் துணிவென"
பெருங் 1 (34 : 88-91)

## வெண்பா

"தாய்போ னினைந்து தமிழ்ச்சங்கந் தாங்குநரும்
சேய்போ லதற்குதவி செய்குநரும்—வாயான்
மனத்தா லுடலால் வளர்ந்திடச்செய் வோரும்
இனத்தோடு வாழ்க விவண்."

தாயுமானவரின்
# பராபரக்கண்ணி

திருமிகு. பு. மூ. சாந்தமூர்த்தி எம். ஏ.
மதுரை-4.

[தொகுதி-69 பகுதி-ன் தொடர்ச்சி]

## தத்துவம் - இறைமை

மௌன நிலையின் உயர்வு சிறப்புக் கூறுங்கால் 'திருவருட் பொருளும் சுமையாகும்' தன்மை தோன்றுமிடம் கூறுகிறார்.

'அல்லும் பகலும் அறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளும் சுமைகாண்'

என்கிறார் திருவருள்.

தன்மையாகவே நிறைந்து விட்டால் சொற்பொருள் வேண்டியதில்லை ஆதலால் மௌனநிலை எத்தகைய வலிமை வாய்ந்தது என்றறியலாம்

முன்பு கூறிய கரணங்களை மீண்டும் கூறும்போது, மனம், எழுச்சி, இறப்பு, குணம் (மனம், ஆங்காரம், புத்தி, குணம்) என்னும் நிலையின ஒடுங்கும்படி துறத்தலே எத்தகைய துறவினும் நன்மையாகும் என்பதை,

'அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே
எந்தத் துறவினும் நன்று'

என்பதில் கூறுகிறார்.

இந்நான்கு கரணங்களுக்காளானால், துறவறம் என்பது பொய்யாகும் என்பதிதன் உட்பொருளாகும்.

இனி, இறைவனைத் தெரிந்து கொள்ளும் வழி கூறக் காணலாம் முதலில் உயிர் தன்னை நன்கு ஆய்ந்தறிந்து கொள்ளவேண்டும் பின்னர்த் திருவருளை ஆதாரமாகக் கொண்டு அவ்வருளாகவே நிற்கவேண்டும்; நின்றால் இறைவனைத் தெரிந்து கொள்ளலாம். இவ்வருள்நிலை உண்மையைத் 'தன்னை யறிந்தருளே தாரகமாய் நிற்பதுவே
உன்னை அறிதற் குபாயம்'

என்னுங் கண்ணி கூறுகிறது. இதனைச் சிறப்பித்துக்கூறும் வண்ணம்,

'விள்ளத்தான் ஒன்று மாட்டேன் விருப்பெனும்
வேட்கை யாலே
வள்ளத்தேன்போல நுன்னை வாய்மடுத் துண்டிடாமே
உள்ளத்தே நிற்றி யேனும் உயிர்ப்புளே வருதி யேனும்
கள்ளத்தே நிற்றி யம்மா எங்ஙனம் காணு மாறே'
'என்னி லாரும் எனக்கினி யாரில்லை
என்னி லும்மினி யானொரு வன்னுளன்
என்னு ளேயுயிர்ப் பாய்ப்புறம் போந்துபுக்
கென்னு ளேநிற்கும் இன்னம்ப ரீசனே'

என்னும் திருமொழிகளில் பாடுகிறார் திருநாவுக்கரசர்.

உலகப்பொருள் யாவும் இயங்கக் காரணமாயிருப்பதும் இறைவனருளே என்று கூறும் தாயுமானவர்,

'வண்டாய்த் துவண்டு மௌன மலரணைமேல்
கொண்டார்க்கோ இன்பம் கொடுப்பாய்'

என்றுரைத்து மௌனத்தின் உயர்நிலையைச் சிறப்பிக்கின்றார். [சடமாகிய மாயையினை இறைவன்தொழிற்படுத்தலின்] மாயை முதலாகிய வினைக்கருவிகளும் அவன்; [இறைவன் அறிவிக்க ஆன்மாக்கள் அறிவன ஆதலின்] அம்மாயைகளால் தொழிற்பட்டு நிலை பெற்றிருக்கும் உயிர்களும் அவன்; (கன்மத்திற்குத் தக்கபடி அறிவிப்பவன் அவன் ஆதலின்) நிலைபெற்ற உயிர்கள் மாயையைக் கடந்து தெளிந்து ஆராயும் அறிவாயிருப்பதும் அவன் என்னும் கருத்துணர்த்தும் வண்ணம்,

'மாயைமுத லாம்வினைநீ மன்னுயிர்நீ மன்னுயிர்தேர்ந்
தாயுமறி வானதுநீ யன்றோ'

என்னுங் கண்ணி அமைகிறது.

'உருவமும் உயிரு மாகி ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினை பிறப்பு வீடாய் நின்றவெம் பெருமான்'
'தானலா துலக மில்லை சகமலா தடிமை யில்லை
கானலா தாட லில்லை கருதுவார் தங்க ளுக்கு
வானலா தருளு மில்லை வார்குழல் மங்கை யோடும்
ஆனலா தூர்வ தில்லை ஐயன்ஐ யாற னார்க்கே'

என்றெல்லாம் திருநாவுக்கரசர் இறைவனின் முழுப்பேராற்றலை உணர்த்தக் காணலாம்.

'உலகமே உருவ மாக யோனிகள் உறுப்ப தாக
இலகுபே ரிச்சா ஞானக் கிரியையுட் கரண மாக
அலகிலா உயிர்ப்பு லன்கட் கறிவினை யாக்கி ஐந்து
நலமிகு தொழில்க ளோடு நாடகம் நடிப்பன் நாதன்'

எனச் சிவஞான சித்தியார் கூறும்.

உலகியல் பொருள் சேர்த்தும் இறைமையை விளக்கு கிறார் தாயுமானவர். இவ்விளக்கம்,

'ஒப்புயர்வொன் றின்றி ஒலிபுகா மோனவட்டக்
கப்பலுக்காம் வான்பொருள் நீ'

என்பதிலமைகிறது. ஒப்புயர்வற்ற ஒலியற்ற மௌனநிலை வடிவமான மரக்கலத்திற்கேற்ற சரக்காக ஆண்டவனை உரு வகம் செய்யக் காணலாம். பிறசரக்குகள் ஒப்புயர்வு பெறக் கூடும்; ஒலியமையக் கூடும்; கலத்திற்பொருந்தா தனவாதல் கூடும். ஆனால், இறைவன் இவையாவற்றையும் கடந்தவனா தலின் 'வான்பொருள்' ஆகின்றான்.

இறைவனை உள்ளத்தில் இருத்திக்கொண்டால், அச்சத் திற்கு வாய்ப்பே இல்லை என்பதைக் கூறுவதுபோல்

'அஞ்சலஞ்சல் என்றடிமைக் கப்போதைக் கப்போதே
நெஞ்சில் உணர்த்தும் நிறைவே'

என்னுங் கண்ணியமைகிறது.

'நாமார்க்கும் குடியல்லோம் நமனை யஞ்சோம்' எனத் திருநாவுக்கரசரைக் கூற வைத்தது நெஞ்சிருக்கும் இறை யருள் தோற்றமேயாகும்.

'தந்தேனே ஓர்வசனம்; தந்தபடிக் கின்பமுதாய்
வந்தேனே என்றனை நீ'

என இறைவன் தந்த அருள்மொழியை எண்ணிப்பார்க்கும் தாயுமானவர், இறையடியார் இறையன்பு காணக் கொள் ளும கோலங்களையும் கூறுகிறார்.

'ஆடுவதும் பாடுவதும் ஆனந்த மாகநின்னைத்
தேடுவதும் நின்னடியார் செய்கை'

என்கிறார், 'எழிசையாய் இசைப் பயனாய் இன்னமுதாய் நின்றவனன்றோ இறைவன்! 'ஓசை ஒலியெல்லாம் ஆனவ னன்றோ இறைவன்! ஆதலால் அடியார் செய்கை அக்கலை வழியே செயல்படுகிறது.

மேலாகிய ஞானம் பெறவேண்டுமெனின், 'பூதசுத்தி, உடற்சுத்தி, திரவியசுத்தி, ஆன்மசுத்தி, மந்திரசுத்தி' ஆகிய பஞ்சசுத்தி பண்ணி இறைவனைப்பாவித்து வழிபாடு செய்ய வேண்டும் என்பதைப்

'பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவித்துப்பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளங்கும்'

என்பதில் கூறுகிறார் இத்தூயநிலையால் இறையடியார்க்குத் தொண்டு செய்ய வேண்டும் என்ற மனத் துடிப்புத் தோன்றும். தோன்றவே,

'அன்பர்பணி செய்யவெனை ஆளாக்கி விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும்'

எனச் சிவானந்தப் பேறடையும் வழி தோன்றுகிறது. இந்த இன்பநிலையில் இறையருளின் முக்கூற்றுச் சிறப்புக்காண முயல வேண்டுகிறார் தாயுமானவர்.

'மூர்த்திதலம் தீர்த்த முறையால் தொடங்கினர்க்
வார்த்தைசொல சற்குருவும் வாய்க்கும்' (கோர்

எனச் சைவப் பேருருவின் மற்றோர் உண்மை விளக்கமாகிறது. இறைவன் சிவலிங்க மூர்த்தியாக உள்ள இடங்களையும், அவனமர்ந்துள்ள புண்ணிய இடங்களையும் அவனது தூயநீர்ப் பெருக்குள்ள (தீர்த்தம்) இடங்களையும் கண்டு இன்புறப் பயணம் மேற்கொள்பவர்க்கு ஒப்பற்ற சித்தாந்தப் பேருண்மை உணர்த்த ஆசானும் வாய்ப்பார் என்பதன் மூலம் சைவத்தில் 'மூர்த்தி தலம் தீர்த்தம்' வழிபாடு போற்றற்குரியனவாதல் அறியலாம்.

இறையருளைத் தருகின்ற சரியை, கிரியை, யோகம் ஞானம், என்னும் நான்கும் பெறும். சிறப்புரைக்கும்போது

'விரும்பும் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்
அரும்புமலர் காய்கனிபோ லன்றோ'

என்கிறார். அரும்பு, மலர், காய், கனி என்பன எவ்வாறு ஒன்றற்கொன்று ஏதுவாய் அமைகின்றனவோ அவ்வாறே சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பனவும் அமையும் என்பதே இங்குக் கருத்து.

சிவஞானத்தை அடையும் பல்வேறு வழிகளில் கொடை, தவம், அறம் என்பனவும் இடம் பெறும்.

''தானம் தவம்தருமம் சந்ததமும் செய்வார்சிவ
ஞானம் தனையணைய'' என்பது கண்ணி.

திருநாவுக்கரசரும் 'இரப்பவர்க் கீய வைத்தார் ஈபவர்க் கருளும் வைத்தார்' எனக் கொடையறப் பண்பைப் பாடுவார்.

சினம் வாரா வண்ணம் கற்றாலும் அட்டமாசித்திகள் பெற்றாலும் மனத்தையடக்கும் வல்லமை இல்லையெனில் யாதொரு பயனுமில்லை.

'சினமிறக்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும்
மனமிறக்கக் கல்லார்க்கு வாயேன்'

எனக்கேட்கிறார் கண்ணியார். இதனால் வீணான பேச்சுரைகளினால் எவ்விதமான பயனுமில்லை என்றறியலாம். 'வாய்ச் சொல்லில் வீரரடி' எண்ணிப் பார்க்கலாம் இம்மனத்தைக் கட்டுப்படுத்தினால் பிறப்பினையும் தவிர்க்கலாம் என்பதை யுங்கண்ணி கூறுகிறது. நம்பால் வருவனவற்றையும் நம்மிட மிருந்து செல்வனவற்றையும் மீண்டும் மீண்டும் எண்ணி வாழ்வதால் நன்மைதீமைகள் தொடர்கின்றன; இன்பதுன் பங்கள் அமைகின்றன; பிறப்புமாறிமாறி வருகின்றன. ஆதலால் சென்றதைக் கருதாமல் சேர்வதை நினையாமல் இருத்தலே இறைவனுடன் சேர்வதற்குரிய வழியாகும் என்பதை,

'வந்ததையும் போனதையும் வைத்துவைத்துப்
பார்த்திருந்தால்
சிந்தை இதமகிதம் சேரும்' எனகண்ணி பாடுகிறது.

'நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை'

என்று திருவள்ளுவர் கூறுமாப் போலவே,

'பொய்யெல்லாம் ஒன்று பொருத்திவைத்த பொய்யுடலை
மெய்யென்றால் மெய்யாய் விடுமோ'

எனக்கேட்டு உடற்பொய்ம்மை கூறுகிறார். இக்கூற்றால், உடற்பற்றொழியவேண்டும் என்பது வற்புறுத்தப்படுகிறது. வெறும் தோலினால் ஆய இவ்வுடம்பு நான்கு ஆள் சுமையதாகும். இதனுள் 'சிவனென்று' ஆரவாரத்துடன் எடுக் கப்பட்டது யாவரால் என வினவி அவரவர் 'கன்மத்தால்' என விடை காண்கிறார்.

'தோற்பாவை நாலாட் சுமையாகும் சீவனென்றிங்
கார்ப்பா லெடுத்ததெவ ராலே?' என்பது கண்ணி.

கன்மங்கள் தொடர்வன என்பது உட்பொருள்.

கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர் (மற்
றல்லாதார் யாரோ?'

என்பதன் வாயிலாகக் கொல்லாமையைக்கூறி இறைவனின் அருளன்பு' வடிவநிலையை மெய்ப்பிக்கின்றார் இவ்வுயர்ந்த விரதங்களின் சிறப்பால் பலரும் ஞானநிலையடையக் கூடும். ஞானநிலையடைந்தபின், எச்செல்வம் இழந்தாலும் வந்தாலும் அவற்றை 'என்னது' 'யான்' என்னும் ஆணவம் கொண்டு பேசார் என்பதனை,

'ஏதுவந்தும் ஏதொழிந்தும் என்னதியா னென்னார்
போதநிலை கண்ட பலத்தோர்' (கள்

என்னுங் கண்ணி கூறும் 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே' என்னுந்தொடரன்றோ பட்டினத் தாரைத் தந்தது!

'நீயின்றி நானார்? நினைவார்? என் நெஞ்சகமார்?' என வினா எழுப்புவதன் மூலம் இறைவனே ஆட்டுவிக்கின்றவன்: நாமெல்லாம் ஆடுவோர் என்னும் தத்துவம் கூறுகிறார். இந் நிலையில் உடலைச் சுமந்து தவம் செய்வது (போலியாய்) அரனைக் காணாது என்பார்போல்.

'சோற்றுத் துருத்திச் சுமைசுமப்பக் கண்பிதுங்கக்
காற்றைப் பிடித்தலைந்தேன் கண்டாய்'

என்கிறார் உடற்பற்று உள்ளவரை அருள் தோற்றம் கிட்டுவது அரிது என்பதே இங்குக் கருத்து.

'தானாக வந்து தடுத்தாண் டெனையின்ப
வானாகச் செய்தஇன்ப வானே'

என்றிறைவன் தானேமுன்வந்தருளும் அன்புநிலையும் அமைகிறது. இவ்வன்புநிலை காணப் பற்று நீக்கவேண்டும் என்பதையும் கூறி விடுகிறார் கண்ணியார்.

'படிப்பற்றுக் கேள்வியற்றுப் பற்றற்றுச் சிந்தைத்
துடிப்பற்றார்க் கன்றோ சுகங்காண்'

என்பது கண்ணி. 'அற்றது பற்றெனின் உற்றது வீடு' என்பது அடியார் மொழியாகும்.

தானாதல் பூரணமே சாருமிட முண்டுயிரும்
வானா தியுமொழுங்காய் மன்னும்

என்பதில் உயிரினிடத்தும் ஐம்பூதங்களினிடத்தும் முறையாக நிலைபெற்றிருக்கும் முதல்வனே தானாதலாகிய உன் முழுமையான தூயநிலையே அடியேன் தங்குமிடம் என்றிறைவனிடம் கூறுகிறார். இதனால் தாம் சென்று நிலைபெறுதற்குரிய இடமாக இறைவனைத் தரக்காணலாம்.

திருவருளை முன்னிட்டே அறியவேண்டுமொழிய 'நான்' 'எனது' என்னும் நிலைதரும் தற்போத அறிவினால் அறியக் கூடாது என்று 'குரவன்' தெளிவித்த வண்ணமே தெளிந் தேன் என்பதைக்

'கூர்த்தவறி வாலறியக் கூடா தெனக்குரவன்
தேர்த்தபடி தானே தெரிந்தேன்'

என்பதில் கூறுகிறார். எதனையறிய வேண்டுமாயினும் 'திரு வருள் வேண்டும்' என்பது தெளிவாகிறது.

எல்லாம் திருவருள்விருப்பப்படியே நடக்கும் என்கிறார். இவ்வெண்ணமே மனத்தை ஒடுக்கும் என்றறிவிக்க

'உள்ளபடி யாதுமென வுற்றுணர்ந்தேன் அக்கணமே
கள்ளமனம் போனவழி காணேன்' என்கிறார்.

சிவானந்த நிலையடையாமல் மனம் உலகத் தொடர்பான யாதொரு பொருளிலும் சென்றழுந்தித்துக்கமடைதல்வலிய பிறவித் துன்பமென,

'இன்பநிட்டை எய்தாமல் யாதெனினும் சென்று
துன்புறுதல் வன்பிறவித் துக்கம்' (மனம்

எனக்கண்ணி பாடுகிறது. ஆதலால்,

'தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்றால்
நின்மயமாய் எல்லாம் நிகழும்'

என்றறிய வேண்டும் நெறியறிந்து தன்மயமாய் நின்ற நிலையே தன் சொந்த நிலையாக நின்றால், அக்காலத்து அவ் வான்மாவை இறைவன் காக்கப் பின்பு நிகழ்வனவெல்லாம் இறைத்தன்மையாய் நடக்கும் என்ற உண்மையைத் தெளி யலாம்.

இறையன்பின் தூயநிலையில் எவர்க்கும்எளிவந்த பொரு ளாவான் என்பதனையும்

'பாட்டுக்கோ அன்பினுக்கோ பத்திக்கோ அன்பர்
நீட்டுக்கெல் லாங்குறுகி நின்றாய்' (தங்கள்

என்ற கண்ணிபாடுகிறது. மாணிக்கவாசகர் போன்றோர் பாட்டுக்கும் திருஞான சம்பந்தர் போன்றோர் அன்பினுக் கும் திருநாவுக்கரசர் போன்றோர் பத்திக்கும் சுந்தரர் போன் றோர் நீட்டுக்கும் எளிமையானவன் என்பதால் அடியார் திறத்தவன் அன்புள்ளம் அறியலாம்.

இவ்விறைமைத் தத்துவ எண்ணங்கள் கூடும்போது இறைவனின் முழுமையை உள்ளம் எண்ணித் துணிகிறது. துணியவே,

> 'நானான தன்மையென்று நாடாமல் நாடவின்ப
> வானாகி நின்றனை' எனத் தோற்றங்கண்டு உயிர்

வாழ்த்துகிறது. இதன் விளைவாகப்

> 'பேசாத மோனநிலை பெற்றன்றோ நின்னருளாம்
> வாசாம கோசரந்தான் வாய்க்கும்'

என்ற உண்மை வெளிப்படுகிறது. வெளிப்படவே,

> 'சென்றவிட மெல்லாம் திருவருளே தாரகமா
> நின்றவர்க்கே ஆனந்த நிட்டை'

என்னும் ஆனந்தப் பெருநிலை வாய்க்கும் வாய்ப்பமைகிறது.

இவற்றால் சுத்தநிலை, சுத்தஅருள்நிலை இரண்டும் தெளிவாக விளக்கம் பெறுகின்றன

> 'அத்துவித மான அயிக்ய அனுபவமே
> சுத்தநிலை' என்கிறது ஒரு கண்ணி.
>
> 'நித்திரையும் பாழ்த்த நினைவுமற்று நிற்பதுவோ
> சுத்த அருள்நிலை' என்கிறது மற்றொரு கண்ணி.

எனவே இறைவனுடன் ஒன்றுபடும் வண்ணம் உயிர் தனது நித்திரையைப் (நித்திய சுழுத்தி) பாழாகிய நினைவை (உலக முகமாகச் செல்லல்) நீங்கியிருப்பதே மிகத்தூய்மையான முழுமை பொருந்திய திருவருள் நிலையாகும் என்றறிய வேண்டும்.

இவ்வுண்மைத் தத்துவத்தை உயிர் உணர்ந்துகொண்டால் – 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதை உணர்ந்து கொண்டால்,

> 'எல்லாரு மின்புற் றிருக்க நினைப்பதுவே
> யல்லாமல் வேறொன் றறியேன்'

என்ற பரந்த மனவாழ்த்தே நிறைவு பெறுமன்றோ!

# 'அல்ல', 'இல்லை' எனும் எதிர்மறைவினைகள்

திருமிகு கோ. சுப்பையா. எம்.ஏ., பி.எச்.டி.
இந்திய மொழிகளின் நடுவண் நிலையம். மைசூர்-6

(தொகுதி-69 பகுதி 2ன் தொடர்ச்சி)

**II a முனியன் குமாரைக் கத்தியால் குத்த(வ)இல்லை,**

**II b முனியன் குமாரைக் குத்தியது கத்தியால் அல்ல.**

குமாரை முனியன் குத்தினன் எனும் கூற்று உண்மை உடைத்தாயினும், அவன் கத்தியைப் பயன்படுத்தினன் எனும் கூற்று உண்மைக்குப் புறம்பானது. இக்கூற்றையே தொடரன் II b கூறுகிறது. இவ்விரு தொடரன்களும் பொருள் ஒப்புமை உடையனவே யாகும். முன்னது இல்லை எனும் வினையையும், பின்னது அல்ல எனும் வினையையும் எதிர்மறைக்குப் பயன்படுத்திக் கொண்டன.

எதிர்மறைக்கு ஏன் இருவினைகள் தனித்தனியே பயன் படுத்தப்படுகின்றன என்ற வினவுக்குக் கீழ்வருமாறு விளக்கம் தரலாம்: வேறுபாடு அவைகள் வழங்கப்பெறும் தன்மையின் (distribution) அடிப்படையில் அமைந்துள்ளது. புற அமைப்பில் (surface structure) முற்றுவினையுடன் கூடி இல்லை எனும் வினை அமைந்துள்ளது. வினையைத் தவிர ஏனைய தொடரு(களு)டன் (constituents) அல்ல எனும் வினை சேர்ந்து வருகிறது. இல்லை எனும் வினை, முற்று வினையுடன் பாலெண் இனவிகுதிகள் (person-number suffixes) சேரும் பொழுது அல்லது சேராப்பொழுது, சேர்த்து வழங்கப் பெறுகிறது. இதனைச் சான்றுகள் 3--6 விளக்கும். எதிர் மறை சேரும்பொழுது முற்றுவினை காலஇடைநிலைகளை (tense suffixes) இழந்து (deleted) வினையெச்சமாக (infinitive)

மாறுகிறது (transformed)A எதிர்மறை முற்றுவினையுடன் சேர்ந்த பின்னர் பாலெண் இனஇயைபு (concordante rule) இயங்குவது கிடையாது. அதனால்தான் இல்லை எனும் வினை பாலெண் அற்று வழங்கப்படுகிறது.

வினுக் கூற்றை question category போன்று அல்ல எனும் வினை, வினையெச்சம் அல்லாத எல்லா வினைத் (Non-infinitive verb) தொடருடன் சேர்ந்து வழங்குவது இயல்பே. இதனைக் கீழ்க்காணும் சான்றுடன் விளக்கலாம்.

12. முனியன் அல்ல குமாரைக் குத்தியது.
13. முனியன் கத்தியால் குத்தியது குமாரை அல்ல.

தொடரன் 12ல் எழுவாய்த் தொடரும் (subject noun phrase) முனியன் அல்ல என்பதினும்; தொடரன் 13-ல் இரண்டன் உருபேற்ற பெயர்த்தொடரிலும் (object noun phrase) குமாரை அல்ல என்பதிலும் (எதிர்மறையின்) அழுத்தம் காணப்படுவதை உணரலாம்.

சில சமயங்களில் இக்கருத்துக்கு இடம் வழங்கு நிலைக்கு (distribution) எதிரான சான்றுகள் காணப்படுகின்றன. ஆனால் ஆழ்ந்த ஆய்வில் அவைகள் மேலே கூறிய கருத்

---

A எதிர்கால முற்றுவினையுடன் (future finite verb) எதிர்மறைவினை சேரும்பொழுது, எதிர்கால முற்றுவினையின் கால இடைநிலை எதிர்மறைவினைக்கு மாற்றப்பெற்று (transportation), தான் வினையெச்சமாக மாற்றம் அடைகிறது (transformed). பாலெண் இன விகுதிகள் (gender number suffixes), இவ்வெதிர்கால எதிர்மறை வினையுடன் பின்னர் சேர்க்கப்படுகின்றன. இது பாலெண் இயைபு விதி (concordance rule) மாற்றிலக்கணத்தில் (transformational grammar) கடைசி விதி என்றுகூறுவர். ஆனால் இக்கூற்று சர்ச்சைக்குரிய தொன்றாகும். விளக்கத்திற்கு டாக்டர் திரு, கி. அரங்கன் அவர்களின் "மாற்றிலக்கணத்தில் பாலெண் இயைபு விதிகள்" எனும் கட்டுரையைக் காண்குக.

தைத்தான் வலியுறுத்துகின்றன. கீழ்க்காணும் சான்றுகளில் ஒரே சுற்றுப்புறச் சூழ்நிலை **(identical environment)** இருப்பினும இருவேறு **வினைகள்** பயன்படுத்தப் பட்டுள்ளமை நோக்கத்தக்கது.

14. a. இது குடிக்க[வ]இல்லை

b. இது குடிக்க அல்ல

மேலோட்ட தொடரன் அமைப்புமுறை **(surface syntactic structure(,** 14**a**ல் குடிக்க எனும் தொடர், முற்று வினையின் பகுதி யென விளக்கும். ஆனல் குடிக்க எனுந் தொடர் 14**b**ல் அவ்வாறு உடையதல்ல. பின்னையது பயன்தொக்க வினையெச்சமாகும் **(purposive infinitive)**

பெயருடனே அல்லது வினையுடனே இல்லை எனும் வினைவருவதைக் கீழ்வரும் சான்றுகள் துணை புரிகிறது.

15. அங்கே நாய் இல்லை

16. அவள் அழகாக இல்லை

இங்கு இல்லை எனும் வினை இருக்கவில்லை எனும் தொடரிலிருந்து பெறப்பட்டதாகும். தொடரன்கள் 13லும் 14லும் இல்லை எனும் வினைக்குப் பதிலாக இருக்கவில்லை எனும் தொடரைக் கொள்ள இயலும்.

தொடரன் அமைப்பு மாறி வழங்கும் தன்மை **(syntactic complementary distribution)**யைக் கொண்ட இல்லை, அல்ல எனும் வினைகளிடையே பொருள் வேறுபாடில்லை என்பதை இக்கட்டுரை விளக்க முற்பட்டுள்ளது.

---

## REFERENCES

1. டாக்டர் கி. அரங்கன் : '' மாற்றிலக்கணத்தில் பாலெண் இயைபு விதிகள்''. இலண்டன் முரசு ஆண்டு மலரில் வெளிவருகிறது. இலண்டன். 2. Robin Lahoff ; 1969, A Syntactic Argument for Negative Transportation, papers from the fifth Regional meeting chicago dinguistic society, university of Chicago, CHICAGO & ILLINOIS.

# பொலிவுடன் வாழ்க !

செஞ்சொற் பாவலர் ப. சங்கரலிங்கம்

பாண்டித் துரையாம் பைந்தமிழ் மன்னன் !
ஈண்டு கண்ட எழில் மிகுசங்கச்
செயலர் பதவியை செழுமையாய் ஏற்று
வயலென நலத்தைப் புயலெனக் குவித்து
ஆயிரம் ஆண்டுகள் அறப்பயிர் வளர்த்து
பாயிரம் பெற்றுப் பகலவன் போல
வாழ்ந்து செழித்த வளமைக் குடியில்
ஆழ்ந்து பிறந்த அறிஞர் திலகமே !
ஆலென நிலைத்தே அறுகெனப் பரவி
பாலென வெளுத்துப் பழமென இனித்து
வாளென உலவி வேலென முடித்து
நாளெலாம் உழைக்கும் நலமிகு மேலோன் !
பெரிய சாமி ! பொறுமையில் பூமி !
பெருமையில் பொதியம் புகழில் இமயம் !
தொண்டுத் தென்றல் ! தூய்மைக் கொண்டல் !
அன்புத் தெய்வம் ! அருளில் நிலவு !
சிங்கத் தமிழன்' செந்தமிழ் மறவன் !
கங்குல் அகன்றிட வந்ததோர் ஞாயிறு !
அருமைத் தமிழை இருவிழியாய்க் கொண்டோன் !
பெருமைத தமிழர் புவியிலோர் குன்றாய்
புதிய தமிழகம் ! புரட்சித் தமிழகம் !
புதுமைத் தமிழகம் ! புலர என்றும்
பொழுதெலாம் தொண்டுகள் புரிபவன் வண்டாய் !
பழுதிலாப் பணியெலாம் பயன்மிகு கற்கண்டே !
என்றும் வாழ்க ! நன்றுகள் பெற்றே !
தென்றமிழ் போலத் திறத்தால் மலிக !

இலக்கியச் சிந்தனை I

# அன்புடை நெஞ்சம்

— புலவர். கு. சின்னையன்

---

**முன்னுரை:-**

அன்பினைத்தாழிட்டு அடைத்து வைக்க முடியாது. அங்ஙனம் அடைத்து வைத்தாலும், அது தாழைத் திறந்து கொண்டு வந்துவிடும்; பிறரறியாமல் மறைத்து வைக்க முடியாது அங்ஙனம் மறைத்து வைத்திருந்தாலும் தண்ணீர்க் கசிவுபோல் வெளிவந்துவிடும். மக்கள் மன மகிழ்ந்திருத்தற்கும், இன்பவாழ்வடைதற்கும், ஒற்றுமையுடனிருத்தற்கும், வாழ்க்கையின் தேவைகளை நிரப்பிக் கொள்வதற்கும் அன்பே காரணமாயிருக்கின்றது.

'அன்பு' என்னும் அரும்பு, அருளாக மலர்ந்து' பக்தியாகக்காய்த்து, கருணையாகப்பழுத்து, பேரின்பமாகிய சுவையைத்தருகின்றது. இதனால்தான். திருமூலர் 'அன்பே சிவம்' என்று கூறியுள்ளார். தொடர்புடையவர்களிடம் காட்டும் மன நெகிழ்ச்சியை 'அன்பு' என்றும், எல்லா உயிர்களிடத்திலும் காட்டும் நெகிழ்ச்சியை 'அருள்'என்றும் கூறுகின்றனர்.

**அன்பின் ஆற்றல்:-**

அன்பு, ஆர்வமுடைமையை உண்டாக்குகின்றது. அவ்வார்வம் நண்பென்னும் நாடாச்சிறப்பைத் தேடித் தருகின்றது. அன்பு அறத்திற்கு மட்டுமல்லாமல் மறத்திற்கும் காரணமாயிருக்கின்றது. ''உடலில் உயிர் இருக்கும் போதுதான் அவ்வுடல் பிறரால் மதிக்கப்படுகின்றது. உயிரற்ற உடல் மாண்பிழந்துவிடுகின்றது. இவ்வாறே, அன்புடைய மக்கள்தாம், பிறரால் மதிக்கப்படுகின்றார்கள். அன்பில்லாதவர்கள் அனைவராலும் வெறுக்கப்படுகின்றார்கள். எனவே, அன்பில்லாமல் வாழும் மக்கள் உயிர்ப்பிணங்களாவார்கள்.'' என்று கூறவிரும்பினார் வள்ளுவர். ஆனால்

அவர் வன்சொற்களைக் கூறவிரும்பாமல், 'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு, என்புதோல் போர்த்த உடம்பு'' என்று இனிதே கூறியுள்ளார்.

ஒருவன் உறுதியான உடலுறுப்புக்களைப்பெற்றவனாக இருக்கலாம்; இடம், பொருள், ஏவல்களெல்லாம் அமைந்தவனாக இருக்கலாம். ஆனால் அவன் அன்பில்லாதவனாயிருப்பின், ஒன்றும் இல்லாதவனாவான். அவனுடைய வாழ்க்கை பாலைவன வாழ்க்கையாகும்.

''புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும் யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு'' என்றார் வள்ளுவர்.

**அன்பின் சிறப்பு:-**

உலகில் வாழும் எல்லா உயிரினங்களிடத்திலும் அன்பு அமைந்திருக்கின்றது. ஆனால் அவ்வன்பு மக்களிடத்தில் தான் சிறந்து விளங்குகின்றது. விலங்குகளிடத்தும், பறவைகளிடத்திலும் காணப்படுகின்ற அன்பு குறிப்பிட்ட காலத்தில் தோன்றி மறைந்துவிடுகின்றது ஆனால், மக்களிடத்தில் தோன்றுகின்ற அன்பு, நிலையானதாயிருக்கின்றது; உற்றுழி உதவுகின்றது; உயிரையும் அளிக்கின்றது.

**அன்பின் தோற்றம்:-**

அன்பு, ஆண் பெண்களிடத்தில் காதலாகத்தோன்றுகின்றது; இறையுணர்வுடையவர்களிடம் பக்தியாகத் தோன்றுகின்றது; பெரியோர்களிடம் இரக்கமாக அமைகின்றது; கடவுளிடம் கருணையாகக் காட்சியளிக்கின்றது.

ஒருவன், ஒரு பெண்ணிடம் அன்பு கொண்டு அவளைத் தன் வாழ்க்கைத்துணைவியாக ஏற்றுக்கொள்கின்றான். ஏற்ற பிறகு, அவ்விருவர்களுடைய உறவினர்களும் அவர்களிடம் அன்பு செலுத்துகின்றார்கள். ஒருவரடையும் துன்பத்தைத் தாமடையும் துன்பமாகக் கருதி வருந்துகின்றார்கள் வருந்துவதோடமையாமல் தம்மால் முடிந்த உதவிகளையும் புரிகின்றார்கள். எனவே, இருவரிடம் தோன்றிய அன்பு, யாவரிடமும் தோன்றி உதவி செய்து வருகின்றது. இதனால் தான்.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது" என்று திருவள்ளுவர்
கூறியிருக்கின்றார்.

**உடலும் உயிரும்:-**

அன்பொத்த காதலர்கள் உடலும் உயிரும்போல் இணைந்திருக்கின்றார்கள். உடலிருந்தால்தான் உயிர் இருக்கின்றது உயிர் பிரிந்தால் உடலும் அழிந்துவிடுகின்றது. இங்ஙனம் உடலுக்கு உயிரும், உயிருக்கு உடலும் ஆதாரமாயிருப்பது போல் கணவனுக்கு மனைவியும், மனைவிக்குக் கணவனும் ஆதாரமாயிருக்கின்றார்கள். இதனை

"உடம்போ டுயிரிடை யென்ன மற்றன்ன
மடந்தையோ டெம்மிடை நட்பு"

என்ற குறட்பாவின் மூலம் நாம் அறிந்து கொள்கின்றோம்.

பழங்காலக் காதல், ஒருவனுக்கும், ஒருத்திக்குமாக அமைந்திருந்தது. ஒருவன் பலரைக் காதலிக்கும் இக்கால நாகரிகம், அக்காலத்தில் தோன்றவில்லை. தலைவனுடைய நெஞ்சில் தலைவியும், தலைவியினுடைய நெஞ்சில் தலைவனும் நிலைத்திருந்தார்கள் இதனால்தான் கற்புடைப்பெண்களைச் சிறப்பிக்கும் போது "பிறர் நெஞ்சு புகாப்பெண்டிர்" என்று கூறியுள்ளார்கள்

**நினையா அன்பு:-**

கருத்தொருமித்த காதலர்கள் இப்பிறப்பில் மட்டுமல்லாமல், இனிவரும் பிறப்பிலும் இணைந்து தோன்ற விரும்பியிருக்கின்றார்கள். ஆனால் ஒருவரை ஒருவர் நினைக்காமலிருந்தார்கள். நினைக்காமலிருந்தத்ற்குக் காரணம் அவர்களிடம் அன்பில்லாமையல்ல; ஆசை அடங்கிவிட்டதென்பதல்ல, மறதியில்லாததேயாகும் மறந்திருந்தவர்கட்குத்தான் நினைப்புததோன்றுமேயன்றி. மறவாமலிருப்பவர்கட்கு நினைப்புத் தோன்றுதன்றோ? எனவேதான் திருவள்ளுவர்.

"உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்" என்று

கூறியிருக்கின்றார்.

**அன்பளித்த ஐயம்:-**

தலைவனொருவன் தன் தலைவியிடம் மகிழ்ந்து பேசிக் கொண்டிருந்தபோது, "நான் இப்பிறப்பில் உன்னைவிட்டுப் பிரியேன்" என்றான். அடுத்த பிறப்பில் தலைவன் தன்னை விட்டுப்பிரிந்திருக்க விரும்புவதாகக்கருதிய தலைவி, கண்ணீர் விட்டாள். காதலியின் கண்ணீரைத் துடைத்துவிட்டு, அதற்குக் காரணம் கூறினான் காதலன். "எடுத்துள்ள பிறவிக்குத்தான் ஒருவர் மற்றொருவர்க்கு உறுதிமொழி கூறமுடியுமே தவிர, இனி எடுக்கவிருக்கும் பிறவிக்குரிய உறுதிமொழியைக் கூறமுடியாது எனவே 'நான் இப்பிறப்பில் உன்னைவிட்டுப்பிரிய மாட்டேன் என்றேன். இதனால் அடுத்த பிறவியில் உன்னைவிட்டுப் பிரிய எண்ணுவதாக நீ ஐயங்கொள்ளாதே" என்று விளக்கிக்கூறினான். பிறகு தான் தலைவி அமைதி அடைந்தாள்.

இதனை

"இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்" என்ற
குறட்பாவின் மூலம் வள்ளுவர் நமக்கு விளக்குகின்றார்.

**ஊடலும், கூடலும்:-**

ஒத்த அன்புடைய ஆணும் பெண்ணும் பூங்காவிற்குச் சென்றார்கள். தலைவன் மேடையிலமர்ந் திருந்தான். தலைவி மலர் பறிக்கச் சென்றிருந்தாள். திரும்பி வந்த தலைவி பின்புறமிருந்து கணவனின் கண்களைத் தன் கைகளால் மூடினாள். கணவன் 'யார்'? என்றான். உடனே மனைவி ஊடல் கொண்டு ஒதுங்கி நின்றாள். அவள் அகன்றதற்குக்காரணம், தன் தலைவன் 'யார்'என்று கேட்டதேயாகும். "தன் கணவனின் உடலைதொடுதற்குரிய உரிமை, மனைவியாகிய தனக்கு மட்டுந்தான் உரியதே தவிர வேறொருத்திக்கு இல்லை. தன் கணவனுக்குப் பல காதலிகள் இருப்பதால்தான் 'யார்' என்ற ஐயம் எழுந்திருக்கின்றது" எனக் கருதி, தலைவி ஊடல் கொண்டாள்.

ஊடல் கொண்ட தலைவிக்கு ஆறுதல் கூற விரும்பினான் தலைவன். தலைவியை நோக்கி "என் அன்பே! நான் என் தாய் தந்தையரிடத்திலும், அண்ணன் தம்பிகளிடத்திலும்

காட்டுகின்ற அன்பைவிட உன்னிடத்தில் மிகவும் அன்பு கொண்டிருக்கின்றேன் என்றுகூற எண்ணியே 'யார்' என்று தொடங்கினேன்; அதற்குள் நீ ஊடல் கொண்டு ஒதுங்கி நிற்கின்றாய்; யான் உன்னையன்றி வேறொருத்திக்கு என் உள்ளத்தில் இடம்அளிக்கவில்லை. அஃது எங்கள் குடும்பப் பழக்கமுமன்று' என்றுவிளக்கினான். இதனைக்கேட்ட தலைவி ஊடலை மறந்து தலைவனுடன் கூடலானாள். இதனை,

> ''யாரினும் காதல மென்றேனா ஊடினாள்
> யாரினும் யாரினும் என்று''

என்ற குறட்பாவில் திருவள்ளுவர் கூறியிருப்பதனா லறிந்து கொள்கின்றோம் அன்பொத்த நெஞ்சங்களில் ஐயம் தோன்றக் காரணமில்லை எனினும், ஊடுதல் காமத்திற் கின்பம் பயத்தலின் அது, தோன்றுவதும் மறைவதும் இயற்கையாயிருக்கின்றது.

**மாறாக்காதல்:-**

அக்காலக்காதலர்களின் நெஞ்சங்கள் பொன்னுடன் பொன் இணைந்திருப்பதைப் போன்றிருந்தன. தன் கணவனுடலை எரிக்கும் தீயில் வீழ்ந்து இறக்கத் துணிந்த கோப் பெருந்தேவியின் காதல் நெஞ்சத்தைப் புலவர்களாலும் மாற்றமுடியவில்லை சீதையின் செம்மையான நெஞ்சத்தை இராவணன் இழைத்த வெம்மையாலும் மாற்ற முடியவில்லை. தமயந்தியின் காதல் நெஞ்சத்தைத் தார்வேந்தர் பலராலும் மாற்றமுடியவில்லை.

பணத்தைக் கண்டும், பதவியைக் கண்டும், பார்க்கும் தோற்றத்தைக் கண்டும் காதலராகின்றனர். காதலுக்குக் காரணமாயிருந்தவை மாறும்போது அவர்களுடைய நெஞ்சங்களும் மாறிவிடுகின்றன பிற்காலத்தில் இங்ஙனம் மாறுங் காதலர் தோன்றுவார்கள் என்பதை அறிந்தோ என்னவோ? அக்காலக்காதலரை 'மாறாக் காதலர்'' என்று புகழ்ந்து கூறியுள்ளார்கள் இரண்டு மரக்கட்டைகள் இணைந்திருப்பதைப்போல இக்காலகாதலர்கள் இணைந்திருக்கின்றார்கள் இத்தகைய காதல் வாழ்வில் சில குறைகள் தோன்றுகின்றன. அக்காலத்திலும் சிற்சில குறைபாடுகள் தோன்றின. ஆனால் இத்தகைய குறைகளை நீக்க அக்காலச் சான்றோர்கள் காதல் வாழ்விற்குச் சில கட்டுப்பாடுகளை விதித்திருந்தார்கள்.

**காதலர்க்களித்த கட்டளை:-**

காதலர் இருவரும் உள்ளத்தாலும், சொல்லாலும், செயலாலும், பண்பாலும், பிறப்பாலும், குடியாலும், வயதாலும், பிறவற்றாலும் ஒத்தவர்களாயிருந்தால்தான் அவ்வாழ்க்கை சிறந்ததாயமைகின்றது. பருவ உணர்ச்சி காரணமாகப் பிறபண்புகளை ஆராயாமல், காதல்வாழ்வில் ஈடுபடுவோர் அவ்வாழ்க்கையில் தோல்வியடைகின்றனர்.

"ஒத்த அன்புடைய ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காதலித்திருந்தாலும், அவர்கள் இருவரும் தாமாகவே இல்லறவாழ்க்கையை ஏற்கக்கூடாது. காதலர்களின் முடிவு பொருத்தமுடையதாயிருப்பின் அதனை அவ்விருவருடைய பெற்றோரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அங்ஙனம் அவர்கள் ஏற்றுக் கொண்டபின் ஆன்றோர் முன்னிலையில் அவர்கள் இல்லறவாழ்க்கையை ஏற்றுக் கொள்ளவேண்டும்" என்று கட்டளையிட்டிருக்கின்றார்கள்.

இதனை,

"கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள்வதுவே"

என்ற தொல்காப்பிய நூற்பாவாலறிந்து கொள்கின்றோம். இங்ஙனம், பழங்கால மக்கள் பலர் ஒருவரை ஒருவர் காதலித்து மணம் புரிந்து கொண்டிருப்பினும், வேறு சிலர் முதலில் காதல் கொள்ளாமல், மணம் புரிந்து கொண்ட பின் காதலராய் விளங்கி, சிறப்புடன் வாழ்ந்திருக்கின்றார்கள். இதனைக் "களவின் வழிவந்த கற்பும் களவின் வழிவாராக் கற்பும்" என்று அகப்பொருள் இலக்கணம் அறிவிக்கின்றது.

**காதல் தேர்வு**

அக்காலக் காதலர்கள் தாய் வழி உறவையோ, தந்தை வழி உறவையோ தேடி அலையவில்லை; ஆனால் தலைசிறந்த பண்புகளைத் தேடியலைந்திருக்கின்றார்கள். கண்ணைக்கவரும் தோற்றத்தையோ, கைபிற்கிடைக்கும் பொருளையோ தேடி அலையவில்லை; ஆனால், உள்ளங்கவரும் செயலையும், உயரிய உள்ளத்தையும் தேடியலைந்திருக்கின்றார்கள். இனப்பெருக்கத்தை விரும்பியோ, இன்பவாழ்க்கையை எண்ணியோ அவர்கள் இல்லறம் ஏற்கவில்லை; ஆனால் அன்பையும்,

அறனையும், பண்பாகவும் பயனுகவும் அடைய இல்லறம் ஏற்றிருக்கின்றூர்கள். இத்தகைய செய்திகளை யெல்லாம் அக்காலத்தில் தோன்றிய அகப்பொருள் இலக்கணங் களிலும், இலக்கியங்களிலும் விளக்கிக் கூறியிருக்கின்றூர் கள் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய குறுந்தொகை யில், காதல் நிகழ்ச்சிகள் பல கூறப்பட்டிருக்கின்றன.

**அன்புடை நெஞ்சம்:-**

முன்பின் அறியாத தலைவனும், தலைவியும் ஒருவரை யொருவர் கண்டனர். தூதர் வாயிலாகத் தத்தம் கருத்தைத் தெரிவித்துக்கொள்ளவில்லை கண்களின் வழியாகவே தத்தம் கருத்தினைத் தெரிவித்தனர் அதன்பின் இருவரும் காதலரா யினர். தலைவி தன்னைக் காதலித்த தலைவனின் இயல்பினை ஆராய்ந்தறியஎண்ணினுள் தலைவியின் சிந்தனையை அறிந்த தலைவன் அத்தலைவியை நோக்கி, உன்தாயும் என்தாயும் எம்முறையில் உறவினர்?

என் தந்தையும் உன் தந்தையும் எவ்வகையில்உறவினர்? யானும்,நீயும் எவ்வழியால் ஒருவரையொருவர் அறிந்தோம்? செம்மண் நிலத்தில் பெய்யும் மழைநீரானது செம்மை நிறத்தையடைந்து அதனுடன் ஒன்றியிருப்பது போல முந்தைய பழக்கமற்ற நம் அன்புடை நெஞ்சங்கள், தாமே தம்மிற் கலந்து ஒன்றுபட்டன '' என்று கூறி, அவளுடைய சிந்தனையை மாற்றினுன். இக்கருத்தினை கீழ்க்காணும் குறுந் தொகைச் செய்யுளின் வாயிலாக நாம் நன்ருக அறிந்து கொள்கின்றோம்.

> ''யாயும் ஞாயும் யாரா கியரோ
> எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்
> யானும் நீயும் எவ்வழி அறிதும்
> செம்புலப் பெயல்நீர் போல
> அன்புடை நெஞ்சம் தாம்கலந் தனவே''

**அக்காலப்பண்பு:-**

அக்கால மக்கள் 'காதல்' என்னும் சொல்லைக் 'காத்தல்' என்னும் பொருளில் வழங்கியிருக்கின்றூர்கள். காதலுடன் இணைந்த காதலர் இருவரும் ஈருடல் ஓருயிர் போல் வாழ்ந் தனர். கண்ணிரண்டும் ஒன்றையே காண்பது போல இரு

வரும் ஒரே நோக்குடன் விளங்கினர். தலைவன் தன் தலைவியின் நெஞ்சிலும், தலைவி தன் தலைவன் நெஞ்சிலும் இடம் பெற்றிருந்தனரே தவிர பிறருடைய நெஞ்சில் இடம் பெற்றிருக்கவில்லை. பிறர் நெஞ்சுபுகும் பெண்ணைப் 'பரத்தை' என்றும், பிறர் நெஞ்சுபுகும் ஆணைப் 'பரத்தன்' என்றும் பழித்துரைத்திருக்கின்றார்கள். இல்லற வாழ்க்கையின் அன்பு வளர்ச்சிக்காகவே அறிவுடை மக்கட் பேற்றை விரும்பியிருக்கின்றார்கள். அவர் தம அன்பு வாழ்க்கையில் இன்சொல்லும், ஈகையும் இணைந்திருந்தன உண்மையும் ஊக்கமும் உயர்ந்திருந்தன. அறவாழ்வும் ஆன்ற பொருளும் அமைந்திருந்தன. விருந்தோம்பும் பண்பு விழுமிய பண்பாக அமைந்திருந்தது.

**முடிவுரை:-**

'இல்' என்னும் சொல் வீட்டைக்குறிப்பதாகும். வீட்டிலிருந்து கொண்டு கணவனும், மனைவியும் சேர்ந்து நடத்தும் அறவாழ்க்கையே இல்லற வாழ்க்கையாகும். இவ்வாழ்க்கை ஒருவர்க்கொருவர் துணையாக அமைந்திருத்தலால்தான் திருவள்ளுவர் 'வாழ்க்கைத்துணை நலம்' என்று கூறியிருக்கின்றார், வாழ்க்கைக்குத்துணையாக அமையும் கணவனுக்கும் மனைவிக்கும் அமைந்திருக்க வேண்டிய பண்புகளுள் முதன்மையானது அனபுடைய நெஞ்சமே யாகும்.

— ● —

1975 மேத் திங்கள் நடைபெற்ற மதுரைத் தமிழ்ச்சங்க நுழைவு, இளம்புலவர், புலவர் தேர்வில் வெற்றிபெற்றவர்களின் தேர்வெண்கள் கீழே கொடுக்கபபட்டுள்ளன.

## நுழைவுத் தேர்வு

முதல் வகுப்பு:

791 800 813 831 832 834 846 852 858 862–864 892 909 913 914.

இரண்டாம் வகுப்பு:

796 798 801 802 805 808 810-812 814 815 817–821 823-825 827 833 839 841 842 848–850 854 855 865 866 872 873 875 876 884 889 890 903 910 911 921

மூன்றாம் வகுப்பு:

787–790 794 797 799 803 807 816 822 826 828 829 836-838 844 847 851 860 867 871 877 879 880 886 888 893 896 897 899 900 902 904 905 908 912 915

## இளம்புலவர்

முதல் வகுப்பு:

3316 3354

இரண்டாம் வகுப்பு:

3264 69 74 79 80 84 89 91 95 97 3303 08 10 17 22 30 33 42 48 50 58 64 67 70 73 77 91 92 96 3409.

மூன்றாம் வகுப்பு

3265 75–78. 81–83 85-88 90 92-94 96 98 3300-02 05-07 09 11-15 18–20 25-27 28 32 34 40 41 43 44 47 51 53 55–57 59 60 65 66 68 69 71 74 75 76 78 79 82 83 86–89 94 95 97 98 3402 04 06-08 12

## புலவர் தேர்வு

முதல் வகுப்பு

4093 4421 4427 50 51 95

இரண்டாம் வகுப்பு:

3849 50 63 66 67 68 74 82 87 88 96 3909 17 30 32
35 39 41 49 63 65 78 80 97 4014 23 35 43-45 51 64
85 99 4106 08 18 70 76 84 88 4243 44 46 53 66 86
87 93 95 96 4303 10 25 26 30 31 38 50 56 58 59 69
71 73 76 78 82 84 88 89 4400 06 22 23 26 28 29 35
38 52 55 70 71 81-83 85 87 89 91 92 94 97 98 4500
06 11 14–17 20 22 32 34 35 44 48 50–52 68 77 85
86 98 4600-02

மூன்றும் வகுப்பு

3848 52–62 64 65 69-73 75 76 79 80 81 83 85 86
89-95 97-99 3901-04 06-08 10-13 15 16 20-22 24-27
28 29 31 33 36 37 40 42-48 50-59 60-62 64 66-77 79
81-85 87 89-92 94-96 98-4003 05-12 15-22 24 29
31-34 36 37 39-42 46 47 49 50 52 59 61 63
65-68 70-74 76-84 86 87 89 91 92 94 96-98
4100-03 04 05 07 09-17 19 20 23-28 31-38 40 44
45 53 56 57 62 63 66-69 72 75 77 81 82 87 93
95 4200 03 04 09 11 14 16-18 20-22 24 25 27
28 30 33 34 37 38 40 45 47 48 51 52 54 55 58
60-63 65 67 68 70-74 77 79 83 85 88 89 92 94
97-4302 04-08 11-15 17-24 27-29 32-37 40-42
44 47 53-55 57 60 62 63 68 70 72 80 86 94-96
4401-05 07 09 10 13 14 16 17 20 24 30-34 37 39
40 41 45-49 53 54 56 58 60 61 64 65 68 69 72-75
77-79 84 86 88 90 93 96 99 4501-05 07 08 10 13
18 21 23-25 29 30 33 36-43 46 47 49 53-59 62-66
70-73 76 78-84 87-97 99 4603-07 09 10 12 16 17
23-25 27 30 31 38.

# திருப்புகழ்

## விட்டிடாக் கரம் தா

வீ. பகா. சொல்லழகன், மு. க.
பேராசான்: அரசரடி. இறையியல் கல்லூரி.

திருப்புகழையும் தனித்தமிழில் பாடலாம்; மேலும் அனைத்துச் சமயத்தினர்க்கும் உரிய திருப்புகழ்ப் பாடல்கள் சிலவேனும் மலர்தல் பயனும் பண்புமாகும். இது-அனைத்துச் சமயத்தினர்க்குமுரிய-தனித் தமிழ்த்திருப்புகழ்; இதிலுள்ள 'கரம்'-எனும் சொல் தமிழ்ச்சொல்லே கர் > கரு > கரம் > கருவு > கருத்து முதலிய சொல் ஆய்க.

(1)

சுற்றிலும் பகைவினை முற்றுகை இடுகையில்
முற்றிலும் உதவிடும்-முழுமூலா
நற்றிரு மலரடி பற்றிடும் உறுதியைப்
பெற்றிட நினதருள்—பொழிசிலா

(2)

பெற்றவர் தமதரும் சிற்றறி வுடைமகன்
சுற்றியும் அழிந்திட - விடுவாரோ?
உற்றவர் உனையலால் மற்றவர் எவருளர்?
சற்றருள் புரிந்தெனைக் - கடைத்தேற்றாய்.

(3)

வற்றிரை நடுவினில் சிக்கிய படகெனக்
கெட்டிடும் அடியவன் - கரையேற,
நற்றுணை எனவரும் சொற்றுணை அருளியே
விட்டிடாக் கரந்தரத்-தொழுதேனே.

(4)

சுட்டிடும் சுடரினைச் சுற்றியே அழிவுறும்
மட்டியாம் சிறுபுழு-எனவே நான,
அற்பமாம் சிறுவழிப் புற்றினில் திரிதரும்
புத்தியில் சிறியனைத்-தடுத்தாள்வாய்

# கண்மணி தேவர்

அருட்கவி கு. செ. இராமசாமி, எம்.,ஏ,
சிவகங்கை

எடுப்பு

பாண்டித் துரைத்தேவர்—எங்கள்
பாண்டித் துரைத்தேவர்! (பாண்டி)

உடனெடுப்பு

வேண்டிப் பணிசெய்யும்
வேகம் வளர்த்தவர்
வெள்ளியும் தங்கமும்
அள்ளிக் கொடுத்தவர் (பாண்டி)

முடிப்பு

துஞ்சிமண் மீது கிடந்த தமிழனைத்
தூக்கி நிறுத்திய தேவர்—மனச்
சோர்வை அகற்றிய தேவர்—அவன்
நெஞ்சினில் அன்னை நிலத்தை மதிக்கின்ற
நேர்மை பிறப்பித்த தேவர்—தமிழ்
நேயம் விளைவித்த தேவர்-அவர் (பாண்டி)

தஞ்சம்என் றேதன்னை நச்சிய யாரையும்
தாங்கிச் சிறப்பித்த தேவர்—பொருள்
தந்து களிப்பித்த தேவர்—எந்தப்
பஞ்சம்வந்தாலும் தமிழ்ப்புலவோர்க்கொரு
பாரி எனநின்ற தேவர்—தமிழ்ப்
பாடல் பலகொண்டதேவர்-அவர் (பாண்டி)

செல்வத் தமிழுக்குச் செந்தமிழ் என்னும்ஓர்
திங்கள் இதழ்கண்ட தேவர்—தம்
சேமிப்பும் நல்கிய தேவர்—தமிழ்க்
கல்வி கலைஎனச் சொல்லும் அனைத்துக்கும்
காவல னாய்நின்ற தேவர்—எம்
கண்ணின் மணி அன்னதேவர்—அவர்
பாண்டித்துரைத் தேவர்—எங்கள்
பாண்டித்துரைத் தேவர்!

# காலமும் - கோலமும்

தொடர்கதை

கவியோகி
சுத்தானந்த பாரதியார்

(தொகுதி-70 பகுதி2-ன் தொடர்ச்சி)

## 5. அன்புரையும் அமுதப்பாட்டும்

ரௌடி ராமன் என்ருல் புரட்சிமாணவருக்குக் கொண்டாட்டம் ரௌடி என்ருல் "ரெடி" என் றுவிசில் அடிப்பான் அவன் எழுந்தால் ஆயிரம் புரட்சி மாணவர் எழுவர் மூன் செல் என்ருல் செல்வர், நில் என்ருல் நிற்பர் இடி என்ருல் இடிப்பர். உடை என்ருல் உடைப்பர் ஏறிக்குதி என்ருல் குதிப்பர்! தாண்டு என்ருல் தாண்டுவர் தீட்டு என்ருல் மூங்கில் தடி முறியுமட்டும் தீட்டுவர். எறி என்ருல் கல் எறிவர் எரி என்ருல் தீ வைத்து எரிப்பர் சுடு என்ருல் சுடுவர் விடு என்ருல் வீடுவர். அத்தனை பேருக்கும் சாப்பாடு இட்லி பலகாரம் நிரம்பக் கிடைக்கும் எங்கே ரௌடி ராமனுக்கு பத்து ஓட்டல்கள் தொண்டு செய்தன அவற்றிற்கு அவனுல் நல்ல ஊதியம் கிடைத்தது அவன் படைகளுக்கு மட்டும் அடக்க விலைச்சாப்பாடு நடக்கும் தேர்விலே குழிபறித்தவர் படித்து வேலையில்லாதவர் தீவிரபுரட்சிக்காரர் இவர்களுக்கு புகலிடம் ரௌடிப் பட்டனாமே ரௌடிக்கு அரசியல் தலைவர் சட்டசபையின் மந்திரிகள்,பெரிய அலுவலர்முதல்,நாட்டு பெருந்தலைவர் முதலமைச்சர்வரை அனைவரையும் தெரியும் தேர்தல் சூதாட்டத்தில் அவன் பக்கபலத்துடன் பகடை உருட்டினுல் வெற்றி உறுதியாகும்.

ரௌடி ராமன் சில ஆண்டுகளாகக் கல்வித்துறையில் புரட்சி செய்கிருன் அவன் மதுரைக் கல்லூரியில் பயின்றவன் எப்படியோ கேள்விகளை அறிந்து, விடையும் தெரிந்து தன் பக்கமாணவருக்கெல்லாம் உதவுவோன் பி. ஏ. கணக்கு கேள்விகளைக் கல்லூரித்தலைவர் பெட்டகத்திலிருந்து கள்ளச் சாவி போட்டு எடுக்கும் போது அவனை வஸ்தாது வரதராஜன் கண்டுபிடித்துக் கட்டிப்பிடித்துத் தலைவரிடம் சேர்ந்தான் "டே நீ சிறை செல்கிருயா? அல்லது வெளியே செல்கிருயா? உன்னை விலக்கிஞேம். இனி உள்ளே வராதே...

வந்தால் சிறை காப்பாய்'' என்று தலைவர் தண்டபாணி சொல்லவே ரௌடிராமன் ''ஐயா நான் சிறைக்கும் அஞ்சேன்: உம் அடக்கு முறைக்கும் அஞ்சேன். இந்தக்கல்லூரிகளை இடித்துத் தகர்த்து, வாழ்விற்கு உதவாத இந்த அவலக்கல்வியை ஒழிப்பதே என் உள்ளம் நான் செல்வேன் மீண்டும் வருவேன் என்று ஒரே ஓட்டமாகத் தாவிச் சென்று மாணவர் கூட்டம் கூட்டினன்.

புரட்சி செய்வோம் புறப்படுங்கள்
புதுயுக வீரத் தோழர்களே
வரட்சியான பரீட்சைப் படிப்பை
மறுத்து நாம் புறுமலர்ச்சியடைய

இந்த மாதிரி இருநூறு குரல்கள் கூக்குரலிட்டுக் குதித்தன. சத்தம் வலுத்தும் கூட்டம் பெருத்தது. ரௌடி பேய்க்குரல் எடுத்தான். காலவேகம் கருத்துடன் கேட்டது.

நண்பர்களே! நாம் மறுமலர்ச்சி வீரர் அனைத்திலும் புதுமை வேண்டுகிறோம். கல்விதான் ஒரு நாட்டிற்குக் கண் போலும். இந்தக் காலக்கஞ்சிக் கல்வி கண்ணீர்க் கல்வியானது. வருந்திப் படித்தும் வேலைவாய்ப்பில்லை வாழ வழியில்லை.. என்னைச் சுற்றி எத்தனைக் கலைஞர் படித்துப் பசியால் பரிதவிக்கின்றனர. குடும்பம்குடும்பமாகப் பசியும் பட்டினியும் கடனும் கவலையுமாகத் தவிக்கின்றன இந்தக் கல்வி அடியோடு மாறவேண்டும் இந்த அவலக்கல்வி கற்பதைவிட பள்ளிக் கூடங்களை மூடித்தொலைப்பது நல்லது.

புரட்சிமாணவர்: பள்ளிக்கூடம் ஒழிக !

ரௌடி: பள்ளிதிறந்தால் படார் கல் வீச்சு–நூல்களுக்கு பதில் கற்களைச் சேருங்கள் படார்!

புரட்சி மாணவர்: படார் படார் படார் (கதவு ஜன்னல்களில் கல் வீச்சு)

ரௌடி: பாடல் நூல்கள் பாடாவதி!

புரட்சி: பாடநூல்கள் ஒழிக!

ரௌடி: படித்தும் பரீட்சை எமன் மிரட்டுகிறது. நீலப் பென்சில் மாணவர் விதியைத் தீர்மானிப்பதா? அப்படிப்

படித்து எழுதித் தேர்வு பெற்றும வேலையில்லாத் திண்டாட்டம் சுற்றிப் பாருங்கள் எத்தனை பி ஏ. எத்தனை எம். ஏக்கள் எத்தனை வக்கீல்கள், எத்தனை எஞ்சினியர்கள் ஆசிரியர்கள், பிழைப்பின்றி அலைகின்றனர், மலைகின்றனர், மணம் குலைகின்றனர்!

**எல்லாரும்:** ஒழிக பரீட்சை—ஒழிக உதவாக்கல்வி!

இதற்குள் கல்லூரிப்புலவர்கள் அஞ்சி நடுங்கிப் பதுங்கி சந்துபொந்துகளில் புகுந்து அவரவர் வீடு போய்ச் சேர்ந்தனர்...கல்லூரித் தலைவர்கள் போலிசுக்குப் பேசினர் போலிசு அன்று ஒரு வேலை நிறுத்தக் கலவரத்தைஅடக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது இராணுவத்திற்கு அறிவித்தினர் ஒரு பெரிய லாரியில் இராணுவ வீரர் இருபதுபேர் துப்பாக்கியும், கண்ணீர்புகைக் குண்டும் கொண்டு வந்தனர்.எக்காளம் பூம் பூம் பூம் என்று முழங்கி, துப்பாக்கி விண்ணோக்கி வெடித்தது கண்ணீர்க்குண்டு வெடித்துப் புகை சுற்றும் பரவி மூச்சடைத்தது ரௌடி எங்கே! அவன் குரல் எங்கே எங்கோ ஒளிந்தான் புரட்சித்தொண்டர் தொண்டை அடங்கிவிட்டது நிலைமை கடுமையாகும் நேரத்தில் மாடியிலிருந்து தொலைநோக்கியால் எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நான்கு அறிஞர் முன்வந்தனர். அவருள் முதன்மையானவரே அன்புமணி

அன்பு மணி நிரம்பப் படித்த விஞ்ஞானி பௌதிக ரசாயனப்புலவர் புதுமை கண்டவர் அணுவிஞ்ஞானத்தில் திராம்பே பாபாவுடன் பாடுபட்டு புளூடோனியம் கண்டவர் அவர் குரலுக்குக் கவர்ச்சியுண்டு, மதிப்புண்டு, ஏனெனில் அவர் உரை உள்ளத்தைத் தொடுவது. அவர் இப்போது கல்லூரிக் கல்விக்குத் தலைவராகி மாணவருக்கு அறிவும். ஆற்றலும் ஒழுக்கமும் ஒப்புரவும் வளரும் பணியில் ஈடுபட்டுள்ளார். அன்புமணி ஒரு மணி அடித்து சங்குமுழக்கி மாணவரைக்கூட்டி இன்னுரை இயம்பினர். ஒலிபெருக்கி முன் அமர்ந்து அவர் அன்று பேசிய பேச்சு என்றும் மாணவருக்கு வழி காட்டவல்லது .. கேளுங்கள்...

— தொடரும்

# பாவேந்தர் கவித்திறன்

திருமிகு. பேராசிரியர். வ. பெருமாள்
கோலார் தங்கவயல், மைசூர்.

(தொகுதி-69 பகுதி-1ன் தொடர்ச்சி)

**இலக்கியச் சுவை**

கிளையினிற் பாம்பு தொங்க
  விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
  வெடுக்கென்ன குதித்ததைப் போல்
கிளைதோறும் குதித்துத் தாவிக்
  கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
  உச்சிப்போய் தன்வால் பார்க்கும்.

பாரதிதாசன் சொல்லோவியங்களில் இதுவும் ஒன்று. ஆலமரக்கிளையில் தொங்கிய பாம்பை விழுதென்று தவறாக நினைத்துக் கொண்டு தொட்டுவிட்டு மருண்ட குரங்கை விளக்கிக் காட்டுகிறார் கவிஞர் ஆலமரத்தில்பல விழுதுகள் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அவற்றுடன் ஒரு பாம்பும் தொங்கிக்கொண்டிருக்கிறது. விழுதைப்பிடிப்பதற்கு மாறாக விழுதுபோல் காட்சியளிக்கும் பாம்பைத் தொடுகின்றது. குரங்கு தொட்டவுடன் சுடர்விட்டு எரியும் விளக்கைத் தொட்ட குழந்தையைப்போல் வெடுக்கென்று குதிக்கின்றது கீழேயுள்ள விழுதுகள் எல்லாவற்றையும் பார்க்கிறது. குரங்குக்கு விழுதுகளெல்லாம் பாம்புகளாகத் தோன்றுகின்றன. இறுதியாகத் தன் வாலைப் பார்க்கிறது. அக்குரங்குக்கு தன் வால் கூடப் பாம்புபோல் காட்சியளிக்கிறது. கவிதையின் திரண்ட கருத்து இவ்வளவுதான். ஆனால்இதன் உட்பொருளை ஆழமாக ஆராய்ந்தால்தான் இதன் நயமும் சுவையும் தென்படும். குரங்கு தன் அறியாமையின் காரணமாகவும் அவசரத்தினாலும் விழுதைப் பிடிப்பதற்கு மாறாகப் பாம்பைப் பிடித்து விட்டது அதைப்போலவே உலகத்திலுள்ள மக்கள் தம் அறியாமை, அவசரத்துடிப்பு ஆகியவற்றால் உண்மை

யைப் பின்பற்றுவதற்கு மாறுகப் பொய்யைப் பிடித்து விடுகின்றனர் வெளித்தோற்றத்திற்குப் பொய் உண்மை போல் காட்சியளிக்கின்றது. பாம்பு விழுதைப் போல் காட்சியளிப்பதைப் போல ''மின்னுவதெல்லாம் பொன் னல்ல'' என்னும் பழமொழி இங்கு நோக்கத்தக்கது மக்க ளின் மிகுந்த விரைவை ''உடுக்கை இழந்தவன் கைபோல் என்று திருவள்ளுவர் குறிப்பிடுகிறுர். அத்தகைய விரைவை உணர்த்த ''விளக்கினைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக் குதித்ததைப் போல'' என்று பாவேந்தர் உவமை நயம் தோன்றப் பாடுகிறுர் ''காமாலைக் கண்ணுக்கு கண்டதெல் லாம் மஞ்சள்'' ''மருண்ட கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'' முதலிய பழமொழிக் கேற்பக் குரங்கிற்கு விழுது எல் லாம் பாம்பாய் தெரிகிறது. தன் வாலைப் பார்த்து இதுவும் பாம்போ என்று நினைக்கின்றது. ''சூடுகண்ட பூனை அடுப் பங்கரைக்கு வராது என்பது பழமொழி. அது போல் ஒரு முறை அச்சத்துக்கு ஆட்பட்ட குரங்கு விழுதைக்காணும் போதெல்லாம் அஞ்சுகிறது. விழுது தொங்குவதைப்போல் பாம்பு தொங்குகிறது. குரங்கு பாம்பைத் தொட்டவுடன் விளக்கைத் தொட்ட பிள்ளை வெடுக்கெனக்குதித்தது போல் குதிக்கின்றது. இவ்விரண்டிலும் உவமைச்சுவை நயம்பட அமைந்திருக்கின்றது. கிளைதோறும் குதித்துத் தாவி வேக மாகச் செல்வது விரைவுச்சுவையை ஊட்டுகின்றது, விழு தையும் தன்வாலையும் பாம்பு என்று நினைக்கும்போது ஐயச் சுவையும் அச்சச்சுவையும் தோன்றுகின்றன, ஐயோ பாவம் என்று குரங்குக்கு இரங்குங்கால் இரக்கச்சுவையும் அவலச் சுவையும் தோன்றுகின்றன. இப்படியும் ஒருகுரங்கு உலகத் தில் இருக்கின்றதே என்று எண்ணும்போது வியப்புச்சுவை ஏற்படுகின்றது. குரங்கின் செய்கை நமக்குச் சிரிப்பு உண் டாக்கி நகைச்சுவை அளிக்கின்றது. இக்காட்சியை மனக் கண்ணுல் பார்க்கும்போது அறிவுள்ள அழகுச்சுவை தென் படுகிறது. இவையெல்லாம் சேர்ந்து பாவேந்தர் கவிதைக்கு இலக்கியச்சுவையை உண்டாக்குகின்றன.

## உலகம்

தமிழ், தமிழ் மக்கள். தமிழகம் ஆகியவற்றை பாவேந் தர் சிறப்பித்துப் பாடினுலும் அவற்றுடன் அவர் நின்றுவிட வில்லை. அவருடைய கவிதை உள்ளமும், உணர்வும் இவ் எல்லையைக்கடந்து உலகம்முழுவதும்பரவியிருந்தது. 'நான்' உணர்வு நாம் உணர்வாக மலரக், குறுகிய நோக்கம் பரந்த

நோக்கமாக விரிய. தன்னலப் பொது நலமாக மாற. வேற்று மை நீங்கி ஒற்றுமை ஓங்க, பகைமை ஒழிந்து அருள் சுரக்க பாவேந்தர் தம் கவிதை வாயிலாக வழி வகுக்கின்றார்.

'தண்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு
சம்பாத்யம் இவையுண்டு தானுண்டென்போன்
சின்னதொரு கடுகு போல் உள்ளங்கொண்டோன்
தெருவார்க்கும் பயனற்ற சிறியவீணன்.
கன்னலடா என் சிற்றூர் என்போனுள்ளம்
கடுகுக்கு நேர்மூத்த துவரையுள்ளம்
தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனதுநாட்டுச்
சுதந்தரத்தால் பிறநாட்டைடத் துன்புறுத்தல்'

'ஆயுதங்கள் பரிகரிப்பார் அமைதி காப்பார்
அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க
வாயடியும் கையடியும் வளரச்செய்வார்
மாம்பிஞ்சு யுள்ளத்தின் பயனும் கண்டோம்
தூயஉள்ளம் அன்புள்ளப் பெரியஉள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் 'ஒன்றே' என்னும்
தாயுள்ளம் தனிலன்றோ இன்பம்! ஆங்கே
சண்டையில்லை தன்னலந்தான் தீர்ந்ததாலே'

பாவேந்தர் பாடிய இக்கவிதை தமிழனுக்காக மட்டும் பாடப்பட்டதன்று மக்கள் எல்லோருக்கும் பாடிய பொதுக் கவிதையாம். 'யாதும்ஊரேயாவரும்கேளிர்' என்று சங்கபுல வர்கணியன் பூங்குன்றனார் பாடினார் "ஒன்றே குலனும் ஒரு வனே தேவனும்" என்று திருமூலர் முழங்கினார். இவ்விரு வர் கருத்துக்களையும் உள்ளடக்கி, விளக்கி, எளிமையாக்கி உவமை நயம்தோன்ற இனிதுபாடினார் பாவேந்தர். மனிதன் தன் அறிவாற்றலால் உலகத்தையே வென்றுவிட்டான், ஆனால் தன் மனத்தை வெல்ல முடியவில்லை. சாதிவெறி. இனவெறி, நிறவெறி, மொழிவெறி, கட்சிவெறி, சமயவெறி முதலிய குறுகிய எல்லைக்குள் மனிதன் சிக்கிக் கொண்டு தவிக்கின்றான். வெறி மிகுதியாக மிகுதியாக உள்ளம் சிறுத் துக் கொண்டே வருகின்றது. இன்றைய மனிதன் தலைக் கொழுத்து நெஞ்சு சிறுத்திருக்கின்றான். நாகரீகம் மேலோ ங்கி நிற்கின்றது. பண்பாடு ஆட்டம் கண்டு விட்டது. சுருங்கக் கூறுமிடத்து மனிதன் எல்லாவற்றையும் அறிந்தி ருக்கிறான். ஆனால் அமைதியுடன் வாழும் நல்வழியை மட்டும் அறியவில்லை அறிவைக் கூர்மையாக்கி விட்டான். ஆனால்

உள்ளத்தைப் பண்படுத்தவில்லை. தான் மட்டும் வாழ வேண்டும் என்பதை அறிந்துகொண்டான்.

ஆனால் எல்லோரும் வாழவேண்டும் என்பதை அறிய வில்லை. இக்குறையைப்போக்கி உலகஅமைதியை உண்டாக்கப் பாவேந்தர் பாடிய கவிதை தமிழ்க் கவிதையாக மட்டும் காட்சியளிக்காமல் உலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் உலகக் கவிதையாக விளங்குகின்றது.

கவிதைப் பண்பு:

தமிழ் இலக்கிய வரலாற்றில் புரட்சிக் கவிஞர் என்னும் சிறப்புப் பட்டத்தைப் பெற்றவர் பாரதிதாசன். அவர் இலக்கியத்தில் பல்வேறு புதுமைகளைக் காணலாம். பாமர மக்களுக்கும் நன்கு விளங்கும் எளிய நடையில் அவர் கவிதைகள் அமைந்திருக்கின்றன. அவர் இலக்கியத்தை புரிந்துகொள்ள உரையோ அகராதியோ தேவையில்லை பாவேந்தர் இலக்கியம், புலவர் இலக்கியம் அன்று பொதுமக்கள் இலக்கியம் பாரதிதாசன் கவிதைகள் [3 பகுதி] சேரதாண்டவம், பாண்டியன்பரிசு, இருண்ட வீடு எதிர்பாராதமுத்தம், குறிஞ்சித்திட்டு, பாரதிதாசன் நாடகங்கள், இளைஞர் இலக்கியம், அழகின் சிரிப்பு, தமிழ்இயக்கம் காதல் நினைவுகள் நல்லதீர்ப்பு, அமைதி, இசையமுது (2 பகுதி) குடும்பவிளக்கு, சௌமியன், கழைக்கூத்தியின் காதல், கண்ணகி புரட்சிக் காவியம், மணிமேகலை வெண்பா முதலிய இலக்கியங்களைப் படைத்த தனிப்பெருமை பாரதிதாசனுக்கு உண்டு அவர் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் உயர்ந்தகவிதைப் பண்பை காணலாம். எளிமை, புதுமை, பொறுமை, இனிமை, வலிமை, ஆகிய பண்புகளைப் பாவேந்தர் இலக்கியத்தில் காணலாம். அவர் கவிதையில் வீரம் உண்டு. அவர் கவிதை கிழவனையும் இளைஞனாக ஆக்கவல்லது. கோழையையும் வீரனாக மாற்ற வல்லது. குருட்டுக்கொள்கையினருக்கு கைவிளக்கு போன்று உதவவல்லது. சமத்துவத்தையும்ஒற்றுமையையும் ஏற்படுத்த வல்லது; இருபதாம் நூற்றூண்டு கவிஞர்களுக்கு சிறந்த வழிகாட்டியாக அமைந்து துணைபுரிவது; குருட்டுக் கற்பனையும் வறட்டுக் கற்பனையும் இல்லாமல் உண்மையை அடிப்படையாகக் கொண்டது. பாரதியாரைத் தம் ஆசிரியராக மதித்து வாழ்ந்த புரட்சிக் கவிஞர் தம் இயற்பெயராகிய சுப்புரத்தினத்தை பாரதிதாசன் என்றுமாற்றி அமைத்

தது அவர் தம் குருபக்திக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக அமைகின்றது. அவர் பாரதிக்குத்தாசன்; பாவுக்கு வேந்தர் புரட்சிக்குக் கவிஞர்; புதுமைக்குக் கவிஞர்; புதுவைக்கும் கவிஞர். அவர் கவிதைப் பண்பை,

அரசியலில் அவன் கொள்கை
தணையொப் பாத
அவர்களுமன் னேன்
கவிதை யின்பத்தாழ்ந்தார்
விரசுமெந்தக் கருத்தெனினும்
விளக்கெண்ணெய் போல்
மெதுவாக வழவழெனச்
சொல்ல மாட்டான்
உரை செய்யும் வேகத்தில்
பகைவர் நெஞ்சம்
உள்நடுங்கக் கவிச்
சவுக்கை வீசல் உண்டு
தரை செய்யும் வாழ்வினிலே
கவிகள் சில்லோர்
தரமிருப்பார்; அவருள்ளே
சிறந்தான் அம்மா

என்று கி. வா. சகந்நாதன் அவர்கள் பாடுகின்றார்.

இவ்வாறு பாவேந்தரின் கவிதைப் பண்பை உவந்து பாடிய கவிஞர்கள்மிகப்பலர். பாவேந்தரின் சீரிய கவிதைப் பண்பை எதிர்காலக் கவிஞர்களும் பின்பற்றிப் பயன் அடைவார் களாக.

வாழ்க பாவேந்தர் இலக்கியம்!

வாழ்க தமிழகம்!! வாழ்க வையகம்!!!

# தமிழில் நீதி நூல்கள்

R. பத்மநாபன் B. A., B. T.

தலைமையாசிரியர், வேலூர்.

(இலக்கியம் மக்கள் வாழ்க்கையோடு நெருங்கிய உறவு கொண்டு அதன் சாயலாகவே அமைவதாகும். அதனால் மக்கள் வாழ்க்கை மலரும்; கருத்தாழமும் உணர்ச்சி வெள்ளமும் கொண்ட வாழ்க்கையின் வடிவமைப்புதான் இலக்கியம்.)

இலக்கியத்தில் போர், இல்லறம், நீதி, ஆட்சி முதலிய பலப்பல துறைகளில் மக்கள்கொண்டிருந்த கோட்பாடுகளை தெற்றென அறியமுடிகிறது. அத்தகைய பண்பாடு மிகுந்த இலக்கிய பிரிவுகளில் ஒன்று நீதி நூல்களேயாகும். பொதுவாக பாரதநாடும் குறிப்பாகத் தமிழ்நாடும் சமய நிலையங்களைச் சிறந்த குறிக்கோளாகக் கொண்டு விளங்கியதைப் போலவே சங்க காலம் தொட்டு வரகவி பாரதியார் காலம் வரை தமிழ்நாடு நீதிநூல்களைப் போற்றி வந்திருக்கிறது. [நீதிநூல்கள் ஆண்டுகள் பலவாக நுண்மாண்பும், என்றும் பலவாக மங்காத சிறப்பும் பெற்று வளர்ந்திருக்கின்றன என்று கூறலாம்.]

நீதி என்ற சொல்லுக்கு 'ஒழுக்க நெறி' என்று பொருள் எனவே நீதி நூல் என்றால் நல்லொழுக்கம் கற்பிக்கும் நூல்கள் என்று கூறலாம். மனித வாழ்க்கைக்கு அடிப்படையானது நீதி அல்லது நல்லொழுக்கம் [இதை எல்லா மதத்தாரும் ஏக மனதாக ஏற்றுக் கொள்கிறார்கள். மனித வாழ்க்கைக்கு நன்னடத்தையைக் கற்பிக்கும்] நீதிநூல்கள் இல்லாவிட்டால சமுதாயமே சீர்கெடும்; அப்படித்தான் ஒரு காலத்தில் பேராட்சி செய்த ரோமாபுரிப் பேரரசு சிதைந்து போயிற்று.

நீதி நூல்கள் தமிழ்நாட்டில் தோன்றாத இடைவெளிக் காலம் இருந்தது கிடையாது. ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஒவ்வொரு நீதி நூலும் தோன்றி, மக்களின் நல்லொழுக்கத்தை (Ethical conduct) கண்ணாடிபோல் காட்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் பழங்காலம் தொட்டு தோன்றிய நீதி நூல்களனைத்தையும் பற்றி இங்குக் கூறுவது மிகவும் விரியும். எனவே சில முக்கியமான நூல்களை மட்டும் சுட்டிக் காட்டவேண்டியிருக்கிறது.

ஔவையார் எழுதிய ஆத்திச்சூடி, கொன்றைவேந்தன் என்ற நூல்களை முதன்முதலில் கூறவேண்டியிருக்கிறது. வளரும் சிறுவர்களுக்கு இவை மிகவும் இன்றியமையாதவை. உலகநாதர் எழுதிய உலகநீதி, அதிவீரராமபாண்டியர் எழுதிய நறுந்தொகை, ஔவையார் தீட்டிய நல்வழியும் மிகவும் சிறந்த நீதி நூல்களாகும்.

சிவப்பிரகாச சுவாமிகள் எழுதிய நன்னெறியும் மற்றும் அறநெறிச் சாரமும் குறிப்பிடத்தக்க நீதி நூல்களாகும். [சமுதாயம் உயரவேண்டும். மேலும் உயரவேண்டும் என்ற உயர்நோக்கத்துடன் தான் இந்நூல்கள் எழுதப்பட்டன என்பது கண்கூடு.]

ஆசிரியர் யார் என்று இதுகாறும் தெரியாத ஓர் உயர் நீதி நூலும் உள்ளது. அதுதான் நீதிவெண்பா [நீதிக்காக உயிர்கொடுத்தவர்களின் பெயர்களைக்கூட நம்மால் தெரிந்து கொள்ளமுடியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்கது.] குமரகுருபரர் இயற்றிய நீதிநெறி விளக்கமும், சிவஞான சுவாமிகள் இயற்றிய சோமேசர் முதுமொழி வெண்பா என்ற நீதி நூலும் எக்காலத்திலும் எல்லா மக்களாலும் படித்து பயன் பெறத்தக்க நூல்களாகும்.

சாதாரணமாக மேலைநாடுகளில் பள்ளிகளில் நீதிபோதனைக்காக விவிலிய நூலையே பயன்படுத்துவதைக் காண்கிறோம். [ஆனால் உலக இயல்பு படைத்த அரசாங்கத்தை மேற்கொண்ட நமதுநாட்டுக்கு அம்முறை தேவையில்லை சமரச விதி நூல்களையே அடிப்படையாகக் கொண்டு நீதி போதனை வேண்டற்பாலது; தவிர்க்க முடியாதது.]

குருபாததாசர் இயற்றிய குமரேச சதகமும் நீதிகளையே விளக்குவன; அவற்றைப் பேணிக்கற்பது நலம்.

பிற்காலத்தில் நீதி நூல்கள்

"இனிது இனிது நீதி இனிது" என்பதையே குறிக்கோளாகக் கொண்டதுபோல், 19, 20-ஆம் நூற்றாண்டு

களில் நீதி நூல்கள் குவிந்திருப்பதைக் காண்கிறோம். இப் பகுதியில் மாயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்களும், திரு வாவடுதுறை ஆதீனத் தலைவர் அம்பலவாணதேசிகர் அவர் களும் இயற்றியுள்ள நூல்கள் குறிப்பிடத்தக்கவை; குறிப் பாக வேதநாயகம் பிள்ளையின் நீதிநூல், பெண்மதிமாலை, சமரச சன்மார்க்க கீர்த்தனைகள் எக்காலத்தும் மக்களுக்குப் பயன்படுபவை என்று பாராட்ட வேண்டியிருக்கிறது.

நீதி நூல்களைக் கூறும்பொழுது வடலூர் அருட்பிர காச வள்ளலார் இயற்றிய "மனுமுறைக் கண்டவாசகம்" நூலைக்கூறுமல் இருக்கமுடியாது. அஃது இலக்கிய நயமும் நீதிப்பண்பும் மிக்க ஒரு நல்ல நூலாகும்; சுவைமிக்கதாகும்.

பிற்காலத்து இலக்கியத்தைப் போல், பிற்காலத்து நீதி நூல்களிலும் அமரகவி பாரதியார் முதலிடம் பெற்று விளங்குகிறார். நாட்டுப்பற்றையூட்டிய பாரதியார் நீதியில் பற்றும் ஊட்ட விரும்புகிறார். அமரகவியின் புதிய ஆத்திச் சூடி, ஓடி விளையாடு பாப்பா, பாரதி அறுபத்தாறு முதலி யவை நீதியைக் கற்பிக்கும் ஒப்பற்ற இலக்கியங்களே

### நீதி நூல்களின் எதிர்காலம்.

எதிர்காலத்தில் சிறப்புடன் விளங்குவதற்குத் தமிழ்நீதி நூல்களுக்குத் தக்க வாய்ப்பு இருக்கிறது ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய ஐரோப்பிய மொழிகளைக்கற்ற நம் மக்களில் பலர் இத்துறையில் நல்ல தொண்டு செய்யலாம். ஏற்கனவே ராஜாஜி போன்றவர்கள் மார்கஸ் ஒளரிலியஸ் எழுதிய சிந்தனைகளைத் தமிழில் மொழிபெயர்த்திருப்பது தெரிந்ததே லியோ தால்ஸ்தாய், ஜான்பன்யன், மில்டன், தாமஸ்எலியட் போன்ற இலக்கிய மேதைகளின் நூல்களைத்தமிழில் மொழி பெயர்த்து உதவினால் தமிழ்வளம் பெறும்; தமிழர்களின் பண்பும் உயரும்.

[காலம், நாடு, சமுதாயம், நாகரிகம் முதலிய வரம்பு கடந்து பண்பட்ட வாழ்க்கையே இயல்பான பண்பாய் விளங்கும் நீதிநூல்களைத்தமிழில் இயற்ற, பல அறிஞர் முன் வரவேண்டும்.

அந்நாள் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.]

— * —

# " சிறுவெண் பல்லியார் "

புலவர் வை. தங்கமணி,
தமிழாசிரியர், பி. கே. என். உயர்பள்ளி,
திருமங்கலம்.

மனிதன் தன் மனத்தினுள் தோன்றும் எண்ணங்களை ஏனையோருக்குப் பகிர்ந்தளிக்க முற்பட்ட நாளில் இருந்து பெயர்களை இட்டும், சுட்டியும் கூறமுற்பட்டான்!

அவ்வகையில் பெயர்களை எவ்வெவ்வகையில் இடலாம் என்றாய்ந்து பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் ஆகியவைகளின் அடியாகவும், இடுகுறியாகவும் பெயரிட முற்பட்டான்.

காலங்கள் உருண்டு ஓடின. பெயர்கள் நீண்டும், தடித்தும். தேய்ந்தும், மாய்ந்தும் போகலாயிற்று. இவ்வகையில் சிலருடைய பெயரே என்னவென்று அறிய இயலாததாயின பின்வந்தபலர் ஏற்றவாறு பெயரிட்டு அழைக்க முற்பட்டனர். இஃது நடைமுறை.

தோன்றுவதற்கு அரியதான ஒன்றை தோற்றுவித்தாலும், தன்னைத்தானே சுட்டுதல்கூடாது என்ற எண்ணம் வேரூன்றி இருந்தமையால் சங்க காலப் புலவர் பலரின் பெயர்கள் என்னவென்றே அறிந்திட இயலாத நிலையில் உள்ளன. ஆனல் அவர்களுக்குப் பின்வந்த சான்றோர் பலர் அவர்கள் பாடியபாடலின் சிலதொடரின் நயத்தினை நினைந்து மகிழ்ந்து அத்தொடரையே அப்பாடலின் ஆசிரியர்க்குச் சூட்டி மகிழ்ந்துள்ளனர். அவைகளில் சில நோக்குவோம்.

" செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே"

குறுந்தொகை : 40

இப்பாடலில் 'செம்புலப் பெயல்நீர்' என்னும் இவ்வினிய தொடரை யாத்த அருமை பற்றி, இதனைப் பாடியநல்லிசைப்

புலவருக்குச் "செம்புலப் பெயல்னீரார்" என்று பெயர் சூட்டி மகிழ்ந்தனர்.

"அளிதோ தானே யாண்டுண்டு சொல்லோ
தொடித்தலை விழுத்தண் டூன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சில சொல்"
பெருமூதாளரே மாகிய மெமக்கே" புறம் 243.

என்ற பாடலில் 'தொடித்தலை விழுத்தண்டு' என்ற தொடரின் எழில்நயங்கண்ட சான்றோர்கள் அவரைத்'தொடித்தலை விழுத்தண்டினார்' என்றே அழைக்கலாயினர். என்றும்; அதன்பின் பெருவழக்காயிற்று என்றும் கூறுப.

"மக்கள் போகிய அணிலாடு முன்றிற்
புலம்பில் போலப் புல்லென்று
அலம்பென் தோழியவர் அகன்ற ஞான்றே."
குறுந்தொகை 41.

என்ற தூக்கில் "அணிலாடு முன்றில்" என்னும் தொடரே நின்று தலைவன் இருந்த காலை திருவிழா எடுக்கும். ஊர் போல இருந்தது; ஆனால் தலைவன்பிரிந்தகாலை குடிபெயர்ந்த இல்லம் அணில் விளையாடிக் கொண்டிருக்கிறது என்று அத் தொடரே விளக்கிக் காட்டும் நயம் பற்றி இப்பாடல்யாத்தத் தண்டமிழ்ப் புலவருக்கு "அணிலாடு முன்றிலார்" என்று பெயராயிற்று என்றும்,

... ....... ........கவணொலி வெரீஇக்
கானயானை கைவிடு பசுங்கழை
மீனெறி தூண்டிலி னிவக்கும்
கானக நாடனொ டாண்டொழிந் தன்றே"
குறுந்தொகை 54.

இதன்கண் கவணொலிகேட்டு யானைக்கை பற்றிய பசுங் கழையைக் கைவிட்டுச் சென்றதால், அதன் அழகெல்லாம் அழிந்தொழிந்தமையால், உடன் தானே தலைவன் வந்து அலருக் கஞ்சி, நாணிழந்த என்னை வரைந்து கொள்ள வேண்டும், என்று கூறி நிற்கும் உள்ளுறை நயம் பற்றி இதனை யாத்தப் புலவருக்கும் "மீனெறி தூண்டிலார்" என்றே பெயர் ஆயிற்று என்றும்.

"முதுமர பொந்திற் கதுமென வியம்பும்
கூகைக் கோழி யானுத்
தாழியப் பெருங்கா டெய்திய ஞான்றே"
புறம் : 364.

என்ற பாட்டில் "கூகைக் கோழி" என்ற தொடரை குறுந் தொகை 393 லும் ஆசிரியர்பரணரும் எடுத்தாண்டுசிறப்புச் செய்தார். ஆகையால் ஆன்றவிந்த சான்ருேரோடு இவருக் கிருந்தஅருமைபற்றி அவரது இயற்பெயர் மாய்ந்து "கூகைக் கோழியார்" என்றே அழைக்கலாயினர் என்றும்,

குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோர் இலையா முற்ற நோயே"
குறுந்தொகை : 305

என்ற பாட்டில் "குப்பைக் கோழிகள் போரிடுங்கால்" காண்போர் கூட்டமும், விலக்குவாரும் இல்லாத நிலைபற்றி, இதனைத் தலைவி மேலேற்றி கூறி இருக்கும் நயத்தால் இச் சான்ருேரின் இயற்பெயர் அழிந்து புனைப் பெயராகிய "குப்பைக் கோழியார்" என்றே வழங்கலாயிற்று;

இஃதேபோல் காக்கைப்பாடினியார், ஊன்பொதி பசுங் குடையார், கழைதின்யானையார், வெள்ளெருக்கிலையார் போன்ற நல்லிசைப் புலவர் பெருந்தகைகள் தாம் பாடிய பாடலில் வரும் தொடர்களைக் கொண்டே இயற்பெயர் மாய அத்தொடரே பெயரானது போல....

"கலஞ்செய் கோவே கலஞ்செய் கோவே
அச்சுடை சாகாட்டாரம் பொருந்திய
சிறுவெண்பல்லி போலத் தன்னொடு
சுரம்பல வந்த வெமக்கு மருளி
வியன்மலர் அகன் பொழில் ஈமத்தாழி
அகலி தாக வனைமோ
நனந்தலை மூதூர்க் கலஞ்செய் கோவே"
புறம் : 256.

இப்பாடலுக்குதன்மை பொருந்திய அகன்றபழையஊரிடை தாழிவனையும் வேட்கோவை கண்டாள்! அவன் வனைந்தவை வனைந்து கொண்டிருப்பவை யாவும் ஒருவரைக் கவிக்கும் தாழியே ஆகும். ஆதலால் "கலஞ்செய் கோவே! அருஞ்சமர் முருக்கி விழுப்புண்புகழ் நிறீஇ மாய்ந்தாரை ஈமத்தே தாழி கவித்து வைப்பது குறித்து வேண்டும் தாழியாகிய கலத் தைச் செய்பவரே! நும்பால் வேண்டுவதொன்றுண்டு! இப்

பொழுது என் காதலரைகவித்தற்குத் தாழி ஒன்று வேண்டியுள்ளது; நின்பால் இருப்பதோ ஒருவரைக் கவித்தற்குரிய அகலமுடையதே! சகடத்தைக் கொண்டு செல்லும் உருளை (சக்கரம்)யில் உள்ள ஆர்க்காலைப் பற்றி இருக்கும்'' சிறுவெண்பல்லி யொன்று யாங்கு சொல்லினும் அவ்வார்க்காலை நீங்காது பற்றிக் கொண்டுவருவது போல யானும்காதலரை விடாது அவர் வழியே புனிதமான வழி என்று அவரைப் பின் தொடர்ந்து வந்துள்ளேன். சாவுஎங்கள் உடலைப் பிரித்திடா வண்ணமும் என்னையும் சேர்த்து ஒருங்கே கவித்தற்குரிய அகலமுடையதாக என்பால் அருள் கூர்ந்து செய்வீராக!'' என்று வேண்டும் போது இரும்பான் இயைந்த நெஞ்சம் கூட இளகும் பெற்றியதாய் சொல்லழகும், பொருள் நயமும் பொதுளப் பாடிய பாடலை மீண்டும் படித்துப் பாருங்கள்!

இப்பாட்டைப் பாடிய ஆசிரியர் பெயரும், பாட்டுடைத் தலைவிப் பெயரும் தெரிவதற்கு இடமில்லை ஆதலால் இப்பாடலில் அமைந்த துறை நோக்கி இப்பாடலுக்குத் ''தனிமகள் புலம்பிய முதுபாலை'' எனப் பெயரிடப்பட்டுள்ளது. இப்பாடலைச் சிறிது சிந்தித்துப் பார்க்குமிடத்து இப்பாடல் யாத்த நல்லாருக்கும்''சிறுவெண்பல்லியார்'' என்ற பெயரும் ஏற்புடைத்தாக இருக்கும்.

இப்பாடலில் தலைவி புலம்பியபுலம்பலில் முக்கிய இடம் பெறுவது ''சிறுவெண்பல்லி போலத் தன்னொடு சுரம்பல வந்த எமக்கும்'' என்னும் தொடராகும்.

பற்றி இருக்கின்ற இடத்தைவிடாது உறுதியாகப்பற்றி கொள்ளும் 'பல்லியினை' எடுத்தாண்டார்.

அப்பல்லி மாசற்றது என்பதனை விளக்கிட 'வெண்பல்லி' என்றும், கணவனுக்குப் பணிதலே பெண்களுக்கு உரிய இலக்கணம். அதனை விளக்கவே ''சிறுவெண்பல்லி' என்றும் கூறி, கணவர் இறந்து விட்டார் அதனோடு 'எனக்கும்' என்றால் எங்கு பிரிவு சொல்லினும் வந்துவிடக் கூடாதே என்று காட்டிட 'எமக்கும்' என்றும், கணவன் இருப்பிடமே பெண்களின் வாழ்விடம் என்பதை உணர்த்த 'சுரம்பல' என்றும் கூறும் நயத்தினைக் கொண்டு இப்பாடலை யாத்த நல்லிசைப் புலவருக்கும் ''சிறுவெண்பல்லியார்'' என்று கூறல் பொருந்தும் என் எண்ணுகிறேன். ஆன்றவிந்த சான்றோர் சிந்திப்பார்களாக.

— ✻ —

# தனிமொழி—குடிலன்

திரு. பூ. சொல்விளங்கும்பெருமாள் அவர்கள்
அண்ணாநகர் மதுரை–18.

1.0: தனிமொழி என்றால் என்ன? உரக்கச் சிந்தித்தல் என்று கூறுகிறார்கள் மேனாட்டறிஞர்;எண்ண ஓட்டத்திற்கு பேச்சு வடிவம் கொடுப்பதே தனிமொழி. நாடகமேடையில் பாத்திரங்கள் பேசும் பேச்சினை நான்கு வகையாகப் பிரிக்கலாம் 1. உரையாடல் 2. மனத்தனிமொழி 3. பேச்சுத்தனிமொழி 4. சொற்பெருக்கு [dialogue mental soliloguy, verbal soliloguy, direct address] நாடகத்திற்கு இந்த நால்வகை அரங்கப் பேச்சும் மிக முக்கியமானவை. வேறு எந்த சூழ்நிலை அமைப்பாலும், பின்னணி அமைப்பாலும், உரையாடலாலும் சில முக்கிய உணர்வுகளையும் உள்ள போராட்டங்களையும் பார்வையாளர்களுக்குக் காட்ட முடியாதபோது துணைகொடுத்து உதவுவது தனிமொழியாகும்.

1.1: தனிமொழி தேவையா? நாடகத்திற்குத் தனிமொழி ஏன் என்று ஒரு சாரார் கேட்கின்றனர், ஓடிக்கொண்டிருக்கும் ஒரு உந்து வண்டிக்குத் தனியாக ஒரு மாற்று டயர் [Stepenv] தேவையா என்று யாரும் கேட்பதில்லை. உந்து வண்டியின் ஒரு சக்கரம் வெடித்து ஓடாது நின்ற பின்னரே மாற்றுச் சக்கரத்தின் பயன் உணரப்படும். அது போல் நாடகம் இயங்க முடியாது சுவைகுன்றித் திணறும் வேளைகளில் தனிமொழி ஊன்றுகோல் போல் உதவுகிறது. வீட்டிற்குச் சாளரம்போலத் தனிமொழி அமையவேண்டும். வீட்டிற்குச் சன்னல்கள் அளவோடு இருந்ததென்றால் பார்க்க அழகாக இருக்கும்; அன்றேல் வீடே சன்னலாகி விடும். நாடகத்தில் தனிமொழியைத் தேவையான இடங்களில் கூடாமலும் குறையாமலும் உப்புப்போன்று பயன் படுத்தவேண்டும்.

1.2: பங்கு: நாடகத்தில் தனிமொழியின் பங்கு என்ன? அதுதேவைப்படும் இடங்கள் என்னென்ன?என்று சிந்திக்க வேண்டும் நாடகத்தின் உயிர் நாடி. உரையாடல், அதன் உணர்ச்சியைத் தூண்டி விறுவிறுப்பை ஏற்படுத்துவது

தனிமொழி எனலாம். அழிம்பன், கதைத் தலைவனுடன் பேசிக் கொண்டிருக்கிறான். மேற்போக்கான உரையாடலைக் கேட்கும் போது அழிம்பனது அழிக்கும் திட்டங்களைப் பற்றிய குறிப்பைக் காணமுடியாது. அவன் தனிமையில் உரக்க சிந்திக்கும் போது நாம் அவனது மன ஓட்டத்தை; அதன் அடித்தளத்தைப் புரிந்து கொள்கிறோம். இம்மாதிரி யான இக்கட்டான இடங்களில் தனி மொழி கைகொடுக்க வில்லையானால் கதைப் போக்கும் புரியாது; விறுவிறுப்பும் ஏற்படாது; ஆங்கிலம் தெரியாதவன் ஆங்கிலப் படத்தைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது ஏன் இவர்கள் அடித்து கொள்கிறார்கள் - இப்பொழுதுதானே தோள்மேல் கை போட்டுச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். எனக் கேட்பது போலாகிவிடும்.

1.3: அவல நாடகங்களில் அவலச்சுவையை மிகுதிப் படுத்தவும். இன்பநாடகங்களில் அச்சுவையை மிகைப்படுத் தவும் தனிமொழி உதவுகிறது. ஹாம்லட், ஒத்தெல்லோ போன்ற நாடகங்களில் தனிமொழிகள் வந்து நாடகத்தின் உயர்வை மேலும் தூக்கி நிறுத்தியிருப்பதை அறிகிறோம். ஒரு மனிதன் முழுக்க முழுக்க நல்லவனாகவோ கெட்டவனாக வோ இருக்க முடியாது. பொதுவாக நல்லவனாக மதிக்கப் படும் கதைத் தலைவனின் மன அரங்கில் புதை பட்டிருக்கும் குணக்கேடுகளும், அழிம்பனது மன ஆழத்தில் இருக்கும் மின்னல் போல் தோன்றி மறையும் நல்லியல்பும் பொது வான உரையாடல்களில் காணமுடியாது; தனிமொழி ஒன்றாலேயே அறியலாகும்.

2 0; **நாடகம்-கதை**: நாடக ஆசிரியனுக்கும், நாவ லாசிரியனுக்கும் கதைச் சூழ்நிலையைக் காட்டும் போக்கிலும் இடம், பொழுது, சுற்றுபுறத்தைக் குறிப்பிடும்முறையிலும் பாத்திரத்தின் உள்ளக்கிடக்கையை வெளியிடும் வகையிலும் வேற்றுமைபல உண்டு கதையாசிரியன் வெயிலின் வெம்மை யையும் தலைவன் வியர்த்து வடியும் காட்சியையும் பல பக் கங்களில் படம் பிடித்துக்காட்டலாம்; அவனைச் சுற்றியிருக் கும் நிழல் தராபரங்களையும் நீர் வற்றிய குளங்களையும் வறண்டு வாடிவிழும் பறவைகளையும் பலபட விவரிக்கலாம்; அவன், சென்ற நாட்களில் எவ்வாறு செல்வ வாழ்க்கை வாழ்ந்தான் என்றும் இன்று வறுமை வந்ததால் அவன் மனதில் தோன்றிய எண்ண ஓட்டங்கள் என்ன என்றும் ஆசிரியர் ஏழு எட்டுப் பக்கங்களில் பாதை அமைத்துக்

கொடுக்கலாம். ஆனல் நாடக ஆசிரியரின் கைகள் கட்டப் பட்டிருக்கின்றன. எதைக் கூறவேண்டுமாயினும், உரை யாடலில்தான் கூறமுடியும். அவ்வாறு உரையாடலில் கூற முடியாததை ஆசிரியன் விளக்குவதற்குக் கைகொடுப்பது தனிமொழி.

2 . 1; செயற்கையா?: தனியாக ஒரு பாத்திரம் பேசிக் கொண்டிருப்பது செயற்கையல்லவா? அத்தகு செயற்கைப் பேச்சை நாடகத்தில் புகுத்துவது முறையா? என்றும் கேள்வியெழும். மனக்குழப்பத்திலுள்ளவரும், மிக்க மன மகிழ்ச்சியில் இருப்போரும், அளவற்ற அவலம் ஆட்கொண் டோரும் தனியாகப் பேசுவது இயற்கைதான். மனப்பலம் குறைந்தோரும் கோழைகளும் வழிநடந்து செல்லும்போ தோ தனியிடத்தமர்ந்த வேளையிலோ தனியாகப் பேசுவதை காண்கிறோம் வயது முதிர்ந்தோரும் குழந்தைகளும் தனி யிடத் தமர்ந்து பேசுவதை அறிவோம் குழந்தை தன் முன் னல் இருக்கும் பொருள்களிடம் பேசும்; முதியோர் தன் மனதில் மண்டி நிற்கும் மக்கள் பலரையும் நினைவுத்திரையில் முன்நிறுத்தி நனவு எனக்கருதிப் பேசுவர்; ஆகவே இளங் குழந்தையும் பழங்கிழவரும் தனித்துப் பேசுவதைத் தனி மொழியின்பால் சேர்க்க இயலாதென்பர். எப்படியும் ஒருவர் தனித்துப் பேசுவது உண்டு என்பதும்; அது செயற்கை யாகாது என்பதும் மனநூல் ஒப்பிய அவ்வுண்மையை நாமும் ஏற்கலாம் என்பதும் தெளியலாம்.

2 . 2; திறமையின்மையா?: மற்ருெரு சாரார், தனிமொழி யை நாடகத்தில் புகுத்தவது ஆசிரியரின் திறமைக்குறை வைக் காட்டுகிறதென்கின்றனர். ஒருபாத்திரத்தின் உள்ளக் கிடக்கையும், பின்னர் அப்பாத்திரம் செய்யப் புகும் செயல களையும், பிறபாத்திரங்களின் இயல்பையும்வேறு வழிகளில் அறிய வைக்க இயலாத ஆசிரியர் தனிமொழியின் உதவியை நாடவேண்டியதிருக்கிறது என்பது அவர்கள் கூற்று. இஃது ஓரளவு உண்மைதான்; ஆயினும் நாடக ஆசிரியரின் குறை அஃது என்று கூறுவதைவிட கதைக்கும் நாடகத்துக்கும் உள்ள வேற்றுமை அஃதென்று கூறுவதே பொருந்தும் தனிமொழியின் உதவியை நாடாமல் வேறுவழியில்லை என்ற கட்டாயம் வரும்போது, நாடக ஆசிரியன் தன் திறமையைக் காட்ட வேறுவழியைக் கடைபிடித்தால் மூக்கை வளைத்துத் தொட்டும் தோல்வியடைவது போன்று கேலிக்கூத்தாகி விடும். ஒரு பாத்திரத்தின் எண்ண ஓட்டத்தைச் சுவைஞர் களுக்குக் காட்டியாகவேண்டும் எனவைத்துக்கொள்வோம் இன்றைய நாடகத்தில் அந்த எண்ண ஓட்டத்தைக் குறிப்

பாக உணர்த்தும் அதற்கு இணையான வேறொரு காட்சியைக் காட்டி உய்த்துணரச் செய்கின்றனர். நாடகத்தில் வரும் சூழ்நிலை அமைப்பும், அரங்க அமைப்பும், தந்திரக்காட்சிகளும் கதையாசிரியன், தன் எழுத்தால் வருணிப்பது போன்று அல்லாமல் வேறென்ன? மனக் கவலைகள் அரித்து கொண்டிருக்கும் ஒருவனது அவல உள்ளத்தைக் காட்ட வேண்டிய சூழ்நிலையில் பக்கத்தில் நிற்கும்வாழையின் குருத்தை ஒரு கருவண்டு அரிப்பது போன்று காட்கிறார் திரைப்பட இயக்குநர். அவருடைய திறமையைக் காட்டுவதோடு ஒரு செயற்கையான தனிமொழியையும் அங்கு தவிர்த்தாயிற்று. படிக்கும் நாடகத்தில் இந்தச் சூழ்நிலையை அமைக்க முடியுமா? முடியாத ஒன்றைத் திறமைக் குறைவென்று கூறுவது முறையாமா? நடிக்கும் நாடகம், திரைப்படம் போன்றவை நாவலும் நாடகமும் சேர்ந்தாலொத்த கூட்டினைக் காட்டுபவையாம் எவ்வாறெனில் திரைப்படத்தில் நாடகத்தில்போல உரையாடலும் உண்டு; நாவலைப்போன்று வருணனைகளைச் சூழ்நிலைக் காட்சிகளால் அமைக்கும் வாய்ப்பும் உண்டு. எவ்வாறாயினும் தனிமொழிகள் குறைவது நன்றே

3.1; பணிகள்: தனிமொழிகளின் பணிகள்பல ஒன்று, நகைச்சுவைக்காகத் தனிமொழிகள் கையாளப்படுகின்றன. பெரும்பாலான எல்லாத்தமிழ், வடமொழி நாடகங்களிலும் வரும் நகைச்சுவை நடிகரும், கட்டியங்காரரும் தன்னை மேடையில் அறிமுகப்படுத்தும் போதும், நொண்டியாக, குருடராகத் தம்மை வேண்டுமென்றே ஆக்கி நடிக்கும் போதும் தனிமொழிகள் பயன்படுகின்றன இதோ என் நண்பன் வருகின்றான் நான் என் காலை நொண்டியாக்கிக் கொள்கிறேன். என்று கூறும் தனிமொழி, செயற்கையாக இருப்பினும் அந்தக்கட்டத்தில் நகைச்சுவை வரவழைக்கும்

3. 2; இரண்டு—வெளிப்பேச்சு பாத்திரம் தனக்கு வந்திருக்கும் கடிதத்தைத் தனியாக நின்று படிப்பதும்; அதற்குத் தானே விடையளித்துக் கொண்டிருப்பதும்; தனக்கு வந்திருக்கும் தொலைபேசி அழைப்பை ஏற்றுப்பேசுவதும் இதில் அடங்கும், வஞ்சினம் கூறுவதுபோல அமைந்த தனிப் பேச்சும் சிலதிட்டங்களைத்தானே கூறிக்கொள்வதும் வெளிப் பேச்சு வகையைச் சாரும் எனலாம்.

3.3; மூன்று—விமர்சனம். சமுதாய, அரசியல், நீதி, தனிமனிதத்தொடர்புடைய கருத்துகளைப் பார்வையாளரை நோக்கி கூறுவதாக அமையும் தனிமொழிகள் இதன் பால் சாரும். தொடக்கக் கால நாடகங்களில் இவ்வகைத் தனி

மொழிகள் ஏராளம் இடம் பெற்றனவாயினும் பிற்கால நாடகங்களில் இவை கைவிடப்பட்டன; அன்றேல் குறைந்து விட்டன.

3 .4; நான்கு—முன்னறிவிப்பு: என்ன என்ன செயல் களில் ஈடுபடப் போவதாக ஒரு பாத்திரம் கருதுகிறதோ அவற்றை முன் கூட்டியே சொல்லி விடுவது இது. எதிர் காலத் திட்டங்களை இப்போதே கூறிப் பார்வையாளர்களை அவற்றிக்குத் தயாராக்குவது, குறிப்பிட்ட ஒருவரைக் கொலை புரியப்போவதாகவோ தாக்கப்புகுவதாகவோ தன் தனிமொழியில் ஒரு பாத்திரம் கூறின் பார்வையாளரிடம் ஒரு பரபரப்பு ஏற்படுமன்றே.

3 . 5; ஐந்து—சிந்தனை, உரக்க சிந்திப்பது. தன்மனக் குழப்பங்களையோ மகிழ்ச்சிப் பெருக்கையோ வேறுவகை யான சிந்தனை ஓட்டங்களையோ சொல்வடிவமாக்கி வெளிப் வெளிப்படுத்துவது. இத்தகு தனிமொழிகள் தாம் மற்ற வற்றை விடச் சிறப்பாக அமையும். உணர்ச்சியின் வெளிப் பாடாகலின் கேட்போர் இதயத்தில் தொட்டு உணர்வைத் தூண்டும்.

3 6; ஆறு—வழிபாடு. இறைவனை நோக்கி வேண்டு வது; இறந்தவர்களை நோக்கித் தனிமொழியில் வேண்டுவ தும் இதன் பால் அமையும். அனாதைக் குழந்தையாக இருப் போரும் பெருஞ்செல்வம் தொலைத்தோரும் தம் நிலைக்கு வருந்தி இறைவனையோ பெரியோரையோ இரங்கி வேண்டு வதைக் குறிக்கும் தனிமொழியிது.

3.7; ஏழு—தனிக்குணம். தனிமனிதன் தன் இயல்பை வெளியிடுவது; காதலியிடம் கொண்டிருக்கும் அன்பின் ஆழத்தைத் தனிமொழியில் வெளியிடுவது; அழிம்பன் தன் சூழ்ச்சியை வெளியிடுவது; தனியொரு ஆணும் பெண்ணும் தம், தனி ஆர்வத்தையும் எண்ணத்தையும மனப்பாங்கினை யும், ஆசையையும், உணர்வுகளையும வெளியிடுவது; தன் மறைவாழ்க்கையை வெளியிடுவது போனறவை இதில் அடங்கும்.

மேற்கூறிய ஏழுவகையாகவோ அவற்றிற்கு மேலாக வோ தனி மொழிகளையும் அவற்றின் பணிகளையும் வகைப் படுத்தலாம்.

— தொடரும்

# அறநெறி

செஞ்சொற்பாவலர்

**ப. சங்கரலிங்கம்**

இந்நாட்டில் இருள்நீக்கி அருள்வெள்ளம் புரண்டோடச் செய்தவர்களுள் அண்ணல் புத்தர் தலைசிறந்தவர் அவர் தம் கருத்துகளைத் 'தம்மபதம்' என்றழைப்பர் இஃது பௌத்தர்களின் மறையாகும். பாலிமொழியில் இயன்றது ஒழுக்க இயல்முதல் அந்தணரியல் ஈறாக இருபத்தாறு இயல்களைக் கொண்டதாய் நானூற்றி மூன்று குறட்பாக்களால் அமைந்ததாகும்.

இந்நூல் திருக்குறளைப் போன்ற சிறப்புமிக்கது. உலகில்மக்களாகப்பிறந்த ஒவ்வொருவரும் அறியவேண்டிய உயர் நெறிகள் (தம்மம்—அறம்; பதம்—நெறி) எனப்பெயரிட்டு, குறள் யாப்பில்யாத்து. உரை, விளக்கம், ஒப்புமை போன்ற பகுதிகளாக அமைத்து புத்தரின் தத்துவங்களைப் பரக்கப் பேசுகின்றது!

உலகிற்கு இன்றியமையாதது ஒழுக்கமாதலின், உயிரனைய ஒழுக்கம்குன்றின மக்களிடைம் பாழ்படுமாதலின் ஒழுக்கத்தின் விழுப்பங்குறித்து முதற்கண் அண்ணல் புத்தர் ஒழுக்க இயல்நாட்டினார்.

1 " ஒழுக்கமும் சீரும் உளநிலைய அஃதே
இழுக்க வரும் சக்கரமாம்"

(உரை) உயர்ந்தோரால் வரையறுக்கப்பட்ட நெறிகளும், உயர்வும் உள்ளத்தின் இயல்பை ஒட்டியே அமைவனவாம். அத்தகைய ஒழுக்கநெறியும் இழுத்தால் பின் தொடர்கின்ற வண்டிச் சக்கரம் போலப் பின் தொடருந்தன்மையது... நில்லாது செல்வம்.

(விளக்கம்) இழுக்க இழுக்க அத்தடத்திலேயே பின்தொடர்ந்து வருகின்ற சக்கரத்தின் சுவடுபோல, தன் உள்ளத்தின் இயல்பை ஒத்தேஒழுக்கமும் சீரும் அமைகின்றன என்றார்,

ஒப்புமை: —"சகடக்கால் போல வரும்"—நாலடியார்
அடியுடன் பின்னைய அடி ஓத்து நோக்கத்தக்கது

2 "அகமனைத்தே ஆம்வினைகள் அஃதும் அகன்றும்
அகலாத நிழலே அன்று"

உரை:— ஒருவன் உள்ளத்தின் இயல்பினை ஒத்தே அவன் செய்கின்ற வினைகள் அமைகின்றன. அந்த வினைகள் அவனைத் தொடர்ந்து வரும் நிழலைப் போன்று பின் தொடர் கின்றன.

விளக்கம்:— உள்ளத்தின் இயல்பினதே வினைகள் என்றார். ஏனையோர் வினையளவே பிற என்றார்.

1 "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்" —திருக்குறள் 505

ஒப்புமை:— உ. " தருமம் பற்றிய தக்க வர்க்கெலாம்
கருமம் கட்டளை என்றால் கட்டதோ"
—கம்பராமாயணம், அரசியற்-14

ங "பெருமை சிறுமை அளந்து கொளப் பேணும்
கருவி— தத்தமது
கருமம் அதுபோல் பிறகருவி கழியச் சிறந்த
வல அறிக"—வி. நா. புராணம் 788

ச பெருமையும் சிறுமையும் தான் தர வருமே-பழ
தத்தம் கருமமே கட்டளைக்கல்—"

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
"கருமமே, கட்டளைக்கல்—"

மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்
ஆகுல நீரபிற"—குறள்.

" பகையுணர்வு தீச்சொல் பழியுமிவை வெல்-
லான் வகையறியான் வானத்தோர் வைப்பு"

உரை:— பிறரிடத்தில் காட்டும் பகையுணர்வும், பிறர் பற்றிக்கூறும் பழிச்சொல்லும் தீயசொல்லும்

என்னும் இவற்றை வெல்லும் ஆற்றலற்றோன் வானகத்திற்குச் செல்லும் வழியினைக் கூட அறியாதவன் ஆகிறான்.

(விளக்கம்) நிர்வாணம் என்பதை வானத்தோர் வைப்பு என்ற சொல்லால் குறித்தோம். பகையுணர்வு, தீச்சொல், பழி இவை வெல்க என்றார். நிர்வாணமானது ஆசை, வெறுப்பு, அறியாமை என்பவற்றை அறுத்து, யான் எனது-என்னும் பற்றினைப் போக்கி எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி, ஒத்துரிமை உடையவராய் வாழும் நிலை. இஃதே பௌத்தத்தின் இறுநிலை. இவற்றை வெல்லுவான் இம்மையில் வீடுபேற்றினை அடைய முடியும் என்றார்.

ஒப்புமை:- பகையுணர்வு
''நோயெல்லாம் நோய் செய்தார் மேலவாம்—
நோய் செய்யார், நோயின்மை வேண்டுபவர்— குறள்
தீச்சொல்
''சினத்தைப் பொருளென்று கொண்டவன்கேடு
நிலத்தறைந்தான் கைபிழையாதற்று'' —குறள்

''பகைமூட்டிப் பாழ்படுத்தும் பாடுயெலாங் கொன்றார்
தமைப்போற்றும் ஞாலம் நனி''

உரை:- பிறரிடையே பகையினை மூட்டி, பகையின் வாயிலாக அவரது வாழ்வைப்பாழ்படுத்தி, அதனால் அவரின் பயனையெல்லாங் கொல்லுந்தன்மையை அறவே நீக்கும் இயல்பினரை உலகத்தவர் விரைந்து போற்றுவர்.

விளக்கம்:- உலகில் பகையுணர்வால் வரும் கேடு எத்தகையது என்பதை விளக்கமாகக் கூறினார் அண்ணல் புத்தர்.

ஒப்புமை:-
'' கருத்தின்னா செய்வதக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்-குறள்-313'',

"இன்னுசெய்தாரை யொருத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல் குறள்–314–"

"தம்மை யிகழ்ந்தமை தாம் பொறுப்ப தன்றிமற்று
எம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர் கொலென்று
பரிவதூஉம் சான்ருேர் கடன்—வெண்பா–"

"உபகாரஞ் செய்ததனை ஒராதே தங்கண்
அபகாரம் ஆற்றச் செய்யினும்—உபகாரம்
தாம் செய்வ தல்லால் தவற்றினைல் தீங்காக்கால்
வான் தோய் குடிப்பிறந்தார்க் இல்"—நாலடி–69

"நேர்த்தின்ன மற்றவர் செய்தக்கால் தாமவராய்ப்
பேர்த்தின்ன செய்யாமை நன்று—நாலடி—

"தீதனை தீஅணையா தீராப் பகைமையும்
தீச் செயலால் தீர்த்த லரிது".

உரை:– தீயினைத்தீயினுல் அணைக்க முடியாது; அதே போலத் தீயசெயல்களையும் தீய செயலாலேயே தீர்க்க முடியாது

விளக்கம்:– தீவினை என்பதை அண்ணல் புத்தர் வயிரம் என்ற சொல்லால் குறிக்கிருர். வயிரமென்பது செற்றம், வெறுப்பு, பகையுணர்வு போன்ற வற்றை உணர்த்தும் பகைதணிக்க என்ருர்.

ஒப்புமை:– "ஒருத்தார்க் கொரு நாளையின்பம் பொறுத் தார்க்குப் பொன்றுந் துணையும் புகழ்"–குறள்

"புயத்துறை வலியரையும் பொறை யொடும்
பொருந்தி வாழ்தல் சயத்துறை அறனு மஃதே
என்றிவை சமயச்சொன்ஞன்"
—கம்பராமாயணம்

"வெறுப்ப ஒருவன் காரணத்தால் மிக்க
மடத்தால் புரிபிழையைப் பொறுப்பின்
அதுவே பேரறமாம் புகழும் நிறைவும் மிக
வளரும் கறுப்பொன்றறியா அறிவினர்கள்

கருத்தின் மகிழ்ச்சிவுளவாகும் ஒறுப்பின் வருவது ஒன்றில்லை அதனால் பொறுமை உயிர்த்துணையாம்-விநாய- அரசி-31—

"கறுத்தாற்றித் தம்மைக் கடியசெய்தாரைப் பொறுத்தாற்றிச் சேறல் புகழால்—ஒறுத்தாற் றின் வானோங்குபர் வரை வெற்ப பயமின்றே தானேன்றிட வரும் சால்பு"—பழ 19—

" வாழ்ந்தவர் உண்டுகொல் வையமிசை!
ஓர்ந்துபிறர் தாழ்த்த நினைப்ப தெவன்?

உரை:- உலகில் நிலைத்து வாழ்தவர்கள் இல்லை அவ்வாறிருந்தும் பிறரை ஏன் வாழ்வில் தாழ்வடையச் செய்து, தான் வாழ நினைக்கின்றார்கள்

விளக்கம்:- பிறரைத் தாழ்வடையச் செய்து தான் வாழ நினைப்பாரைக் கண்டு அண்ணல் புத்தர் அந்தோ! அவர் தம் அறியாமை என்னே! என்று எண்ணி இரங்குகின்றார்.

ஒப்புமை:- உலகில் வாழ்ந்தாரில்லை என்பதை,

'நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமை யுடைத்திவ் வுலகு-குறள்-

" உறங்குவது போலும் சாக்காடு றங்கி
விழிப்பது போலும் பிறப்பு"—குறள்—

" பொன்றுதல் ஒருகாலத்தும் தவறுமோ புதுமைத் தன்றோ இன்றுளரார் நாளைமாழ் வார் புகழுக்கும் இறுதியுண்டோ" —
கம்பராமாயணம்.

புல் நுனிபோல் யாக்கை—நாலடியார்

"நீரிற் குமிழி இளமை, நிறை செல்வ
நீரிற் சுருட்டு நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் எண்ணே
வழுத்தா தெம்பிரான் மன்று
— நீதிநெறி விளக்கம்.

"மன்னுநீர் மொக்கு ளொக்கும் மானிடரிளமை
இன்பம்
மன்னிநின்றிறக்குஞ் செல்வம் வெயிலுறு பனியி
னீங்கும்
இன்னிசை இரங்கு நல்யாழ் இனியினும் இனிய சொல்லால்
அன்னதாதல் வினையினுக்க மழுங்கு கற்கென்னை யென்றான்'

— சீவகசிந்தாமணி

" இளமையும் நிலையா வான் இன்பமும் நின்றவல்ல
வளமையும் அஃதேயால் வைகலுந்துன்ப வெள்ளம்
உளவென நினையாதே செல்கதிக் கென்று என்றும்
விளைநிலம் உழுவார்போல் வித்து நீர் செய்து கொண்மின்

—வளையாபதி —

"இன்றுள்ளார் நாளையில்லை யெனும் பொருள்
— அப்பர்

" பிறந்தவர் சாதலும் இறந்தவர் பிறத்தலும்
உறங்கலும் விழித்தலும் போன்றது உண்மையின்

மணிமேகலை—ஆதிரை 86 87

" விழித்திமைக்கும் மாத்திரையன்றோ ஒருவன்
அழித்துப் பிறக்கும் பிறப்பு "நாலடி-302

உறங்கி விழித்தா லொக்கும் இப்பிறவி
சுந்தரர்—நெல்வாயில் 4

(தொடரும்)

இவ்வாண்டுச் சந்தாத்தொகை ரூபாய்
ஐந்தை அருள்கூர்ந்து அனுப்பவும்



# வள்ளுவத்தில் அறிவியல்.

என்னுரை:-

வான்புகழ் வள்ளுவமாம் பலர்புகழும் குறட்கடல் முன்நின்றேன் ஓ! அதில்தான் எத்தனை கருத்துக்கள். காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவுபட்ட இன்பவாழ்க்கை நடத்த இல்லறத்தானுக்கேற்ற இனிய உரைகள்; துறவறத்தானுக்கேற்ற தூயநெறிகள்; அமிழ்தினும் இனிமை பயக்கும் அன்பின் தூய்மை; அத்தூய்மை வழியமையும் பலநற் பண்புகளின் பெருமை; நாடாளும் அரசனுக்கு அறவுரை; வீடாளும் தலைவன், தலைவிக்கு அறிவுரை; இவ்வாறு எண்ணாத்தொலையா இனிய அலைகள். அறம், பொருள் இன்பம் பற்றிய அரிய கருத்தலைகள் என்னிதயத்தில் பாய்ந்தன; என்னை இன்பக் கடலில் ஆழ்த்தின. அளவிடற்கரிய கருத்தாழமுடைய குறட்கடலின் ஆழத்தில் மின்னி ஒளிரும் அறிவியல் கருத்துக்களாம் அரும்பெரும் நித்திலங்கள் என் கருத்தைக் கவர்ந்தன; களிப்பூட்டின.

"கடலில் மூழ்கிநன் முத்தெடுப் பீரே

என்ற பாரதியின் பாடல் நினைவிற்கு வந்தது. குறட்கடல் மூழ்கி அறிவியல் கருத்துக்களை. அந்நல்லொளி முத்துக்களை அள்ள விழைந்தேன் இவ்விழைவின் விளைவே இக்கட்டுரை.)

நுழைவாயில்

இலக்கிய உலகம் முழுமையாக அறிவியலிலிருந்து வேறுபட்ட அறிவியலுக்கு அப்பாற்பட்ட ஒரு தனி உலகம் இலக்கியத்திற்கும், அறிவியலுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை எனபன போன்ற கருத்துக்கள் தான் பொதுவாக நிலவுகின்றன. இக்கருத்துக்கள் ஓரளவு உண்மையானவைதான். ஆனால் இரண்டும் முழுமையாக வேறுபட்டவையல்ல ஆய கலைகளில் ஒன்று அருமைமிகு இலக்கியம் அறிவியல் கருத்துக்கள் இலக்கியத்தில் இடம்பெறல் இயல்பே.

"Happy is he who lives to understand
Not human nature only, but explores
All natures to the end that he may find
The law that governs each; and where begins
The union, the partition where, that makes
Kind and degrees among all visible-things
Up from the creeping sdant to the Soverign man."

என்று மேனாட்டுக் கவிஞர் வேர்ட்ஸ் வொர்த் (Words worth) அவர்கள் கூறுவது சிந்தனைக்குரியதாகும். "மனிதனுடைய இயல்பை மட்டும் அல்லாமல், பயிரினத்திலிருந்து மனிதன்வரை உள்ள எல்லா இயற்கைப்பொருட்களைப் பற்றியும், அவற்றை ஒழுங்குபட இயக்கும் விதிகளைப் பற்றியும் இயற்கைப் பொருட்களுக்கிடையே காணப்படும் பகுப்பு முறைகளைப் பற்றியும் கவிஞன் புரிந்து கொண்டு உணர்த்துவது சிறப்பாகும்" என்பதே அவர் கூற்றின் பொருள் இதனால் கவிஞனுக்கு அறிவியலும் தெரிந்திருக்க வேண்டுமென்பது தெளிவன்றோ!

பொய்யில் புலவனின் பொய்யா மொழியிலே அறிவியல் கருத்துக்கள் மின்னிக் கிடக்கின்றன என்பது உண்மை தான். ஆனால் அவை அப்படி அப்படியே அறிவியல் கருத்தாக மட்டுமே கூறப்படவில்லை என்பது கருதற்பாலது அவ்வறிவியல் கருத்திடையே மிகப்பேருண்மையை முக்காலத்திற்கும் தேவையான சத்தான உண்மையைக் கூறும் திறல் வியப்பிற்குரியது.

"வெள்ளத் தனையது மலர் நீட்டம்" என்று அறிவியல் கருத்தினைக் கூறுகிறார் அதனோடு "மாந்தர் தம் உள்ளத் தனையது உயர்வு" என்ற பொருள் பொதித்த உண்மையினையும் இணைத்துக் கூறி நம்மை ஓகையிலாழ்த்துகிறார். கவிஞர் பற்பல இடங்களில் பல உயிரினங்களின் பெயரை எடுத்தாளுகின்றார். எடுத்தாளும் எல்லா இடங்களிலும் அறிவியல் பற்றிய கருத்துக்களை நாம் காண முடியாது சான்றாக

'அணங்குகொ லாய்மயில் கொல்லோ கணங்குழை
மாதர்கொல் மாலுமென் நெஞ்சு" என்ற குறட்பாவில் மயிலினைப் பற்றிக் கூறுகிறார். இங்கு எவ்விதமான அறிவியல் கருத்தினையும் நாம் காணமுடியாது. இது போன்று வரும் குறட்பாக்களைவிடுத்து அறிவியல் உண்மைகள் பேசப்படும் குறட்பாக்களே இங்கு ஆராய்ச்சிக்குரியன எந்த நோக்கத்தோடு ஆசிரியர் அவ்வுண்மைகளை கூறுகிறார். அவருடைய கருத்துக்களை விளக்க அறிவியல் உண்மைகள் எந்த அளவிற்குப் பயன் படுகின்றன என்பன போன்ற செய்திகளைக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கம்

(இக்கட்டுரை ஆசிரியரின் பெயரும், முகவரியும் தெளிவாகத்தெரியவில்லை. அருள் கூர்ந்து தெரியப் படுத்தினால் அடுத்த இதழிலிருந்து முறையாக வெளியிடப்படும்)

# "சிந்தாமணியில் அமிர்தம்"

புலவர் தெ. முருகசாமி பி. ஓ. எல்.

இராமசாமி தமிழ்க் கல்லூரி

காரைக்குடி–1.

தமிழ் இலக்கண இலக்கிய உரையாசிரியர்களில் நச்சினார்க்கினியர் குறிப்பிடத்தக்க ஓர் உரையாசிரியராவார். அவருக்குள்ள பெருமையெல்லாம் தமிழ் இலக்கண இலக்கியங்கட்கு ஒருசேர உரை கண்டமையே யாகும். செந்தமிழ சொற்கள் பலவற்றிற்கு அவர் கூறிப் போந்த உரை விளக்கத்தைப் போல் அவருக்கு முன்னும் பின்னும் தோன்றிய உரையாசிரியர் எவரும் கூறிற்றிலர், எனவே உரையாசிரியர் உலகத்தில் நச்சினார்க்கினியர் ஒரு விடிவெள்ளியைப் போன்றவர் என்றால் அது மிகையாகாது. இங்ஙிலையில் அவர் சிந்தாமணியில் திருத்தக்க தேவரால் கூறப்பட்டுள்ள "அமிர்தம்" என்ற சொல்லுக்குக் கூறும் வான் பொருள் உரை விளக்கத்தைக் காண்போமாக.

இராசமாபுரத்தைத் தலைநகராக உடைய ஏமாங்கத நாட்டை ஆண்டு வந்த மன்னன் சச்சந்தனுக்கு விசையை என்பவள் பட்டத்தரசியாவள். அவளை அறிமுகப் படுத்தும் ஆசிரியர் திருத்தக்க தேவர்.

சேந்தொத் தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கட்
பூந்தொத் தலர்ந்த பசும் பொற்கொடி யன்ன பொற்பின்
ஏந்தொத் தலர்ந்த முலை "யின்னமிர் தன்ன சாயல்
வேந்தற் "கமுதாய்" விளையாடுதற் கேது வாமே
[8]

என்று அறிமுகப்படுத்துகின்றார், 'அமிர் தன்ன சாயல்' என்ற தொடருக்கு, "அமிர்தம் கட்சினிதாகிய மென்மையும் தன்னை நுகர்ந்தார் பிறிது நுகரா மற்றடுக்கும் மென்மை

யுமுடைமையான் அமிர்தன்ன சாயல் என்றார்'' என்று நயம்பட உரை எழுதினார் நச்சினார்க்கினியர்.

ஈண்டு அமிர்தத்திற்கு கூறப்பட்ட இரண்டு மென்மைத் தன்மைகளும் விசையையிடமும் பொருந்திக் காணப்பட்டதால் நச்சர் இங்ஙனம் உரைகண்டார் எனலாம் காட்சிக்கினிய மென்மைத் தன்மை வாய்ந்த அமிர்தத்தைப் போல செந்தாமரையன்ன வாட்கண்ணம். பூங்கொடிப் பொற்பும் எழிலார்ந்தமார்பும் உடைய மலரன்ன காமத்துச்சீரிளமைத் தோற்றத்தவளாய விசையை காட்சிக்கினிய மென்மைத் தன்மை வாய்ந்தவள் என்பதற்கு மேற்காட்டிய பாடலின் வரிகளே சான்று பகர்கின்றன.

அடுத்து, தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமற்றடுக்கும் மென்மைத் தன்மையுடைய அமிர்தத்தைப்போல விசையையும் கணவனானவன் தன்னையின்றிப்பிறபெண்டிரை நுகராமற்றடுக்கும் அளவுக்கு பெற்றிமையுடையளாய்காணப்பட்டாள் என்பது சிந்தாமணி இலக்கியத்தின் கதை தழுவியதோர் உண்மைப் பகுதியாகும் ஏனெனில் அமிர்தம் தன்னை அயின்றாரை இதனின் வேறு சுவையின்று எனத்தடுத்து நிறுத்தும் தன்மை யுடையதுபோலச் சச்சந்தன் விருப்பத்தற்குரிய பெண்கள் பலரிருப்பினும் அவன் விசையையிடத்துள்ள பெண்ணின்பத்தையே பொருளாகக் கருதி ஆட்சிப் பொறுப்பையும் வேறொருவனிடம் கொடுத்து விட்டு அவளுடன் காமஇன்பத்தை நுகர்ந்தான் என்றால் அவன் அவள் மாட்டு ஆரா இன்பத்தைப் பெறுதற்குரிய சூழ்நிலையில் அவள் காணப்பட்டாள் என்பதுதானே புலனாகின்றது.

மேலும், பிற பெண்டிர்பால் கொண்ட காமநுகர்ச்சியால் ஓர் அரசன் அரசாட்சியை யிழந்தான் என்பதாக இல்லாமல் தன் பட்டத்தரசியாகிய மனைவியிடம் கொண்ட ஆராக் காதலாலேயே அவன் அரசாட்சியைத் துறந்தான் என்ற சிந்தாமணியின் கதைப்போக்கை நன்குணர்ந்த நச்சினார்க்கினியர் அக்கதைப் போக்கைத் தழுவிய நிலையில் அமிர்தம் என்ற சொல்லுக்குத் 'தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராமற் றடுக்கும் மென்மையுடையது' என்று உரை கண்டது விசையைக்கு முற்றிலும் பொருந்துமன்றோ!

அமிர்தமாகிய ஒன்றை மட்டும் அயின்றார்க்கு அதன் சுவை பிறசுவைபடு பொருளினும் விஞ்சிய சுவையுடையது

என்று கூற இயலாது. பிறவற்றோடு அமிர்தத்தையும் சுவைத்தறிந்தார்க்குப் பிற பொருளினும் அமிர்தத்தின் சுவை வேறுபட்டதாகத் தோன்றுமாதலால் அங்கிலையில் அவ்வமிர்தம் 'தன்னை நுகர்ந்தாரைப் பிறிது நுகராமற்றடுக்கும் 'ஆற்றலுடையது என்று கூறலாம், "உண்ணுநர்த் தடுத்த சாரற் பலா" என்று அகநானூறு (2) பலாவின் சுவையை மிகுத்துக் கூறுகின்றது பிற பழங்களின் சுவையைக் காட்டிலும் பலாவின் சுவை கூடுதலாக இருப்பதால் அது "உண்ணுநர்த் தடுத்த" என்ற சிறப்பு அடைமொழியைப் பெற்றது.

மேற்கண்டவாறு நோக்கினல் சச்சந்தனுக்கு விசையையன்றிப்பிற காமக்கிழத்தியர் இருந்தனர்என்றும் அக்காமக்கிழத்தியரிடம் தோன்றிய நபுலவிபுலர் எனும் மக்களும் இருந்தனர் என்றும் சிந்தாமணியின் கதைப் போக்கில் அமைந்திருந்தாலும் சச்சந்தன் தன் மனைவியிடம் மட்டும் காமத்தின் இன்பத்தொகையை ஒட்டுமொத்தமாகக் காண்பதற்குரிய நிலையில் அவள் அவனுக்கு அமிர்தன்ன சாயலளாகவே தென்பட்டாள் என்று ஒருவாறு முடிவுகட்டலாம்.

திருத்தக்கதேவர் இக்கருத்தைப் பல இடங்களில் சுட்டிக் கூறியுள்ளார். அவர் விசையையைக் குறிப்பிடும் இடங்களிலெல்லாம் அவளை "அமிர்தம்" என்றே குறிப்பிடுகின்றார். இங்ஙனம் விசையையை அமிர்தத்திற்கொப்பாகப் பலமுறை கூறுவதை நச்சினார்க்கினியர் நுண்ணிதின் ஆராய்ந்தவராய் அமிர்தத்திற்கு ஓர் சிறப்புரை கண்டார் போலும்! என நினைக்கத் தோன்றுகின்றது.

விசையையை விட்டுப் பிரியாத உள்ளமுடையவனாகிய சச்சந்தன் தன் அமைச்சன் கட்டியங்காரனிடம் "வான் சுவை அமிர்த மன்னாள் விசையையைப் பிரிதலாற்றேன் "[201] என்று கூறி அரசப்பொறுப்பை ஒப்படைக்கின்றான். இவ்வாறு வெளிப்படையாகத் தன் மனைவிமாட்டுள்ள காம உணர்ச்சியை வேறொருவனிடம் கூறுவதிலிருந்தே விசையைபால் அவன் கொண்டிருந்த ஈடுபாடு தெரியவருகின்றது. இங்ஙனம் அவன் கூறிய கூற்றே அவனுடைய அழிவு பிற மகளிரை நாடுதலாலன்றித் தன் மனைவியிடம் கொண்டிருந்த காமநாட்டத்தாலேயே ஏற்படப்போகின்றது என்ற பின்விளைவான மறுசிந்தனைக்குச் சான்றாக நின்று கதையின் போக்கை சுவைபடுத்துகின்ற தென்பதால் அவள்

அவனைப் பிறமகளிரை நுகராமற்றடுத்து நிறுத்திய வான் சுவை அமிர்தத்தாள் என உணரமுடிகின்றதன்றோ!

அடுத்து, கட்டியங்காரன் அமைச்சர் பலரையும் அழைத்து மன்னனைக்கொல்லப்போவதாகத்தன் கருத்தைக் கூற, அதை ஏற்காத தருமதத்தன்,

தவளைக் கிண்கிணித் தாமரைச் சீறடிக்
குவளை யேயள வுள்ள கொழுங்கணாள்
அவளை யேயமிர் தாகவவ் வண்ணலும்
உவள கந்தன தாகவொ டுங்கினான். 243.

என்று கூறும் கூற்றில் சச்சந்தன் தன் மனைவியிடம் கொண்ட நெருக்கத்தை. 'அவளையே அமிர்தாக' என்று தொடரால் புலப்படுத்தினான். 'அவளையே' என்பதிலுள்ள ஏகாரம் தேற்றம் என்று நச்சினார்க்கினியரும் ஆண்டு குறிப்புரையும் தந்தார் எனவே மேற் சுட்டிய பகுதிகளிலிருந்து சச்சந்தனுக்கு விசையையாகிய தன் மனைவி ஒருத்தியே தான் இன்பம் துய்ப்பதற்குரிய முழுக்காயக்கொள்கலனைகத் தென்பட்டாள். என்று உறுதிகொள்வது சூன்றேறியானைப் போர் கண்டதோர் தெளிந்த உண்மையாகும்.

'சேந்தொத் தலர்ந்த செழுந்தாமரை யன்ன வாட்கண் என்றபாடலில் கூறிய அமிர்தன்ன சாயல் என்ற சொறகளை யடுத்துக் கூறிய ''அமுதாய்'' என்ற சொல்லுக்கு விளக்கம கூறவந்த நச்சர் ''மறுமையிற் சென்று பெறும் அமுதமும் இவளெனக் கொண்டு மயங்கினமை தோன்ற மீட்டும் அமுதாய் என்றார்'' என்று உரைஎழுதினார். இவ்வுரை விளக்கம் அமிர்தன்ன சாயலுக்குக் கூறப்பட்ட உரை விளக்கத் தோடு முற்றிலும் தொடர்புடையதாகும். ஏனெனில் இம மையின்றி மறுமையிலும் இவளே இவனுக்கு அமிர்த மனையாள் என்று கூறுவதால் சச்சந்தனுக்கும் விசையைக் கும் உள்ள இம்மைத் தொடர்பு எத்தகையது என்று ஒரு வாறு அறிய முடிகின்றதோடு மறுமையிலும் அவளே அவனைப் பிற மகளிரை நுகராமற்றடுக்கும் வான்சுவை அமிர்தமாகப் போகின்றவள் என்னும் குறிப்பும் காணப் படுவதால் பின்னதின் உரை முன்னதின் உரையைத் தழுவி எழுதப்பட்டது எனக்கருதுவதில் தவறேதும் இருக்க முடியாதன்றோ!

"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியர்என் கணவனை;
யானா கியர் நின் நெஞ்சு நேர்பவளே!"

என்று தலைவன் தலைவியரின் இம்மை மறுமைத் தொடர்பைக் குறுந்தொகைப் பாடல் [49] ஒன்று கூறுகின்றது 'மறுமையின் பயன் இம்மையின் தொடர்ச்சியால் வருவது என்ற நுண்பொருள் விளக்கம் இக் குறுந்தொகை பாட்டில் பொதிந்து கிடக்கின்றது, இதனால் அமிர்தன்ன சாயலுக்கு எழுதிய உரை விளக்கத்தை மேலும் உறுதிப் படுத்த இக் குறுந்தொகைப் பாடற்பொருளையே அமுதாய் என்ற சொல்லுக்கு உரையாக்கினார் என்றால் அது மிகையாகாது

இங்ஙனமெல்லாம் கதை தழுவிய நிலையில் 'அமிர்தம்' என்ற சொல்லுக்குத் தாம் உரை கண்ட தன்மையை நச்சினார்க்கினியரே ஓரிடத்தில் வெளிப்படையாக உரை எழுதிக் காட்டுகின்றார்

" பளிக்கறைப் பவழப் பாவை பரிசெனத் திகழும் சாயற்
களிக் கயல் பொருவ போன்று கடைசிவந் தகன்ற கண்ணாள்"

என்ற சிந்தாமணி 192 ஆம் பாடலுக்கு விளக்கம் எழுத வந்த ஆசிரியர், "பளிக்குப் பாறையை அடுத்த பவழப் பாவை இவளது தன்மையெனத்திகழும் சாயல், ஈண்டு ஒளியது மென்மை இது செயற்கை நலம். இதற்கு அடுத்தது காட்டும் பளிங்கைப் பவழம் தன் தன்மையாக்கினாற் போல அடுத்த மகளிர் தன்மையனும் அரசனை இவளும் தன் தன்மையாக்கிக் கொண்டாள் எனக் கதை கருதிய நயமுமுண்டு" என்று உரை விளக்கம் தந்தார்

'அடுத்த மகளிர் தன்மையனும் அரசனை' என்றதால் சச்சந்தனின் ஒழுகலாறு தெரிகின்றது 'இவளும்' என்றது பிற மகளிரைப் போல விசையையும் என்று இறந்தது தழீஇய எச்ச உம்மையில் விசையைச் சுட்டியதாகும் அடுத்தது காட்டும் பளிங்குப் பாறைக்குப் பக்கத்திலிருந்த பவழத்தால் செய்த பாவையானது அவ்வடுத்தது காட்டும தன்மையைத் தான் எடுத்துக் கொண்டது போல மன்னனைத் தம்பால் கொள்ளும் பிற மகளிர்த் தன்மையை விசையை கைக்கொண்டு அவனை அவள் தன் வயப்படுத்திக்

கொண்டாள் என்ற திருத்தக்கதேவரின் உவமையை நச்சர் இங்ஙனம் உவமைகளைத் தெளிவு படுத்தி உரை எழுதினர். இதனால் அவர் "கதை கருதிய நயமுண்டு" என்று தெளிவாகத் தம் கருத்தை உரை மூலம் தெரிவிப்பதால் அவர் 'அமிர்தன்ன் சாயல்' என்பதற்கு எழுதிய உரையின் பொருத்தம் உண்மையெனத் தெரிகின்றதன்றோ!

சச்சந்தனோடு விசையையைத் தொடர்புபடுத்திய இடங்களிலெல்லாம் அவனை அமிர்தமாகவே காட்டிவருகின்றார் திருத்தக்க தேவர் அவனைவிட்டு அவளைப் பிரிக்கும் இறுதி நேரத்தில் கூடக் கடைசிமுறையாக அவளை, "அல்லலுற்றடுங்கி வீழ்ந்த அமிர்த மன்னாளை" என்று கூறுகின்றார் 268 அவள் முன்பு கண்ட கனவிற்கேற்பக் கட்டியங்காரன் போர் தொடுத்த சூழலில் அவளுக்குச் செய்தியைச் சச்சந்தன். கூற அதனால் அவள் அவலம் அடைய உற்ற அவலத்தைப் போக்கி அவளை மயிலூர்தியில் அனுப்பி வைக்க முனைந்தான் சச்சந்தன் இந்நிலையில் அவளை அமிர்தத்திற்கு ஒப்பாகக் கூறினர் திருத்தக்கதேவர், ஈண்டும் நச்சினார்க்கினியரும் அமிர்தத்திற்கு உரைகாண முனைகின்றார்.

"அமுதம் அயின்றார்க்கு நாளுவந்தால் அது வேறுபாடு தோற்றுவிக்குமாறு போல் இவற்கும் வேறுபாடு தோற்றுவித்தலின் அமிர்தமன்னான் என்றார்" என்பது நச்சரின் உரை விளக்கமாகும் நாள் செல்லச் செல்ல அமுதமும் சுவையில் வேறுபடுவதுபோல விசையையை நாளும் இன்புற்று வந்த சச்சந்தனுக்குக் கட்டியங்காரனால் அழிவு ஏற்படத் தொடங்கியதால் அவள் இவனுக்கு மாறுபட்ட தன்மையளாகவே தென் பட்டாள் என்பது இவ்வுரைப் பகுதியின் பொருள், இதனால் அவன் அவளைத் தன்னினின்றும் வேறுபடுத்தமுனைந்து அவளை மயிலூர்தியில் அனுப்பி வைப்பதாகக் கதைப்போக்கு அமைகின்றது.

மேற்கண்டவாறெல்லாம் விசையையை அமிர்தமாகச் சுட்டி வந்த திருத்தக்கதேவர் சச்சந்தனையும் ஓரிடத்தில் அமிர்தத்திற்கொப்பாகக் கூறினர்.

நச்சு நாகத்தி னாரழற் சீற்றத்தன்
அச்ச முற்றடைத் தார்க்கமிர் தன்னான் (157)

ஈண்டு சச்சந்தனை அமிர்தமன்னான் என்று கூறியிருந்தாலும் அது சிறப்புப் பொருள் ஏதும் இன்றிப் பொதுப்படையாக

இன்பம் என்ற பொதுப் பொருளைத் தந்து நிற்கின்றது. தன்னை அடையாத பகைவருக்கு நெருப்பின் சீற்றத்தவன் என்பதும் தன்னை அடைந்தார்க்கு அமிர்தத்தைப்போல உலவா இன்பத்தைத் தருபவன் என்று ஆற்றொழுக்காகப் பொருள் அமைகிதறதன்றி விசையைக்குக்கூறப்பட்டதைப் போல் நுணுகி அறியும் அளவிற்கு உரை சொல்லுதற்கு இடமில்லை எனத் தெளிவாகப் புலப்படுகிறது. எனவே அவனுக்குக் கூறிய அவ்வுவமையின் பொருளைவிட விசையை க்கே அச்சொற்பொருள் முற்றிலும் பொருந்துவதால் நச்சர் நயம்பட உரை செய்தார் எனலாம்.

எனவே சச்சந்தனுக்குப் பிறமகளிரை விடத்தன் மனை விபிடம் கொண்ட தனித்த காதலால் அவன் அரசாட்சியை துறக்க நேர்ந்தது என்ற கதைப் பகுதியின் இயல்பை உணர்ந்த நச்சினார்க்கினியர், திருத்தக்கதேவரால் விசையை யைப் பலபடியாகக் கூறும் 'அமிர்தம்' என்ற சொல்லிற்குத் தன்னை நுகர்ந்தார் பிறிது நுகராபற்றடுக்கும் மென்மை யுடையது' என்ற உரை ஒன்றே கதையின் பல இடங்களில் தொடர்புற்று வருகின்ற சிறப்புடைமையைக் காண்புழி, இவ்வமிர்தம என்றசொல் நச்சினார்க்கினியரின் நுண்மாண் நுழைபுல உரைக்கோர் உரைகல்லாக இருந்ததோடு அவர் தம் உரைக்கு இருப்பிடமாய் சிந்தாமணியின் இலக்கியச் சுவையை மேலும் கூட்டியது என்றால், அது நச்சினார்க் கினியரால் விளைந்த தமிழின்பமே யன்றி வேறென்னல் அன்று என்பது அங்கண் வானத்துத் திங்களைப் பாம்பு கொண்டதென யாவரும் அறியும் ஓர் தெளிந்த உண்மை யன்றோ!

— ❊ —

# நாடி பார்க்கும் மருத்துவராகலாம்

அகத்திய முனிவரால் அருளிச் செய்த "நோயின்சாரம்" என்ற நூலின் தொடக்கத்துக் காணப்பட்டவை. நண்பர்களுக்கு ஓரளவு பயன்படும் என்ற நம்பிக்கையில் வெளியிடுகிறோம்.

**நாடி பார்க்குங் காலம்**

சித்திரை வைகாசிக்குச் செழுங்கதி ருதயம் பார்க்க;
அத்தமாம் ஆனி ஆடி ஐப்பசி கார்த்திகைக்கு
மத்தியானத்திற் பார்க்க; மார்கழி தை மாசிக்கு
வித்தகன்கதிரோன் மேற்கே வீழும்வேளையினிற்பாரே;
மானமார் பங்குனிக்கும் வளம்பிறை ஆவணிக்கும்
ஆனதோர் புரட்டாசிக்கும் அர்த்தராத்திரியிற் பார்க்க;
தேனென மூன்று நாடி தெளியவே காணும் என்று
கானமா முனிவர் சொன்னார் காரிகை வேதநூலே

**நாடி பலித்திடாக் காலம்:**

எண்ணெய்பெய் திருந்த போதும் ஈரமாய் நின்ற போதும்
உண்ணும் நல் லுணவின் போதும் உண்டாம்வெம் பசியின் போதும்
திண்ணமாய் நடக்கும் போதும் சிற்றின்ப மூழ்கும் போதும்
பண்ணியநாடி பார்க்கில் பலித்திடா தென்று செப்பே.

**நாடி பார்க்கும் விபரம்:**

மருவிடும் நோயின் நாடி மதித்திடில் வலக்கை மைந்தர்க்
கரியவையர்க் கிடக்கை தன்னில் அழுத்தியே சுட்டிக் காட்டும்
விரலதில் வாதமாகும்; மிகுநடு விரலில் பித்தம்;
தருமணி விரலில் ஐயம் தானியல் பறிந்து பாரே

(தொகுப்பு ஆ. ஆ.)

**இலக்கியச் சிந்தனே 2.**

# பேராண்மையும்—ஊராண்மையும்

புலவர் கு. சின்னேயன்
தஞ்சை.

போர்க்களத்தில் பகைவரிடம் இரக்கம் காட்டாமல் எதிர்க்கும் வீரத்தை 'பேராண்மை' என்றும், அவர்க்கு ஒரு தாழ்வு வந்த தாயின், இரக்கம் காட்டி உபகாரம் செய்தலே 'அவ்வாண்மைக்குக் கூர்மையாகும்' என்றும் திருவள்ளுவர் கூறியுள்ளார். இதனே,

பேராண்மை என்ப தறுகண்ணொன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு''

என்ற குறட் பாவினல் அறிந்து கொள்கின்றோம்.

இலங்கை வேந்தனுன இராவணன் அறத்தைத் துறந்து மறத்தை மேற்கொண்டான். அவன் இராமனுடன் புரிந்த முதற்போரில், தன் படைகளே இழந்தான் தன் கையிலிருந்த படைக்கருவிகளேயும் இழந்தான் ' அறத்தைக் கடந்த கொடியோரின் செய்கை இவ்வண்ணந்தான் முடியும்'' என்று உலகோர் அறிந்து ஆரவாரிக்க வெறுங் கையனுய் நின்ருன் நெஞ்சத்தில் நிறைதிருந்த செருக்கு அழிந்தனுல் அவனுடைய முகம் ஒளி இழந்து காணப்பட்டது. கண்கள் நாணத்தால் தரையை நோக்கிக் கொண்டிருந்தன. கால்விரல் நிலத்தைக் கீறிக்கொண்டிருந்தது. இராவணனின் இத்தகைய இழிநிலே யைக் கண்டு வருந்திய இராமன் அவனேக் கொல்ல விரும்ப வில்லே. படைகளேயும் படைக்கருவிகளேயும் இழந்து தனித்து நிற்கும் இராவணனேக் கொல்வது அறத்திற்கும் ஒழுக்கத்திற்கும் மாறுபட்ட செயலாகும்.' என்று வருந்தி ஞன். எதிரில் நின்ற இராவணனே நோக்கி இராவணு! பெரும்போரை அறத்தாலன்றி மறத்தால் வெல்லுதல் இய லாதென்பதனே அறிந்துகொள் பாவி! நீ? உன் உறவினர் இருக்குமிடத்திற்கு விரைத்து செல் நீ இப்போது என் கை யால் இறந்திருப்பாய்; ஆனுல், உன் தனிமையைக் கண்டு இரங்கி உன்னேக் கொல்லவில்லே.

போர் புரியும் வல்லமை உனக்கிருந்தால், நாளையதினம் உன்னுடைய படைக்கருவிகளோடும், சேனைகளோடும் வந்து போரிடு; இன்றேல் உன் உறவினரிடம் போய்ஒளிந்து கொள். சிறையிலே வைத்திருக்கும் சீதையை விடுத்து உன் தம்பியாகிய விபீடணனை அரசனாக ஏற்று அவனுக்கு நீ ஏவல் செய்ய விரும்பினால் உன்னை உயிரோடு விடுவேன். நான் கூறியவாறு செய்ய உனக்கு விருப்பமில்லை என்றால், உனக்குரிய வலிமை எல்லாவற்றையும் கொண்டு எதிர்த்து நில்.

உனக்குத் துணையாக அமைந்த சேனைகள் யாவும் காற்றினால் மோதப்பட்ட பூளைப் பூவைப்போல் பறந்தோடின. ஆதலால் போர் புரிதற்கு இன்று போய் நாளைவா என்று கூறினான். இக்கருத்தை

"ஆளை யாஉனக் கமைந்தன மாருத மறைந்த
பூளை யாயின கண்டனை இன்றுபோய்ப் போர்க்கு
நாளை வாவென நல்கினன் நாகிளங் கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்"

என்ற கம்பராமாயணச் செய்யுள், இராவணின் ஊராண்மையை விளக்கிக் காட்டுவதாக பரிமேலழகர் எடுத்துக்காட்டியுள்ளார். இதனால் பகைவர்கள் மீது இரக்கங்காட்டாமல் அவர்களை எதிர்த்து அழிப்பது பேராண்மையாகும்' என்பதையும் அபயம் என்று கூறி அடிபணிந்திருப்பவரையும், ஆயுதமிழந்திருப்பவரையும் அஞ்சியிருப்பரையும் தனித்திருபவரையும், பெண்டிரையும், பிணிஉடையோரையும், ஆன்றோரையும் எதிர்த்து அழிக்காமல் அவர்கள் மீது இரக்கங்காட்டுதல் ஊராண்மையாகும் என்பதையும் நாம் அறிந்துகொள்கின்றோம். இதுதான் அவ்வாண்மைக்குக் கூர்மையாகும்.

பேராண்மை, அறிவுடையோரிடத்தும் அறிவற்றோரிடத்தும் தோன்றுகின்றது. ஆனால் அறிவுடையோரிடத்தில் தோன்றும் ஆண்மை, கால மறிந்து, இடமறிந்து, மிக்கும் குறைந்தும் காணப்படுகின்றது. ஆனால் அறிவற்றோரிடம் தோன்றும் ஆண்மை, மிகுந்து தோன்றுவதல்லாமல் குறைந்து காணப்படுவதில்லை.

அறிவுடையோர், பகைவர் மிகைசெய்த பொழுது, அவரறியுமாறு புறத்திலே கோபங் கொள்ளாமல், தாம்

அவ்ரை வெல்லுதற்கேற்ற காலத்தை அறிந்து, அது வருமளவும் உள்ளே கோபங் கொண்டிருப்பர் என்பதை

"பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம் பார்த்து
உள்வேர்ப்பர் ஒள்ளி யவர்"

என்ற குறட் பாவினுல் அறிந்துகொள்கின்ருேம்.

மக்கள் அகப் பகையையும் எதிர்த்தழிக்கும் பேராண்மை உடையவர்களாக விளங்க வேண்டும். உள்ளத்திலிருந்து தோன்றும் காமம் முதலியவை அகப்பகையாகும். வெளியிலிருந்து தோன்றும் பகை, புறப்பகையாகும். அகப்பகையாகிய காமம் அறத்தை அழிக்கின்றது ஒழுக்கத்தைச் சிதைக்கின்றது. பொருளைக் கரைக்கின்றது. உறுப்புக்களைக் குறைக்கின்றது உடலை அழிக்கின்றது. பெருமையைக் குறைக்கின்றது. பாவத்தைப் பெருக்குகின்றது. பண்பை அழிக்கின்றது. பகையை வளர்க்கின்றது. நாட்டையே நடுங்க வைக்கின்றது இவ்வாறே புறப்பகையும் உடல், பொருள். ஆவிகளையெல்லாம் அழிப்பதாக இருந்தாலும், அகப்பகையைப் போல் அறத்தையும் ஒழுக்கத்தையும் கெடுப்பதாக இல்லை எனவே தான் திருவள்ளுவர் பகைவர்கள்மீது இரக்கம்காட்டாமல் அவர்களை எதிர்த்தழிப்பதைப் பேராண்மை என்று கூறியது போலவே, அகப்பகையாகிய காமத்தை ஒழிக்க வேண்டுமென்று கருதி, பிறர் மனைவியை விரும்பாத தன்மையைப் 'பேராண்மை' என்று கூறியுள்ளார் இதனை

"பிறன்மனை நோக்காத பேராண்மைச் சான்ருேர்க்கு
அறனென்ருே ஆன்ற ஒழுக்கு"

என்ற குறட்பாவினுல் அறிந்து கொள்கின்ருேம்.

ஒருவன் தன் மனைவியை விரும்பலாகாதென்று வள்ளுவர் கூறவில்லை பிறர் மனையைத்தான் விருல்பலாகாதென்று கூறி இருக்கின்ருர் ஒருவன் தன் மனைவியை விரும்புதல் அன்பு வளர்ச்சிக்கும் இன்ப நுகர்ச்சிக்கு ஏற்றதாகும். பிறன் மனைவியை விரும்புதல் துன்ப வளர்ச்சிக்கும் ஒழுக்கச் சிதைவிற்கும் காரணமாயமைகின்றது.

'பிறன் மனைவி' என்றும் பிறன் மனையிலிருக்கும் பெண் என்றும் (தன் மனையிலிருந்தாலும்) பிறனுக்கு மனைவியாகும் பெண்' என்றும். [கணவனை இழந்தவளாயிருந்தாலும்] அவள், 'பிறன் மனைவி' என்றும பிறன் மனையைக் கூடுதல் பெரும் பாவச் செயலாதலின் 'பிறன் மனைவி' என்று கூருமல் பிறன் மனை என்ருர். பிறன் மனைவியைக் கூடுதல்

பெரும்பாவச் செயலாதலின, அதனை வாயாற் கூறலும் பாவம் எனக் கருதி 'நோக்காதே' என்று கூறினர்.

புறப் பகையை எதிர்த்தழிக்கும் ஆற்றல் உடையவர்களாயிருப்பினும், அகப்பகையாகிய காமத்தை அடக்குதல் அருமையாதலால் அதனை அடக்கிய ஆண்மையைப் 'பேராண்மை' என்ருர். இங்ஙனம் அடக்குதல் ஆன்றவிந்தடங்கிய சான்ரேர்க் கல்லது ஏனையோர்க்கு அரிதாதலால் 'சான்ரேர்க்கு' என்ருர். செய்தற்கரிய அறத்தையும் அடைதற்கரிய ஒழுக்கத்தையும் பிறர் மனையை விரும்பாமலிருந்தலால் எளிதில் அடையலாம் என்பதற்காகவும், விரும்பாமை யாகிய ஒன்றைச் செய்து இரண்டை அடையலாம் என்பதற்காகவும் '' அறன் ஒன்ரே ஆன்ற ஒழுக்கு'' என்று கூறினர்.

அறிவுடைச் சான்ரேர்கள் இவ்விரு பகைகளையும் வென்று வாழ்ந்திருக்கின்ருர்கள்.

தசரதன் தன் வாழ்வில் அகப்பகை புறப்பகைகளை வென்று வாழ விரும்பியிருக்கின்ருன். அவையோரை அழைத்து தன் எண்ணத்தைக் குறிப்பிடும் போது, ''மண் விண், பாதலம் என்ற மூன்று உலகத்திலும் அழித்தற்குரிய புறப்பகைகளை அழித்த நான்கள் வரைப் போல் மறைந்து வாழ்கின்ற காமம் முதலாகிய அகப் பகைவர்க்கு ஒதுங்கி வாழ்வெனே'' என்று கூறியிருக்கின்ருன். இதனை.

வெள்ள நீ ருலகினில் விண்ணில் நாகரில்
தள்ளரும் பகையெலாம் தவிர்த்து நின்ற யான்
கள்ளரிற் கரந்துரை காமம் ஆதியாம்
உள்ளுறை பகைஞர்க்கு ஒதுங்கி வாழ்வெனு''

என்று கம்பர் கூறியிருப்பதனல் அறிகின்ரேம்.

புறப்பகைவர்களை வெல்லும் பேராண்மை உடையவர் பலர், அகப்பகையாகிய காமத்தை அழிக்கும்ஆற்றல்படைத்வராக விளங்கினல் நாட்டில் பெருகிவரும் மக்கள் பெருக்கம் தாமாகவே குறைய ஆரம்பித்துவிடும். நாடுநலம் பெறும். நாட்டிற்கு நற் புகழும் கிடைக்கும்.

வாழ்க தமிழ்! வளர்க பேராண்மை!!

— * —

இராமநாதபுரம் சேது மன்னர்கள் செந்தமிழ்ப் புலமையும் சிவநெறித் தொண்டும் மிக்கவர்கள். சைவத்தமிழ் வளர்த்த பெருமை அவர்கட்கு வழி வழி வந்த பெருமையாகும் மரபு வழிவந்த இசைப்பயிற்சி மிக்கவரும் செந்தமிழ் பற்றுள்ளவரும் சிவநெறி அன்பருமாகிய இராசகுமாரர் ஆர். காசிநாததுரை அவர்கள் மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் துணைத்தலைவராகவும் இருந்து தமிழ்ப் பணியாற்றி வருகின்றார்கள். திரு. காசிநாததுரை அவர்கள் சிறந்த தமிழ்க் கவிஞர் என்பதை அவர்கள் பல ஆண்டுகளாக அவ்வப்போது பாடி வந்துள்ள செந்தமிழ்ப்பாக்கள் மூலம் அறியும் வாய்ப்புக்கிடைத்தது அவற்றினை முறையே "செந்தமிழில்" வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம், திரு. காசிநாததுரையவர்கள், புலவர் பலர் ஏற்றபடி கொடுக்கப்பாடியுள்ள பாடல்கள் பல, சிலேடைப் பாடல்கள் பல. உள்ளம் கிளர்ந்தெழுந்த காலத்துத்தோன்றிய பாக்கள் பல அத்துணையும் கருத்துக் குவியல்கள். செஞ்சொல் தமிழ் இன்பப் பாக்கள். படிப்போம், சுவைப்போம். வாழ்க கவிஞர் துரை!

## பாட்டின் விரைவு

ஆசிரியர், வேம்பத்தூர்க் கவிராயர் பாடல் இயற்றும் வேகத்தைக் குறித்துப் பாடியது.

கண்பார்வை யாலே கவர்ந்திடும் பெண்ணரசே
மண்பால் மதித்து மகிழ்வது—வெண்பாவை
நாம்பத்தென் றெண்ணுமுன் னாலே யியற்றிடும்
வேம்பத்தூர்ப் பாட்டின் விரைவு.

பாக்களில் சிறந்தது வெண்பா "வெண்பாவில் புகழேந்தி" என்ற சிறப்புப்பெற்றவர் புகழேந்திப்புலவர் கவி காளமேகப் புலவரும் வெண்பாப் பாடுவதில் வீறுமிக்கவர், பிற்காலத்தில் வேம்பத்தூரார் எனப்புகழ் பெற்றவர் வேம்பத்தூர்க் கவிராயர் அன்னார் வெண்பாப் பாடுவதிலுள்ள விரைவினை திரு துரை அவர்களின் வெண்பா விரைவு தெளிவாக்குகிறது. நாம் பத்து எண்ணுவதற்கு முன் வெண்பாவைப் பாடி முடிக்கும் தமிழ்க்கவிஞர் திறமை தான் என்னே!

கவிஞர் அவர்கள், மானமதுரையின் மண்ணைச் சிறப்பித்துப் பாடியது,

தொடமுந்தி விம்மி முட்டும் தொந்தி விரல்நம்
மிடுமந்த ரங்கமட்டும் இல்லை—கடமுந்தான்
கானமுதமளிக்கும் காரணம் முக்கியமாய்
மான மதுரையின் மண்.

கடம்; ஒரு இசைக்கருவி; தொந்திமுட்டும் கருவி விரல் தடவி, தட்டி ஒலியெழுப்பக்கூடியது. அதன் ஒலிகேட்போர்க்கு அமுதமாக இருக்கும். அமுத ஒலியைக் கடம் எழுப்பதற்குக் காரணம் எது தெரியுமா? மானமதுரை மண் என்று கவிஞர் கூறியுள்ள சிறப்பைக் கடமறிந்தார் அறிவார்.

நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய வள்ளல் பாண்டித்துரைதேவர் அவர்கள் பற்றி வேம்பத்தூர் கவிஞர் திரு. அம்பிகாபதி அவர்கள் ' சங்கத்தைத் தாபனம் செய்தான்'' என்ற ஈற்றபடி கொடுக்கப் பாடியது.

நரியைப் பரியாக்கும் நாயகனே வந்து
திருவிளை யாடல்கள் செய்த—புரியிலே
துங்கனுக்ர பாண்டித் துரைபார் மறந்ததமிழச்
சங்கத்தைத் தாபனம்செய் தான்

மதுரைச் செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான், மணிவாசகருக்காக நரியைப் பரியாக்கிய திருவிளையாட்டினை ஆலவாய் நகரில் செய்து காட்டினார். சேதுபதிமன்னர் வள்ளல் பாண்டித்துரைத்தேவரவர்கள் தமிழ்மக்களுக்காக நான்காம் தமிழ்ச் சங்கத்தைக் கூடல் மாநகரில் நிறுவினார் என்பதை நயமாகவும் முறையாகவும் அழகுறப் பாடியுள்ள திறம் பாராட்டிற்குரியது.

—○—

# சங்கச் செய்திகள்

## ஆலோசனைக் கூட்டம்

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர் பட்டம் பெற்றவர்கள் 1976-க்குப் பின் வேலைவாய்ப்புப் பெற இயலாத முறையில் அரசினர் பிறப்பித்திருந்த ஆணை குறித்து ஆலோசனை நடத்துவதற்காக மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் இணைப்புப் பெற்றுள்ள அனைத்துத் தமிழ்க் கல்லூரி நிர்வாகிகளும், முதல்வர்களும் அன்று கூடினார்கள். குறிப்பாக ஜெபரத்தினம், இளங்கோ தமிழ்க் கல்லூரி, திருநெல்வேலி. திரு. எஸ் மூர்த்தி, கலைமகள் தமிழ்க் கல்லூரி, தக்கலை. சகோதரி எமரென்சியா மேரி, தூயவளனார் செந்தமிழ்க் கல்லூரி, திண்டுக்கல் முதலிய முக்கிய பிரமுகர்களின் ஆலோசனைக் கூட்டம் செப்டம்பர் 14-ஆம் நாள் காலை 10 மணியளவில் சங்கச் செயலர் திரு. டி. பி. எம். பெரியசாமி அவர்கள் முன்னிலையில் சங்கத் துணைத்தலைவர் திரு. காசிநாததுரையவர்கள் தலைமையில் நடைபெற்றது. அனைத்துக்கல்லூரி நிர்வாகிகளும் தங்கள் ஆலோசனையை நல்கி, நாம் எடுக்க வேண்டிய செயல்களையும் விளக்கிப் பேசினார்கள். இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவினையொட்டி புலவர்கள் பாதிக்காவண்ணம் அரசினரைச் சந்தித்து வேண்டுவன செய்ய குழு ஒன்று நியமிக்கப் பட்டுள்ளது.

## கலைமகள் விழா

வழக்கம் போல் 13—10—75ஆம் நாள் திங்கள் அன்று மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் கலைமகள் விழா செந்தமிழ்க் கல்லூரி தாளாளர் திரு. மா தனுக்கோடி பாண்டியன் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது சங்கத் துணைச்செயலாளர் திரு. ஆ. ஆண்டியப்பன் அவர்கள் முறையான வழிபாடுகள் செய்தார். கல்லூரிப்பேராசிரியா்கள் அலுவலர்கள் மாணவர்களும் கலந்து கொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

## தமிழன்பர்களுக்கு வேண்டுகோள்

வழக்கம்போல் இவ்வாண்டும், மதுரைத் தமிழ்ச்சங்கத் தேர்வு உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கல்லூரிகளுக்கும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும் நடத்தப்படும். தேர்வு பற்றிய அறிக்கைகள் விரைவில் பள்ளித் தலைமையாசிரியர் அவர்கட்கும் கல்லூரி முதல்வர் அவர்கட்கும் அனுப்பி வைக்கப்படும். அன்பர்கள் தேர்வு பற்றிய அறிக்கைகளைப் பெற்று தங்கள் கல்வி நிலையத்தில் உள்ள மாணவர்களைப் பெருவாரியாகச் சங்கத் தேர்வில் கலந்து கொள்ளச் செய்து சங்கப் பணிகள் சிறப்புடன் நடைபெறத் தங்கள் ஒத்துழைப்பினை நல்கும்படி அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

---

## புகுமுகவழிப் புலவர்

### மாநிலத் தமிழ்க் கழகம்,

### 32. மாலை கட்டித்தெரு, சிதம்பரம்–608001.

உலக மொழிகளுள் இன்றுவரை நின்று நிலவும் அன்னைத் தமிழை வளர்க்கவும், உயர்த்தவும் தமிழ்ப் புலவர்களுக்கு வேலை வாய்ப்புப் பெருக்கவும் சிறப்பாகப் புலவர் புகுமுகம் படித்துப் புலவர் பட்டம் பெற்றவர்களின் பெருமையையும் நலன்களையும் காக்கவும் புகுமுகவழிப் புலவர் மாநிலத் தமிழ்க் கழகம் அமைக்கப் பெற்றுள்ளது.

தமிழ்ப் புலவர்களின் எதிர்கால நலனைக் கருதியும், புலவர் என்ற இனிய எளிய வழக்கான தமிழ்ச் சொல்லே திகிரிப் பெயராக மாற்றுதல் செய்தல் போன்ற பல குறிக்கோள்களுடன் அமைக்கப்பட்ட இக்கழகத்திற்கு டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்கள் சிறப்புத் தலைவராவர்.

விபரங்களுக்கு செயலாளர் திரு புலவர் சோம இளவரசு என்ற முகவரிக்கு தொடர்பு கொள்ளுங்கள்.

ஆ ஆண்டியப்பன்,
பொறுப்பாசிரியர்: 'செந்தமிழ்'

# சங்கப் புலவனுக்குத் தனிச்சலுகை!

## மக்களரசு வழங்குமாக!

---

பொற்காலம் எனப்படும் சங்க காலத்தைக் காணுதவரும் 'கண்டு களிக்கும்' தன்மையில் நான்காம் தமிழ்ச் சங்கம் 'என்னும்' நற்றமிழ்க்கோயிலை நிறுவி, காலத்திற்கும் கன்னி தமிழுக்கும் பெருமை தேடித்தந்த பெருமணச் செம்மல், பாலவநத்தம் குறுநில மன்னர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களாவார் என்பது நாடறிந்தபேருண்மையன்றோ.

முதல், இடை, கடை என்ற மூன்று தமிழ்ச் சங்கங்கள் ஓங்குபுகழ் துலங்கிய இலக்கிய மதுரை காலத்திலும், கடற்கோட்களாலும் அழிந்த பின்னர், சற்றேறக் குறைய ஆயிரத்து அறுநூறு ஆண்டுகளுக்குப் பின் தமிழ்த்தாய்க்கு திலகமென ஓர் தமிழ்ச் சங்கத்தை, தனது உழைப்பாலும், பொருளாலும் உருவாக்கிய தன்னேரிலாத் தமிழ்த் தலைவன் வள்ளல் பாண்டித்துரைத்தேவராவார்.

சங்க காலச் சிறப்பனைத்தும் பிற்காலத்தில் பெற்றுயர்ந்த இம் மதுரைத் தமிழ்ச் சங்கத்திலே தமிழ்ப் புலமை யூற்று அருவியாகப் பெருக்கெடுத்து நாடெங்கும் நற்றமிழ்ப் பயிர் வளர்த்தது, ஆங்கு பயின்ற நூற்றுக் கணக்கான மாணவர்களுக்கு பாகுபாடற்ற முறையில் அனைவருக்கும் உணவு, உடை, உறையுள் அனைத்தும் இனமாக வழங்கிய வள்ளல், செயற்கரிய செயல் செய்த செந்தமிழ்க் குரிசில் மேதகு. பாண்டித்துரைத் தேவரவர்கள் என்பது நானிலமறிந்ததே.

தனித் தமிழால் உணர்வூட்டி, தமிழ் மணம் பரப்பி வந்த மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பயின்று தேர்வு பெற்ற புலவர்கள் தமிழுலகெங்கினும் பொலிவுடன் விளங்கி வந்தனர் என்றால் மிகைப்படுத்திக் கூறுவதன்று.

தமிழுக்குத்தாயாகி, அறங்கூறும் தந்தையாய், தமிழுலகிற்குப்பெருமை தேடித்தந்ததமிழ்க்களஞ்சியமாம் மதுரைத் தமிழ் சங்கத்தினைப் பாராட்டும் முகத்தன் ஆங்கு தேர்வு

பெற்றபுலவர்களை தமிழகப்பள்ளிகளில் தமிழாசிரியர்களாக பணியாற்றலாம் என்று ஆணை பிறப்பித்தது அற்றைய அரசு

(கல்விப்பிரிவு G. O. M. S. No. 625. நாள் 28—4—1966)

மீண்டும் ஆணையைத் திருத்தம் செய்து உயர்நிலைப் பள்ளிகளிலும் தமிழாசிரியர்களாகப்பணியாற்றலாம் என்ற சங்கத்திற்கும் மேலும் பெருமை தேடித்தந்தது அற்றைய அரசு. மனம், மெய், மொழிகளால் நன்றி கூறினர் மக்கள். எதிர்காலத்தை எண்ணி, எண்ணிகளிப்பில் ஆழ்ந்தனர்.

(கல்விப் பிரிவு மெமோ No. 93226/B2/66-1. குறிப்பு)

பொலிவோடும் வைகை எழிலோடும் விளங்கி வந்த தமிழ்க் கோயிலாம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் பால் பயின்று தேர்வு பெற்ற புலவர்களுக்கு 1976-ஆம ஆண்டு மார்ச்சு திங்களுக்குப் பின்னர் வேலை வாய்ப்பு அளிக்கப் படமாட்டாது என்று அறிவிப்புச் செய்தது இற்றைய மக் கள் அரசு.

தமிழ்! தமிழ் என்று தரணியெங்கும் முழக்கம் செய்து, தமிழுக்கு ஏற்றம் தந்த, அண்ணாவின வழி அமைந்த இன் றைய அரசு ஆணை கண்டு கண்ணீர்வடித்தது ஆயிரமாயிரம் தமிழ் நெஞ்சங்கள்

அதுமட்டுமல்ல..... !

அரசு குறிப்பிட்ட ஓராண்டுக்கு முன்னதாகவே தமிழ்ச் சங்கப் புலவர்களுக்குத் தடையும் விதித்து விட்டது செய்தித் தாள் விளம்பரங்கள் மூலமாக.

ஆம்......

இதோ......

1976 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வேலை வாய்ப்புப் பெற முடியாது என்று அறிவிப்புச் செய்த அரசு, 1975-ஆம் ஆண்டு நடைபெற இருந்த ஆசிரியர் பயிற்சிப்பள்ளிக்கு மதுரைத்தமிழ்ச் சங்கப் புலவர்கள் விண்ணப்பிக்க வேண்டாம் என்று நசுக்கி விட்டது புலவர் பெருமக்களின் எதிர்கால வாழ்வை.

இன்பக் கனவு கண்டு எதிர்கால வாழ்வை வளமாக்கிக் கொள்ள இருந்த புலவர்களை துன்பக்கடலிலே துவண்டு விழச் செய்தது அரசு ஆணை.

செங்குருதி கொட்டியது தமிழ்ப் பெருஞ்சான்றோர் நெஞ்சங்களில்

எங்கும் தமிழ், எல்லாம் தமிழ் என்னும் தமிழகத்திலே சங்கப் புலவருக்கு ஏன் இந்த வஞ்சகநீதி! என்று ஆயிர மாயிர மக்கள் உளங்களில் கேள்வி எழுவதை நாம் அறிந்தோம்.

பட்டணங்களில் மட்டுமல்ல, பட்டி தொட்டிகளிலெல்லாம் தமிழ்வளர, தனியா உழைப்பினைக் கொடுத்து தமிழ் மணம் பரப்பிவரும் இன்றைய மக்கள் அரசுக்கு, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலையை மாற்றி நிலையான வாழ்வளிக்கவும், தமிழுக்குத் தாயகமாம் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற்கு ஏற்பட்டுள்ள இழுக்கை மாற்றி மீண்டும் உரிமை வேண்டி அரசுக்கு விண்ணப்பம் செய்ய முடிவு செய்தது தமிழ்ச் சங்கம்,

அதன் வழியே திருவாளர். மா. தனுக்கோடிபாண்டியன் பி. ஏ., பி. எல். தாளாளர் செந்தமிழ்க் கல்லூரி, திருவாளர் டி. பி. எம். பெரியசுவாமி செயலாளர் மதுரைத் தமிழ்ச் சங்கம்; திருவாளர் ஆ. ஆண்டியப்பன் துணைச் செயலாளர் ஆகியோர் 27—9—75 ஆம் நாள் தமிழக கல்வி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களைச் சந்தித்து சங்கநிலையை விளக்கி விண்ணப்பம் செய்தனர். கல்வித்துறை உயர் அதிகாரிகளையும் கண்டு முறையாக விண்ணப்பம்செய்தனர். உயர்திருவாளர்கள் செபரத்தினம் முதல்வர் இளங்கோ தமிழ்க் கல்லூரி நெல்லை; சீவகன் தாளாளர் அண்ணாத் தமிழ்க்கல்லூரி திருச்சி; தமிழ்மாறன் முதல்வர் திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரி திருவண்ணாமலை ஆகியோர் உடன் சென்று உரியவழிகளில் உதவி செய்தனர் அவர்களுக்கு உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

எனவே,

ஆங்காங்கேயுள்ள தனித்தமிழ்க்கல்லூரி உரிமையாளர்கள், தமிழ்ச் சங்கப்புலவர்கள் தங்கள், தங்களது எதிர்கால

வாழ்வை மனதிற் கொண்டு, மதுரைத் தமிழ்ச் சங்க நிருவாகிகளால் அரசுக்கு அளிக்கப்பட்ட 27—9—75 ஆம்நாள் விண்ணப்பத்தை நிறைவேற்ற வலியுறுத்தித் தீர்மானங்கள் செய்தும் கம்பிச்செய்திகள் மூலமாக அரசுக்கு அனுப்ப வேண்டுகிறோம்; கூடுமானால் அமைச்சர்களையும் சந்தித்து ஆவன செய்ய வேண்டுகிறோம்.

கன்னித் தமிழ்க் கோர் கலங்கரை விளக்காய், தாயகத்தின் தனிப்பெருமை தமிழ்க் களஞ்சியமாம், சங்ககாலத்துக் கிணையாக 20ஆம் நூற்றாண்டில் பொலிவுடன் விளங்கிவந்த மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்களுக்கு புத்துயிர் அளித்து அவர்களின் எதிர்கால வாழ்வை வளப்படுத்துவதில் இம்மியும் தவறிவிடாது மக்கள் ஆட்சியை மலரச்செய்ய இன்றைய கழகஅரசுஎன்று முழுநம்பிக்கையில் ஆழ்ந்துள்ளனர்

தரணிபுகழும் தன்னேரிலாத் தமிழ்ப் பெருந் தலைவன், நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவி, தக்கதோர் வரலாற்றை தமிழகத்திலே படைத்த மூப்பால் தந்தையும், அப்பரும் நிகழ்த்திய அறநெறிக் கொப்ப மறைபுகழ் வாழ்வும் மாண்புடன் எய்த; நிறைவளர் தமிழால் நெடுதுவாழ; நெஞ்சால் வாக்கால், மெய்யால் வியத்தகு அருளைப் பொழிந்து வாழ் வாங்கு வாழ்ந்த வண்டமிழ்க் குரிசில் மாறன் பாண்டித் துரைத்தேவரவர்கள் மாண்பின் வழி ஆறுதல் அடைந்துள்ளனர் புலவர்கள்.

சங்கப்புலவர்களுக்கு மீண்டும் உரிமை வழங்குவதிலே முன்னுரிமை தந்து அவர்களுக்குப் பிரத்தியேகமான தனிச் சலுகைகள் வழங்கியும், நற்றமிழ்த் தொண்டு புரிய வழிசெய்யும் அரசு என்பதில் ஐயமில்லை.

வருகபுலவர்! தருகபுரவலர்! உயர்கதமிழ்! என்றுதமது உள்ளக்கிடைக்கையினை உலகறியச் செய்த வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களது திருவாக்கினை நினைவு கூறுவோமாக.

உழைப்போம்! உயர்வோம்!

உரிமைகளைப் பெருவோம்!

ஆ ஆண்டியப்பன்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

சங்கம் நிறுவி தமிழ் வளர்த்த

வள்ளல். **பாண்டித்துரைத் தேவர்.**



தோற்றம் : **21-3-1867**

மறைவு : **2-12-1911**

# நல்லோர் செம்மல்

T. P. M. பெரியசுவாமி,
செயலர்,
மதுரைத் தமிழ்ச் சங்கம்.

தோற்றுவாய் :-

'சிந்துகின்ற செங்குருதி செந்தமிழுக்குத் தான் என்றால் செந்தமிழ் நாடே சிவப்பாகட்டும்' என்று முழக்கமிட்டுச் சென்றான் பாவேந்தன். அவனுக்கு முன் வாழ்ந்த புலவர்களும் புரவலர்களும் உயிரினும் உயர்வாக உயர்தனிச் செம்மொழியைப் பொன்னைப்போல் கண்ணைப்போல் போற்றினார்கள் புகழ்ந்தார்கள். ஏற்றினார்கள், ஏடுகொண்டு தமிழ்நாடெல்லாம் எழுதினார்கள் எழுதின ஏடுகொண்டு கூடினார்கள். ஆண்டதமிழை - அழகுத் தமிழை அரங்கேற்றினார்கள். சிங்கம் நிகர்தமிழைச் சங்கம் வைத்துச் சாதித்தனர். தலைச்சங்கத்தைத் தலைதூக்கச் செய்தான் காய்சினவழுதிப் பாண்டியன். இடைச்சங்கத்தை இனிதமர்த்தினான் வெண்டேர்ச்செழியன். நன்மதுரையான அத் தொன்மதுரையைக் கடல் கலங்கப் படுத்தியது: காண மதுரையாக்கியது மூன்றாம் சங்கத்தை முடத்திருமாறன் முறைப்படுத்தினான். போற்றுவார் இன்மையால்-பொல்லாதார் படையெடுப்பால் - ஏமாற்றுக்காரர்கள் இங்கு குடியேறியதால், இங்கும் அங்குமாக மடிகொண்டு மங்கியது. இவைகள் வரலாறு காட்டும் வன்மைகள்.

**தமிழ்த் தோற்றம் :-**

'அன்று ஆண்ட பாண்டியன் செந்தமிழ் மீண்டும் வந்தது போல்' தேவையான காலத்தில் நான்காம் தமிழ்ச் சங்கத்தை நன்மதுரையில் நிறுவ வந்துதோன்றினார் பாண்டியன். பாண்டித்துரைச்சாமி என்ற வழித்தோன்றல். பொற்காலம் எனப்போற்றப்படும் சங்ககாலச் சிறப்பினைத்தும் பிறகாலத்தில் பெற்றுப் பெருத்தது முகவை என்னும் சேதுநாடு. திருத்தலங்களும் தெய்வப் புலவர்களும் திருவுருப்பெற்று திகழ்ந்த நாடு. சேது காவலர்கள் பாதுகாவலில் செழித்தநாடு. நாட்டுக்கு நல்லவராய், தமிழ்

ஏட்டிற்கு ஏடகமாய், கற்ற கவிவாணர்க்குக் காவலராய் தேமதுரத் தமிழோசை திக்கெட்டும் பரவவழி செய்பவராய் வசையற்று வாழ்ந்தவர்கள் சேதுபதி பரம்பரையினர். 'சிகாகோ உலகசமயப்பேரவைக்கு' வீரகுருவிவேகானந்தரை அனுப்பி இந்து சமயத்தை இகவுலகோர் அறியும்படி செய்த பெருமை பாசுகரசேதுபதிக்கே உண்டு. வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபில் வந்து தமிழ்வாழத் தோன்றியவர் பாண்டித்துரைத்தேவரவர்கள். பாலவநத்தம் ஜமீன்தார் பொன்னுச்சாமித் தேவருக்கு 1867-ஆம ஆண்டு பாண்டித்துரைச்சாமி என்ற பெயருடன் வந்துதித்தார்.

'தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்' என்றான் வான்புகழ் வள்ளுவன். 'சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே' என்று புகன்றார் பொன்முடியார் என்ற பெண் புலவர். கடமையைக் கண்ணெனக்கருதிய பொன்னுச்சாமித்தேவர் மகனை மண்ணிலே தமிழ் மன்னனாக்கினார். அரசுக்கல்வியோடு தமிழ் முரசுக் கல்வியையும் பயிற்றுவித்தார். தந்தையறிவுமகனுக்கு. தாய் எட்டடி என்றால் பிள்ளை பதினாறடி கருவிலேதிரு உருவிலே உன்னதம் கற்பவைகசடறக் கற்றார் நின்றார் அதற்குத்தக. நீண்ட புகழ் கொண்டார். தமிழ்ச்சிலையானார். நம் நினைவில் நிலையானார் நெற்றிநிரம்பத் திருநீறு; பொற்குடத்திறகுப் பொட்டிட்டதைப் போன்று சந்தனப் பொட்டுக்கு மேல் குங்குமப் பொட்டு. ஆதவனும் அழகுநிலவும் ஒருசேர அமர்ந்தது போன்று காதில் வைரக்கடுக்கன்கள் வளைந்திருக்கும் விஞக்குறிபோல் முருக்கிவிட்ட மீசை. முழு நிலவு போன்ற முகப்பொலிவு சரிகைக்குல்லா நீண்ட அங்கி. செழியனும் மாறனும் சேர்ந்ததோர் உருப்பெற்றது போன்ற திருவுரு. தேவாரம் அவரைச் சூழ்ந்திருக்கும திருஆரம். திருவாசகம் அவர் உருகும் ஒருவாசகம் அல்லும் பகலும் அருமைத் தமிழ் மாந்தினார் புன்னகை வேண்டுமென்றால்புலவவோர் இன்னகைவேண்டுமென்பார்.

**சங்கத் தோற்றத்திற்கான காரணம் :-**

தமிழ்க்காவலர் சிறந்தநாவலராகவும் விளங்கினார். அவரது முப்பத்து நான்காவது வயதில் முச்சங்கங்கள் வாழ்ந்த முக்கூடல் மாநகருக்கு சிறப்புச்சொற்பொலி வாற்ற வந்திருந்தார். ஒப்பீட்டுக் கருத்துக்காகத் தீந் தமிழ்த் திருக்குறளையும் கற்றவர் போற்றும் கம்ப

இராமாயணத்தையும் தேடினார்; திகைப்பு மிஞ்சியது நாடினார்; நலிவுமிஞ்சியது. வாடினார்; வருந்தினார் சங்கம் வைத்துப்போற்றிய மதுரை மண்ணிலே - சிங்கம் நிகர் தங்கமறவர்கள் போற்றிய தமிழ் மதுரையிலும் மங்கிவிட்டதே என்று மயங்கினார். தமிழின்றித் தான் வாழத் தயங்கினார். அன்றிலிருந்து அதே நினைவு அவருடைய கனவுநனவாக- ஏக்கம் எழுச்சிபெற 1901-ஆம் ஆண்டு மேமாதம் 21 22-ஆம் தேதிகளில் மாநில அரசியல் மாநாடு மதுரை மாநகரில் தொடங்கியது அதில்வரவேற்புக் குழுதலைவராக வந்தமர்ந்த வள்ளலுக்கு நல்லோர் செயமலுக்கு செயற்கரியன தமிழுக்காகச் செய்ய வேண்டும் என்ற செம்மாப்புத் தான் செழித்தோங்கியது. அன்றிலிருந்து நான்கு மாதம் நல்லத்தமிழ்ப் புலவர்களை நாடி ஓடி வீடுதோறும் ஏடு தேடி நான்காவது தமிழ்ச் சங்கத்தை 1901-ஆம் ஆண்டு செப்டம்பர் 14-ஆம் நாள் புலவர்கள் போற்ற தமிழ்ப் புல்லர்கள் பொசுங்க புதுப்பித்தார். தமிழர்கள் நெஞ்சில் தன்னைப் பதிப்பித்தார் அவ்வமையம் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள தமிழ்ப்பெரியவர்களுக்கு தம்கைபடவே எழுதி அழைப்பிதழ் அனுப்பியிருந்தார் அதில். தமிழ்ச் சங்கத் தொடக்கவிழாவிற்கு தாங்கள் வரும்போது தங்களிடமுள்ள தமிழ்ஏடுகளை மறவாது எடுத்துவாருங்கள்; அதைப் படிஎடுத்துக் கொண்டு தந்துவிடுகிறேன். தாங்கள் விரும்பினால் அதைத் தங்கள் பெயரில் தமிழ்ச் சங்கத்தில் சேர்த்துக் கொள்கிறேன். தங்கள் தமிழ் அறிவைத் தமிழ்ச் சங்கத்திற்குக் காணிக்கையாக்குங்கள் என்று வேண்டி எழுதியிருந்தார் பாண்டிவேந்தர். வந்து குவியவில்லை யென்றாலும் அவரது வளமான உள்ளம் வாகை சூடியது.

செயற்கரியன :-

முதலில் சேதுபதி உயர்நிலைப் பள்ளியிலே ஓர் அறையிலே கருவுற்றது தமிழ்ச்சங்கம். தேவருக்குத் தமிழ்ச் சங்கம் திகழ்ந்தோங்க வேண்டும் என்ற தீரா ஆசையிருந்தது. அதற்காகச் சீமைக்குச் சிவம் ஈந்த சேதுபதி பாசுகரரைச் சிந்தித்தார். சிறப்புக் கிடைத்தது. இப்போது உள்ள தமிழ்ச்சங்கக் கட்டிடம் வீராச்சாமி நாயக்கருக்குச் சொந்தமாக இருந்த கட்டிடம் பாண்டித்துரைத்தேவர் இங்கு வந்தால் நண்பர்களைப்பார்க்கவும் கலந்துரையாடவும் தமிழ் ஆய்வும் நல்லதொரு இடம் வேண்டும் என்றுதான்

இதைவாங்கினார். இவர் சோமசுந்தரகடவுளிடம் நல்ல பற்றுடையவர், எனவே இக்கட்டிடத்திற்குச் சோமசுந்தர விலாசம்' என்றுதான் பெயர் வைத்தார். சேதுபதி உயர் நிலைப்பள்ளிக்கு அருகே இப்பொழுதுள்ள தலைமையஞ்சலகக் கட்டிடத்தில் தமிழ்ச் சங்கம் நிறுவலாம் என்று சென்று பார்த்தார். மனம் ஒப்பவில்லை. தான் தங்குவதற்கு என்று வாங்கிய சோமசுந்தர விலாசத்தையே தமிழ்ச்சங்கத்திற்கு தந்த தகைமையை—தணியாத தமிழ்வேட்கையைத் தமிழ் நாடு போற்றக் கடமைப் பெற்றிருக்கிறது.

அன்னசத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்னயாவினும் புண்ணியங்கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் —

என்ற இவருக்குப் பின்னால் 1882-இல் தோன்றிய பாட்டுக்கொரு புலவன் பாரதியின் ஆழ்ந்திருக்கும் கவியுள்ளத்தைக் கருவூலமாகக் கொண்டார். சேதுபதி மன்னர் கலாசாலை என்று தொடங்கி அதில் படிக்கும் வயதுடைய மாணவர்களை வம்மின் என வாழ்த்துக்கூறி வரவேற்பு அளித்து உணவுஊட்டி உடையுடுத்தி உறையுள்வுதவி படிப்பித்தார். தலைக்கு எண்ணெய் விளக்கெரிக்க எண்ணெய்கூடக் கொடுத்து குன்றனைய மொழிக்கு நன்று செய்தார் தமிழ்ச்சங்கத்தில் நூல்களை அச்சிடுவதற்கென்றே தமிழ்நாட்டிலேயே சிறந்த 'தமிழ்ச்சங்க முத்திராசாலை' என்ற பெயருடன் அச்சுக்கூடம் நிறுவினர். இவ்வாறு இளைஞர்களைப் பிடிப்பித்து, அவர்களை படிப்பித்து தமிழ் நூல்களைப் பதிப்பித்து அறிவைப் பெருகச்செய்தார். நம்மை உருகச் செய்தார். பதிற்றுப்பத்து என்ற நூல் இங்கு இருந்தது. அதைக் கரையான் முன்னும் பின்னும் உள்ள பகுதியை விரும்பிவிட்டது. எஞ்சியதை உ. வே சாமிநாதய்யார் எடுத்துப் பதிப்பித்தார். இங்கிருந்து 'செந்தமிழ்' என்ற இதழ்வெளிவந்தது. இன்னும் இன்னல்களுக்கிடையே எழுந்து வீரநடை போடுகிறது. முதலில் செந்தமிழ் இதழுக்கு இரா. இராகவையங்கார் ஆசிரியராக இருந்தார். அடுத்து மு. இராகவையங்கார் ஆசிரியரானார். தமிழ்ச்சங்கத்திற்கு புதுக்கோட்டை மன்னருடைய ஆதரவும் இருந்தது. இப்பொழுதுள்ள புதுக்

(50-ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியப் பெருமகனார் அன்று உரைத்தவை

புலவர் வை வேணுகோபாலன்
தாராபுரம்

* பாடல் பெற்ற பைந்தமிழ்த் தலங்களுள் தஞ்சை வட்டத்துள்ள நஞ்சை வள்மார் தெய்வத் திருநகர்-திருக்காட்டுப் பள்ளி—திருக்காட்டுப்பள்ளிக் கருகில்—இளங்காடென்னும் பெயர் பெற்ற வளங்கொழிக்குஞ்சிற்றூர் ஒன்றுண்டு...

அச்சிற்றூரில்-ஐம்பது ஆண்டுகட்கு முன். "நற்றமிழ்ச் சங்கம்" என்ற பெயரில் நற்றமிழ்ப் பயிர்களை வளர்க்கும் நாற்றங்கால் ஒன்றுண்டு. அங்குள்ள நாற்றங்காலிலிருந்து நற்றமிழ்ப் பயிர்களைப் பறித்து-பாவலர் பலரும் பல்வேறிடங்களுக்குச் சென்று நடுவர்.

அந்நாற்றங்காலின் அருந்தமிழ்ப் பயிர்களை நாடி அறிஞர் பலரும் வருவர். அவ்வாறு வந்து போனவர்களில் பைந்தமிழ்ப் பெரியார் பாண்டித்துரைத் தேவரும் ஒருவருமாவர். அரசன் சண்முகனார்; மறைமலையடிகள், மகிபாலன் பட்டி மணிகதிரேசஞ் செட்டியார், போன்றவர்களும் வருகை தந்து நற்றமிழ்ப் பயிர் வளர நல்லுதவி புரிந்துள்ளனர்

அந்நாற்றங்காலை அன்புடன் போற்றிய அரிய தலைவர்—எழுபது ஆண்டுகட்கு முன்பிருந்த பம்பையாச் சேதிராயர் அவர்களாவர் பம்பையாச் சேதிராயர் அவர்கட்குப் பின் தலைவராக இருந்தவர் மு. கோவிந்தசாமிச் சேதிராயர் ஆவர். பின்னவர், எனக்கு இளமையில் இன்றமிழ் கற்பித்த இனிய ஆசிரியருமாவர். பாண்டித்துரைத் தேவர் சோழவந்தான் சண்முகம்பிள்ளை போன்ற பெரியர்களிடம் பேசிப் பழகும் பேறு பெற்றவரும் ஆவர். நான் சேதிராயர் அவர்களிடம் நல்லதொருமாணவனாக நலம் பெற்ற காலத்தில்

தேவரைப் பற்றியும், பிள்ளை அவர்களைப் பற்றியும் கூறிய செய்திகளையே இங்கு குறிப்பிட விழைகிறேன்.

தெய்வீகக்கல்வித் திருநலம் பெற்றவர் அரசன் சண்முகனாரவர்கள். சண்முகனாரின் தெய்வக் கவிகள் தேவரின் உள்ளத்தில் தேனமிர்தத்தைப் பொழிந்தன.

அன்று பூத உடலை நீத்து புகழுடம்பைப் பெற்றவர்களுக்கு, கையறுநிலை என்ற பெயரில் கவிஞர்கள் இரங்கற் பாக்களைப் பாடித் தங்களைக் கலக்கத்துக்குரியவர்களாகக் காட்டிக் கொள்வதுண்டு.

சண்முகக் கனியுண்ட தேவர்தான் அமரரானால்—அருந் தமிழ்ப் புலவராகிய அரசன் சண்முகனார்—எனைப்பிரிய ஆற்றாது இரங்கல் பாடினால் எவ்வாறிருக்கும் என்ற இன்ப வெள்ளத்தில் தனது கற்பனை உள்ளத்தை மூழ்கடித்துக் கொண்டார்.

தேவர் பிள்ளை அவர்களைப் பார்த்து— புலவர் தலைவ! இறைவன் திருவடி நிழலை, எளியேன் எய்தினேன் என்பதாகக் கொண்டு இரங்கலொன்று பாடி ஈந்தருள்க நான் உயிரோடிருக்கும் போதே என்னைப்பற்றித் தாங்கள் பாடிய இன்றமிழ்ப் பாட்டின் இரங்கற் சுவையினை இனிதுண்டு மகிழ விரும்புகிறேன், என்றாராம்.

இவ்வரலாற்றின் இந்நிகழ்ச்சியே "வீரர்க்குள் வீரனிவன்" என்ற என் கவிமலர் தோன்றக் காரணமாகும் அதுபோலவே, அரசன் சண்முகனார் பற்றிய குறிப்புகளும். அன்னரது வரலாற்றில் வந்த குறிப்புக்களேயாம்

இளங்காடு என்னும் சிற்றூரில் நற்றமிழ்ச் சங்கம் தோன்றி வளர்ந்த காலம் 1875 முதல் 1940 ஆண்டு வரை என்பதை யுணர்க.

1. கிளிமுத லான பேசும் பறவைகள்
 கிளர்ந்து நின்று
துளிவிழு மேக முட்டும் தூயநற்
 சோலை தோறும்
தெளிதமிழ் கற்று வாதம் செயவரும்
 புலவர் தம்மை
விளித்துவா தத்தால் வென்று விரட்டிடும்
 பாண்டி நாட்டில்

2. பாலவ னத்தம் என்னும் பழம்பதிக்
கரசன் ஆவான்
பாலைஅன் னம்போல் கற்றுப் பசுந்தமிழ்
வேந்தும் ஆனான்
மேலிவர் தான்பாண் டித்து ரைத்தேவ
ரென்பர் அன்னான்
நாலாம்சங் கத்தைக் கண்டு நற்றமிழ்
வளர்த்து வந்தான்

3. முத்தமிழ்ச் சங்கம் கண்ட மூத்தநம்
பாண்டி மன்னர்
மெத்தநாம் வளர்த்த மென்மைத் தமிழ்மகள்
எவ்வா றுள்ளாள்?
ஒத்துநாம் உணர்வோம் என்றே உம்பராய்
வானில் நின்று
''இத்தேவன் தமிழ்வ ளர்ப்பில் எம்மையும்
வென்றான் என்றார்

4. [1] கண்டமிழ் தூறப் பாடிக் கடவுளர்
அருள்பெற் றோங்கும்
தண்டமிழ்ச் சோழ வந்தான் சண்முகம்
பிள்ளை என்பார்
[3] உண்டமிழ் தூக்கப் பாண்டித் துரையிடம்
ஓடி வந்தார்
பண்டமிழ்ப் பாக்கள் பாடிப் பரவசப்
படுத்தி நின்றார்

---

4 1) (கண்டு+அமிழ்து+ஊற) 1. பார்த்து—அமிழ்து—ஊற
2. கற்கண்டு போன்ற

3) உண்டு+அமிழ்து+ஊக்க — முன்னர் தான் உண்ட அமுதம் போன்ற உணவு செல்லத் தூண்டதலால்
உண்+தமிழ்+தூக்க—தான் முன்புபடித்த தமிழ்ப்பாக்களைப்பாட

5. பாட்டினைக் கேட்ட தேவர் சண்முக
அரசைப் பார்த்து
வீட்டுல கடைந்தேன் என்றால் மென்றமிழ்ப்
புலவீர் நீவிர்
கேட்டுடன் இரங்கற் பாட்டொன் றெழுதுவீ
ரன்றோ? அவ்வண்
ணீட்டுக! கேட்டுப் பின்னர் தெய்வதம்
பெறுவேன் என்றார்

6. செந்தமிழ்த் தேனில் வீழ்ந்து தேவராய்ப்[1]
போன தேவர்
பைந்தமிழ் இரங்கற் பாட்டின் பலாச்சுவை
கண்டு பின்னர்
பிந்துவன் என்று சொன்ன பின்குறிப்
பொன்றை முன்பு
[4] தந்தையற் குபதே சித்த சண்முகன்
தானே ஓர்வான்!

7. தமிழ்வளர்ப் பதற்கே நான்காம் சங்கமும்
கண்ட தன்றி
அமிழ்தெனக் கற்றுத் தேர அரியசெந்
தமிழ்க்கல் லூரி
அமிழ்ந்த நூல் ஆராய்ச் சிக்காம் அழகுநூல்
நிலைய மற்றும்
கமழ்ந்திடக் கண்ட போது கன்னித்தாய்
மகிழ்ந்து போனாள்

8. நற்றமிழ் கற்றுத் தேர்ந்த நாவலர்
பலருங் கூடிச்
சொற்றமிழ் ஆய்ந்து இட்ட தூய செந்
தமிழென் றப்பேர்
உற்றவோர்த் திங்கள் ஏட்டை உலவிட
விட்ட போது
கற்றபாண் டித்து ரையே கதியெனத்
தமிழர் கொண்டார்

---

6-1. தேவராய் = அமரராய்

2. முருகப் பெருமானும், அரசன் சண்முகனும் தந்தையர்க்கு நேசித்தவர்கள்.

9 உடல்பொருளா வியெல்லாமித் தமிழுக்கே
உரியதாக்கி உயர்ந்த தேவன்
கடல் போன்ற பொருளுதவி; வெள்ளையரைக்
கப்பலோட்டி எதிர்த்து நின்ற
அடலேறு வ. உ. சி. அவர்களுக்கே
அளித்ததீரன்; இவனே நாட்டு
விடுதலைக்கு முன்னின்ற வீரர்க்குள்
வீரனிவன் மேன்மை வாழ்க

## சிலேடை வெண்பா

10. பாண்டித் துரைத்தேவர் பைந்தமிழைத்
தாழ்த்துவோற் கோ
பாண்டித் துரையாவார்–பாவலரப்—
பாண்டித்
துரையென வந்தார்க்குச்
சொற் பொருள் கேட்டுத்
துரை யென ஈவார் துணிந்து

---

1. பைந்தமிழைத் தாழ்ந்து வோன் +(கு) கோப+
2. ஆண்டித்துரையாவார்:
பாவலர் + அப்பா + (நண்) ஆண்டித்துரை(ஏழை)

1. சொல்+பொருள்+கேட்டு—தாங்கட்கு வேண்டிய செல்வங்களை சொல்லுமாறு—கோ
2. சொல், பொருள் கேட்டு - தாங்கள் பாடிவந்த பாடல்களை சொற்பொருள் நயங்களை யெல்லாம் சொல்லுமாறு கேட்டு.

—*—

# தமிழ் காத்த தக்கோய் வாழி

**பெ. இளவரசு, எம். ஏ. பி. டி.**
தமிழ் விரிவுரையாளர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி,
நீலிதநல்லூர்.

---

கடைச்சங்கம் அழிந்தபின். தமிழ்என் றுகும்
கற்றறிந்த புலவர்தம் நிலையென் றுகும்
இடைப்பட்ட காலத்தில் தமிழ்வா டிற்றே
என்றெல்லாம் நிலையழிந்த நேரந் தன்னில்
படை கொண்ட பாண்டியர்தம் குலத்தில் வந்த
பாண்டித்துரை வேந்தே! இம் மண் ணு லகில்
தடையேதும் இல்லாமல தமிழ்வா முத்தான
தலைநகரில் தமிழ்ச்சங்கம் தோற்று வித்தாய்.

நாடாளும் பொறுப்பினையும் ஆற்ற லோடே
நாளும்நீ ஆற்றியேதான் சிறப்புக் கொண்டாய்
வீடாளும் மாண்புடையாள் பெற்றதாலே
வீண்கவலைச் சிறைசெல்ல நேர வில்லை
ஏடாளும் இனியதமிழ்ப் புலவோர் தம்மை
எந்நாளும் அருகமர்த்தி ஏற்றஞ் செய்தாய்
காடேகும் நேரத்தும் கவலை யின்றிக்
கனித்தமிழின் வளர்ச்சியிலே நாட்டங் கொண்
டாய்

வெள்ளையரின் ஆதிக்கக் கொடுமை தன்னை
வீரமுடன் எதிர்த்திட்ட வ உ. சி க்கே
கள்ளமின்றிப் பொருளீந்து வலிமை சேர்த்தாய்
கணக்கின்றிப் பொருளிழப்பு வந்த போதும்
எள்ளளவும் மனஞ்சோர்ந்து வாடவில்லை
இமைப்போதும் தமிழ்த்தாயை மறக்கவில்லை
துள்ளிவரும் 'தமிழ்ச் சங்கம்' என்னும் பேரில்
தூயவனே நீஎன்றும் வாழி! வாழி!

---

# பைந்தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவர்!

பெ. இளவரசு எம். ஏ. பி டி.
தமிழ் விரிவுரையாளர்
பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் கல்லூரி
நீலிதநல்லூர்.

பரந்தகன்று கிடக்கும் இப்பெரும்புவியில் பல்லாயிரக் கணக்கான உயிர்கள் தோன்றுகின்றன; வாழ்கின்றன மறைகின்றன. எல்லாரையும் இவ்வுலகம்மீண்டும்நினைத்துப் பார்ப்பதில்லை. செயற்கரிய செய்து சிறப்புற்ற பெரியவர் களையே மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்கிறது; விழா வெடுக்கிறது. அத்தகைய பெரியவர்களில் ஒருவரே தமிழர் களின் நன்றிக்கும் பாராட்டுதலுக்கும் வணக்கத்திற்கும் உரிய பாண்டித்துரைத் தேவராவார். அன்னார்தம் அறி வாற்றல் பற்றியும் அவர்தம் தமிழ்த்தொண்டு குறித்தும் எண்ணிப்பார்த்து எழுதுதல் எம்மனோர் தம்கடமையன்றோ?

தென்பாண்டித் திருநாட்டில் வாழையடி வாழையென வந்த வரலாற்றுச் சிறப்பும் தொன்மைப் புகழுங் கொண்டி லங்குவது முகவை மாவட்டமாகும். அம்மாவட்டத்தில் நிலவிய பேரரசுகளும் சிற்றரசுகளும் எண்ணிறந்தன. அவற்றுள் சைவமும் தமிழும் தழைத்தோங்கத் தன்னுலி யன்றதைச்செய்து அழியாப்பெரும் புகழை உரிமையாக்கிக் கொண்டது இராமநாதபுரத்து அரசாகும். அவ்வரசுக்கு மிக நெருங்கிய உறவினராக விளங்கியவர் பாலவநத்தம் சமீன்தார் பொன்னுச்சாமித் தேவர் ஆவார். அன்னார் தம் மூன்றாம் திருமகனே பாண்டித்துரைத் தேவர்.

இளமையிலேயே கல்வியில் நாட்டங் கொண்டு கருத் துடன் கற்று வரலானார். ஆங்கிலமும் அருந்தமிழும் பாங் குறப் பயின்றார். கம்பன் கவிச்சுவையறிந்தார்; சைவ சமய இலக்கியங்களையும் தத்துவ சித்தாந்த சாத்திரங்களையும் தக்காரைக் கொண்டு கற்றுப் பெரும்புலமையைச் சேர்த்து கொண்டார். கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழியும் நாவன்மையும் பெற்றார். எண்ணியதை எண்ணியாங்குபாடும் பாவன்மையும்பெற்றார்

எனவே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அவர் அருந்தமிழ் வளர்க்கும் பொறுப்பையும் ஏற்று நடத்தியதில் வியப்பில்லை யன்றோ? சதாவதானம் முத்துசாமி ஐயங்கார் என்னும் சான்றோர் தேவரவர்களின் அவைக்களப் புலவராக விளங்கினர். பண்டை நாட் பாண்டிய மன்னர்களைப் போலவே பாண்டித்துரையரசும் இயல், இசைப் புலவர்களைப் பாராட்டிப் பரிசிலளித்துப் புரந்து வந்தனர். 'அபிதான சிந்தாமணி'. 'தேவாரத் தலமுறைப் பதிப்பு' 'சிவஞான சுவாமிகள் பிரபந்தத் திரட்டு' போன்ற அரிய தமிழ் நூற்களைத் தாமே பொறுப்பேற்றுப் பதிப்பித்து வெளியிட்டுப் பெருமையடைந்தார். இன்ப நலம் பயக்கும் இனிய தமிழ்ப் பாடல்களைத் தம் அவைக்களப் புலவோரின் துணைக் கொண்டு தொகுத்து 1898-ல் 'பன்னூற்றிரட்டு' என்னும் பெயருடன் வெளியிட்டார்.

செந்தமிழ் வளர்ச்சியைச் சிந்தையிற்றேக்கிய பாண்டித்துரை வேந்தரவர்கள் 'தமிழ்த்தாத்தா' என்று பலராலும் போற்றிப் புகழ்ந்துரைக்கப்பட்ட தட்சிணாத்திய கலாநிதி—டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களுடன் நட்பும் பழக்கமும் கொண்டிருந்தார் தமிழ்த்தொண்டர் உ.வே. சா. அவர்கள் 'புறப்பொருள் வெண்பாமாலை'. 'புறநானூறு' ஆகிய நூற்களை வெளியிடுங்கால் அவர்கட்குப் பொருளுதவி யளித்துப் பெருந்துணை புரிந்ததாக அவர்களே [உ.வே.சா] தம் வரலாற்றிற் குறிப்பிட்டுள்ளார்கள் "தங்களால் லோகோபகாரமாய் அரிய நூலகள் அச்சிடுவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட நன் முயற்சிக்கு என்னால் இயன்ற உதவியைச் செய்ய எப்பொழுதும் ஆவலுற்றிருப்பவனாதலின் அதற்குரிய நற்சமயம் அறிவிக்கக் கேட்டுக் கொள்ளும் தங்கள் பாண்டித்துரை"—என்று தேவரவர்கள் உ.வே.சா. அவர்கட்கு எழுதிய மடல் தேவர் தம் தமிழ்ப் பற்றினைத் தெளிவுறக் காட்டுகின்றதன்றோ.' பின்னர் உ.வே சா. அவர்களின் விருப்பப்படியே தக்க பொருளுதவி அளிக்குங்கால் எழுதியனுப்பிய கடிதமொன்று (கலிவெண்பாவாலானது) தேவர் அவர்கள் வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்பும் மாண்புடையார் என்பதையும் நமக்கு வெள்ளிடைமலையென விளக்கிக் காட்டுகிறது.

தெய்வத் தமிழ் வளர்ச்சியில் நாட்டங் கொண்ட தேவரவர்களின் திருப்பணிகளுள தலையாயது 1901-ல் மதுரையில் தமிழ்ச் சங்கம் தோற்றுவித்ததேயாம் அச் சங்கத்தின்

சார்பில் தோற்றுவிக்கப் பட்ட செந்தமிழ்க் கல்லூரியும் 'செந்தமிழ்' இதழும் இன்றும் ஏற்றமுறத் தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிவதை அனைவரும் அறிவர். புலவர் பலரைப் போற்றிய புரவலராக விளங்கிய தேவரவர்கள் தாமே சிறந்த பாவலராகவும் நாவலராகவும் விளங்கினர். முருகப் பெருமான் மீது பாடிய காவடிச்சிந்தும் சிவஞானசுவாமிகள் தோத்திரமும் தேவரவர்களின் சிறந்த பாவண்மைக்கு எடுத்துக் காட்டுக்களாய் இலங்குகின்றன. வைதிகச் சைவ சித்தாந்த சண்டமாருதம் சோமசுந்தர நாயகரால் அமைக்கப்பட்ட வைதாகமோக்த சைவ சித்தாந்த சபையின் ஆண்டுவிழா புரசை கங்காதர ஈசுவரன் கோயிலில் ஒருமுறை நடந்தது. அவ்விழாவிற்குத் தலைமை ஏற்றுத் தேவரவர்கள் ஆற்றிய சொற்பொழிவும், ஸ்ரீ நடராஜ பக்த ஜனசபையின் ஆண்டுவிழாவில் நிகழ்த்திய சொற்பொழிவும் தேவர் தம் நாவன்மையினை நானிலமறியச் செய்தன.

இங்ஙனம் நாவலராகவும் பாவலராகவும் நாட்டின் காவலராகவும் விளங்கிய பாண்டித்துரையவர்கள் கொண்டிருந்த நாட்டுப் பற்றுக்கு எல்லையே இல்லையெனலாம். சிற்றரசர்களும் குறுநில மன்னர்களும் ஆங்கிலேயரின் கால்பிடித்துத் தம் சுகபோக வாழ்வே பெரிதென்றெண்ணி இந்திய விடுதலைக்கு எள்ளளவும் துணைநிற்காத அக்காலத்தில் நம் தேவரவர்கள் விடுதலை இயக்கத்தின் வெற்றி நடைக்குத் தம்மால் இயன்ற பேருதவியினைத் துணிந்து செய்தனர். கப்பலோட்டிய தமிழர் செக்கிழுத்த செம்மல்-சிதம்பரனார் தொடங்கிய சுதேசியக் கப்பல் கம்பெனியில் ஒரு லட்ச ரூபாய்க்குரிய பங்குகளைத் தாம் விலைக்கு வாங்கியும் பலரை வாங்குவித்தும் நாட்டுவிடுதலைக்கு நல்ல பணியாற்றினார்கள். அதனால் தமக்கு ஏற்பட்ட பெரும்பொருள் இழப்பையும் ஆங்கிலேயரின் வெறுப்பையும் பொருட்படுத்திலர் அக்கொள்கைக் கோமான்.

நாடும் மொழியும் நமதிருகண்களெனப் பாடுபட்ட பெருந்தகை—பைந்தமிழ் வளர்த்த பாண்டித்துரைத் தேவரவர்களைப் பற்றித் திரு வி. க. கூறியதை நினைவூட்டி இக்கட்டுரையை முடிப்பது ஏற்புடைத்தென்றெண்ணுகிறேன். "பாண்டித்துரைத் தேவர் தமிழ்ச்சங்கம் கண்டவர்; தமிழ்ப் புலவர்; பெரும் புலவர். அவர் தம் அரிய வாழ்க்கை தமிழுக்கே அர்ப்பணமாகியது... தமிழுக்கென்று வாழ்ந்த பாண்டி மணியைத் தெய்வம் ஏன் அழைத்தது?

# காலமும்—கோலமும்

தொடர்கதை

தவத்திரு. கவியோகி.
சுத்தானந்த பாரதியார்

(தொகுதி 70 பகுதி 3ன் தொடர்ச்சி)

மாணவர்களே, மாணவிகளே. உங்கள் நன்மைக்காக நான் நடுநிலையிற் பேசுகிறேன். உங்கள் உள்ளத்திற்கு என் உள்ளம் பேசுகிறது. நான் ஐம்பதாண்டுகள் கல்வித் துறையில் மாணவர் பணியாற்றினேன். இலட்சக்கணக்கான மாணவருடன் பழகியுள்ளேன். நூற்றுக்கணக்கான ஆசிரியருடன் நல்லுறவு கொண்டுள்ளேன். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்சு, ஜர்மனி சுசர்லாந்து, ஜப்பான், ரஷ்யா நாட்டுக்கல்வி முறைகளைக் கண்டு பயன் பெற்றுள்ளேன். பெட்ராண்டுரஸ்ஸல், ரோமாரோலான் மாந்தஸரி குஸ்தாவ் ஜூஸ்து போன்ற அறிஞர்களுடன் அளவளாவியுள்ளேன். புக்கர் வாஷிங்டன் நாட்டிய துசுக்கிகி தொழிற்சாலைக்கழகத்தைக் கண்டுள்ளேன் பாரிஸ் சோர்போன் கழகத்தில் பேசியிருக்கிறேன். தோகியோ கழகத்தில் பணிபுரிந்துள்ளேன். இத்தனை அறிவுப்பயனுடன் உங்களுக்குப் பேசுகிறேன்.

மாணவ மணிகாள்!

கல்வி என்பது உள்ளிருந்து அறிவைக் கல்லி எடுக்கும் பயிற்சியாகும். அறிவு, தொழில், ஒழுக்கம், ஆண்மை, அழகு. அருள் அன்பு, நன்னடை எல்லாம் சேர்ந்து மானிடத்தை தெய்வசக்திச் சிற்பமாக வடிப்பது கல்விப் பயிற்சியாகும். கல்விக்குகலையும் இலக்கியமும் கண்ணாகும்; ஒழுக்கம் உளமாகும் ஆற்றல் உடலாகும்; அழகு வடிவாகும், ஆத்ம ஞானம் உயிராகும்; தொழில்கள் நரம்பாகும். இத்தகைய கல்வி இயற்புலனைத் தாண்டி வாழ்வுக்கு அருட் புலமை தரும் அருள் என்றால் மனித அறிவுக்குமேல் மனிதனுள் விளங்கும் ஆன்மப் பொலிவாகும் அருள் மலர்ச்சியே மனிதனின் மறுமலர்ச்சியாகும் பிறகு ஒருநாள் அதை விளக்குகிறேன்.

இப்போது உங்களுக்கு தரும் கல்வி முறையில் குறைகள் நிறைய உண்டு மெகாலே சர்க்கார் ஊழியரை ஆக்கக் கோரிய கல்விமுறையே இன்றும் வழங்குகிறது இக் கல்வி முறை மாறவேண்டும். இக்கல்வியால் ஆற்றல் வளரவில்லை இது படித்து மறக்கும் பஞ்சக்கல்வி. இதை மாற்றி, உங்களை ஆளாக்கும் அரிய கல்வி முறையை வகுத்துவருகிறோம் அதுவே படிப்பும் பயிற்சியும், சிந்தனையும் செயலும், உணர்வும் உவப்பும் ஒருங்கிய கல்வி முறையாகும்.

அதன்படி செடி நூலும், உடல் நூலும், வேதி நூலும் கற்பவர் மருத்துவமும் பயில்வர்; கணக்கும், பௌதிகமும் கற்பவர் பொறியியலும் கற்பர். தோட்டம் போட்டு வயலில் வேலை செய்து பயிர் நூல் பயில்வர். வாழ்விற்கு எழுச்சி தரும் கவிதையும் நல்லிலக்கியமும் பயில்வர் வறுமை, மடமை, அடிமைத்தனம் கோழைத்தனம் இவற்றை அடியோடொழிக்க மாணவர் இயல்புக்கேற்ற தொழிலை நான்கு மணிநேரம் செய்து, அதில் வரும் ஊதியங் கொண்டே பிழைப்பர் மாணவன் பள்ளியிறுதி தேர்ந்து உலகில் அடி வைக்கும் போது தேர்ந்த தொழிலை உரிமையுடன் செய்து பிழைக்கச் சிறு முதலும் சேர்த்திருப்பான். விஞ்ஞான முறைத் தொழிலாற்றலால் வறுமையின்றிப்பிழைப்பான். அவரவர் புலமைக்கும் திறமைக்கும் தக்கப்படி அறிவும் தொழிலும் அமையும் புக்கர் வாஷிங்டன், மாத்ரம்கூரி, அபிரகாம் லிங்கன், லிவிங்ஸ்டன், ஷுஸ்டர் டால்ஸ்டாய், மகாத்மா காந்தி போன்ற புலமைப் பெரியார் கதைகளைப் படியுங்கள் நீங்களும் அவ்வாறு செயல்-வளம் பெற வேண்டும்.

இது விஞ்ஞானயுகம் ஆனால் வரட்டு விஞ்ஞானம் போர்க் கொள்கைத் தாவும் அரசியலிற்சிக்கிச் சிறை காக்கிறது விஞ்ஞானத்துடன் மெய்ஞ்ஞானமும் இணைந்தாலே இரண்டும் இலகிப் பொலியும். வாழ்வைவளப்படுத்த விஞ்ஞானமும், நம்முள் உள்ள அருட்சக்திகளைத் தூண்டிட யோகத்தால் வரும் ஆத்ம ஞானமும் இணைந்து நம்மை ஆளாக்க வேண்டும் வெறும் வரட்டு அரசியல் பயனில்லை அரசியலுடன் அருளியலும், பொருளியலும், அறிவியலும், அன்பியலும் கூடினால் வாழ்க்கை வளம்பெறும் அதாவது வாழ்விற்கு விஞ்ஞானமும், மனதுக்கு யோகப் பயிற்சியும் வேண்டும். யோக விஞ்ஞானி தன்னையறிவான், உலகை அறிவான், தன் புலமையால் உலகிற்கு நலம் புரிவான். கற்ற

நன்பயன் கடவுளுணர்வுடன், உயிர்க் கருணையுடன் உலகக் கோயிலில் வாழ்வதாகும். இந்த கருத்துக்களெல்லாம் இதோ யோக சித்தி யில் உள்ளது. இந்நூல் ஆங்கிலத்தில் Gofel of Perfect Life என்ற பெயரில் தந்துள்ளது. இதை முறையாக படித்துச் சிந்தித்தால் நிறைவான வாழ்வு வாழலாம். கடவுளியல் உலகியல், அறவியல். அறிவியல். அன்பியல், நடையியல், இல்லறவியல், குடும்பவியல், தொழிலியல், அரசியல். யோகவியல. யோகசித்தியியல்—எல்லாம் அறிவீர்கள்.

மாணவமணிகாள் வீணைமட்டுப் இசை மீட்டாது. அதற்குத் தந்திகள் வலுவாயிருக்கவேண்டும், அதை மீட்டி மீட்டி தக்க ஆசிரியரிடம் பயிலவேண்டும், எதற்கும் உள்ளம் வேண்டும். உணர்வு வேண்டும்; ஆர்வம் வேண்டும் ஆக்கமும் ஊக்கமும வேண்டும் அறிவாற்றல்மிக்க ஆசிரியருக்கு அடங்கித்தான் கல்வியும் கலையும் பயிலத்தகும். எதற்கும் வழிகாட்டி வேண்டுமல்லவா?

ஆசிரியர் தரும் அறிவொளிதான் ஆருயிர் விளக்காகும். ஆசிரியர் வான்போல விரிந்த அறிவும், ஊற்றுப்போல் ஆற்றலும் உள்ளவர். உழவுக்கேற்ற விளைவு; உழைப்பிற்கேற்ற அறிவு; நல்லாசிரியன் காட்டிய வழியே உழைத்துத்தான் கல்வி கற்கவேண்டும். கல்வித் திறனை எப்படி அறிவது? அதற்குச் சோதனை வேண்டும்; படிப்பின் மதிப்பு பரீட்சையால் வெளிப்படும். படிப்பும் வேண்டாம், பரீட்சையும் வேண்டாம், பள்ளியும் வேண்டாம். ஆசிரியரும் வேண்டாம் என்பது வீண் கூச்சலாகும். ஸர் ஸி வி ராமன் இராதாகிருஷ்ணன், விசுவேஸ்சையா, ரூதர்ஃபோர்டு, மார்கோனி போன்ற மேதாவிகள் படிப்பும் பரீட்சையும இல்லாமலா முன்னுக்கு வந்தனர்? பரீட்சையை நீங்கள் ஏன அஞ்சவேண்டும்? நன்றாகப் படித்துச் சிந்தித்தால் கேள்வித்தாள் எளிதாகுமே நாட்டின் வருங்காலப் புலவர்களே. இளமையில் நீங்கள் தக்க பயிற்சி பெறுவிட்டால் நாடு என்னவாகும்? வீடு என்னவாகும்—சிந்தித்துப் பாருங்கள் சிங்கம்போல நில்லுங்கள! நன்றாக மனமூன்றி நல்லாசிரியரிடம் படியுங்கள். தேர்ச்சி பெறுங்கள் முன்னேறுங்கள்! இதுகாறும் நான் பேசினேன்—இப்போது என் மகள் அமுதவல்லி இனியகுரலில் யாமுடன் வாழ்வுப் பாட்டைப் பாடுவாள். கேட்டு உணர்ந்து உயருங்கள்.

## யாழ் மீட்டக்கற்ேறும்

அறிவொளி எழுந்தான் — ஆவேசமாகப் பேசினுன் — அன்பர்களே, நண்பாகளே, பண்பர்களே, இளந்தமிழருக்கு அன்பு மணிக்குரல் இனிய வழிகாட்டியது வாழ்வென்றும் யாழை மீட்டக்கறபோம். கற்ற திறனை சோதித்து நாலு புலவர் முன் விளக்கிப் பிறகு அரங்கில் இசை விருந்தளிப்போம். யாழும் குழலும் உடனே வாசிக்க இயலுமா? பாடு பட்டுப் படிப்படியாக பண்புள்ள புலவனிடம் பயின்ருலே குழலூதலாம், யாழிசைக்கலாம். பாட்டுக்கேற்ற தாளம், இராகம், ஸ்வரம், உணர்ச்சி எல்லாம் இணைந்து நன்ருகப் பயின்று தேர்ச்சி பெற்ருலே இசைப் புலவனுகலாம்; யாழும் வேண்டாம், தந்தியும் வேண்டாம, பயிற்சியும் வேண்டாம். ஆசானும் வேண்டாம் என்ருல் பொருந்துமா? இது பேதமை—நன்ருக படிப்போம்; தேர்வை அஞ்சாது ஏற்போம். கற்றதை வாழ்விற் பயன்படுத்தி நலம் புரிவோம் ஆம்–இனி அமுத நல்லிசை கேட்போம்

## அமுதகானம்

அமுதம் வீணுவுடன் அடக்கமாக வந்து—மீனுட்சி கோபுரத்தை நோக்கிக் கும்பிட்டு–அரை மணி நேரம் இசையமுதம் அளித்தாள்.

சிந்துபைரவி ராகம் ஆதி தாளம்

வாழவேண்டும் உலகில்—உலகீர்
வள்ளுவர் வகுத்த தெள்ளியவழியில்
வளம்பெற நாளும கூடி —
வாழவேண்டும் உலகில்

வறுமைமடமை அடிமையின்றி
வண்டுபோலே தொண்டுகள் செய்தே
வாழவேண்டும் உலகில் —

ஆணும் பெண்ணும் அணியும் மணியும்
அருளும் பொருளும் பொலிய

அன்பும் இன்பும் இலக
அழகும் அமுதும் திகழ—நீடு
வாழவேண்டும் உலகில்

வான்மழை வளர்க்கும்—தேன்மொழில் போலே
வசந்த மங்கலத்தாலே
கான்மலையாற்றின் கானரசம் வளர்
காவும் கனியும் போலே—நல்ல
கனியும் சுவையும் போலே
கல்வியும் கலையும் கலந்தே
வாழவேண்டும் உலகில்

இனிய உலகம் நமதில்லம்
இன்னுயிர்க் கூட்டம் நம் சுற்றம்
மனிதர் எல்லாம் ஒரு குலமே —
வாழ்க்கையெல்லாம் பொதுநலமே
அவரிவர் என்றே பிரியாமல்
ஆன்மநேய உரிமையுடன்
எவரெவர் நலமும் நமதென்றே
எண்ணிப் புண்ணியம் இயற்றிடவே—நாம்
வாழவேண்டும் உலகில்!

உலகம் எல்லாம் திருக்கோயில்
உயிர்கள் இறைவன் அருள்உருவம்
நலமார் தொண்டே வழிபாடாம்
நாலும் கலந்து நயமுடனே
சலசலத்தோடும் அருவியைப்போல்
சஞ்சலமில்லா நெஞ்சுடனே
பலரும் மணமும் அழகும் போல
மங்கலமாக நீடூழி — நாம்
வாழவேண்டும் உலகில் — உலகீர்
வாழவேண்டும் உலகில்

மாணவர் கூட்டம் அப்படியே அமைதிகண்டு ஆழச் சிந்தித்துக்கேட்டது—பாட்டு ஒவ்வொருவர் உள்ளத்திலும் பதிவானது. அறிவொளி பேசமுடியாது உணர்வுக் கண்ணீர் வடித்தான்.

**பேச்சழகன்:** நண்பர்களே, இந்த வாழ்விசை—அமுத நல்லிசை நமக்குப் புதுவாழ்வளித்தது நமது கண் திறந்தது; ஐயம் இறந்தது; அன்பு பிறந்தது–அறிவு மலர்ந்தது; வாழ்வாங்குவாழும் வகை தெரிந்தது. தேர்வுற்ற மாணவர் பாரில் அடிவைத்துள்ளோம். காலமும் அதன் அலங்கோலமும் முதலில் நாடகக்காட்சியாகப் பாடியாடிக் காட்டினோம் பிறகு கால்ப்போக்கை எதிர்க்கும் முரட்டுத் திருவாளர்கள் கல்லெறிந்து, கதவுடைத்து; அச்சுறுத்தி, ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆத்திரக்காரர் அவருடன் சேர்ந்தனர்—பயன் என்ன? அழிவே — இனி அந்த வழியை நினையோம். அழிவைவிட்டு ஆக்கந்தேடுவோம். அன்புமணி மங்கலம் ஒலித்து நம்மை எழுப்பியது. அமுதப்பாட்டு நம்மை வீறுடன் முன்செல்ல ஊக்கியது. இன்று நமக்குப் புது வாழ்வளித்த அன்பு மணிக்கும், அமுதவல்லிக்கும் திருமாலை சூட்டிப் பெருமை செய்வதுடன்– மாணவ சங்கம் இந்தப் பொன்னுடையும் அளிக்கிறது. அன்புமணிக்கு வெண்பட்டுப் போர்த்தினர். அமுதவல்லிக்கு பச்சைப்பட்டுடை அளித்தனர். மங்கல வாழ்த்துடன் மாணவர் கூட்டம் கலைந்தது.

மங்கலம் குலுங்கி எங்கும்
அன்புமேவி யின்பமாகி
வான்வளம் பெருகி வாழ்க — பூமியெல்லாம்
சிங்கம்போல வீரநெஞ்சம்
சித்தர்போல சக்திவீறும்
பொங்கிவாழ்க போகயோகப்–புதுவாழ்வே'

(தொடரும்)

# திருக்குறட் கருத்தகம் – 1

பதினோராவது கருத்தரங்கு

**அண்ணாமலைப் பல்கலைக் கழகம்**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் சார்பில் ஆசிரியர் பதினோராவது கருத்தரங்கு அக்டோபர் 25, 26 ஆகிய இரு நாட்களிலும் அண்ணாமலை நகரில் சிறப்புற நடைபெற்றது. இறைவாழ்த்தொடும் அண்ணாமலையரசர் வாழ்த்தொடும் நிகழ்ச்சிகள் தொடங்கின. திருக்குறளாய்வு இக்கருத்தரங்கிற்கு முழுப் பொருளாகும். பல்கலைக் கழகப் பலதுறை மாணவர்களும் பல்துறை ஆசிரியர்களும் ஔவை மன்ற உறுப்பினர்களும் ஊர்ப் பெருமக்களும் சுமார் 500க்கு மேற்பட்டவர்கள் இக் கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

பேராசிரியர் டாக்டர் வ சுப மாணிக்கனார் தம் வரவேற்புரையில் இதுவரை சுமார் 200 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்பெற்றன என்றும், திருக்குறளும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் முழுப்பொருளாக ஆராயப்பெற்றன எனவும் தொடர்ந்து நடத்திவரும் இக் கருத்தரங்குகளினால் மாணவர்களுக்கு ஆராய்ச்சியைக் கேட்கும் மனப்பான்மை பெருகியுள்ளது எனவும் கூறினார்.

பல்கலைக் கழக நிகழ்நிலைத் துணைவேந்தர் டாக்டர் வி. பாலையா அவர்கள் கருத்தரங்கினைத் தொடங்கி வைத்து இத்தகைய நிகழ்ச்சிகளால் பல்கலைக் கழகத்தின் பெருமை உயர்கின்றது எனவும், நம் பல்கலைக் கழகம் ஒரு விடுதிக்கே திருவள்ளுவர் பெயரை வைத்துள்ளது எனவும், எங்கும் திருக்குறள் பரவியிருப்பதைக் காண்கின்றேன் எனவும் கூறிப் பாராட்டி மகிழ்ந்தார்.

இணைவேந்தர் டாக்டர் அரசர் சர் முத்தையா செட்டியார் அவர்களின் வாழ்த்துரையையும் பிற பெருமக்களின் வாழ்த்துரைகளையும் படித்து, புலவர் சோம. இளவரசு நன்றி கூறினார்.

25—10—75 சனிக்கிழமை பிற்பகல் 4–30 மணியளவில் திருக்குறள் கருத்தரங்கின் முதற்பகுதி பல்கலைக் கழக மானியக்குழு ஆராய்ச்சியாளர் திரு. ஆ. இராமசாமிப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. திரு. அ. ஞானப்பிரகாசம் 'மேனாட்டார் நோக்கு' என்ற கட்டுரையில் மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று என்று கூறியிருப்பதும், குல வொழுக்கம் பற்றிக் கூறுதிருப்பதும் 'ஆர்பர்ட் சுவைட் சரைக்' கவர்ந்த திருக்குறள் பகுதிகள் என்று எடுத்துக் காட்டினார். திரு சு. சாமிஐயா 'திருக்குறளில் பாட வேறு பாடுகள்' என்ற தலைப்பில் பயனில்லாப் பாடவேறுபாடுகள் பயனுடைய பாட வேறுபாடுகள் என்று வகைப்படுத்திக் கொண்டு மழித்தல்-வழித்தல்; பொச்சாப்பு-பொய்ச்சாப்பு, செய்யாமல்—செய்யாமை, கொல்லாது-கொள்ளாது என வரும் வேறுபாடுகளை விளக்கினார். திரு. செ. வைத்திய லிங்கம் 'உரை வேறுபடும் குறட்பாக்கள்' என்ற தலைப்பில் காமத்துப்பாலில் வரும் தகையணங்குறுத்தல் என்ற அதி காரத்திற்கும் அணங்குகொல் ஆய்மயில்கொல் எனவரும் தொடர்கட்கும் பலர் உரைகளை எடுத்துக்காட்டி ஆய்வுரை செய்தனர்.

26—10—75 ஞாயிறு முற்பகல் 9–30 மணியளவில் திருக்குறட் கருத்தரங்கின் இரண்டாம்பகுதி தமிழ்த்துறைத் துணைப்பேராசிரியர் திரு. க. வெள்ளைவாரணனார் தலைமை யில் தொடங்கியது. 'புலவர் குழந்தை உரை' என்ற கட்டு ரையில் திரு. ந.வீ. செயராமன் இவ்வுரையில் அதிகாரங்கள் மாறிக்கிடப்பதையும் பொருட்பாலில் பாகுபாகவுள்ள இயல் வைப்பு முறையையும் கூறி, தெய்வார், வானகம், மேலுலகம், தேவர், எழுமை முதலிய சொற்கட்கு இவ்வுரை பகுத்தறி வுப் பாதையில் கூறும் விளக்கத்தையும் எடுத்துக்காட்டி னார். 'திருக்குறளும் கௌடலியமும்' என்ற கட்டுரையாசிரி யர் திரு. பி. சி. இராமாநுசாச்சாரி திருக்குறளுக்கும் கௌட லியத்துக்கும் உள்ள அடிப்படை நோக்கங்களை எடுத்துக் காட்டி ஒற்றர், அமைச்சர், கல்வி முதலான பொருள்களில் இரு நூல்களின் ஒற்றுமைக் கருத்துக்களைப் புலப்படுத் தினார். டாக்டர் சோ. ந. கந்தசாமி 'திருக்குறளில் பௌத் தம்' என்ற கட்டுரைக்கண் கடவுள் வாழ்த்து என்ற அதிகா ரத்தில் வரும் ஆதிபகவன் முதலான தொடர்கள் பௌத்த சமயக் கொள்கைகளை விளக்குவனவாக உள எனவும் கள் ளுண்ணாமை கொல்லாமை முதலிய அறங்கள் வலியுறுத்தப் படுதற்குப் பௌத்தத் தாக்குதல் காரணம் எனவும் வள்ளு

வரின் எண்ணத்தில் புத்தரின் பொன்மொழிகளும் இடம் பெற்றன எனவும் பன்னுல் மேற்கோள் காட்டி விளக்கினர். திரு ஆ. இராமசாமிப்பிள்ளை 'திருக்குறளில் புராணக் கூறுகள்' என்ற பொருளில் தாமரைக்கண்ணன், அடியளந்தான். உலகியற்றியான், இந்திரன்; கூற்றுவன் எனவரும் பல்வேறு இடங்களைக் காட்டி, இக்கருத்துக்கள் பழங்காலந் தொட்டே தமிழ் மக்களிடையே நிலவிவந்தன என்று மொழிந்தார். குறளில் புறத்திறனைத் துறைகள் என்ற கட்டுரையாளர் திரு. துரை. பட்டாபிராமன் வஞ்சி, உழிஞை, வாகை என்ற திணைகள் வந்த இடங்களைக் காட்டி நாட்டுப் பற்றினையும் அன்பு நோக்கினையும் இப்பகுதிகள் வலியுறுத்துகின்றன என்று கூறினர். ஆய்வு மேல் ஆய்வு என்ற கட்டுரையில் திரு. சா. மு. பாலசுப்பிரமணியன் இயல்புடைய மூவர் என்ற தொகைக்கும் குடம்பை தனித் தொழிய் குறட்கும் எழுதப்பட்ட பல்வேறு உரைகளை எடுத்துக்காட்டி விளக்கினர்.

'திருக்குறள் உத்திகள்' என்ற தலைப்பில் டாக்டர் வ. சுப. மாணிக்கனர் உரை வேறுபடுவதற்குரிய பல்வேறு காரணங்களை எடுத்துக்காட்டி வள்ளுவர் காலத்து வளர்ந்த புதிய தமிழ் நடையும் உரை வேறுபாட்டிற்கு ஒரு காரணமாகும் எனவும், சில மயக்கமான குறள்களுக்கு உரிய திறவுகோல் திருக்குறளில் பிற குறள்களில் உள எனவும், அறத்தாறிதுவென வேண்டா, ஐந்தவித்தான் ஆற்றல், நீரின்றியமையாது என்ற குறட் பொருள்களைச் சில உத்திகளால் தெளிவு செய்ய முடியும் எனவும் எடுத்துக்காட்டினர்.

திருக்குறட் கருத்தரங்கின் மூன்ரும் பகுதி ஞாயிறு பிற்பகல் 2-30 மணியளவில் தமிழ்த்துறைப் பேராசிரியர் டாக்டர் வ சுப. மாணிக்கனா தலைமையில் தொடங்கியது. திரு. ச. தண்டபாணி தேசிகர் 'திருக்குறளும் சுக்கிரநீதியும்' என்ற தலைப்பில் அறம், சமுதாயம், முயற்சி, ஊழ் என்ற கருத்துக்களில் இரு நூலாசிரியர்க்கும் உள்ள மாறுபாடுகளை எடுத்துக்காட்டி வேறு சிலவற்றில் உள்ள ஒற்றுமைகளையும் விளக்கி, திருக்குறள் கூறும் அமைப்பு முறை தனியானது என்று முடித்தார். திரு கொ. இலக்குமணசாமி திருக்குறளும் சங்க இலக்கியங்களும் என்ற கட்டுரைக்கண் அறம் பாடிற்றே எனப் புறநானூற்றில் வரும் தொடரையும் அறங் கூறும் ஆக்கந்தரும என்ற திருக்குறள் தொடரையும் ஒப்

பிட்டு அறம் என்ற பெயருடைய ஒரு நூல் திருக்குறளுக்கு முன்னும் இருந்ததோ என்று ஆராய்ந்தார். திரு. சி. வேங்கடபதி 'பாவாணர் உரை' என்ற கட்டுரைக்கண் பரிமேலழகர் உரையின் சில பகுதிகளைத் தேவநேயப்பாவாணர் ஆங்காங்கு மறுத்துரைத்து தமிழ் மரபுக்கேற்பப் புத்துரை எழுதியிருப்பதைப் புலப்படுத்தினர். பல்கலைக் கழக மானியக்குழு ஆராய்ச்சியாளர் திரு. செ வேங்கடராமச் செட்டியார் 'திருக்குறளில் இலக்கண நெறி' என்ற தலைப்பில் சேக்கிழாருக்கும், சுந்தரருக்கும் இறைவன் அடியெடுத்துக் கொடுத்ததுபோல தொல்காப்பியரும் அகர முதல என்ற அடியைத் திருவள்ளுவருக்கு எடுத்துக்கொடுத்தார் எனவும் இன்னிசை அளபெடை, தோன்றாப் பயனிலை முதலான இலக்கணக் கூறுகள் இந்நூலில் சிறப்பாக வந்துள்ளன எனவும் மொழிந்தார். திரு. க. வெள்ளைவாரணம் 'திருக்குறளில் சைவமும் வைணவமும்' என்ற சமயத் தலைப்பில் நாடு, மொழி, சமயம், இனம் முதலிறவற்றைக் கடந்த பொது நூல் திருக்குறள் எனவும் இப்பொதுமையோடு சைவ வைணவ சமயங்கட்குரிய சிறப்புக்கூறுகளும் இடம் பெற்றுள எனவும் இது கருதியே பின்வந்த சைவ நூல்களில் திருக்குறட் கருத்துக்கள் நிரம்பஇடம்பெற்றுள எனவும் மக்கட்கு இறை, தாமரைக்கண்ணன் என்ற தொடர்கள் வைணவக் கொள்கையைக் காட்டுவன எனவும் விரிவுபட எடுத்து மொழிந்தார். டாக்டர் மு கோவிந்தசாமி 'மொழிபெயர்ப்பு' என்ற தலைப்பில் ஆங்கிலேயர்களுடைய மொழிபெயர்ப்புக்கும், ஆங்கிலம் கற்ற தமிழறிஞர் மொழிபெயர்ப்புக்கும் உரிய வேறுபாடுகளைத் தலைப்பு அளவில் வைத்துக்காட்டி மொழிபெயர்ப்பு நூல்களும் ஓராற்றால் உரைநூல்களே எனவும் அவற்றில் புதுப்பொருள்கள் உண்டெனவும் கூறினர் திரு. வெ. பழநியப்பன் 'களவுத் துறைகள்' என்ற கட்டுரைக்கண் களவியலில் அதிகாரம் குறைகள் மாறுபடவில்லை, பரிமேலழகரின் காமத்துப்பால் பகுப்பு முறை அகப்பொருள் முறைக்கு ஏற்றது. தலைவன் தலைவி, தோழி என்ற மூன்று பாத்திரங்களே களவியலில் இடம் பெறுகின்றன என்று மொழிந்தார்.

கூட்டத்திற்கு வந்திருந்த தமிழ் வடமொழி ஆராய்ச்சி நிறுவன இயக்குனர் திரு. மு. அருணாசலம் வள்ளுவரின் குறள் யாப்பு மிக உயர்ந்தது ஆதலின் பிள்ளையோர் அவ்

வழிச்செல்லத் தயங்கினர் எனவும் திருக்குறளைப் பிறநாட்ட வரும் அறிய ஆங்கிலத்தில் நூல்கள் எழுதிப்பரபவேண்டும் எனவும் தமிழ்க் கலைகளைத் தமிழ் மரபோடு பயில வேண் டும் எனவும்கூறி, கருத்தரங்குக் கட்டுரைகள் தரமாகவும் பயனுகவும் இருக்கின்றன என்று பாராட்டினுர்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம் தம் முடிவுரையில் திருக் குறள் மேன்மேலும் பரவவேண்டுமெனில் சமய நிறுவனங் கள் போல, திருக்குறள் நிறுவனம் வேண்டும் எனவும் சமயப் பெரியவர்களுக்கு அடியவர்கள் இருப்பதுபோலத் திருக்குறட்கும் குறளடியார்கள் வரவேண்டும் எனவும் அப் போதுதான் திருக்குறள் இலக்கிய நூலாக மட்டுமன்றி இயக்க நூலாகவும் வளர்ந்து எல்லா மக்கட்கும் பயன் செய்யும் என்றும் அறிவுறுத்தினர். ஆசிரியர் திரு உ. பழநி நன்றிகூற நாட்டுவாழ்த்துடன் கருத்தரங்கு முடிவுபெற்றது.

---

# தனிமொழி - குடிலன்

திருமிகு. பூ. சொல்விளங்கும்பெருமாள்

[தொகுதி-70 பகுதி-3ன் தொடர்ச்சி]

4.0 **உள்ளச்சாயல்:** பாம்பிற்குத் தலையும் மீனுக்கு வாலையும் காட்டி இரட்டை வாழ்க்கை வாழும் விலங்கினைப் போன்று சில மனிதர்களும் இரட்டை வாழ்க்கை வாழ்வர். அவர்களது உண்மையான வாழ்க்கை நிலையைத்தனிமொழிகள மூலமே அறியலாகும். உள்ளத்தின் சாயலை உண்மைப் பிரதிபலிப்பைத் தனி மொழிகள் வெளிக்காட்டுகின்றன. நேராகக் காண்பதற்கு எதிரிடையான வாழ்க்கை நடத்தும் மனிதர்கள் இரட்டை வாழ்க்கையைக் காட்டவும உண்மைப்போக்கை அறியவும் நாடகத் தனிமொழிகள் பெரிதும் உதவுகின்றன (They are there to offer the living image of a man..... )

4.1 **அமைப்பு:** 'தனி மொழிகளின் தன்மை நாடக மேடையின் அமைப்பைப் பொறுத்தும் எழினிகளின் அமைப்பைப் பொறுத்தும் அமையும். இருவர் மேடையில் நிற்கும் போது ஒருவர் தனி மொழிகின்றாராயின் மற்ற யாருக்கும் கேட்காதது போலவும் பார்வையாளர்களுக்கு மட்டும் கேட்பது போலவும் அமையலாம் சற்று செயற்கையாகவே இத்தனி மொழி இருக்கும். எழினிகள் சரியாக அமைந்து விட்டால் இந்தச் செயற்கைத் தோற்றத்தை மாற்றிவிட முடியும். எவ்வாறுபினும் ஒன்றுக்கு மேல் பலர் நிற்கும் இடத்தில் தனித்தனியே சிந்திப்பது இயற்கை; அதனை ஒருவரறியாவாறு மற்றவர் பார்வைக்கு கேட்குமாறு பேசுவது வேடிக்கையாகிவிடும்; மேலும் தனிமொழிவோர் தனியாக நின்று பேசுவதே முறை. பக்கப் பேச்சு (aside) என்று பார்வையாளர்களுக்கு மட்டும் கேட்குமாறு பேசுவதும் இயற்கை நீங்கியதேயாம்.

4.2 'இன்றைய புத்துலக நாடகத்தில் தனிமொழி பொருத்தமற்ற ஒன்றாகவே அமைந்துள்ளது' (William Archer ஒருவன் தனியாகப் பேசுகிறான் என்றால் அவன்

பைத்தியமாகவே இருக்க வேண்டும் என்று நினைக்கும் காலத்தில் நாடகத்தில் தனி மொழியும் எள்ளப்படவேண்டியதாகவே கருதப்படுகிறது. ஆயினும் அவல, நகைச் சுவைப் பாத்திரங்களின் தனிமொழி பேரளவு ஒதுக்கப்படவில்லை எனலாம.

5 0 மனோன்மணீயம்: மனோன்மணீய நாடகத்தில் வரும் குடிலனின் தனி மொழிகளைப் பற்றிய ஆய்வே என் நோக்கம். இந்த நாடகத்தில் மொத்தம் ஐம்பத்தாறு தனி மொழிகள் இடம் பெறுகின்றன மனோன்மணீயம் ஒரு 'தனி மொழி-நாடகம்' என்றே கூறலாம். பதினன்கு முக்கிய பாத்திரங்களும், மற்றும் பணியாளர் போன்றோர் பங்கு பெறும் இந்த நாடகத்தில் எழுவர் தனி மொழிகின்றனர். மேடையில் பேசும் போது பிறர் யாரும் இல்லாமல் இருக்கும் தனி மொழியும் தனியாகப் பேசும்போது வேறு யாரேனும் கூடவே இருக்கும் 'தனதுள்' பேச்சும சேர்ந்தே மேலே கண்ட ஐமபத்தாறு என்று கூறினேன்.

5.1 குடிலன் 22 தனி மொழிகள் பேசி வேறுயாரும் அவனது அருகில் வராத அளவிற்குத் "தனி மொழித் தந்தை"யாகிவிடுகிறான். நாராயணன் 11; புருடோத்தமன் 9; நடராசன் 7; சிவகன் 3; பலதேவன் 2; வாணி 2. இவற்றுள் பலதேவன் தனி மொழிகள் இரண்டே வரிகள் கொண்டவை எழு சொற்கள் உள்ள அத்தனிமொழிகள் புருடோத்தமன் அவைக்களத்தில் நிகழ்கின்றன தனி மொழித் தலைவன் குடிலன் பேசிய அளவிற்கு யாரும் இந் நாடகத்தில் பேசவில்லை; நடராசன், புருடோத்தமன், நாராயணன், சிவகன், வாணி, பலதேவன் என்ற வரிசையில் அவர்கள் பேசிய அடிகளின் எண்ணிக்கை கொண்டு அளக்கலாம்.

5 2 ஷேக்ஸ்பியரது முதல் நாடகங்களில், தனி மொழிகளின் எண்ணிக்கையும் தனி மொழி பேசுவோரின் எண்ணிக்கையும் அதிகமாக இருந்தன. 'ஹென்றி VI - I' ல் ஒன்பது பேர் தனி மொழிகின்றனர். 'ரிச்சர்ட் III' ல் இருநூறு வரிகளுக்கு மேல் உள்ள தனி மொழியில் ரிச்சர்ட் III மட்டும் நூற்றி ஐம்பது வரிகளைப் பேசுவதாக அமைந்துள்ளது. மற்றுள்ள ஐம்பது வரிகளை வேறு அறுவர் பேசுகின்றனர். 'காமெடி ஆஃப் எறர்ஸ்' எனும் நாடகத்தில் வரும் அறுபத்தைந்து வரித் தனி மொழியில் 'அன்றிஃபோலஸ்'

மட்டும் நாற்பது வரிகள் பேசுகிருர். குடிலனைப்போல் பொரும் அழிம்பனைக இருக்கும் இயாகோ (Iago) எட்டுத் தனிமொழிகளும் கதைத் தலைவன் ஒத்தல்லோ மூன்று தனி மொழிகளும் பேசுகின்றனர் ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் இன்பியல் நாடகங்களைவிட துன்பியல் நாடகங்களில் அதிகம் தனி மொழிகள் இடம் பெறுகின்றன. அவரது முதல் நாடகங்களை விட பின் நாடகங்களில் தனிமொழியின் பங்கினைக் குறைத்துச் சுவையைக் கூட்டியுள்ளார் எனலாம்.

**6.0 சுவை குறையும்;** மனோன் மணீயத்தில் இத்தனை நீண்ட தனி மொழிகள் இடம் பெற்றதால் நாடகப்போக்கில் சுவையும் விறுவிறுப்பும் கூடிற்று என்று சொல்வதற்கில்லை; மாருகவும் நடந்திருக்கிறது. தனி மொழியை வீட தனதுள் (aside) பேச்சே சுவையை, இயற்கைப் போக்கை இன்னும் குறைக்கும். மனோன்மணீயத்தில் 'தனதுள்' பேச்சு, தனி மொழியைவிட எண்ணிக்கையில் அதிகமாகும். நாற்பத்தியொரு தனதுள்' பேச்சுக்கள் இடம் பெறறுள்ளன இரண்டையும் தனி மொழியாகக் கொண்டே தனி மொழி ஐம்பத்தாறு என்று எண்ணிக்கை தந்துள்ளேன். நான்காம் அங்க இறுதியிலும் ஐந்தாமங்க முதலிலும் குடிலன் தனி மொழி பேசுகிருன்—இவ்வாறு அமைவது நாடக முறையும அல்ல; காட்சி அமைப்புக்கும் ஏற்றதல்ல. சேர்ந்து வரும் இத்தனி மொழிகள் நாடகத்தில் செயற்கையை அதிகப் படுத்தி சுவையைக் குறைக்குர். சுவையைக் கெடுத்து சோர்வைக் கொடுக்கும் இத்தனிமொழிகளின் எண்ணிக்கையும அவற்றின் நீளத்தையும் குறைத்திருந்தால் நாடகச் சுவை கூடியிருக்கும் குடும்பத்தில் குழந்தைகள் பெருகிளுல் தாய் தந்தையரின் நலன் பாதிக்கப்படுவது போல் தனி மொழிக் கூட்டம் மனோன்மணிய நாடகத்தைப் பாதித்துள்ளது.

[தொடரும்]

# தமிழ்ச்சங்கம் வாழியவே!

--செஞ்சொற்பாவலர்
கவிஞர் ப. சங்கரலிங்கம்.

பாவேந்தர் போற்றுகின்ற மூவேந்தர் ! பாரேத்தும்
கோவேந்தர்! தமிழ்மகளைக் கொலுவேற்றி தார்வேந்தர்
சங்கமெனும் தொட்டிலிட்டு தங்கமெனத் தான்பேணி
பொங்குகடல் மணலெனவே புதுமைபல விளைவித்து
தொகைஎட்டும் பத்துப்பாட்டும் வகைவகையாய் விருந்து
(வைத்து
நகைபலவே பூட்டிநின்று நாளெல்லாம் தமிழ்வளர்த்தார்!
கத்துகடல் கொண்டதாலோ காலநதி வாய்ப்புக்கோ
மெத்தமிகும் எம்சொத்து! முப்பாட்டன் அணிமுத்து!
அந்தந்தோ! அழிந்திடவே! சிந்தைநொந்து செந்தமிழன்
மங்காத தமிழ்காக்க மண்மீதில் சங்கமதை
பாண்டியரே ஆண்டுவந்த பண்டைநகர் மதுரைதனில்
மாண்ட தமிழ்ச் சங்கத்தை மீண்டுந்தான். கண்டுவந்தான்!
நந்தமிழ் நாட்டாரெல்லாம் நறுந்தமிழ் சிந்திக் கற்க
செந்தமிழ்க் கல்லூரியைச் சேலமாம் பழமாய்க்கண்டான்;
கனலுண்டும் புனலுண்டும் செல்லுண்டும சிதைந்ததமிழ்ப்
பணத்தோட்டம்! புதைபொருளை! மலைத்தேனை! கலை
(யூற்றை!
மூலைதனில் கிடந்தவலை முழுவதுமே திரட்டிவந்து
நூலாக்கிக் கல்வெட்டாய்! நிலவிடும் சாலைகண்டான்!
தண்வைகைப் பெருமணல்போல்! தளிர்ஆலின் விழுதினைப்
(போல்!
மண்காணுப் பன்னூலைப் பசும்பொன்போல் பாதுகாத்
(தான்!
எள்ளுக்குள் எண்ணெய்யைப்போல் இருந்தமிழின் அருங்
(கருத்தை
அள்ளியேதான் தந்திடவே "செந்தமிழ்" மலர்வித்தான்!
தான்வாழ்ந்த வளமனையைத் தமிழ்வளர்க்கும் கோயிலாக்கி

நாண்மலர்போல் தண்டமிழை நாளெல்லாம் வாழ்வித்
(தான்!
மல்லிகைப்பூ மணத்தினைப்போல் மருக்கொழுந்து வாசம்
(போல்
எல்லையிலாப் புலமையரை இம்மண்ணில் தோற்றுவித்
(தான்!
இயலிசை நாடகத்தில் இசைபோயர்! துறைபோயர்!
கயமலர்போல்! கயல்விழிபோல்! கவினடைந்தார் நாள்
(தோறும்
அடையாத நெடுங்கதவால் அள்ளியும் கொடைக்கையால்
மடைவெள்ள உளமதனல் மலைவளம்போல் நலந்துய்த்
(தார்!
அவர் உணவால் மணம்பெற்றோர்! அவர் உதவ உயர்ந்
(தோர்கள்!
அவர் உப்பால் வாழ்ந்தோர்கள்! அலைகடல்போல் பலரா
(வார்!
பாரியவன்! காரியவன்! பயன்கருதாத் தமிழ்த் தொண்
(டால்!
மாரியவன்! பாண்டித்துரை மாண்பிற்கோர் உவமையிலை!
இடையினிலே அவன்தொண்டு தடைபடவே தகர்த்
(தெரிந்து
விடையெனவே துள்ளிநின்று வினை முடிக்க வேலேந்தி
பாண்டித்துரை பணிபுதுக்கிப் பைந்தமிழைப் பந்தலிலே
ஈண்டுள்ளோர் வியந்திடவே எழிலுறவே படரவிட்டான்;
ஆண்டியப்பன் என்கின்ற பாண்டியனே! ஓயாதே
பாண்டித்துரை புகழ்பரப்பும் ஆண்டித்துரை! துணைச்செய
(லன்!
நூற்றாண்டு விழவினையே நூதனமாய் எடுப்பித்து
மாற்றோரும் போற்றிடவே மரபு வழி ஒப்படைத்தான்!
மலர்தன்னை வெளியிட்டு மாப்புலவர் மையத்தே
நடமிக்க 'தமிழ்த்தொண்டன்' நல்விருதைத் தாண்பூண்
(டான்!
நாளெல்லாம் மூச்செல்லாம் நறுந்தமிழர் தமக்காக்கும

ஆல்போன்றோன்! அருவியெனச் சளசளக்கும் தமிழ்த்
(தொண்டன்!
திருராமன் மறுபிறப்பாய்! நறுந்தமிழர் பெரும்பேறாய்!
திருநாட்டின் புகழ்விளக்காய்! தியாகத்தின் விழுப்புண்
(ணாய்!
வாழையடி வாழையென வளஞ்சேர்க்கும் தமிழ்மன்னன்!
தாழையென மணம் பரப்பி தமிழ்வளர்க்கும் சேதுவேந்
(தன்!
காளையெனத் திருப்பணியில் கவினேற்றும் கலைமன்னன்!
ஏழையரின் இதயமென இயங்கிநிற்கும் இராமநாத
சேதுபதி தலைமைதாங்கிச் செந்தமிழைப் பேணிடவே
மாதொரு பாகரினை மனத்தேத்தும் சிவத்தொண்டன்!
தெய்வநல் திருநெறியைத் தீந்தமிழைப் பண்பாட்டை
பொய்யாத முகிலெனவே பொழுதெல்லாம் காத்திடவே
தவம் பெற்றுப் பிறந்திட்ட தமிழ்மன்னர் சேதுவேந்தர்,
தவக்கொழுந்து பவமறிக்கும் காசிநாத துரைமகனார்
ஒழுக்கத்தால் உயர்இமயம்! உயர்பண்பால் தென்
(பொதிகை!
விழுபுகழ்ச்சேர் பெருமகனார் துணைத்தலைமை ஏற்றிடவே
பேரிலே பெரியசாமி! புகழுக்கே உரியசாமி!
போர்முகத்துப் பெருங்களிறாய்! புகழ்முகத்து நறுமலராய்!
சங்கத்துப் பணிதனையே சிங்கமென முந்திநின்று
துங்கமிகும் செயலராய் தூயநெஞ்சால் தொண்டாற்றி
வேளாண்மை மிகச்செய்து வேந்தனென வீற்றிருக்கும்
தாளாளர் தனுக்கோடிப் பாண்டியனார் வினை இயற்ற
சங்கநாதம் முழங்குகின்ற சிங்கநற் தமிழ்மகன்
சங்கர பாண்டியனார்! செந்தமிழன் துணைநிற்க
கந்தன் போல் வந்திருக்கும் சிந்தைமிகும் கந்தசாமி
வந்தனை செய்கின்ற வாய்மையாளன்! தூய்மைமிகு
தேவசிகாமணி திருத்தொண்டர் தாம்கூடித்
தமிழ்பணியைத் தெருவெங்கும் தண்ணீராய்ப் பாய்ச்சி
(நிற்கும்
அமிழ்தற் பெரியீரே! ஆன்றோரே! சான்றோரே!
நாளெல்லாம் நீர்வாழ்க! நும்தொண்டு மிகவெல்க!
பாலெனவே பொங்கிடுக! பாண்டித்துரை திருநெறிகள்!
எழுபத்தைந் தாண்டினையே எட்டியே பிடித்திருக்கும்
பழுத்ததோர் தமிழ்ச்சங்கம் பார்மீதில் வாழியவே!

# புகழைக் காப்போம்

என்றுமுள தென்தமிழால் ஏற்றம் பெற்றோர்
எத்தனையோ பேருண்டு இந்த மண்ணில்
அன்னைமொழி வளர்ந்தோங்கிச் செழித்து வாழ
அயராது பாடுபட்டு வாழ்க்கை தன்னில்
இன்பமெலாம் தமிழெனவே எண்ணி யெண்ணி
இரும்பூது எய்தியவர் சிலரே யுண்டு.
அன்னவர்போல் தமிழ்வளர்த்துத் தலைமை பெற்றார்
அளவில்சீர் பாண்டியனார் என்னும் வள்ளல்.
பன்னுதற்கு இயலாத தொன்மை பெற்று
பண்பாட்டின் எல்லைக்கே எடுத்துக் காட்டாய்
சொன்னலமும் சுவைநலமும் நிறையக் கொண்ட
சுடர்மிக்க தமிழ்மொழியில் புலமை பெற்று
இன்பமிகு தமிழ்ச்சுவையை மக்கள் எல்லாம்
எளிதாகத் துய்க்கட்டும் என்று எண்ணி
பொன்கொடுத்துப் பொருள்கொடுத்துச் சங்கம் வைத்துப்
புகழ் கொண்டார் பாண்டியனார் என்றும் செல்வர்
பொன்றிவிடும் செல்வமது பொன்று வண்ணம்
புலமைநிறை நாவலரை அழைத்துக் கூட்டி
அன்புடையீர்! உம்மாலே தமிழர் செல்வம்
அனைவர்க்கும் பொதுவாக வேண்டு மென்று
என்புருக்கும் இனிமைநிறை அன்புச் சொல்லால்
ஏழைபோல் இரந்தேங்கி இசைவு பெற்றார்
தன்னலமே கருதாத தமிழர் வாழ்வின்
தண்ணொளியாம் பாண்டியனார் என்னும் நல்லோர்
பண்புடைய பெருஞ்செல்வர் அவரின் தொண்டால்
பசுந்தமிழ்தான் வளருதுபார் மதுரை தன்னில்.
கண்பெற்று ஒளிபெற்ற சிதடர் போல
களிக்கின்றார் மக்களெலாம் தமிழை மாந்தி
எண்ணரிய பெருவளத்தைப் பெற்ற அன்னை
என்மகனே! எனவழைத்து அவரை வாழ்த்த
விண்ணவர்க்கு மெட்டாத புகழை யீட்டி
விண்ணுற்ற பாண்டியனார் புகழைக் காப்போம்.

பா. சங்கரபரமேஸ்வரன் **M. A.**
தமிழ்த் துறை
அருள்மிகு பழனியாண்டவர்
கலைக்கல்லூரி
பழனி.

# துரையார் - மறையார்!

(புலவர் தொல்காப்பியன்)
தஞ்சாவூர்.

1 பண்டிருந்த பாண்டியர்கள் ஈண்டு — தமிழ்ப்
பாவளர்க்க வைத்தசங்கம் மூன்று! — அவை
கொண்டலென்னப் பெய்தகவிக்
கோலமழை தனிலவரும்
நனைந்தார்! — கவி புனைந்தார்!

2 "மூன்றுசங்கம் போனபின்னர் இங்கே — தமிழ்
முரசொலிக்க வருங்கரங்கள் எங்கே?" — என
ஆண்டபாண்டித் துரையவரின்
அருங்கரங்கள் தாமுயர்ந்த
அன்று! — நான் என்று!

3 பத்தொடைந்து பாண்டியர்கள் பண்டு — சங்கப்
பாட்டரங்கில் ஏறினராம் நன்று! — நம்
பற்றுபெற்ற தேவரிவர்
பலவகைநூல் அளித்தரங்குங்
கண்டார்! — புகழ் கொண்டார்!

4 கூடலுக்கும், குளிர்தமிழ்க்கும் ஏற்றம் — இங்கு
கொண்டளித்த துரையிவரின் தோற்றம் — நம்
பாடலுக்கும், பைந்தமிழ்க்கும்
பழம்புகழ்க்கும் விடிபொழுதின்
சேவல்! — புதுக் காவல்!

5 போற்றுகின்ற இமயமலை நாணும் — படி
பொங்குபுகழ் தனையிவர்தொண் டேனும்! — இவர்
ஆற்றலுக்கும், அழகினுக்கும்,
ஆன்றமைந்த புகழ்க்குமிங்கே
துரையார்! — என்றும் மறையார்!

இலக்கியச் சிந்தனை—3

# களவின் பெருமையும்-
# கள்வனின் சிறுமையும்

புலவர் சு. சின்னையன்,
தஞ்சை.

முன்னுரை:—

அங்கிங்கெனாதபடி, எங்கும் கள்வர்கள் இருக்கின்றார்கள். இவர்கள் பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் பரம்பொருளைப்போல் வாழ்ந்து வருகின்றார்கள், இவர்களைத் தோற்றத்தாலோ பேச்சாலோ அறிந்து கொள்ள முடியாது; பிறந்த நாட்டாலோ, பேசும் மொழியாலோ; தெரிந்து கொள்ள முடியாது; செயலால்தான் உணர்ந்து கொள்ள முடிகின்றது. வறுமையின் காரணத்தாலும், பிழைப்பிற்கு வேறு வழியில்லாக் காரணத்தாலும், குறைந்த உழைப்பால் நிறைந்த ஊதியம் பெறலாம் என்ற நோக்கத்தாலும், பண்பற்ற மக்களோடு பழகும் காரணத்தாலும், சுயநலத்தாலும் பொறாமையாலும் கள்வர்கள் தோன்றி வருகின்றார்கள்.

கள்வர்களில், கற்றவர்களுமுண்டு; கல்லாதவர்களுமுண்டு. பிறருடைய பொருள்களை அவர்கட்குத் தெரியாமல் திருடுவதே இவர்கட்குத் தொழிலாக இருக்கின்றது. இவர்களில் மற்றொரு வகையினர் இருக்கின்றார்கள். இவர்கள்; அலுவலகங்களில் அமர்ந்து கொண்டு, பொய்க்கணக்கெழுதியும், போலி சான்றிதழ்களைத் தயாரித்தும் அவ்வலுவலகத்திலுள்ள பொருள்களை அபகரித்துக் கொள்கின்றார்கள். ஆனால், இவர்களைக் கள்வர்கள் என்று கூறுவதைவிட நாகரிகக் கள்வர்கள் என்று கூறுவது பொருத்தமுடையதாய்த் தோன்றுகின்றது இவர்கள், அனைவரும், சுயநலம் காரணமாகப் பிறர் பொருளைத் திருடுவதால், இவர்களைக் 'கள்வர்' என்று கூறுகின்றார்கள் மற்றும் பிறரிடம் கைமாற்றாகவும் கடனாகவும் பொருளை வாங்கிக்கொண்டு ஏமாற்றுபவர்களும் இவ்வினத்தவரேயாவார்கள்

**உள்ளங்கவர் கள்வர்:—**

தமிழ் நாட்டில், வேறுசில கள்வர்களும் இருந்திருக்கின்றார்கள். இவர்கள், அன்பும் அறனும் அமைந்தவர்கள்; இன்சொல்லும் ஈகையும் நிறைந்தவர்கள், உண்மையும் ஊக்கமும் மிகுந்தவர்கள்; எழிலும் ஏற்றமும் இயைந்தவர்கள்; வாய்மையும் தூய்மையும் வாய்ந்தவர்கள். இவர்கள், பிறர் பொருளைத் திருடுவதில்லை. ஆனால், பிறருடைய உள்ளங்களைத்தான் திருடுவார்கள். இவர்கள் யார் தெரியுமா? இவர்கள்தான் அக்காலத் தமிழகத்திலிருந்த காதலர்களாவார்கள். கருநிறமுடையவர்களைக் கள்ளர் என்று கூறியது போல; களவு நெறியில் காதல் கொள்பவரைக் கள்வர் என்றார்கள்.

ஒத்த பண்புடைய ஒரு ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் காணும் போது, ஒருவர் மனதை மற்றொருவர் கவர்ந்துவிடுகின்றார்கள். பின்னர் அவ்விருவரும், பிறர்க்குத் தெரியாமல் களவு முறையில் காதலராய் விளங்கி இல்லற வாழ்க்கையில் ஈடுபடுகின்றார்கள். இவ்வாழ்க்கை களவின் வழிவந்த வாழ்க்கையாகும்.

மக்கள் மேற்கொள்ளும் வாழ்க்கையை, அக வாழ்க்கை என்றும், புற வாழ்க்கை என்றும் இரு வகையாகப் பிரித்திருக்கின்றார்கள். இவற்றை விளக்கும் இலக்கண இலக்கியங்கள் தமிழில் நிறைந்திருக்கின்றன.

**இறையனார் களவியல்:—**

அக்காலச் சான்றோர், இச்கால மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில், களவிலக்கணம் வகுத்திருக்கின்றார்கள். 'களவு நூல் இல்லை இல்லை?' என்று கவலைப்பட்டிருக்கின்றான பாண்டிய மன்னனொருவன். அவனுடைய மனக் கவலையை மாற்றுவதற்கு, இறைவனே களவியல் எழுதியிருக்கின்றான். இந் நூலுக்கு உரைகாண முடியாமல், சங்கப் புலவர்கள் சங்கடப்பட்டிருக்கின்றார்கள். இதனையும், இறைவனே தீர்த்துவைத்திருக்கின்றான். இறையனார் களவியலுக்கு நக்கீரர் உரைத்த உரையே சிறந்ததென்று சங்கப் புலவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கின்றார்கள்.

இக்கால மக்கள் சிலர், களவு நூல் என்றதும், 'திருட்டு நூல்' என்று கருதுவார்கள். இந் நூலை 'இறைவனை இயற்றி

இருக்கின்றான்?' என்று நினைத்து வியப்பிலாழ்வார்கள். காரணம் என்ன? 'களவு' என்ற சொல்லுக்குத் 'திருட்டு' என்னும் பொருள் அமைந்திருப்பதேயாகும். திருட்டினைப் புரிபவர்கள் குற்றவாளிகளாவர்கள், இவர்கட்குத் தண்டனையளிப்பதற்குச் சட்டமும் இருக்கின்றது, நீதிபதிகளும் இருக்கின்றார்கள். உலக மரபு இங்ஙனமிருத்தலால், அவர்கள் அங்ஙனம் எண்ணுவதும் இயற்கையானதேயாகும். ஆனால், இங்கு கூறியுள்ள களவு நூல் என்பது திருட்டை விளக்கும் நூலல்ல, இல்வாழ்க்கைச் சட்ட நூலாகும்.

**களவின் பெருமை:—**

காதலர்களின் உள்ளுணர்வுகளையும், அதன் பின் நிகழும் செயல்களையும், வாழ்க்கை முறைகளையும், களவியல் விவரித்துரைக்கின்றது. காதலர் இருவர், பிறருக்குத் தெரியாமல், ஒருவருள்ளத்தை மற்றொருவர் கவர்தலால், இதனைக் 'களவு' என்று கூறியுள்ளார்கள். இதனால், இக்களவினை நன்மைதரும் களவென்றும், திருடுதலைத் தீமைதரும் களவென்றும் கூறியுள்ளார்கள். மகனைத் தந்தை அடித்தார் என்றால், அதனை யாரும் பொருட்படுத்துவதில்லை; ஆனால், அவனைப் பகைவன் அடித்தான் என்றால், அதனையாரும் பொருட்படுத்தாமலிருப்பதில்லை. இவ்வாறே, ஒருவன் ஒருத்தியுடன் களவு நெறியில் இணைந்தான் என்றால், இதனை யாரும் பொருட்படுத்துவதில்லை. ஆனால், ஒருவன் வீட்டிற்குள் நுழைந்து களவு புரிந்தான் என்றால் அதனையாரும் பொருட்படுத்தாமலிருப்பதில்லை. ஒத்த அன்புடன் களவு நெறியில் காதலராயமைந்தவர்கள், அன்புடைமையில் சிறந்திருக்கின்றார்கள்; அறம்புரிவதில் உயர்ந்திருக்கின்றார்கள்; ஒப்புரவறிதலில் உயர்ந்திருக்கின்றார்கள்; இன்சொல் இயம்புவதில் இணையற்று வாழ்ந்திருக்கின்றார்கள். விருந்தோம்புவதில் சிறந்திருக்கின்றார்கள்; சுற்றத்தாருடன் சூழ்ந்திருக்கின்றார்கள்; தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்திருக்கின்றார்கள். எனவேதான், இத்தகைய பண்புகள் நிறைந்த களவு வாழ்க்கையை ஆன்றோர் சிறப்பித்துக் கூறியுள்ளார்கள்.

'களவு' என்னும் சொல்லைக் கேட்டதும் அதனை வெறுக்கலாகாது. ஞானப்பாலுண்ட திருஞானசம்பந்தர், இறைவனை நோக்கி 'என் உள்ளங்கவர் கள்வன்' என்று கூறியுள்ளார். இங்ஙனம் இறைவனைக் குறிப்பிட்டது போலவே,

நம் பொருளைத் திருடிய ஒருவனையும் கள்வன் என்று கூறுகின்றோம். இவ்விரண்டும் கள்வன் என்ற சொல்லளவில் ஒன்றாயிருப்பினும், பொருளளவில் வேறுபட்டிருக்கின்றதென்பதை சிந்தித்தறிகின்றோம்.

தமிழகம் கண்ட நெறி:—

மக்கள் மேற்கொள்ளும், பொய், கொலை, கள், களவு, காமம் என்ற ஐந்தினையும், 'ஐம்பெருங் குற்றங்களென்றும், இவற்றை மக்கள் மேற்கொள்ளலாகாதென்றும் ஆன்றோர் கூறியுள்ளார்கள் ஆதலால், இத்தகைய களவையும், காமத்தையும் மக்கள் ஏற்பது அறமாகுமா என்று சிலர் எண்ணக் கூடும்.

காதலர்கள் இவ் உலக வாழ்விலடையும் இன்பம் சிற்றின்பமாகும். உலகப்பற்றுக்களை நீக்கி, பற்றற்ற இறைவனைப்பற்றியபின் அடையும் இன்பம், பேரின்பமாகும். இப்பேரின்பத்தையடைதற்கு முதற்படியாக விளங்குவது சிற்றின்பமேயாகும். இன்ப நுகர்ச்சியின் இனிமையை அனுபவித்தாலன்றி படித்தோ? பார்த்தோ? கேட்டோ? அறிந்துகொள்ள முடியாது. ஆதலாற்றான், இதனை அகப்பொருள் என்று கூறியுள்ளார்கள். சிற்றின்பத்தை அடையும் ஒருவன் அதிலமைந்துள்ள இன்ப துன்பங்களை அனுபவத்தின் மூலம் அறிந்து கொண்டு, பேரின்பத்தையடைய முயற்சிக்கின்றான். இதனால்தான், திருவள்ளுவர், இல்லறவியலுக்கு அடுத்தாற்போல் துறவறவியலை அமைத்துள்ளார். இல்வாழ்க்கையின்பயன் கணவனும் மனைவியும இறுதி வரை இணைந்து, இன்பந் துய்த்தலன்று, மக்கள் எண்ணிக்கையைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருப்பதன்றும்; சுற்றத்துடன் சூழ்ந்து, பிறர் சுற்றத்தைப் பேசிக்கொண்டிருப்பதுமன்று. அவ்விருவரும், இல்வாழ்க்கையில் ஈடுபட்டு, அன்பையும் அறனையும் பேணி, தமக்குப் பாதுகாவலாக அமைந்த மக்களுடனும், அறத்தை நாடும் சுற்றத்தினருடனும் கூடி வாழ்ந்து பேரின்ப வழியில் ஈடுபடுதலேயாகும். இதனை,

"காமம் சான்ற கடைக்கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன பயனே"

என்ற, தொல்காப்பிய நூற்பாவாலறிந்து கொள்கின்றோம். இதனால்தான்முதுமைப் பருவம் அடைந்த தசரதன், தன் ஆட்சியைத் தன் மகனிடம் கொடுத்துவிட்டு, பேரின்ப வாழ்க்கையடைய விரும்பியிருக்கின்றான்.

ஐம்பெருங் குற்றங்களுள் ஒன்றான காமம் என்பது, ஒருவன் தன் மனைவியிடம் கொள்ளும் காதலைக் குறிப்பதல்ல. தன் மனையாளைத் தன் மனையிருத்திப் பிறர்மனைக் கேகும் பேதையர் வாழ்க்கையே காமவாழ்க்கையாகும். இதனைத்தான், திருவள்ளுவர், 'பிறர்மனை நயவாமை' என்று கூறியிருக்கின்றார். எனவே, சிற்றின்பத்தின் வழியே பேரின்பத்தை அடைவதே தமிழர் கண்ட நெறியாகும் இதனையே, திருக்கோவையார் மூலம் மாணிக்கவாசகர் விளக்கியுள்ளார். ஆதலால், தமிழ் மக்கள் அறநெறி பிறழாதவாறு களவு நெறியை மேற்கொண்டிருக்கின்றார்கள், களவிலக்கணங்களையும் இலக்கியங்களையும் எழுதியிருக்கின்றார்கள்.

**களவிற்புகுந்த கயவர்கள்:—**

நெல்லுடன் தோன்றும் பதர் போலவும், நீருடன் தோன்றும் நுரை போலவும், கண்ணியம் பொருந்திய மக்களோடு கயவர்கள், தோன்றியிருக்கின்றார்கள். பண்புடையோர் மேற்கொண்டிருந்த களவு வாழ்க்கையில், கயவர்களும் ஈடுபட்டார்கள் இவர்கள், தம்மைக் காதலிகள் நம்புமாறு, நல்லவர் போல நடித்தார்கள். அவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு. உறுதி மொழிகளைக் கூறினார்கள்; அவர்களோடு சிலகாலம் சேர்ந்து இன்புற்றார்கள்; சிறிதுகாலம் சென்றபின் காதலிகள் கண்ணீர் விட்டுக்கலங்குமாறு அவர்களைத் துறந்து சென்றார்கள். காதலிகளை மறந்தும், அவர்கட்குத் தெரியாமல் மறைந்தும் வாழ்ந்தார்கள். கையில்லாத ஊமையன், கடலில் வீழ்ந்து தவிப்பதுபோல், காதலிகள் வருந்தினார்கள் பெற்று வளர்த்த தாய் தந்தையர்களைவிட, பேரன்பு கொண்ட உடன் பிறந்தவர்களைவிட, உற்றுழிவுதவும் சுற்றத்தாரைவிட 'காதலரே கண்கண்ட தெய்வம்' என்று கருதியிருந்த காதலிகள் பலர், உண்ணீர்மையற்றுச்சென்ற காதலரை எண்ணிக், கண்ணீர் விட்டார்கள். வெளியில் சொல்ல வெட்கப்பட்டார்கள்; மனதிற்குள் எண்ணி துக்கப்பட்டார்கள். இந்நிலையைச் சான்றோர் அறிந்தார்கள். இதற்கு மாற்று வழியை ஆய்ந்தார்கள் இதனை "பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர்

கரணம்'' —என்ப என்றும் தொல்காப்பியர் கூறியுள்ளமை யால் அறிந்து கொள்கின்றோம்.

இளம் வயது காரணமாக ஒத்த பண்புடையவர்களை, இளங் காதலர்களால் அறிந்து தேர்ந்தெடுக்க முடியவில்லை. காதலித்த காதலர்கள் தாம் காதலிக்கவில்லை என்று பொய் கூறுகின்றனர்கள், உறுதி மொழிகளை மறுத்துக் கூறுகின்றனர் கள். எனவே, ''காதல் வாழ்வை ஏற்க விரும்புவோர், முத லில் ஒருவரையொருவர் விரும்பியிருந்தாலும், பெற்றோர் விருப்பத்தை அறிந்த பின்னர்தான், திருமணம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும், ஐம்பெருங் குரவருள் ஒருவர் முன்னிலையில்தான், வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டும்'' என்றும், களவு வாழ்க்கைக்குத் திருத்தம் கொண்டுவந்தார்கள். காதலர் இருவரும் தாமே ஒப்பந்தம் செய்துகொண்டு வாழ்வதற்குத் தடை விதித்தார்கள். இதனை,

> ''கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
> கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே''

என்ற நூற்பாவின் மூலம் தொல்காப்பியர் கூறியிருக்கின் றார். அக்காலத்தில் வகுத்த இவ்வாழ்க்கைச் சட்டமே, தமிழகத்தில் இன்றும், மரபு முறைப்படி அமைந்திருக்கின் றது. காதலர் இருவர், முதலில் ஒருவருக்கொருவர் காதல் கொண்டிருந்தாலும், அதனைப் பெற்றோர்கட்கு அறிவித்து அவர்களுடைய அனுமதி கிடைத்த பிறகே சான்றோர் முன் னிலையில் திருமணம் செய்து கொள்ளும் அக்காலப் பழக்கம் இன்றும் இருந்து வருகின்றது இவ்வாறே, காதலர் இரு வரும் திருமணத்திற்கு முன் ஒருவரையொருவர் அறியாம லிருந்தாலும், பெற்றோர் விரும்பித் திருமணம் முடித்து வைத்த பிறகு, இருவரும் சிறந்த காதலராய் விளங்கிவரும் வழக்கமும் இன்றும் இருந்து வருகின்றது

வேறுபாடு:—

அன்று திருமணத்திற்கு அன்பையும் அறத்தையும் அடிப்படையாகக் கொண்டிருந்தார்கள் இன்று. பொருளை யும் பதவியையும் பெரிதாக எண்ணுகின்றனர்கள். அன்று, பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உரு திரு, அன்பு, அருள், அடக்கம் அறிவு என்ற பொருத்தங்கள் காதலர்களி டம் இருக்கின்றனவா? என்று ஆராய்ந்தார்கள். இன்று,

பெயர்ப் பொருத்தமும் இராசிப் பொருத்தமும் சரியாக இருக்கின்றனவா? என்று ஆராய்கின்றார்கள். அன்று, பண்பை அடிப்படையாகக் கொண்டிருந்தார்கள். இன்று, பளபளப்பான தோற்றத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றார்கள். அன்று, இம்மை இன்பத்தின் மூலம் மறுமையின்பத்தை அடைய எண்ணினார்கள்; இன்று, இன்மையின்பத்தையே இணையற்ற இன்பமென்று எண்ணிக்கொண்டிருக்கின்றார்கள். அன்று, காதலர் இருவரும் இடையில் ஒருவரையொருவர் மாறறிக்கொள்ள விரும்பவில்லை; இன்று, இடையில் மாறறிக்கொள்ள விரும்புகின்றார்கள் அன்று, இவ்வெண்ணம் காதலர் சிலரிடம் மட்டும் தோன்றியிருந்தது; இன்று, இவ்வெண்ணம் காதலிகள் சிலரிடத்திலும் தோன்றியிருக்கின்றது.

**குறுந்தொகை விருந்து:—**

அக்காலத்தில் தலைவன் தவறி நடந்திருக்கின்றான். ஆனால், தலைவி அங்ஙனம் தவறி நடக்கவில்லை. தலைவன் நெறி பிறழ்ந்து வாழ்ந்தமையை அகப்பொருள் இலக்கியங்களிலிருந்து நாம் அறிந்துகொள்கின்றோம் எடுத்துக்காட்டாக, காதலில் தவறிழைத்த கள்வனொருவனைப் பற்றிய செய்தி குறுந்தொகையில் கூறப்பட்டிருக்கின்றது. களவு வாழ்க்கையில் ஈடுபட்ட காதலன் ஒருவன் தன் காதலியிடம் 'விரைவில் வந்து உன்னைத் திருமணம் புரிந்துகொள்கின்றேன்' என்று கூறிப் பிரிந்து சென்றான். சென்ற தலைவன், பல திங்கள் சென்றும் திரும்பிவரவில்லை இதனால், மனம் நொந்த தலைவி, தன் தோழியிடம் தன் நிலையைக் கூறி வருந்துகின்றாள். தலைவி, தோழிக்குக் கூறிய விளக்கங்களைக் காணும்போது 'அவ்விருவரும் நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருக்கக் கூடும்' என்று எண்ணவேண்டியிருக்கின்றது.

உரையாடல்;

தோழி:– (தலைவியை நோக்கி) ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது?

தலைவி:– என்னை மணம் புரிந்துகொள்ளும் பொருட்டு 'முப்பது நாட்களுக்குள் வருகின்றேன்' என்று கூறிச்சென்ற காதலர், இன்னும் வரவில்லை. அதனை நினைத்து வருந்திக்

கொண்டிருக்கின்றேன்.

தோழி:- அவர் கூறியதை உண்மை என்று நம்புகின்ருயா?

தலைவி.- நம்பியதால்தான் அவரைக் காதலராக ஏற்றேன்.

தோழி:- நீ அவருடன் களவு வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தபோது யாராவது பார்த்திருக்கின்ருர்களா?

தலைவி: யாராவது பார்த்துக்கொண்டிருந்தால் அவருடன் நான் கூடியிருக்க முடியுமா? அங்கு யாரும் இல்லை. களவில் என்னைக் கவர்ந்தவர் அவரே யாவர். களவு வாழ்விற்குச் சான்று கேட்பது கள்ளச் சந்தையில் வாங்கிய பொருளுக்குப் பற்றுச்சீட்டு கேட்பது போலிருக்கின்றதே?

தோழி: உன்னிடம் சொல்லியவாறு, தலைவர் வரவில்லை என்ருல், ஊர்ப் பஞ்சாயத்தாரிடம் சொல்லி, நம் குறையைத் தீர்த்துக்கொள்ள வேண்டுமல்லவா? அவர்களிடம் சொன்ஞல், சான்று இருக்கின்றதா? என்று கேட்பார்களே?

தலைவி:— பெற்ற தாயே, "தான் பிள்ளையைப் பெறவில்லை" என்று கூறிஞல், பிள்ளையால் அதனை எவ்வாறு மெய்ப்பிக்க முடியும், அது போல, அறநெறியைப் போற்ற வேண்டிய தலைவனே 'இல்லை' என்று பொய் கூறிஞல், அதனை எவ்வாறு யான் மெய்ப்பிக்க முடியும்? பொய் கூறுபவரின் நெஞ்சமே அவரை வருத்துமல்லவா?

தோழி:— உன் தலைவனின் உள்ளத்தை அவர் கூறிய பொய் வருத்திக்கொண்டிருக்கலாம். ஆஞல், உன்னிடம் அவரை வருவிக்க அதஞல் முடியுமா என்பதுதான் என் ஐயம். பஞ்சாயத்தார்களிடம் கூறும்போது, களவு நிகழ்ந்த இடம், காலம், சான்று முதலியவற்றைக் கூறவேண்டுமே? அவற்றையெல்லாம் கூறிஞல்தான் பஞ்சாயத்தார்கள் ஏற்றுக்கொள்வார்கள்,

தலைவி:— களவு நிகழ்ந்த இடம் மலைப்பகுதியாகும். அங்குள்ள கால்வாயின் அருகே இரவில் அவரைச் சந்தித்தேன்.

தோழி:- களவு வாழ்க்கைக்கு இரவு நேரந்தான் ஏற்றது போலும். நீரோடையருகே, யாரும் இல்லையா?

தலைவி:- தினையின் தாளையொத்த கால்களையுடைய நாரையொன்றுதான் இருந்தது. அதுவும் எங்களைப்பார்க்க வில்லை; நீரில் வருகின்ற ஆரல் மீன்களை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

தோழி:- (சிரித்துக்கொண்டு) காதலனைக் காணச் சென்ற நீ! நாரையை ஏன பார்த்துக்கொண்டிருந்தாய்?

தலைவி:- இரவில் மனிதரைக்கண்டால் நாரை ஒலியை எழுப்பும். அவ்வாறு நாரை எங்களைக்கண்டு ஒலியை எழுப்பினால், பிறர் எங்கள் களவு வாழ்க்கையை அறிந்து கொள்வார்கள் அல்லவா? அதனால்தான் நாரை எங்களைப் பார்க்கின்றதா என்று அடிக்கடி அதனைப் பார்த்தேன்.

தோழி:- மின்னுவதெல்லாம் பொன்னாகாது. உருவால் மக்களைப்போல் தோன்றுபவர்களெல்லோரும் மக்களாக மாட்டார்கள். மக்களுக்கிருக்கவேண்டிய பண்புகள் அவர்களிடம் இருந்தால்தான் அவர்களை மக்கள் என்று கருத வேண்டும். நீ! இளமை காரணமாக, இவ்வுண்மையை அறிந்துகொள்ள வில்லை. உன் தலைவன் நன் மகனாக இருந்தால் இத்தனை நாட்களாகியும் இங்கு வராமலிரான். எனவே, நீ புளியங் கொம்பென்று கருதி முருங்கைக்கொம்பைப் பிடித்திருக்கின்றாய். பெற்றோர் பார்த்து மணம முடிப்பதற்குள், நீ! அவசரப்பட்டுவிட்டாய். ஆழம் அறியாமல் காலை விட்டுவிட்டாய். என் செய்வது! "அவசரக்காரனுக்கும் ஆத்திரக்காரனுக்கும் புத்தி மட்டு" என்பது பழமொழி யல்லவா?

தலைவி:- வெந்த புண்ணில் வேலை விட்டு ஆட்டுகின்றாயே? நான் அவசரப்பட்டு களவு வாழ்க்கையை மேற் கொண்டதை நினைத்து வருந்துகின்றேன் இருப்பினும் என் தலைவர் என்றைக்கேனும் என்னை நினைத்து வருவார் என்றே நம்புகின்றேன்.

தோழி:- "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" என்பதுதான் பழமொழி 'காதலனை நம்பினோர் கைவிடப் படார்" என்பது புதுமொழியாயிருக்கின்றதே?

தலைவி - நீ என்னை இகழ்ந்தது போதும் இனி நான் என் செய்யலாம் என்பதைச் சொல்.

தோழி:- வா! ஊர்ப் பஞ்சாயத்தார்களிடம் கூறி உன் தலைவனை அழைக்க முயற்சிப்போம். இருவரும் செல்கின்றனர்.

இவ்வுரையாடல் கற்பனையாக எழுதப்பட்டிருப்பினும் இதிற காணும் செய்திகள் அக்கால இயல்பினை உணர்வர்க்கும் எடுத்துக்காட்டுவதாயிருக்கின்றன. இக்கருத்துக்களை

''யாரும் இல்லைத் தானே கள்வன்
தானது பொய்ப்பின் யானெவன் செய்கோ
தினைத்தா ளன்ன சிறுபசுங் கால
ஒழுகுநீ ராரல் பார்க்கும்
குருகும் உண்டுதான் மணந்த ஞான்றே''

என்ற குறுந்தொகைச் செய்யுளிலிருந்து அறிந்துகொள்கின்றோம். இங்ஙனம், கயவர் சிலர், காதலராயமைந்து காதலித்த பெண்களைக் கலங்கவிட்டிருக்கின்றார்கள். இனி, அகநானூற்றில் கூறப்பட்டுள்ள செய்தியொன்றைக்காண்போம்.

## கள்வனின் சிறுமை:—

கள்ளூர் என்னும் ஊரில் பண்பற்ற ஒருவன் வடிவால் மனிதனைப்போல் தோன்றியிருந்தான் இவன் வஞ்சனையாகப் பேசுவதிலும், பொய் கூறுவதிலும் இணையில்லாதவனாக வாழ்ந்தான் வெளுத்ததெல்லாம் பால் என்று கருதும் வெள்ளையுள்ளம் படைத்த பெண்ணொருத்தி, அவனைக் களவுநெறியில் காதலனாக ஏற்றிருந்தாள். சில நாட்கள் வரை அவள் அவனுடன் கூடி சிறப்புற வாழ்ந்தாள் பின்னர், தன்னுடன் கூடியிருந்த தலைவன் தன்னைவிட்டு ஓடிவிட்டதை எண்ணி வருந்தி, ஊர்ப்பஞ்சாயத்தாரிடம் சென்று முறையிட்டாள். தன்னை விட்டு ஓடிய தலைவன், பிற பெண்ணுடன் கூடி வாழ்வதைக் கூறினாள். ஊர்ப்பஞ்சாயத்தார் அவனை அழைத்து விசாரித்தார்கள் தன்னை அழைத்து பஞ்சாயத்தார் விசாரித்த போது, தான் அவளுடன் களவு வாழ்க்கையில் ஈடுபடவில்லை என்றும் அவளுக்கு உறுதிமொழி கூறவில்லை என்றும் பொய் கூறினான் இவன் கூறுவது பொய் என்பதைச் சான்றுகள் மூலம் பஞ்சாயத்தார் அறிந்தார்கள்.

பொய் கூறிய தலைவன், ஒரு பெண்ணின் வாழ்க்கையைக் கெடுத்திருக்கின்றான் அவளுடைய வாழ்க்கையை இனி மாற்றியமைக்க முடியாது. பண்பற்ற கயவர்கள் சிலர் இவனைப்போல் தோன்றியிருக்கின்றார்கள். இத்தகைய செயல் புரிபவர்களுக்குக் கடுந்தண்டனை யளித்தால்தான் வருங்காலத் தமிழ் சமுதாயத்தின் மாண்பினைக் காக்க முடியும். இவனுக்கு அளிக்கும் தண்டனை, இவனைப்போல் நடக்க விரும்புபவர்கட்குத் தக்க பாடம் கற்பிப்பதாக இருக்கவேண்டும் என்று பஞ்சாயத்தார் கருதினார்கள்.

பலரும் காணுமாறு பொய் கூறிய கள்ளூர்க் கயவனைப் பிடித்து மரத்தில் கட்டி அடித்தார்கள். அவன் தலையில் சுண்ணாம்பைக் கொட்டினார்கள் இஃது, 'அவனை நீற்றறையிலிட்டுக் கொளுத்துதற்கு முன் செய்யப்படு செயல்' என்பதனை அறிந்த ஊர் மக்கள், மகிழ்ந்து ஆரவாரம் செய்தார்கள். கொடியோனுக்குக் கொலைத் தண்டனை அளித்தது வரவேற்கத்தக்க தீர்ப்பாகும் என்று கூறி மகிழ்ந்தார்கள். இச் செய்தியை...............

''திருநுதல் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனி லாளன் அறியே னென்ற
திறனில் வெஞ்சூள் அறிகரி கடாஅய்
முடியார் பெருங்கிளை செறியப் பற்றி
நீறுதலைப் பெய்த ஞான்றை
வீறுசால லவையத் தார்ப்பினும் பெரிதே''

என்று மணிமிடை பவளத்தில் (செய் 256 ல்) அமைந்த செய்யுளடிகள் நமக்கறிவிக்கின்றது.

இஃது, ஒழுக்கந்தவறி நடந்த தலைவனுக்குத் தோழி எடுத்துக்காட்டிய வரலாற்றுச் செய்தியாகும் ஆனால், இக்காலத்தில் ஒழுக்கந்தவறி நடப்பவர்கட்கு இவ்வரலாற்றை எடுத்துக்காட்ட வேண்டியதில்லை, அவர்களுக்குத் தண்டனை யளிக்க, அரசாங்கச் சட்டமே காத்துக்கொண்டிருக்கின்றது. அங்ஙனமாயின் ஏன் அஃது எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றதென்றால், பழங்கால மக்கள், ஒழுக்கத்தை உயிரினும் சிறந்ததாகக் கருதினார்கள் என்பதையும், ஒழுக்க நெறியிலிருந்து தவறியவர்கட்குக் கடுந்தண்டனையளித்து வருங்காலத்தில் தீயொழுக்கம் நிகழாமல் காக்கவேண்டுமென்று கருதினார்கள் என்பதையும் எடுத்துக்காட்டுதற்கேயாகும்.

முடிவுரை:—

நம்முடலில் தோன்றிய சிறு காயத்தைப் பொருட்படுத்தாமல் விட்டுவிட்டால், பருத்து வளர்ந்து, உடல் முழுவதும் பரவி உடலுக்கே ஊறு விளைவித்து விடுகின்றது. இவ்வாறே, கயவர் சிலரால் களவு வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்ட களங்கம், வளர்ந்து, வேரூன்றி களவு வாழ்க்கைக்கே ஊறுண்டாக்கிவிட்டது. களவுவழிக் காதல் கொள்வதை அக்காலச் சான்றோர்கள் சிறிது மாற்றியமைத்திருக்கின்றார்கள். அவ்வாறே, இன்று மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். ஆனால், ஒரு சிலா பழங்காலக் களவு முறையை மேற்கொண்டொழுகுகின்றார்கள். பெருங்காயம் இருந்த பாண்டம் அம்மணத்தை வெளியிட்டுக்கொண்டிருத்தல் இயற்கையல்லவா?

தூய்மையான பால், தூய்மையற்ற பாத்திரத்தையடைந்ததும் அதன் குணம் கெட்டுவிடுகின்றது. நற்பண்பில்லாதவன் பெரும் செல்வத்தைப் பெற்றவனாக இருந்தாலும் அச்செலவம் ஒருவர்க்கும் பயன்படாமல் அழிந்து விடுகின்றது. இவ்வாறே பண்பிலார் மேற்கொள்ளும் களவு வாழ்க்கை நல்வாழ்க்கையாகாமல் கெட்டுவிடுகின்றது.

“பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வம் நன்பால்
கலந்தீமை யால்திரிந் தற்று” —குறள்.

———

# சுழல்

இயற்றியவர். இரா. வேலுச்சாமி
இளங்கலை 2-ம் ஆண்டு
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

சுந்தரமாய்த் தமிழதனில்
சொந்தமுடன் கவிபுனையச்
சுழற்சங்கச் சான்றோர்கள்
சுற்றவிட்ட அறிக்கைகண்டே

சந்தத்தமிழ் வளர்க்குந்தமிழ்ச்
சங்கத்து மாணவன் யான்
சொந்தமுடன் என்கருத்தைச்
சொல்ல வந்தேன் சுழற்றலைப்பால்!

சுழலென்னும் தலைப்புக் கூறி
என் மதியைச் சுழலவிட்ட
சுழற்சங்கச் சான்றோரே
சாற்றுகின்றேன் என் வணக்கம்

ஆற்றுநீர் சுழன்றோட
அதிலிரண்டு கயல்சுழல
அகப்பட்ட மனிதஉயிர்
அப்படியே மாண்டோட
வேற்றுமையே காணாது
விரைந்தோடும் நீர்ச்சுழலே!

அகிலமெல்லாம் படைத்துவைத்து,
அண்டமுடன் சுழலவிட்ட
ஆண்டவனும் தில்லையிலே!
ஆடுவதும் ஒரு சுழலே!
அகிழமதன் சுழலுமின்றேல்
அவனியிலோர் உயிருமில்லை

எட்டு மணி நேரத்திலே
எந்திரத்தின் சூழல்தனிலே
கொட்டுகின்ற வியர்வையுடன்
குடும்பம் நிறை சுமைகளுடன்—தன்னை

விட்டுவிட எண்ணாத
விதியோடும் தான்சூழன்று
தட்டுக்கெடும் தொழிலாளர்
தவிப்பதுவோ வறுமைச்சூழல்.

பார் முழுதும் மக்களெலாம்
பசியோடு வாடுகையில்
ஏர்சூழன்று ஏற்றமுற்றே
எத்தனையோ இன்பங்களை
ஊர்முழுதும் சூழலவிடும்
உழவனவன் வாழுவதும்
தேர்மேலே வாழ்வுமல்ல!
தினமுமங்கும் பெருஞ் சூழல்தான்!

மாதங்கள் பலவோட
மாநகரைச் சுற்றிவந்த
மாணவர்க்கு வருவதுவோ
'மார்ச்சில்' ஒரு தேர்வுச் சூழல்!

காளைப்பருவத்தான் கன்னியவள்
கடைவிழியில் இதழசைவில்
பாளைச்சூழற் சிரிப்பதனில்
பறிகொடுத்த நெஞ்சத்தான்—மண
வேளைவந்தும் உறவுதரும்
வேதனையால் வேல் விழியைக்
கோழையெனப் புறம் விடுத்துக்
குதிப்பதுமோர் பிரிவுச்சூழல்!

விண்வெளிக்குச் செல்வதற்கு
விரைவுடனே செயல் புரியும்
மண்ணிலுள்ள நாட்டினர்தம்
மதிதன்னைச் சூழலவிட்டே
விண்ணிலுள்ள மதி சென்றே
வெற்றிதன்னை நாட்டி வந்தார்!

இன்றுள்ள நிலையதனில்
இந்நாட்டில் காண்பதெல்லாம்
குன்றாத வறுமைச் சூழல்;
குறையாத ஊழற்சூழல்
என்றென்றும் நிலைமாறா
ஏற்றமிகு விலையின் சூழல்
நன்றென்று கூறுவர் யார்
நாட்டிலுள்ள இச்சூழலை?

இச் சூழலை நிறுத்திடவே,
இன்றுள்ளோர் நலங்கெடவே
இச்சகங்கள் தனைப் பேசி
இரவினிலே ஓட்டுவேண்டும்
நச்சு நிறைத் தலைவர்களை
நாமொதுக்கி, நாட்டு நலம்
மெச்சவுமே உயர்வதற்கு
மேதினியில் பாடுபட்டு
பச்சையாய்ப் பசுமையாய்ப்
பாரதத்தைச் செழிக்கவைக்க
நிச்சயமாய் வருபவரை நீள்
கரங்கள் நீட்டி வரவேற்றிடுவோம்!

**(10-10-75ம் நாள் மதுரை ரோட்டரி சங்கங்கள் நடத்திய கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை )**

---

"நன்மதுரைச் சங்கம் நலம்பெறு மாறிசைந்த
தன்மதுரை யேநற் றகவுளோய் கங்கையணி
மின்மலருஞ்செஞ்சடை மேலோன்றன் இன்னருளால்
பீடுகெழு செல்வமோடு வழி வழி
நீடுவா ழியரிந் நிலமிசை யானே"

— ந மு. வே நாட்டார்

# பாண்டித்துரைப் பதிகம்

— ஞா. தேவநேயன் —

1

நாலா விடத்தும்வாழ் நற்றமிழ்ப் பண்டிதர்சேர்
நாலாந் தமிழ்ச்சங்கம் நாட்டியதால்—மேலான
பாண்டித் தமிழ்வேந்தன் பாங்கிற் றமிழ்க்காப்பே
பாண்டித் துரைத்தேவன் பண்பு.

2

பல்லா யிரமாகப் பண்டைத் தமிழ்ச்சுவடி
எல்லா விடத்தும் இயன்றவரை—பல்லோரைத்
தூண்டித் தொகுத்தான் துணிமறத் தொல்குடிப்
பாண்டித் துரைத்தேவன் பார்.

3

நன்னூல் பலவற்றின் நன்மணிப் பாத்தொகுத்த
பன்னூற் றிரண்டென்னும் பண்டாரம்–என்னோரும்
வேண்டிற்றெளிதாய்விரைந்துகூட் டுண்ணவைத்தான்
பாண்டித் துரைத்தேவன் பார்த்து.

4

இலக்கணமும் பல்வே றிலக்கியமுங் கற்ற
புலக்கண மன்றிப் பொதுவும்—மலக்கமற
வேண்டும் விளங்குரைகள் வெவ்வேறு தோற்று
வித்தான்
பாண்டித் துரைத்தேவன் பாங்கு

5

கோவை யுலாமாலை கூறுங் கலம்பகமே
பாவின் தொகையாம் பனுவல்கள்–மேவுதொன்மை
ஈறு தொடங்கி யெளிய விலைப்பதிப்பான்
தேறுபாண் டித்துரைத்தே வன்.

6

ஆரியமுஞ் செந்தமிழு மான விருகடலில்
வாரி யெடுத்தசிங் காரவேல்—கோர
அபிதான சிந்தா மணிவெளியிட் டான்காண்
குவிதானம் பாண்டித் துரை.

7

செந்தமிழ் என்னும் சிறந்ததமிழ் மாதிகைதான்
உந்து மணிபொன் னுகுமருவி—நந்தவுரை
மாணட அறிவாய்வு மல்கிவெளி வந்ததுவும்
பாண்டித் துரைத்தேவன் பாடு

8

சென்னை யரசியலார் செந்தமிழ்ச் சொல்லையெல்லாம்
முன்னும் அகர முதலியெனத்—துன்னுவிக்க
வேண்டி யமைத்த வியவர் குழுவுறுப்புப்
பாண்டித் துரைத்தேவன் பங்கு.

9

எவரும் நல்ல இயற்றமி ழாசிரியர்
ஆவகை யாய்த்தெண்ணரி யாண்டுதொறும் மூவகைப்
பண்டிதத் தேர்வமைத்தான் பாண்டித் துரைத்
இன்று மதற்கின் றிணை தேவன்

10

தென்மதுரைப் பாண்டியன் தெய்வத் தமிழ்வாழி
நன்மதுரை நாலாஞ்சங் கம்வாழி—சொன்மதுரப
பாலவா நத்தர்வேள் பாண்டித் துரைத்தேவன்
போலிமை யற்ற புகழ்.

---

"தமிழர் சிறக்கவும் தமிழ்ப்பயிர் தழைக்கவும்
கொண்ட நின் எண்ணம் குறைவில தாகுக!
வாழிய பெரும! வாழிய பெரும!!
ஊழிஊழி வாழிய சிறந்தே"

த. வே. உமாமகேசுவரன்.

## நல்லோர் செம்மல்
(4–ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோட்டை மன்னருடைய தாத்தா பாண்டித்துரைத் தேவரவர்கள் வேண்டியபடி 2008 ரூபாய் அனுப்பியிருந்தார். தமிழ்ச்சங்க நலத்திற்கு ஓராயிரத்தையும், ஓராயிரத்தைத் தமிழ்ச் சங்கத் தேர்வில் முதன்மை, இராண்டாம், மூன்றாம் பரிசுக்குரியவர்களுக்குப் பரிசாகக் கொடுங்கள் என்று எழுதியிருந்தார். முதன்முதலில் முதல்பரிசாகத் தங்கத்தோடாவைப் பெற்ற பெருமை வேங்கடசாமிநாட்டாருக்கே உண்டு. அத்தோடா இருபதுபவுன் நிறையுடையது. இன்றைய நிலையில் ஒரு திருமணத்தையே நடத்திவிடலாம். அத்தோடா 'புதுக்கோட்டை மகாராசா அன்பளிப்பு' என்ற பொறிக்கப் பெற்றிருக்கும். பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்து சங்குப்புலவர் முதல்பரிசாக அத்தோடாவைப் பெற்றார்.

## மெல்லத்தமிழ் இனிச் சாகும்

தேவரவர்கள் அறிவு ஒளிகொண்டு வரலாற்றில் திகழ்ந்திருக்கிறார்கள். நாகையில் நன்முறையில் நாநலத்தை காட்டியிருக்கிறார் குடந்தையில் பேசியிருக்கின்றார். தஞ்சையில் திருச்சியில் ஓர்நாள். மதுரையில் பலநாள் திருநெல்வேலி சைவசித்தாந்த சபையில் பலதிங்கள் பேசி இருக்கிறார். தமிழ்ச்சங்கத்தை தோற்றுவித்த அவர்கள் நூல்களையெல்லாம் ஒன்றுதிரட்டினார்கள் சினிவாச ஐயங்கார் போன்றோர் இக்கட்டிடத்தில் கூடி தமிழ் உண்டு களிப்படைந்தனர் புலவர்களையெல்லாம் கண்டபோது கைநீட்டி வரவேற்றுப் பாதுகாத்த காரணத்தால் இருபதாம் நூற்றாண்டில் இனிய இலக்கியங்களைக் காண முடிகிறது கிடைப்பதற்கரிய நூல்களைத் தமிழ்ச் சங்கம் தனதாகக் கொண்டிருக்கிறது 'பாண்டியன் நூலகம்' என்று வள்ளல் பெயரிலேயே வாழ்ந்துவருகிறது. சாமானியனாகத் தோன்றாமல் சான்றோன் பொன்னுச்சாமித் தேவருக்குத் திருக்குமாரனாகத் தோன்றிய அவர் நினைத்தால் பஞ்சுமெத்தை, பட்டுபீதாம்பரம், வெண்சாமரம் வீச வேல்விழிகள், வேடிக்கை காட்ட விகடகவிகள், இம் என்றால் ஏனென்று கேட்க எத்தனையோ ஆட்கள் இன்னலின்றி இருந்திருப்பார் அதை விடுத்து உடல் பொருள் ஆவி அனைத்தையும் ஈந்த இல்லோர் செம்மலை —

உருப்படியான தமிழ்ப்பற்றாளனை நாடுகாண தவறிவிட்டது பிள்ளை என்று சொல்வார்கள் அது மீனாட்சிசுந்தரம் பிள்ளை தான். ஐயர் என்று சொல்லுவார்கள் அது உ. வே சாமிநாதய்யர்தான். அதுபோல 'தேவர்' என்றால் தமிழ் காத்த தமிழ் வளர்த்த பாண்டித்துரைத்தேவரவர்கள்தான் இவருக்காக ஏற்கனவே எண்ணித்தான் எழுதியிருக்கிறான் வள்ளுவன் 'செயற்கரியன செய்வார் பெரியர்' என்று 1867-ஆம் ஆண்டு இப்பெரியாரின் பிறந்தநாள் என்று சொன்னால் 1872-ஆம் ஆண்டு-இல் சரியாக ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னால் செக்கிழுத்த செம்மல் வ. உ. சி. தோன்றினார். வ உ சி தூத்துக்குடியில் கப்பல் கம்பெனி ஆரம்பித்தபோது பாண்டித்துரைத்தேவர் ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார் என்றால் இலாபம் கருதியல்ல. ஒரு தமிழன் ஆரம்பித்தான், தொடங்கினான் என்ற இன உணர்வோடு, இந்த நாட்டில் இப்படியொரு இயக்கம் தேவை என்ற இருமாப்போடு கொடுத்தார். இவ்வெண்ணம் கொண்டு ஒரு மன்னர் கொடுத்தார் என்றால் அதுதான் இவரது நாட்டுப்பற்றின் உச்சமாக இருக்கமுடியும். இந்தச் செயலை இந்நாட்டு வரலாற்றிலே படைத்து விட்டோம். பறைசாற்றத் தவறிவிட்டோம். வ உ. சி யை நம்பி அவரது கப்பல் கம்பெனியை நம்பி ஆங்கிலேயனை எதிர்த்துநடக்கும் ஒரு செயலுக்கு ஒரு லட்சம் கொடுத்தார் என்றால் அவருடைய காலச்சூழலில் அதைவிடப் பெரிய நாட்டுப்பற்று வேறு ஒன்றும் இருக்க முடியாது.

உண்டால் அம்மஇவ் வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே முனிவிலர்
துஞ்சலும் இலர்பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழெனின் உயிருங் கொடுக்குவர் பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர் அயர்விலர்
அன்ன மாட்சி அனையராகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே (புறம் ௧௮௨)

— என்ற புறநானூற்றுப் பொருளுக்கு.

எடுத்துக்காட்டாக ஏற்றம் பெற்றார், தமிழின்றித் தான் இல்லை என வாழ்ந்த தண்பாண்டித்தேவர் தமிழ்மக்கள் செய்த தவக்குறைவால் 1911-ல தமிழ் உள்ளத்தைத் தன்னகமாக் கொண்டு விண்ணக செய்தினார். ஐயோ! அன்னைத்

தமிழின் அருந்தவப் புதல்வன் மறைந்தானே! என அல்லலுற்று ஆற்றாது அழுது அனாதைகளாயினர் தமிழர். 'தமிழ் நாட்டில் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை' என்றநிலை பாண்டித்துரைத்தேவர் இருந்திருந்தால் ஏற்பட்டிருக்குமா? அவருக்குப் பின்னால் நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்றவர்கள் தொண்டைத் தொடர்ந்தார்கள் தமிழ்ச் சங்கம். துறைமுவு. இளப்புலவர், புலவர் தேர்வுகளை நடத்தி நாடெங்கும் நல்லதமிழ் அறிஞர்களை உருவாக்கி வருகிறது. இன்று தமிழ்நாட்டிலுள்ள உயர்நிலைப்பள்ளிகளில் கல்லூரிகளில் பணியாற்றும் தமிழ்புலவர்களில் எழுபத்தைந்து விழுக்காடு தமிழ்ச்சங்கத்தில் பட்டம் பெற்றவர்களே சில புல்லுருவிகளை தமிழ்ச் சங்கம் என்ற பெயரில் தனிக் கல்லூரிகள் நடத்தி தமிழ்ச்சங்கத்தின் பெயருக்குப் பொல்லாங்கு சேர்த்திருக்கிறார்கள். அதை நாங்கள் மறுப்பதற்கில்லை. ஆனால் எங்கள் அங்கீகாரம் பெற்ற எத்தனை கல்லூரிகள் சீரும் சிறப்புமாக நடைபெற்றது தெரியுமா? உடலில் ஒரு ஓக்கல கட்டி புறப்பட்டு விட்டால், அது தீங்கு செய்யும் போது இரணசிகிச்சை (Operation) செய்தாவது அதைப் போக்கலாம. அதற்காக உயிரையா மாய்த்துக் கொள்வோம்.

'கொலையிற் கொடியாரை வேந்து ஒறுத்தல்
பைங்கூழ் களைகட்டதனோடு நேர்'

என்று வழிவகை செய்திருக்கிறான் வள்ளுவப்பேராசான் கோணலைப் போக்கச் சொன்னால் கொள்கையை விட்டுவிடுவதா? உடலது ஊனத்தைப் போக்க உயிரை விட்டுவிடுவதா? பயிர் காக்க வேலியிடச் சொன்னால் வேகவைத்து விடுவதா? காட்டிய கண்ணை கைவிரலை கொண்டு குத்துவதா? கட்டிய மனைவியைக் கடனுக்காக விற்பதா? தமிழ் இயற்றிய சங்கத்தை எடுத்து ஆறக்குப்பின் ஏறெடுத்துப் பார்க்காதே என்று ஆணையிடுவதா? 'மெல்லத்தமிழ் இனிச்சாகும்' என்று ஒரு பேதை பாரதியிடம் உரைத்தான். தமிழ் நாட்டில் தமிழ்த்தெருவில் தமிழ்தான் இல்லை என்றுஏங்கினான் பாரதிதாசன். பைந்தமிழ் தேர்ப்பாகன் பாரதி வாழ்ந்திருந்தால்,

''செந்தமிழ் நாடென்ற போதினிலே — தன்பத்
தேள்வந்து கொட்டுது காதினிலே'' —

என்று பாட்டை மாற்றிப் பாடி வெட்கப்பட்டிருப்பான்; வேதனைப்பட்டிருப்பான்.

## பகுதிப் பல்கலைக் கழகம் (Deemed University)

தமிழ், உயர்தனிச் செம்மொழி [The Primary Classical language of the World) எனப் பாவாணர் கூறுவார். தொன்மை மிகுந்த மொழியை நாடெல்லாம் பரப்பிக் கொண்டிருக்கிறது மதுரைத் தமிழ்ச்சங்கம். பம்பாய், உத்திரபிரதேசம், ஆந்திரா, சிலோன், பர்மா முதலிய பகுதிகளில் இருந்தும் ஆண்டுதோறும் எங்களுக்கு மாணவர்கள் உண்டு. சென்னையில் 'தக்கண பாரத இந்திப் பிரச்சாரசபை' இருக்கிறது. அது இரண்டுகோடி ரூபாயில் பகுதிப்பல்கலைக் கழகமாக (Deemed University) பல்கலைக் கழகத்திற்கு இணையாக இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு கொடுக்கும் பட்டத்தைப் பதினான்கு பல்கலைக் கழகங்களும் ஏற்றுக் கொள்கின்றன. பகுதிப் பல்கலைக் கழகம் என்றால் பட்டம் கொடுக்கலாம் ஆராய்ச்சிக் குப் பட்டம் அளிக்கலாம் அதற்கு அரசு நல்கை (Government grant) யளிக்கிறது. இந்திக்கு மட்டும் அல்லாது வடமொழிக்கும் இதுபோன்ற அமைப்பு இருக்கிறது. தமிழ்ச் சங்கத்திற்கு அதுபோன்ற தகுதிகள் அனைத்தும் இருக்கிறது. குறைவிருந்தால் கூறிக் களையலாம் நிறைவை நிறப்பலாம். குறையைக் களைவதை விட்டுவிட்டு கொலைசெய்வதா விவேகம்.

## காலம் கனியட்டும்

'தமிழ் ஆர்ந்த தமிழ்மகன் தான் தமிழ்நாட்டின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்' என்ற பாரதிதாசனின் கனவு நனவான காலம். 'என்னருந் தமிழ் நாட்டின் கண் எல்லோரும் கல்விகற்று' ஏற்றம் பெற வேண்டும் என்ற ஏக்கம் தணிந்து வரும் காலம். தெருவெல்லாம் தேமதுரத் தமிழோசை நன்றாடு பொன்றாடாகும் பொற்காலம். இரண்டாவது உலகத்தமிழ் மாநாட்டைத் தமிழ்நாட்டின் தலைநகரில் தலைநிமிரச் செய்தோம்.

'தமிழுண்டு தமிழ்மக்களுண்டு
தமிழுக்கு நாளும்செய்வோம் நல்ல தொண்டு'

என்றோம்.

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு'

……………………………………………

..........................................................

பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைந்தால்
சங்காரம் நிசமென்று சங்கே முழங்கு
என முழங்கினோம் ... ................................

உலகத்தமிழ் மாநாட்டில் தமிழின்பால் நமக்குள்ள பற்றுதலை உலகறியச் செய்ய வேண்டும் எனவிரும்பினோம். வெளிநாட்டிலிருந்து வந்த வீரமாமுனிவர், கால்டுவெல், ஜி யு போப் ஆகியோருக்கும் கம்பனுக்கும், வள்ளுவனுக்கும், பாரதிக்கும் பாரதிதாசனுக்கும் தமிழ்மூதாட்டி ஔவைக்கும், இளங்கோவுக்கும் அவன் படைத்த கண்ணகிக்கும் சிலை வைத்தோம். தமிழினின்பால் உள்ள பற்றுதலினால் பத்துச்சிலை வைத்த அறிஞர் அண்ணாவுக்கும் சிலை வைத்தோம். இவைகளெல்லாம் சம்பூரண எழுச்சியை எடுத்துக் காட்டத் தேவைதான். ஆனால் இந்த பத்திற்கும் பதியாக இருக்க வேண்டிய ஒருவனை மறந்து விட்டோம்

‘சொல்வது யாருக்கும் எளிய அறியவாம்
சொல்லிய வண்ணம் செயல்’ என்பான் வள்ளுவன்.

அழகுத்தமிழ் — அரியணைக்குத் தகுந்ததமிழ் — முத்தமிழ் — மூத்ததமிழ் என்றெல்லாம் சொல்லலாம். எழுதலாம் கவிதை இயற்றலாம். ஆனால் சொல்லிய வண்ணம் செயற்பட வேண்டுமே! போதனையெல்லாம் சாதனையாக்கிய செயல் வீரனை மறந்துவிட்டோமே! முக்கு முடக்கெல்லாம் சிலை வைக்கின்றோம். சந்து பொந்துக்கெல்லாம் பெயர் சூட்டுகின்றோம். நகரங்கள் பல நல்ல பெயரிலே உருவாகின்றன, அப்போதும் கூட நான்காவது சங்கத்தை நன்மதுரையில் நிறுவியவன் நமது நினைவிற்கு வந்தானில்லை. அவன் ஒரு சாதீய, சமுதாயத் தலைவனில்லை ஒரு கட்சித் தலைவன் இல்லையாக என்பதினாலா மறந்து விட்டோம்? அவனை வளமாறப் போற்றாது ஒதுக்கி வைத்து விட்டுத் தமிழ் வாழ்க என்று சொல்ல நமது நா தடுமாறுவது நமக்குப் புரியவில்லையா? தமிழனை வேறு ஓர் இனம் வந்து ஒழிக்க முடியாது என்பதனை நாம அறிவோம் தமிழன் அழிகிறானே என்றால் அதற்கு அவன் தான் காரணமாக இருக்க முடியும். நம்மிடம் உணர்வு இருக்கிறது என்றாலும் சில முதலாளி வர்க்கத்தார் நம்மைச சூழ்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் உணரவேண்டும். அவர்கள் சொந்த நலனுக்காக நம்மைப் பலி கொடுக்கப் பார்க்கிறார்கள் என்பதை நாம் அறியவேண்டும்.

**முடிவுரை :-**

'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பது தான் தமிழனது பண்பாடு. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பதுதானே உலகத்தமிழ் மாநாட்டில் நாம் பொறித்துக் காட்டிய பொன்மொழி. பாண்டித்துரைத்தேவர் மட்டும் விதிவிலக்கானவரா? தன்னைப் போன்றே தமிழர்கள் அனைவரும் இருக்கவேண்டும் என்று எண்ணினார். தன்னைப் போன்றே மொழிப்பற்றும், இனப்பற்றும் ஒவ்வொரு தமிழனும் கொண்டிருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். இன்னும் சிலர் இருக்கிறார்கள். இவ்வுலகம் இருக்கிறது.

'எந்நன்றி கொன்றார்க்கு உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.'

---

# முருகா வருக! அருள்வாய் நலமே!

(இராசகுமார். திரு ஆர். காசிநாததுரை)

செந்தமிழ் முருகன்மேல் சந்தவிசைப் பாடலும், வெண்பாக்களும் நூற்றுக்கணக்கில் விரைந்து பாடி வியப்பில் ஆழ்த்துபவர் திரு. காசிநாததுரை அவர்கள் ஆவார்கள். பத்திச் சுவையும் வேண்டுதலும் ஒன்றிய அவர் தம் வெண்பாக்களைப் படிக்குந்தோறும் தனி இன்பம் உண்டாகும். இதோ அவர்கள் பாடலுள் சில.

### பாடும் பணி அருள்க

1. தந்தி முகனே சரவணனின் முன்னோனே
வந்தித்தேன் உன்னை வரங்களெல்லாம் — சிந்தனு
சத்திமிக மெய்ப்பொருளைச் சந்தமுடன் நான்பாடிப்
புத்தியுடன் வாழப் புரி.

### நல்லார் இன்பம் அருள்க

2. எல்லாம் குகன்செயலென் றெண்ணிமனச் சாந்தி செயும்
நல்லோர் பழக்கத்தை நான்பெறவே — பொல்லாத
மாய வினைநீக்கு மான்மருகா மான்மகளைத்
தோயுமழ காநீ துணை.

கொடுமளூரில் 10-2-47-ல் தங்கியிருந்த போது பாடியது

3. நியாயமொரு கல்வி நிலத்தோர் பழக்கம்
தியாகமது செய்யும் திறமை — தயாளம்
உடைகளார் தோப்பில் உயர்ந்தோங்கி நிற்கும்
கொடுமளூர்க் கந்தா கொடு.

மனவுறுதி தருக

4. நாலும் பெறவுதவும் நல்ல மனசாட்சி
போலுளதோ யிந்தப் புவிதனிலே — மேலும்
நடத்தை யதற்கேற்ப நான்செய் யமனே
திடத்தை யெனக்கீந் திடு.

தீயவை தீண்டாமல் கா

5. வேற்படை யேந்தியகம் வேலவா மேதினியில்
மேற்படும் இக்கலியின் வேலையால் — ஏற்படும்மெய்
தீய நினைவுகளோ தீண்டாமல் எந்தனுளம்
ஆய உலகை யருள்.

இலஞ்சிக் குமரனைப் பாடியது

6. ஊடே மனங்கெடா துன்புகளைச் சந்தமும்
பாடும் பலங்கொடுத்துப் பாலிப்பாய் — வேடர்
குலஞ்சிறக்க வந்தஅம மான்மகளைக் கொஞ்சும்
இலஞ்சிக் குமரேச னே.

# பாவலர். பாண்டித்துரைத்தேவர்

தமிழ் நாவலர் சி. அரசப்பனார்
திருச்சி.

1

முக்குலத்தோர் தவமணியே மூவேந்தர்
பரம்பரையே – முயன்று நாட்டின்
எக்குலமும் நனிவாழ இன்றமிழின்
சங்கத்தை இயற்றி நாட்டில்
பக்குவமாய் "நாற்சங்கம்" நிலைநாட்டிப்
படித்தமேலோர் – பரவிப் போற்றத்
தொக்கமைத்த துரைத்தேவே தொன்னூலும்
நன்னூலும் துலங்க வைத்தாய்.

2

நாட்டுக்கு விடுதலையை நாட்டிடவும்
சிதம்பரப் பேர் – நண்பரானீர்!
வீட்டுக்கு வீடுபுகழ் மேவிடவும் செந்தமிழை
விளங்கச் செய்தீர்!
ஓட்டுக்குச் செய்யாமல் தமிழகத்தார்
உயர்ந்திடவே – உண்மையாக
நாட்டுக்கு நிலையான இத்தொண்டை
நாட்டியதால் – நாளும வாழி!

3

ஐயத்தை அறுப்பதற்கு நூலின்றி அலமந்த
அறிஞ! அன்றே
வையத்தை ஆண்டவர் நாம் எனுமுண்மை
இதயத்தே – வயங்கித் தோன்ற
மையநகர் மதுரையெனத் தமிழ்ச் சங்கம்
தேர்ந்தெடுத்து மதித்துப் போற்றிக்
கைவைத்தாய் மணலூற்றாய் பெருகிய
நல்லறவாறு – காலம் எல்லாம்!

4

சோணாட்டுப் புலவரொடு புகழ்பரப்பும்
புலவரெலாம் - புகுந்து ஒன்றிச்
சேணாட்டுப் புலவரொடுத் தாய்மொழியை
ஒப்பிட்டு - தனிமை நோக்கி
மாணாட்டும் வகைதுறைகள் மட்டின்றி
உழைத்துழைத்து - மாண்பு கொண்டு
வேணாட்டுப் பல்கலையும் செந்தமிழால்,
மேன்மேலும் விளங்கச் செய்தாய!

5

தன்னுரிமைப்பொருளெல்லாம் தமிழ்மொழியின
உயர்விற்கே - தந்து வந்து
மண்ணுலும் சின்னாளில் மான்புகிழை
மொழிநாடு - வாழ வைத்து
விண்ணாடு புகழ் நிறுத்தி விருப்பமொடு
புகுந்தனையோ? விண்ணின் மன்னர்
தன்னோடு தமிழினிமை சுவைத்துணரச்
சென்றனையோ - தரணி வேந்தே?

6

இந்நாட்டில் வாழ்கின்ற தமிழர் யாரும்
எவ்வுரிமை பெறஇன்று உரிமை உண்டு.
அந்நாளில் உரிமைபெற உழைத்தோர் தம்மை
அவமதித்தால் நன்றிக்கு உரியராவாமோ?
இந்நாளில் அந்தணரும் பிறரும் போற்ற
ஏன் மன்னர் குலம்மறுத்தார்த இதயம்
வைப்பீர்!
பொன்னன துரைப்பாண்டித் தேவ உம்மைத்
துதிப்பாரும் மதிப்பாரும் வாழ்வு வென்றார்.

7

பாண்டித் துரைத்தேவ! பாவலரின் காவலரே!
பழைய சங்கம்
வேண்டித் தவமிருந்து பாண்டியரின்
சேமிப்பாய்-
விழைந்து வாழ்ந்து

பாண்டி நிலந் தழைக்கப் பண்பார் தமிழ்வாழப்
பாரே ஓங்கத்
தோண்டும் அறிவூற்றே தூயோரின் பண்புருவே
துலங்கி வாழி !

8

சொல்லுக்குச் சொல்லழகும் தூய்மைக்கு
வாயழகும் - தூய நோக்கும்
வெல்லற்குச் செயலழகும் வேற்ருரும்
மதிக்கின்ற - தியாகப் பண்பும்
புல்லுக்கும் நெல்லுக்கும் புரவலரை
நாடுகின்ற புலவர் தம்மை
மல்லுக்குத் தானழைத்து தம்மை மாதங்கம்
தானீந்த மாண்போய் வாழி !

9

புல்லுரையால் தோற்றத்தால் புகழுரையால்
மலிந்து நின்ற - பொல்லா நாளில்
நல்லுரையால் நயவுரையால் நாநலத்தால்
பாவெழுதிப் பெரிய அந்தத்
தொல்லாண்மை மாவீரர் பாண்டிநகர்
துரைத்தேவர் - பரோர் போற்றும்
நல்லாண்மைப் பாவலராய் நாற்சங்கக்
காவலராய் - நின்ருர் வாழி !

— ❋ —

# பட்டாங்கில் ஏறிய பாண்டித்துரைத் தேவர்

தமிழ்த் தொண்டன். ஆ ஆண்டியப்பன்,

மதுரை

உலகிலே பல்லாயிரக்கணக்கான மொழிகள் உலவி வருகின்றன. பல்வேறு மக்களால் பல்வேறு இடங்களில் பேசப்பட்டு வந்தாலும் கூட அனைத்தும் சேய் மொழிகளே யாம் நந்தமிழ் மொழிக்கு. அம்மொழிகளின் மேல் படிந் துள்ள துருவினைச் சுரண்டிச் சுத்தம் செய்வோமானல் சுடர்மிகும் நம தமிழ்மொழி, எத்திக்கும் இணையில்லாதது என்பதை மெய்ப்பிக்கின்றன.

முன்னைப் பழமைக்கும் பழமையாய், பின்னைப் புது மைக்கும் புதுமையாய் என்றும் குன்ரு எழிலும் சீரிளமை யும் பொருந்திய கன்னித் தமிழ்மொழி நம் தமிழ்மொழி. எழுத்து வடிவிலே அழகும், ஒலிவடிவிலே இனிமையும் மிளி ரும் உயர்தனிச் செம்மொழி பிற எம்மொழிக்கும் இல்லாத ஐவகை இலக்கணங்களும் ஒருங்கே அமைந்த செம்மொழி. உலகோர் பலரையும் தம்பால் ஈர்க்கும் தேன்மொழி தெய் வத் தமிழ் மொழி. இத்திக்கும் நம் தீந்தமிழ்மொழி போல் எத்திக்கும் இல்லை எம்மொழியும் என்பதைச் சான்று காட்டி யுள்ளார் ஆன்ருேர் பலர்.

ஆங்கில மொழி வளர்ச்சிக்கு ஆக்சுபோர்டும், இலத் தின்மொழிக்கு உரோமாபுரியும், கிரேக்கமொழிக்கு ஆதன்சு நகரும் அமைந்திருந்தது போல் 'தண்ணர் தமிழ் மொழிக் குத் தண்பாண்டிநாடு' என்பதை அறியாதார் யார்? தமிழ் மொழிக்குச் சிறப்பிட மட்டுமல்ல இந்நாடு; பிறப்பிடமுமா கும், தென்னகம், தென்பாண்டி நாடு எனச் சங்கப் புலவ ரும் முழங்கும் மங்களப் பாண்டிவள நாடு' அல்லவா!

பேரரசுப் பெரு மன்னராம் காய்ச்சின வழுதிப் பாண்டியன் முதல், கடுங்கோன் பாண்டியன் ஈருக வெண் டேர்ச் செழியன் முதல், முடத் திருமாற பாண்டியன்

ஈருக; உக்கிரப் பெருவழுதிப் பாண்டியன் முதல் உக்கிர பாண்டியன் என்ற மாறன் பாண்டித்துரைத்தேவர் ஈருகக் கொண்டு சங்கம் வைத்துத் தமிழ்வளம் பெருகியது தென் பாண்டி நாடேயாம்.

அத்தகு பெருமைமிகு பாண்டிய வளநாட்டை நினைவு கூறும் பொழுது சேது நாடே முன் நிற்கும் நம் மனக்கண் முன்பு

தண்டமிழ்க் கிழவர் மூவருக்குப் பின்னர் அவ்வழியில் தோன்று தொட்டு பிற்காலத்தில் தமிழ்ப்பயிர் வளர்த்தது சேது நாடு 'முகவை' என்ற இலக்கியச் சிறப்புப் பெயர் பெற்றதுமாகும்

சைவப் பெரியார்களும், சமயக் குறவர்களும் பொலிந்து தவழ்ந்த நாடு தமிழ்க் கூறும் நல்லுலகம் முழுவதிலும் உள்ள புலவர்களால் வியந்தும், நயந்தும் பாராட்டி போற்றி திரண்ட திருவுடைய நாடு என்பதை நாம் அறிந்ததே

இலக்கியம் புகழும் அச்சேது நாட்டுத் தலைநகராம் முகவையின் தென்கிழக்கே பதினறு கல் தொலைவிலுள்ளது புதுமடம். இவ்வூர் 'தேவை' என்னும் இலக்கியச் சிறப்புப் பெற்ற இராமேச்சுரம் செல்லும் பயணிகளுக்கு உணவளித்து ஊக்கமூட்டி; தஞ்சமளிப்பதில் தாயகமாக விளங்கி வந்தது ஆங்கு மறவரின் மாண்பு தேயுறு துவாழ்ந்து வந்தவர் மூதறிஞர் சேதுசிவஞானத்தேவரவர்கள். அவர்தம் திருமகனார்தாம் மேதகு பொன்னுச்சாமித் தேவரவர்கள்.

கருவிலே திருவுடையோராய் இருந்து பின்னைய நாளிலே அருங்கலை பல பயின்று நற்றிறம் கொண்ட அமைச்சராளுன் சேதுபதிச் சிமையிலே நாட்டின் செங்கதிராகத் திகழ்ந்த அமைச்சர் பொன்னுச்சாமித் தேவரவர்களுக்கும் சேதுநாடு அரசியார் பர்வதவர்த்தனி நாச்சியாரின் தமக்கையராம் முத்துவீராயி நாச்சியார் என்ற பெரிய நாச்சியார் அவர்களுக்கும் மூன்றுவது மகனுகப் பிறந்தார் 1867-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 21-ஆம் நாள்.

பெற்ருேர் இட்ட பெயர் உக்கிரபாண்டியனுகும். ஒப்பற்ற உருவினராகவும், கருவிலே திருவுடையோராகவும் காட்சி தந்தார் பின்னர் மொழிநலம் மேணி மக்கள் உள்

ளத்திலே அறியாமை என்னும் இருளகற்றி அறிவு நலம் பேணி, கன்னித்தமிழாக்கம் பற்றிப் புதுப்புது எண்ணங் கொண்டு, தனித்தமிழால் உணர்வூட்டி, பண்டிருந்த தமிழ் மொழிக்குப் பார்புகழும் விடிவெள்ளியாகத் திகழ்ந்த அத் திருமகனாரைப் பாண்டித்துரைத்தேவர் என்று அழைத்தது இலக்கிய உலகு. முப்பாலும் பாருக்குத் தந்த திருவள்ளுவரும் தேவரன்றோ!

தமது மூன்றாவது ஆண்டிலேயே தமது அன்புத் தந்தையை இழந்த தேவரவர்கள் நற்றமிழ்ப் புலவர்களிடமும, நல்லிசைச் சான்றோர்களிடமும் முறையாகக் கற்றுத் தேர்ந்தார் அவர்தம் ஆங்கில அறிவுத் திறன் வியத்தகு முறையிலேயே அமைந்திருந்தது என்பர் ஆன்றோர் பலர் தமது பதினெட்டாவது வயதிலே 1884-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ஆம் நாள் தமக்குரிய பாலவநந்தம் குறுநில மன்னர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார் நாட்டுக் காவலரானார், நந்தமிழ் ஏட்டுக்குக் காவலரானார். வழி வழிப் புலவர் மரபு தழைத்தோங்க நலம் செய்தார். பருவமழை போல் பைந்தமிழுக்கு உதவி பட்டாங்கில் ஏறினவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்கள்.

பண்டு தமிழ் வளர்க்கப் பாண்டியர்கள் வைத்த சங்கம் (தமிழ்ப் பேரவைகள்) மூன்றும் மறைந்த பின்னர் 1901 ஆம் ஆண்டு மே திங்கள் 14-ஆம் நாள் கூடல் நகரில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவியவர். கடைச் சங்கம் இறுதிக் கால பாண்டியனை உக்கிரப் பெருவழுதிப் பாண்டியனை இந்நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவிய உக்கிர பாண்டியன் என்ற பாண்டித்துரை தேவராவர் என்று போற்றிப் புகழ்ந்தது இலக்கிய உலகு

களப்பிரர் காலத்திலிருந்து நிலையிற்றளர்ந்து துஞ்சிக் கிடந்த மக்களது சோர்வகற்றியவர், குவலயமெல்லாம் குளிர்தமிழ் முரசொலிக்க அருங்கரங்கள், உயர்த்தியவர். அன்னைத் தமிழ் மொழியின் அணிகலன்களாம் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, ஐம்பெருங் காப்பியங்கள் ஆகியவற்றை நாற்றிசையும் பரவ வழி செய்தவர், கிடைத்தற்கரிய நூல்களாகி கருவூலங்களை அச்சேற்றி தமிழ் மணக்கச் செய்த மணிமாறன், அன்னார் அவ்வாறு செய்திராவிட்டால் இன்றைக்குக் கிடைத்திருக்கும் கடைச் சங்க நூல்கள் பல கிட்டியிருக்காது நமக்கு உறுதியாக, இவ்வாற்றற்கரிய தொண்டினை நினைவு கூர்ந்துள்ளவர் எத்துணை பேர்?

இலக்கிய வரலாறு எழுதப் புகுந்த பலர் ஏன் மறந்தனரோ ? மறைத்தனரோ? இதுவரை உண்மையை எண்ணிப் பார்க்காமலே இருப்பது வியப்பாகவேவுளது.

கடைச்சங்க காலம் மூன்றும் நூற்றாண்டு என்று வைத்துக் கொண்டாலும் கூட இருபதாம் நூற்றாண்டு தொடக்கக் காலம் வரையிலும் ஏறக்குறைய பதினாறு நூற்றாண்டுகாலம். அன்னை மொழி யோங்க அயராது பாடுபட்டவரும் உண்டு எளிதாக மக்களுக்குத் தமிழ்ச் சுவையை எடுத்தூட்டியவர் எண்ணிலடங்கார் தொன்னூலும், நன்னூலும் துலங்க வைத்தவருமுண்டு. நாட்டில் அருந்தமிழால் ஏற்றம் பெற்றவருமுண்டு. ஏட்டிலே ஊறி, ஊறி இரும்பூதெய்தியவருமுண்டு.

ஆனால் !

பண்டிருந்த தமிழ் மொழிக்குப் பார்புகழும் விடிவெள்ளியாய் விளங்கியவர், மண்மணங்கும் தமிழ் மணக்க மாசிலாச் சங்கம் நிறுவியவர், (தென் மதுரை) நகரின்கண் முன்போற்றமிழ்ச் சங்கத் தாபனம் செய்தீரன் என்று பாராட்டுக்குரியவர் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களேயாவர்.

அதுமட்டுமன்று !

தஞ்சமென்று வந்தவர்க்கு என்புருக்கும் அன்புச் சொல்லால் இமயமும் நாணும்படி அள்ளி அள்ளி கொடுத்தவர் முல்லைக்குத் தேரீந்த புலவர்க்கு இல்லையெனாது வழங்கிய வள்ளல் பாரியைப் போல், தானுறைந்த மாளிகையைத் தமிழுக்கீந்து விண்ணவர்க்கும் எட்டாத புகழை மண்ணிலே ஈட்டி நின்றவர் தமிழ்ப் பண்பாட்டின் எல்லைக்கு எடுத்துக் காட்டாகத் திகழ்ந்த பெருங் கொடை வள்ளாவார். 'பாண்டித்துரை யெனனும் பாரிநிகர் வள்ளலும் போலீண்டித் தமிழ்வளர்த்தார் யார்?'' ''பண்டுபுரி யரசர் தமிழ்வளர்த்த பாண்டியர் போலம் மொழிக்குத் தொண்டு புரியரசர் தொல்குலத்தான்'' என்றும் 'தழைமயென மணப்பரப்பி தமிழ்வளர்த்த தண்ணார் தமிழ்க் காவலன்', பாவலன் பாண்டித்துரைத் தேவரவர்களின் தன்னேரிலாத் தமிழ்ப் பணியை ஏட்டிலே தீட்ட இயலுமோ..?

தேவரன்றோ !

''மூன்று தமிழ்ச் சங்கங்கள் மதுரையின் வளர்ந்து முடிந்தன. இன்று நமக்குக் கிடைத்திருக்கும் கருவி நூல்களெல்லாம், தொல்காப்பியம், புறநானூறு அகநானூறு, பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, ஐம்பெருங் காப்பியங்கள் எல்லாம் சங்கச்செல்வங்கள் எத்தனையோ நூல்களைக் கடல் உண்டு விட்டது. தமிழின் மேல் அதற்கு அத்தனை ஆர்வப் பசி. எஞ்சிய நூல்களைப் பாதுகாக்க வேண்டும். பழம் பெரும் புலவர். நூலுடன் தமிழ் நின்று விடக் கூடாது. புலமையூற்று அருவியாகப் பாய்ந்து தமிழ்ப் பயிரை நாடெங்கும் வளர்க்க வேண்டும் தமிழ்ப் புலவர் அனைவரும் இச் சங்கத்திற்குக்கூடி த்தாய்மொழியை வளப்படுத்த வேண்டும். இங்கே புலவர் வகுப்பு நடத்தி மாணவர்களுக்குத் பயிற்றிப் பட்டம் தரவேண்டும் கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வு வைத்துத் தகுதிப் பத்திரம் அளிக்க வேண்டும். தமிழக பள்ளிகளிளெல்லாம் நமது சங்கப் புலவர்கள் ஆசிரியராகி ஆயிரக்கணக்கான மாணவர்களுக்குத் தமிழ் புகட்ட வேண்டும். தமிழ் ஆராய்ச்சிக் குழு ஒன்று நாட்டி மொழியைக் காலத்திற்கேற்றபடி வளப் படுத்த வேண்டும் ஆங்கிலத்திற்கு இணையாகத் தமிழை வளப்படுத்தி விஞ்ஞான நூல்களையும் தமிழில் எழுத வெளியிட வேண்டும் பெருக புலவர்! வருக புரவலர்! உயர்க தமிழ் என்று தமது உள்ளக் கருத்தை உலகறியச் செய்தவர்; எல்லையில்லாப் புல்வர்களை இம்மண்ணிலே தோற்றுவித்த மாறன் பாண்டித்துரைத் தேவரவர்களின் மாண்பிற்கோர் உவமையுண்டோ !

வாய்மைமிகு இலக்கியக் கோயிலாம் மதுரைத் தமிழ்ச் சங்கத்தை முத்தமிழ்ப் பல்கலைக் கழகமாகத் திகழ வேண்டும் என்று பொருள் சேர்க்க நச்சிட்ட கைச்சான்றுகள் வழங்கப் பட்டது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும்.

ஆனல் . !

இடையிலே தடைப்பட்டது அவர் தம் தொண்டு பெரும் முயற்சியைக் கைவிடச் செய்தது. உண்ணமைப் பல்கலைக் கழகம், என்பதை அன்றைய தமிழறிஞர்கள் அறிந்ததேயாம்.

தமது நெஞ்சத திரையின் நினைவு வடிவங்களை ஒல்லும் வகையில் உலகிற்கு உவந்தளித்தவர். முக்கனிச் சாறுகக் கோத்த வள்ளுவம் போல், நனலாம்

பன்னூல் தந்த பாவலர் போற்றிய காவலர்; முத்தமிழைச் செந்தமிழால் முறைப்படுத்தித் தமிழ்ப் பழம் சரிதை, சைவ மஞ்சரி, முதலிய ஐவகை இலக்கணங்களும், அமைந்த நூல்களும் வெளியிட்டவர் திங்கள் ஏடாம் செந்தமிழ் முழங்கிய சிங்கத் தமிழ்மகன், சேதுகுலச் செங்கதிராம் வள்ளல் தேவரவர்கள் 1911–ஆம் ஆண்டு டிசம்பர்த் திங்கள் இரண்டாம் நாள் மாலை தமது மாளிகையில் உறையாடிக் கொண்டிருந்த போழ்து மயக்கமுற்று வீழ்ந்தார். நினைவு தவறி விட்டது. மணித்துளியில் மறைந்துவிட்டது கலைமன்னன் பூத உடல்.

பண்ணுதற்கு இயலாத ஆயல்பு தொன்மைச் சிறப்பு பெற்ற அப் பெருந்தகை நிறுவிய மதுரைத் தமிழ்ச் சங்கம் வெண்நிலவும் நாணும்படி ஒளி வீசி, எழிலுற அறிவொளி காட்டி மணம் பரப்பி தொடர்ந்து தமிழ் எட்டிப் பிடித்திருக்கின்றது. எழுபத்தைந்தாம் ஆண்டு. தடையெல்லாம் தகர்த்தெறிந்து தொடர்ந்து பணிகளை செய்து, குன்றா எழிலுடன் இளமையும் பொருந்திபல்லூழி வாழ ஆலவாய் அண்ணலும், அங்கயற்கண்ணம்மையும் அருள்புரிவாராக.

# திராவிட மொழிகளில் வண்ணனை அமைப்பும்— வரலாற்று அமைப்பும்

திருமிகு இரா. கோதண்டராமன் எம்.ஏ.; எம்.ஏ

## வினையாலணையும் பெயர்கள்

(தொகுதி-70 பகுதி-1ன் தொடர்ச்சி)

---

2. *மாடிதவு— <* மாடிதபு <* மாடிதம்பு <* மாடிதம்—பு
   * மாடிதம்— <* மாடிதய்ம் <* மாடிதய்—உம்
   * மாடிதய்— <* மாடிது—அய்
   * மாடிது— <* மாடிந்து <* மாடிம்—து
   * மாடிம்— <* மாடிய்ம் <* மாடிய்—உம்
   * மாடிய்— <* மாடு—இய்
   கன்னடம்

3. பாடியவு— <* பாடியபு <* பாடியம்பு <* பாடியம்—பு
   * பாடியம் <* பாடியய்ம் <* பாடியய்—உம்
   * பாடியய்— <* பாடிய்—அய்
   * பாடிய்— <* பாடு—இய்
   தமிழ்

ஆ. ❋ பாடினவு— ◁ * பாடினபு ◁ ❋ பாடினம்பு ◁ ❋ பாடினம்—பு
   ❋ பாடினம் ◁ ❋ பாடினய்ம் ◁ ❋ பாடினய்—உம்
   ❋ பாடினய் ◁ ❋ பாடினு—அய்
   ❋ பாடினு—/ ❋ பாடிநு— ◁ ❋ பாடிந்து ◁ ❋ பாடிம்—து
   ❋ பாடிம்— ◁ ❋ பாடிய்ம் ◁ ❋ பாடிய்—உம்
   ❋ பாடிய்— ◁ ❋ பாடு—இய்

மேலே நிகழ்த்தப் பெற்றுள்ள ஆய்வில் நிகழும் சில வினையமைப்புக்கள் வழக்கில் நிகழ்வனவாகவோ, நிகழ்ந்தனவாகவோ காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக,

தெலுங்கில் ✻சேஸினய் என்ற ஓர் வினையமைப்பு பலவின்பால் வினைமுற்றாகவும், ஈற்றுமெய்யை இழந்து பெயரெச்ச வினையாகவும் வழக்கில் உள்ளன. கன்னடத்தில் தென்படும் ✻மாடிதவு வாய்பாட்டு வினைகள் பலவின்பால் வினைமுற்றுக்களாகவும், ✻மாடிதம் என்ற வாய்பாட்டு வினைகள் பழங் கன்னடத்தில் ஆண்பாற் பொருண்மையை உணர்த்தும் ஒருமை வினைமுற்றுக்களாகவும் நடைபெறுகின்றன. பாடிதம் (HKL பக்கம் 1:9) 'பாடினன்' தமிழில் *பாடியய் போன்ற வினையமைப்புக்கள் ஈற்று மெய்யை இழந்து பாலவின்பால் வினைமுற்று பொருண்மையையும், பெயரெச்ச பொருண் மையையும் குறிக்கின்றன. ✻பாடினய் போன்ற வினைய மைப்புக்கள் பாடினை போன்ற வடிவினவாகி பழமொழியில் ஒருமை வினைமுற்றுக்களாகவும் பழந் தமிழில் வழங்குகின் றன. ✻பாடினா போன்ற வினையமைப்புக்கள் தன்மை யான்பாற் வினைமுற்றுக்களாகச் செயல்படுகின்றன. இவ் ஆய்வில் குறித்துப் பெற்றுள்ள ✻சேஸினவு-, ✻மாடிதவு-, ✻பாடிளவு- ஆகிய வினைவடிவங்கள் ஓரே வரலாற்று அமைப பினவாகும் தொடக்கத்தில இத்தகைய வினை வடிவங்கள் இரு திணை ஐபபால் மூவிடங்களையும் உணர்த்தும் பொது வினை களாக வழங்கியிருக்கலாம. மேலும் இத்தகைய வினைவடிங் மூலமொழியிலேயே தோன்றியமைந்தனவாகவும் கருதலாம்.

துகரகிளவியின்முன ✻ செய்தம் வாய்பாட்டு வினைகள் புகரக்கிளவியின் முன் நிகழும் ✻ செய்தம் வாய்பாட்டு வினைகள் ✻ செய்தாபு வாய்பாட்டினவாகி, பின்னர் வல் லொலி வீழ்ச்சியாலும், உயிர்களிடை தனித்து விடப்பட்ட அவ்வொலியாகிய பகரம் வகரமாக திரிந்தமையாலும் அவை ✻செய்திவு வாய்பாட்டினவாக அமைந்து -அன், -அள், அர், -ஐ ஆகிய விகுதிகளை ஏற்று தமிழில் வினையாலணையும் பெயர் களாக நடைபெறும் போக்கினை மேலே கண்டோம் கன் னடத்திலும் ✻ செய்தவு வாயபாட்டு வினைகள் -அனு, -அளு, -அரு போன்ற விகுதிகளை ஏற்று வினையாலணையும் பெயர்களாக பெயர்களாக அமைகின்றன. எ-டு கண்டவரு (◁ ✻ கண்டவு—அரு) 'கண்டவர்', கண்டவளு (◁ ✻ கண்டவு—அளு) 'கண்டவள்'. கண்டவனு (◁ ✻ கண்டவு —அனு) கண்டவன் பழஙகன்னடம் (HKL பக்கம 145, பந்தவம் (bandavam) (◁ ✻ பந்தவு - அம்) 'வந்தவன்' இனி ✻ செய்தப வாய்பாட்டு வினைகள் தகரகிளவியின் முன் நிகழும் போது அமையும் ✻ செய்தந்து வினைகளில் நிகழும் மாறுதல்களை காண்போம். ✻ செய்தந்து வாய்

பாட்டு வினைகளில் ஈற்றில் உள்ள துகரக்கிளவியின் முன் நிகழ்ந்த மெல்லொலி வீழ்ச்சியால் செய்தது வாய்ப்பாட்டு வினைகள் தோற்றம் கொள்ளத் தொடங்கின. ஆடியது [< ஆடியந்து < * ஆடியப — து], பாடியது [< பாடியந்து < * பாடியம் — து] போன்ற வினைகளின் தோற்றமும் அவ்வாறே அமைந்தனவாதல் வேண்டும். * செய்தந்து வாய்ப்பாட்டு வினைகளில் மேற்படி மெல்லொலி வீழ்ச்சியுறாத நிலையில் அதன் பின் நிகழ்ந்த வல்லொலி மெல்லொலியாகத் திரிந்து * செய்தந்நு என்னும் வாய்ப்பாட்டு வினைகள் வழங்கிய நிலை ஒன்றை அமைத்துக்கொண்டு, அவ்வாய்ப்பாட்டு வினைகள் பின்னர் *செய்தநு / *செய்தனு வாய்ப்பாட்டினவாக ஒடுங்கின எனக் கருதலாம் இவ்வாறு ஒடுங்கிய வாய்ப்பாட்டு வினைகளே பின்னர் கன்னடத்தில் ஆண்பாற் பொருண்மையை உணர்த்தும் இறந்தகால வினைமுற்றுக்களாக வழக்கத் தொடங்கினவாதல் வேண்டும். பின் வரும் எடுத்துக்காட்டுகள் * செய்தனு [< * செய்தநு] வாய்ப்பாட்டினவாகக் கன்னடத்தில் வழங்குவனவாகும

அவனு பந்தனு (bandanu) 'அவன் வந்தான்'
அவனு கொட்டனு 'அவன் கொடுத்தான்'
அவனு நக்கனு 'அவன் நகைத்தான்'
அவனு நூதனு (nutanu) 'அவன் நூற்றான்'

இவ்வாறே கன்னடத்தில் காணப்படும் ஆடிதனு 'ஆடினான்' மாடிதனு 'செய்தான்'. கேளிதனு 'கேட்டான்' போன்ற வினையமைப்புக்களும் பின்வருமாறு தோன்றியனவாகக் கருதலாம்.

ஆடிதனு < * ஆடிதநு < * ஆடிதந்நு < * ஆடிதந்து < * ஆடிதம்—து
மாடிதனு < * மாடிதநு < * மாடிதந்நு < * மாடிதந்து < * மாடிதம்—து
கேளிதனு < * கேளிதநு < * கேளிதந்நு < * கேளிதந்து < * கேளிதம்—து.

(தொடரும்)

# பொதுநோக்கும் சிறப்புநோக்கும்

திருமிகு கு. சின்னையன்.தஞ்சாவூர்,

முன்னுரை :-

மக்கள் பார்வையில் நல்லபார்வையும் உண்டு; கெட்டபார் வையும் உண்டு. உடல்நலம் குன்றிய ஒருவன், பிறர் கண்பட்டு இளைத்து விட்டதாகக் கூறுகின்றான். நன்கு உணவுண்ட ஒருவன், தான் உண்டதனைப் பிறனொருவன் பார்த்ததிலிருந்து உணவருந்த முடியவில்லை என்று கூறுகின்றான். இதனைக் 'கண்ணேறு' என்று இலக்கியங்கள் கூறுகின்றன; உலகோர் கண் திருட்டி என்று கூறு கின்றார்கள் அல்லலுற்ற ஒருவன் அருளாளர் 'ஒருவரது பார்வை யால் அல்லல் நீங்கியிருப்பதாகக் கூறுகின்றான். அளவற்ற துன் பங்கட்காளாயிருந்த ஒருவன், ஆண்டவனின் அருட்பார்வையில் துன்பங்களிலிருந்து விடுபட்டதாகக் கூறுகின்றான். இவ்வாறே, காதலன் ஒருவன், தன் காதலியின் நோக்கால் இன்பமும் துன்பமும் அடைந்ததாகக் கூறுகின்றான்.

ஒருத்தி ஒருவனை அறிதற்கு நோக்கும் பார்வை பொது நோக் காகும். அவன் பண்பொத்தவனாயிருப்பின் அவனை நோக்கும் பார்வை சிறப்பு நோக்காக மாறுகின்றது. இச் சிறப்பு நோக்கு, காதற்குறிப்புடன் நோக்கப்படுதலின், இஃது, ஒருவனுக்குக் காம நோயை உண்டாக்குகின்றது. பின், அவள் தன் உள்ளத்துணர் வினைத் தன் பார்வையின் வழியே தெரிவித்து அந்நோயிலிருந்து தெளிந்து இன்பமடைகிறான். இங்ஙனம், களவுவாழ்க்கையிலீடுபடும் காதலர்களின் பார்வைகளையெல்லாம் திருவள்ளுவர் விளக்கியிருக் கின்றார் ஆனால் இக்காலக் காதலர்சிலர் கருப்புக் கண்ணாடி போட்டுக் கொண்டு நோக்குவதை மட்டும் அவர் கூறவில்லை. ஏன் கூறவில்லை தெரியுமா? அஃது பொது நோக்கா? சிறப்பு நோக்கா? என்பதை அறிந்து கொள்ள முடியாமையாலல்ல; கருப்புக் கண்ணாடி போட் டுக் கொள்ளும் பழக்கம் அக்காலத்தில் இல்லாமையாலுமல்ல. அங் ஙனம் காண்போரின் நோக்கைக் காணப்படுவோர் அறிந்து கொள்ள முடியாதிருத்தலால் தான் கூறாமல் விடுத்திருக்கின்றார்.

**நோக்கின் வகைகள் :-**

காதற் குறிப்புடன் ஒருவரை ஒருவர் நோக்குதல் குறிப்பு நோக்காகும். ஒருவர் பார்த்தபின் மற்றொருவர் பார்ப்பது எதிர் நோக்காகும். ஒருவன் ஒருத்தியைக் காணும் போது ,அவள் தன் தலையைக் கீழே சாய்த்துக் கொள்வதும், அவன் அவளைக் காணுமலி ருக்கும் போது அவள் அவனை நோக்கிச் சிரிப்பது. காம நோக்கா கும். ஒருத்தி. பெண்மான்போல் மருண்டு நோக்குதல் பிணையேர் மடநோக்காகும். காதல் உணர்வினை எழுப்பும் பார்வை நோய் நோக்காகும். அந்நோயை தீர்க்கும் அன்பு நோக்கு மருந்தாய நோக்காகும்.

ஒரு கண்ணைச் சிறிது சுருக்கிக் கொண்டு நோக்கல் சிறங்கணிந்த நோக்காகும். யாவரிடத்தும் ஒரு தன்மைத்தாயமைந்த பார்வை, பொதுநோக்காகும் ஒருவரையொருவர் உள்ளங்கொண்டு நோக்கு தல் சிறப்பு நோக்காகும். அகத்தில் கோபம் கொள்ளாமல் புறத்தில் கோபங் கொண்டவரைப்போல் நோக்கல்,செற்றூர் போல் நோக்க லாகும். காதலர் இருவருடைய விழிகளும், இணைந்து நோக்குதல் இணை நோக்காகும். இவற்றைத்தவிர. கண்ணிமைகளைச்சிமிட்டி நோக்குதலையும் விழிகளைச்சாய்த்துநோக்குவதையும் உலகிற்காண் கிருேம்.

**நுண்ணியநோக்கு:-**

நுண்ணறிவுடையோர் ,பிறர்நோக்கும் பார்வையிலிருந்து அவர் களுடைய உள்ளத்துணர்வுகளை அறிந்து கொள்கின்றூர்கள். ஒருவர் உள்ளத்தில் நிறைந்திருக்கின்ற வெறுப்புணர்வைத் தெரிவிப்பது வெறுப்பு நோக்காகும். நட்புணர்வினை வெளிப்படுத்துவது விருப்பு நோக்காகும்.

> " நுண்ணியம் என்பார் அளக்குங்கோல் காணுங்கால்
> கண்ணல்ல தில்லைபிற"

என்றூர் திருவள்ளுவர். கண்களால் காண்பதைப் போல் மன தால் எண்ணுவதையும் நோக்கு என்று கூறுகின்றேம். யாவரும்

வாழ வேண்டுமென்று எண்ணும் எண்ணத்தைப் 'பொது நோக்கு என்று கூறுகின்றோம்.

"பொது நோக்கொழிமதி புலவர் மாட்டே" என்று

புறநானூறு புகல்கின்றது. இங்கு கூறியுள்ள நோக்குகளை யெல்லாம் திருவள்ளுவர் எங்ஙனமறிந்தார்? சிந்தித்துணர்ந்தாரா? காதலர்களைச் சந்தித்தறிந்தாரா? நூலறிவைக் கொண்டு நுணுகி அறிந்தாரா? என்று நாம் வியந்தெண்ணுமாறு கூறியிருக்கின்றார். இந்நோக்குகள் அக்காலப்பண்பை அறிவிப்பதோடு அவை நமக்கு அறிவையும் இன்பத்தையும் ஊட்டி வருகின்றன.

**பொதுநோக்கு:-**

தாய், தந்தை, அக்காள், தங்கை, அண்ணன் தம்பிகளைக் காண்பது போலவே. காதலர் இருவர் ஒருவரையொருவர் பொது நோக்கால் காண்கின்றார்கள். இப்பொதுநோக்கு யாவரிடமும் அமைந்திருப்பதாகும். இஃது, காதலர்களிடத்தில் சிறப்பு நோக்காக மாறிவிடுகின்றது. சான்றோர்களிடம் இரக்க உணர்வாகத்திரிந்து விடுகிறது, அருளாளர்களிடம் கருணை நோக்காக அமைந்து விடுகின்றது; பகைவர்களிடம் கோபப் பார்வையாக மாறிவிடுகின்றது; திருடர்களிடம் களவு நோக்கத்தை எழுப்பி விடுகிறது.

ஒருவர் பொது நோக்கால் யாவரையும் காணலாம்; எந் நேரத்திலும், எவ்விடத்திலும் காணலாம். ஆனல், சிறப்பு நோக்கால் அங்ஙனம் பார்க்கலாகாது. அன்பொத்த தலைவனும் தலைவியும். களவு வாழ்க்கையில் தான் சிறப்பு நோக்கினை மேற்கொள்கின்றார்கள். அந் நோக்கால் காதலராய மைந்தபின், பிறரைப் பொது நோக்கால் காண்கின்றார்கள். ஒரு ஆண், பிற ஆணையும், ஒரு பெண், பிறபெண்ணையும் சிறப்பு நோக்கால் நோக்கினலும், பால் மாறுபட்டவர்களை அவ்வாறு நோக்குவதில்லை. பிறன்மனை நோக்காத பேராண்மையை அறமாகவும் ஒழுக்கமாகவும் அறிவித்துள்ளார் திருவள்ளுவர்.

காதலர்கள், ஒருவரையொருவர் காணும் போது முதலில் அயலாரைக் காண்பதுபோல் பொது நோக்கால் காண்கிருர்கள். பின்னர், அவ்விருவரும் சிறப்பு நோக்கால் தம் உள்ளத்துணர்வு களைக் கண்களால் கூறிக் கொள்கின்ருர்கள். ஏனெனில், காதலு ணர்வுகளை வாயால் கூற முடியாது: அங்ஙனம் கூறமுற்பட்டால் அருகிலிருப்போர் அதனை அறிந்து கொள்வார்கள் அல்லவா? எனவே அவர்கள், அயலாருக்குத் தெரியாமல் காதல் கொண்டார் கள். இதனுல் இல் வாழ்க்கையைக் ‘களவு வாழ்க்கை’ என்று கூறியிருக்கின்ருர்கள். களவில் நிகழும் இத்தகைய நோக்குகளை, தான்

“ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள” என்றும்,
கண்ணெடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனுமில” என்றும், வள்ளுவர் கூறியிருக்கின்ருர்

**இணைநோக்கு:-**

திருவள்ளுவர் கூறிய இணை நோக்கின் இயல்பினைக் கம்பர் விளக்கிக் கூறியிருக்கின்ருர். வில்லை வளைத்து, சீதையின் நலத்தைத் திளைக்க விரும்பிய இராமன், மிதிலை மாநகரத்திற்குச் சென்ருன் அங்கு சீதை நிற்பதைக் கண்டான். கண்டதும் அவளை நோக்கி ஞன்; அவளும் அவனை நோக்கினுள். உடனே இருவர்உள்ளங் களும் ஒற்றுமைப்பட்டன. இதனை,

“எண்ணரும் நலத்தினுள் இணையள் நின்றுழி
கண்ணெடு கண்ணிணைக் கவ்வி ஒன்றையொன்
நுண்ணவும் நிலைபெரு துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினுன் அவளும் நோக்கினுள்”

என்று, கம்பர் கூறியிருப்பதனுலறிந்து கொள்கிருேம்.

***காதல் சிறப்பு:-***

இன்றைய மக்களுட் சிலர், காதலை Love என்று கூறுகின்ருர் கள். லவ் என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு விரும்புதல் அல்லது நேசித்தல் என்பது பொருளாகும் ஒருவர், யாரை வேண்டுமானுலும் நேசிக்கலாம்; எத்தனை பேரை வேண்டுமானுலும் நேசிக்கலாம்·

பாரதக்கதையில் கூறப்பட்டிருக்கின்ற அர்ச்சுனனைப்போல், கந்தர்வ முறைப்படி பல பெண்களைக் காதலிக்கலாம்; அவர்களைமனைவியாக அடைந்து குழந்தைகளைப் பெறலாம்; பின்னர் அவர்களை விட்டுப் பிரிந்து செல்லலாம். திரௌபதியைப்போல, பெண்களும் பலரைக் காதலராக ஏற்றுக் கொள்ளலாம். பாரதக் கதை வடநாட்டில் தோன்றியதாதலின் அந்நாட்டின் அக்காலப் பண்பினை அஃது அறிவிக்கின்றது இம்முறை இன்றும் அங்கு ஒரு சில பகுதிகளில் இருந்து வருகின்றது. ஆனால், தமிழ் நாட்டில், களவு வாழ்க்கையை ஏற்போர், 'ஒருவனும் ஒருத்தியுமாகவே வாழ வேண்டும், என்று வற்புறுத்தியிருக்கின்றார்கள். காதல் என்பதற்குக் 'காத்தல்' என்ற பொருளைக் கூறியிருக்கின்றார்கள். களவு வாழ்க்கையில் கூறிய உறுதி மொழிகளையும், குடிமைப் பண்புகளையும் காத்தலோடு, ஒருவரையொருவர் காக்க வேண்டும் என்றும் அறிவித்திருக்கின்றார்கள்

***காதல் நோக்கு:-***

காதல் நோக்கு, மின் காந்தத்தை ஒத்ததென்று கூறுகின்றார்கள். காந்தம் அருகிலிருக்கும் இரும்பைத்தான் இழுக்கின்றது. ஆனால், காதல். தூரத்திலிருப்பவரையும் இழுத்துக் கொள்கிறது. காதல்' என்னும் கயிற்றால் பலர் கட்டப்படுகின்றார்கள். கயிற்றால் கட்டுண்டவர் அக்கட்டினை அறுத்துக் கொண்டு வெளிவந்து விடலாம். ஆனால், காதல் கயிற்றை அறுத்துக் கொண்டு வர முடியாது.

சீதையும் இராமனும் நோக்கிய காதல் நோக்கினை விளக்க விரும்பிய கம்பர்,

"பருகிய நோக்கெனும் பாசத்தாற் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்
இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்." என்று கூறியுள்ளார்.

ஒரு வரழகை ஒருவர் அனுபவித்த கண்பார்வை என்னும் கயிற்றால்கட்டி, ஒருவரை மற்றொருவரது மனம் இழுத்தலால்

இராமனும் சீதையும்மாறிப்புகுந்து ஒருவர் மனதை ஒருவர் அடைந்தார்கள்.

இராமன் பெண்மை நலம்மிக்க சீதையை விரும்புவதற்குக் காரணமாயிருந்தது அவளுடைய கண்களாகும். ஆண்களுட் சிறந்த இராமனை சீதை விரும்புவதற்குக்காரணமாயிருந்தது, அவனுடைய வில்லாற்றலாகும். எனவே, இவ்விரண்டினையும் சிறப்பிக்க எண்ணிய கம்பர். 'வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்' என்று கூறியிருக்கின்றார். இவ்வாறே திருத்தக்கத்தேவரும் சீவக சிந்தாமணியில் கூறியுள்ளார்.

சீவகனும் கேமசரியும்;

சீவக சிந்தாமணி என்னும் செந்தமிழ்க் காப்பியம் தமிழ் நெறியை உணர்த்தற் கெழுந்ததல்ல: மதநெறியை உணர்த்தற் கெழுந்ததாகும். அந்நூலிற் கூறப்படுகின்ற சீவகன், பல பெண்களைக்காமுற்று மணம்புரிந்து கொண்டசெய்தி தமிழ்ப் பண்பிற்கு மாறுபட்டதாகும். இருப்பினும் திருத்தக்கத்தேவர் தன்னுள்ளத்தில் ஊறிக்கிடந்த தமிழ்ப் பண்பைப் பல்வேறிடங்களில் விளக்கியிருக்கிறார்

கேமசரியை மணம் புரிந்து கொள்ள விரும்பிய சீவகன் கேமமாபுரத்திற்குச் சென்றான். அதுபோது, கேமசரியும் சீவகனும் ஒருவரை பொருவர் நோக்கினார்கள். இருவர் நோக்கும் இணைந் தொன்றாயின. அளவற்ற செல்வமும் அழகும் அமைந்த கேமசரியும், வலிமை மிக்க தோள்வலிமையுடைய சீவகனும், கண்ணெனும் தூதின் மூலம் தத்தம் காதலுணர்வை வெளிப்படுத்தினார்கள். தம் உறவினர் பலர் அருகிலிருந்த போதிலும் அவர்கள் அறியாதவாறு அயலாரை நோக்குவதுபோல் கேமசரி நோக்கினாள். இந்நோக்கு கடலில் தோன்றிய அமுதத்தையும், இவ்வுலகத்தையும், விலையாகக் கொள்ளுமாறு உயர்வாக அமைந்திருந்தது என்பதை,

"காதன்மை கண்ணுளே அடக்கிக் கண்ணெனும்
தூதினுற் நுணிபொரு ளுணர்த்தித் தான்றமர்க்கு

ஏதின்மை படக்கரந் திட்ட வாட்கணேக்கு
ஓதநீ ரமுதமும் உலகும் விற்குமே''

என்று திருத்தக்கதேவர் கூறியிருப்பதனுல் அறிகிருேம்.

கேமசரியின் தந்தை, தன்மகளுக்குத்திருமணம் முடித்து வைக்கக்கருதினுன் பலரைத் தன்வீட்டிற்கழைத்து வந்து, விருந்து நடத்தி, அவர்களைக் கேமசரிக்குக் காட்டினுன். அவள், அவர்களையெல்லாம் விரும்பவில்லை. ஆண்டுகள் பல கடந்த பின்னர், வலிமை மிக்க சீவகனைச் சிறந்த காதலனுகத் தேர்ந்தெடுத்திருக்கின்ருள். இதனுல், பெண்கள் வலிமை மிக்கவனையே காதலனுக அடைய விரும்புகின்ருர்கள் என்பதையும், ஆண்கள் செல்வமும் அழகும்மிக்க பெண்களையே விரும்புகின்ருர்கள் என்பதையும், 'காதல்' என்பது இயற்கை நெறியில் தோன்றுவதேயன்றி, செயற்கை நெறியில் தோற்றுவிக்கப்படுவதில்லை என்பதையும் நாம்அறிந்து கொள்கிருேம்.

*தமிழ்த்தாயின் கண்ணீர்:-*

இன்று கயவர் சிலர் காதல் நோக்குடன் பிறரைக்காண்பதைப் பார்க்கிருேம். இவர்கள், பிறர் தம்மை விரும்புகின்ருர்களா? இல்லையா? என்று அறிந்து கொண்டு நோக்குவதில்லை; ஒத்தகுதியை எண்ணியும் நோக்குவதில்லை; பிறரறிந்து கொள்ளாதவாறும் நோக்குவதில்லை. பிறரறிந்தாலென்ன? திட்டினுலென்ன? அடித்தாலென்ன? என்றெண்ணி நோக்குகின்ருர்கள். தம் எதிரேவரும் சிறியோர்முதல் பெரியோர் வரையிலுள்ள அனைவரையும் நோக்குகின்ருர்கள். அவர்கள், இவர்களை நோக்காமலிருந்தாலும் அதற்காக இவர்கள் மனங் கலங்குவதில்லை; அவர்களையே பார்த்துக் கொண்டிருக்கின்ருர்கள். பார்ப்பதோடு விட்டாலும் பாவாயில்லை; அவர்களோடு உரையாடத் தொடங்குகிருர்கள்; உரையாடலிலும் பயன் கிடைக்கவில்லை என்ருல் அத்துடன் விடாமல் பலாத்கார முறையைக் கையாள எண்ணுகிருர்கள். எனவே இவர்கள் காதல் வாழ்வை விரும்பவில்லை; காம வாழ்வையே விரும்புகின்ருர்கள். இன்றைய கயவர் சிலரின் அறிவற்ற செயலைக்கண்டு, தமிழ்த்தாய் கலங்கிக் கண்ணீர் வடிக்கின்ருள்; பொறுமையை எண்ணி அவர்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்ருள்; பிறன் மனை நோக்காத பேராண்மையைக்கடைப் பிடித்த தமிழகத்தில் நல்லமரத்தில் புல்லுருவிகள் தோன்றுவதுபோல் தோன்றியிருக்கின்ருர்களே என்று கருதி

ஏங்கின்றார்கள். அக்காலக் காதலர்கள், காதலராயமைந்தபின், பிறரைச் சிறப்பு நோக்குடன் காண்பதில்லை. இதனைத் தஞ்சை வாணன் கோவையிலமைந்துள்ள செய்யுளொன்று இனிதே விளக்கிக் காட்டுகின்றது.

உடன் போக்கு:-

களவு வாழ்க்கையிலீடுபட்ட பெண்ணொருத்தி தன் வீட்டிலிருப்பவர்க்குத் தெரியாமல், தன் காதலனுடன் வெளியூருக்குச் சென்று விடுவதுண்டு. இதனை, உடன் போக்கு என்று கூறுவார்கள். பெண் அங்ஙனம் சென்றுவிட்டால், 'போனால் போகட்டும்' என்று கருதி, பெற்றோர், அவளையும், அவளை விரும்பிய தலைவனையும் வெறுத்து விட மாட்டார்கள். அவ் விருவரும் இணைந்து வாழவே, எண்ணுவார்கள்.

இம் முறையில் பெண்ணொருத்தி பிறந்த வீட்டிலிருந்து வெளியேறிவிட்டாள். அவளைத் தேடிக் கொண்டு செல்கின்றாள் செவிலித்தாய். அவள் வழியில் வருவோரையெல்லாம் விசாரித்துக் கொண்டு சென்றாள். களவு வாழ்க்கையில் ஈடுபட்ட ஒரு ஆணும் பெண்ணும் தன் எதிரே வருவதைக் கண்டாள், வந்த தலைவனை நோக்கி, என் மகள் எதிரே செல்கின்றாளா, என்று கேட்டாள் அதற்கு அவன், யான்கண்ட ஆணும், என் மனைவி கண்டதாகக் கூறிய பெண்ணும், இவ்வழியாகச் சென்றார்கள். அவ்விருவரும் வெம்மைமிக்க காட்டில் நடந்துவந்தகளைப்பு நீங்க, தண்மை மிக்க தடாகங்கள் சூழ்ந்த தஞ்சையை அடைந்திருப்பார்கள்" என்று கூறினன். இதனை.,

"யான்கண்ட அண்ணலும் எண்ணரும் காதலின் ஏகியவென்
மான்கண்டனகண் மயில்கண்ட மாதரும் மாதருமம்
தான்கண்ட தண்ணளிச் சந்திரவாணன் தரியலர்போம்
கான்கண்ட மெய்குளிரப்பொய்கை சூழ்தஞ்சை காண்
பாரகளே,,

என்ற தஞ்சை வாணன் கோவைச் செய்யுள், நமக்கு அறிவிக்கின்றது.

பெரும்பண்பு:-

வயது முதிர்ந்த செவிலித்தாய் பிறனொருவனைப் பொது நோக்காக நோக்கியதும், அவனுடன் பேசியதும் தவறாகாது. தன் மகளைக் காண வேண்டுமென்ற ஆர்வமே அவளை வற்புறுத்தி நோக்கவும் கேட்கவும் செய்திருக்கின்றது. எதிரே வந்தவன் களவு நெறியில் ஈடுபட்டவனாயிருப்பினும் அவன் பெரும்பண்புடையவன் பிறர்மனை நோக்காத பேராண்மையுடையவன் என்பதனை விளக்குதற்காகவே யான் கண்ட அண்ணலும் என்று கூறினான்.

கடலில் தோன்றிய முத்து கடலுக்கழகளிப்பதில்லை; அதனை எடுத்து அணிபவர்க்கே அழகளிக்கின்றது. மலையில் தோன்றிய சந்தனம், மலைக்கு மணத்தையளித்து அதனை மகிழ் ஊட்டுவதில்லை. அதனை அரைத்துப் பூசிக் கொள்பவர்கட்கே மகிழ்வளிக்கின்றது யாழில் பிறக்கும் இசை யாழிற்கு இன்ப மூட்டுவதில்லை; அதனைக் கேட்போருக்கே இன்பமளிக்கின்றது இவ்வாறே ஒருபெண் பிறந்த குடும்பத்திற்கு மகிழ்வளிக்காமல் தன்னை விரும்பி ஏற்ற காதலனுக்கே மகிழ்வளிப்பாள். இதுதான் உலகியல். இதற்கேற்பவே என்னருகில் நிற்கும் இவள் தன் வீட்டை விட்டுப்புறப்பட்டு என்னுடன் வந்திருக்கின்றாள். இவ்வாறே, உன்மகளும் பிறனொருவனுடன் சென்றிருக்கின்றாள் என்பதனை விளக்குதற்காகவே எண்ணரும்காதலின் ஏகிய' என்று கூறினான்.

ஆண்களைப் போலவே பெண்களும் பிறஆடவனை நோக்காத பெரும்பண்புடையவர்களாக வாழ்ந்தார்கள் இதனால்தான் தலைவனைமட்டும் நான் கண்டேன். என் மனைவி அவனுடன் சென்ற பெண்ணைக் கண்டாள் என்பதனை அறிவித்தற்காக மயில் கண்ட மாதரும், என்று கூறினான்.

மக்கள் முதலில் அடையும் துன்பம், பின்னர் அடைய விருக்கும் இன்பத்திற்கு அறிகுறியாகும். உன்மகள் சென்ற காட்டு வழி அவளுக்குத் துன்பத்தை அளித்திருக்கு மென்று நீ எண்ணாதே; துன்புற்றுச் சென்றவள் இன்புற்று வாழ்ந்து கொண்டிருப்பாள் என்பதனை அறிவித்தற்காகவே, 'நான் கண்ட மெய்குளிர' என்று கூறினான்.

உன்மகள் பிறந்த இடத்தை விட சிறந்த இடத்தை அடைந்திருக்கின்ருள் என்பதனை அறிவித்தற்காக "பொய்கைசூழ் தஞ்சை காண்பார்களே" என்று கூறினன். இங்ஙனம் நிலைவன நுட்பமாகக் கூறியதாகப் பொய்யா மொழிப் புலவர் கூறியிருக்கும் பண்புகள் இக்கால மக்கள், மிகவும் அறிந்து கொள்ள வேண்டியவையாயிருக்கின்றன.

இச்செய்யுளிலிருந்து, ஒரு ஆண் பிற பெண்ணையும் ஒரு பெண் பிற ஆணையும் பொது நோக்காக நோக்கலாமே தவிர சிறப்பு நோக்காக நோக்கக் கூடாது என்பதை நாம் அறிந்து கொள்கின்ருேம்.

இன்று நம்நாட்டில் வாழும் சிலர். எனக்கு என்பதை 'நேக்கு என்றும், உனக்கு என்பதை 'நோக்கு' என்றும் திரித்துக் கூறுகின்ருர்கள். ஆனல், இங்கமைந்த நோக்கு என்னும் சொல் அவ்வாறமைய வில்லை. 'நோக்கு' என்னும், முதனிலைத் தொழிற் பெயர், தல் என்னும் விகுதி பெற்று நோக்குதல்' என்றும், விகுதி பெருமல் நோக்கு' என்றும் வழங்கப்படுகின்றது.

பல்காப்பியத்தினும் சிறந்த தொல்காப்பியத்தில், நோக்கின் இலக்கணம் கூறப்பட்டிருக்கின்றது, அன்பொத்த இளம் காதலர்கள் ஒருவரை யொருவர் காணும் போது அவர்களிடம் காதல் வேட்கை தோன்றுகின்றது இயல்பாக அமைந்த நாணமும், பிறருக்குத் தெரிந்துவிடுமோ என்றெண்ணுவதால் தோன்றும் அச்சமும் அவர்களைப் பேசவிடாமல் தடுக்கின்றன. "ஒருவருடைய உள்ளத்தை மற்ருெருவர் அறிந்து கொள்ள விரும்பி ஒருவரை யொருவர் நோக்குதல் மூலம் தம்விருப்பத்தைத் தெரிவிக்கின்ருர்கள். பின்னர் அவ்விருவர் விருப் பத்தையும்,, எடுத்துரைக்கும் காமக் குறிப்புச் சொல்லே இருவரது பார்வையாகும் என்ருர் தொல்காப்பியர். இதனை,

" நாட்ட மிரண்டும் அறிவுடம் படுதற்குக்
கூட்டி யுரைக்குங் குறிப்புரையாகும்"

என்ற தொல்காப்பிய நூற்பாவால் அறிந்து கொள்கிருேம்.

முடிவுரை:

மக்களின் வாழ்க்கையை, அகவாழ்க்கை என்றும், புறவாழ்க்கை என்றும் பிரித்து அவற்றிற்கு இலக்கணம் வகுத்த தமிழ் நாட்டில், நாம் வாழ்ந்து வருகின்றோம். நாம் உடுத்துகின்ற உடை; உண்ணும் உணவு, மேற்கொள்ளும் பழக்க வழக்கங்கள் முதலியன நம் முன்னோர் வழியைப் பின்பற்றியனவாகவே இருக்கின்றன நாம் இன்று விஞ்ஞான காலத்தில் வாழ்கின்றோம் உயரிய நாகரீகத்தை அடைந்திருப்பதாகக் கருதி மகிழ்கின்றோம். ஆனால், ஆடவர்கள் பிற பெண்களையும், பெண்டிர்பிற ஆடவரையும் தெருக்களிலும் திண்ணைகளிலும் பிறவிடங்களிலும் நின்று கொண்டு கூர்ந்து நோக்கும் இழிசெயலை நாம் கண் கூடாகக் காணுகின்றோம். வயது முதிர்ந்தவர்களைக் கண்டால் அவர்களைத் தாய் தந்தையராகக் கருத வேண்டும். இவ்வாறே, இளம் வயதினரைச் சகோதர சகோதரிகளாகக் கருத வேண்டும். இத்தகைய உயரியபண்பு உலோக கால மக்களிடம் இருந்திருக்கின்றது; ஆனால், விஞ்ஞான கால மக்களிடம் அமைந்திருக்கவில்லை. இப்பண்பு இன்றுமட்டு மல்லாமல் என்றும் இருந்தால்தான் நாம் நாடு போற்றும் நன்மக்களாக வாழமுடியும். நற்பண்புடையவர் சிலர் வாழ்வதால்தான், உலகம் அழியாமலிருக்கின்றது. இல்லை என்றால், உலகம், மண்ணோடு மண்ணாக முன்னதாகவே அழிந்திருக்கும்.

" பண்புடையார்ப் பட்டுண் டுலகம் அது வின்றேல்
மண்புக்கு மாய்வது மன் " — திருக்குறள்.

# அண்ணமலைநகர்

அண்ணமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையினர் இலக்கியச் சுற்று என்றவொரு சொற்பொழிவு வட்டத்தை இவ்வாண்டு தொடங்கியிருக்கின்றனர். தமிழுக்குத் தொண்டு செய்த இலக்கியப் பெருமக்களைப் பற்றி இத்தொடர் சொற்பொழிவுகள் திங்கள் தோறும் நடைபெறும். இழக்கியச் சுற்றின் முதற் சொற்பொழிவுகள் 3—8—76, ஆளவை மன் றத்தில் தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் வ. சுப மாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றன. மகாவித்துவான். ச .தண்டபாணி தேசிகர் தம் ஆசிரியப் பெருந்தகையான தமிழ்த் தந்தை உ. வே. சாமிநாத ஐயர் அவர்களின் உழைப்பு. மாணவர்கள் மேல் கொண்ட பற்று ,தம் ஆசிரியர் மீனுட்சி சுந்தரம்பிள்ளையைப் போற்றிய பண்பு என்பன பற்றிய பல புதிய வாழ்க்கைக் குறிப்புக்களை எடுத்துக்கூறினர். திரு. அ. ஞானப்பிரகாசம் மணிமேகலைக் காப்பியம் படைத்த சாத்தனரின் பாத்திரப்படைப்பு, சமய நோக்கம் என்றிவற்றை மேல்நாட்டுக் காப்பியங்களோடு ஒப்பிட்டுக் காட்டினர். தலைவர். தம் முடிவுரையில். டாக்டர் உ. வே. சா. வின் என்றும் மறக்க இயலா அடிப்படைத் தொண்டுகளையும், சாத்தனரின் நிலையான சீர்திருத்த இயக்கங்களையும் புலப்படுத்தினர். திரு வே. செயராமன் நன்றி கூறினர். இக்கூட்டத்திற்குப் பல்துறை மாணவர்களும் இலக்கிய அன்பர்களும் திரளாக வந்திருந்தனர்

# தற்பெருமை

திரு. நா. சண்முகம்

ஆர். கே. ஸ்ரீரங்கம்மாள் உயர்நிலைப் பள்ளி, கோவை - 18

தற்பெருமை:-

பேசுகிறவனைக் கண்டால் நமக்குப் பிடிக்காது— இந்தக் காலத்தில் மட்டுமல்ல—அந்தக்காலத்திலுந்தான்! ஆயினும் தற்பெருமை பேசுவதற்கு நம்மவர்கள்—தமிழர்கள் —அக் காலத்தில் இடம் கொடுத்து விட்டார்கள்.

அரசவை மந்திரிபிரதானிகள் சூழ மன்னவன் கொலுவீற்றிருக்கிறான். அங்கே இருபது வயது இளங்காளை! விம்மிதம் பெற்ற வீரத் தோள்கள்—விரிந்த மார்பினன்- பொங்கி எழும் துடிப்பு மிக்க பேச்சுக்கள்!

ஆம்! தற்பெருமை பேசுகிறான்! தயக்கமின்றி — தடுமாற்றமின்றி—பேசுகிறான். என்ன வக்கணையாகப் பேசுகிறான் பாருங்கள்!

'பகைவரின் தாக்குதலுக்கு ஈடு கொடுக்க முடியாமல் நம்மவர்கள் விலகிப் போய் விட்டார்கள். நான் மட்டும் தனியனாகத்— தன்னந்தனியனாக— விரோதிகளின் கூட்டத்திலே அகப்பட்டுக் கொண்டேன். என்னை வெட்டி வீழ்த்தி விடவேண்டும் என்றமுனைப் போடு—துடிப்போடு—பகைவர் பலர் பாய்ந்து பாய்ந்து சுழன்று சுழன்று தாக்கிக் கொண்டிருந்தனர். அப்பொழுது தூரத்தே இருந்த பகைவீரன் ஒருவன் அம்பிலே நெருப்புப் பந்தினைப் பொருத்தி என் முகத்தை நோக்கி எய்து விட்டான் அதே சமயத்தில் பக்கவாட்டில் பகைவன் என்னைத் தாக்கிக் கொண்டிருந்தான் நான் அவனுக்கு இடம் கொடுப்பவனைப்போல் இரண்டு அடி விலகினேன். என்குறிப் பறியா அவன் தனக்கு வாய்ப்பு கிடைத்ததாக எண்ணி முன்னேறி வந்தான். அதேநேரத்தில் நெருப்புக் கோளம் வந்து தாக்கவே அவனுடைய முகம் பொசுங்கி விட்டது. அத்துடன் விட்டதா? இன்னொருவன் நஞ்சு தோய்ந்த வேல்ஒன்றினை என் மீது குறிவைத்து வீசினான். அதைக்கண்ட நான் என்முன்னால் போர் செய்து கொண்டிருந் தவனைக் கண்டு அஞ்சி வாளின் சுழற்சியைத் தளர்த்துவதைப்போல் பாவனை செய்தேன். அதனை அறியாமல் அவன்வாளை ஓங்கிக் கொண்டு என்னை நெருங்கினான். அவன் கை கீழே இறங்குவதற்கு

முன்பே அவனை இறுகத் தழுவிக்கொண்டேன், பாவம்! நஞ்சு கலந்தவேல் அவன் முதுகில் சொருகிக் கொண்டது. பகைவர்களின் தாக்குதல்—அதிகமாக அதிகமாக—என் வீரத்தின் பசியும் பெருகியது. செடிகளிலிருந்து மலர்களைப் பறிப்பது போல் அவர்களின் உடல்களிலிருந்து தலைகளைக் கொய்து விட்டேன். பகைவரின் குருதி வெள்ளத்தில் குளித்து மூழ்கி எழுந்து வந்தேன். என் உடலில் பகைவரின் வாள்பட்ட இடங்களைக் காட்டும் விழுப்புண்களைப் பாருங்கள்,'' என்று தன் வீரப்ரதாபங்களை மூச்சு விடாமல் பேசுகிறான்.

அரசனும் அங்கு இருந்த மற்றோரும் அவன் கூறும் தற்பெருமைகளைக் கேட்டு ஆரவாரம் செய்கிறார்கள—அவனுக்கு உற்சாகமூட்டுகிறார்கள் அரசன் தன்மேனியிலிருந்த ஆபரணங்களை— அணிகலன்களை எடுத்து வீரப்பெருமைகளைக் கூறும்—விழுப் புண்களைக் காட்டும் அவனுக்குப் பூணுகிறான்.

இவ்வாறு தற்பெருமை கூறுவதைத் தமிழுலகம்—தமிழ் மக்கள்—தமிழ் இலக்கியம் பெருமையோடு—பூரிப்போடு வரவேற்கிறது. பொன்னுடை போர்த்திய மொழியில் இலக்கிய வாடையில் என்ன அழகாக எடுத்து இயம்புகின்றார் தமிழ்ப் புலவர் ஒருவர்

''மன்மேம் பட்ட மதிக்குடை யோற்குத்
தன்மேம் பாடு தானெடுத் துரைத்தன்று''

புறப் பொருள் வெண்பாமாலையில் வரும் அச்செய்யுளுக்குப் பொருள் என்ன? மன்னர்களிலேயே மேம்பட்ட திங்கள் போன்ற வெண் கொற்றக் குடை உடைய தன் அரசனுக்கு ஒரு மறவன்—வீரன்—தனது பெருமையைத் தானே எடுத்துக் கூறியது.

தற்புகழ்ச்சியாக இருந்தாலும் அதுகுற்றத்தின் பாற்படாதது என்பதால் அதனை நெடுமொழி என்னும் துறையாக வகுத்தனர்.

# "வாலி வதைப் படலம்"

## பாடல்கள் ஒப்பாய்வு

புலவர் வை. தங்கமணி,
பி. கே. என். உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம், மதுரை மாவட்டம்.

மால்கடிந்த தவமுனி வால்மீகி என்பான்
வனத்திடையே தாம்கண்டு கொண்டுவந்த
பால்படிந்து முள்ளடர்ந்து பருத்துநீண்ட
பலவின் கனி பாருக் கீந்தான்
மேல்படிந்த பிசினகற்றி மெல்லக்கீறி
மெதுவாக சுளையெடுத்துத் தேனும் வார்த்து
நூல்படிந்த மனத்தவர்க்கு விருந்து வைத்தான்
கம்பனென்ற தமிழ்த்தாயார் நோன்றமைந்தன்.

இவ்வாறு தமிழ்த்தாயார் தவமிருந்து பெற்றெடுத்த கம்பன்

"வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி"

என்றும்-

"சாலி நெல்லின் சிறை கொள் வேலி
ஆயிரம் விளையுட்டாக
காவிரி புரக்கும்"

சோழ நாட்டில் 9 அல்லது 12-ம் நூற்றுண்டில் ஆதித்தருக்கு மகனாக தேரழுந்தூரில் பிறந்தார்.

கம்பத்தடியில் கிடந்ததால் 'கம்பர்' என்றும் கம்பங் கொல் லையைக் காத்ததால் 'கம்பர்' என்றும் ஏகம்பர் அருளால் பிறந்த தால் 'கம்பர்' என்றும், பெயராயிற்று என்பர். எவ்வாறு ஆயினும் ஆகுக. இராமாயணத்தைக் கம்பர் இயற்றினர் என்பதில் கருத்து வேறுபாடு உடையார் இல்லை எனலாம்.

"கம்பனைப் போல்"
"கம்பன் என்றொரு மானுடன் பிறந்ததும்"

'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்"
"விருத்தமெனும் ஒண்பாவிற் குயர் கம்பன்"

என்றெல்லாம் சான்ருேரால் பாராட்டப்படும் கம்பர்.

தூக்குத் தூக்கியாய் வாழ்க்கையைத் துவக்கி முதலாம் குலோத்துங்கன் அவைக்களப் புலவன் என்னும் அளவுக்கு உயர்ந்தார்.

'ஏர் எழுபது' — 'திருக்கை வழக்கம்' — 'சடகோபர் அந்தாதி' என்னும் நூற்கள் எழுதியதோடு வடமொழியில் 'ஆதிகவி என்றழைக்கப்படும் வால்மீகி முனிவரால் இயற்றப்பட்ட இராமாயணத்தைத் தமிழர் பண்பாட்டிற்கு இழுக்கில்லா முறையில்—

"கரைசெறி காண்டம் ஏழு கதைகள் ஆயிரத்தெண்ணூறு
பரவுறு சமரம்பத்து, படலம் நூற்றிருபத்தெட்டே
உரைசெயும் விருத்தம் பன்னிராயிரத்தொருபத்தாறு
வரமிகு கம்பன் சொன்ன வண்ணமும் தொண்ணூற்ருறே'

என்ற பாடலால்

காண்டம் 7; கதைகள் 1800; போர் 10; படலம் 128; பாடல்கள் 12016; வண்ணம் 96 என்று அமைத்துப் பாடியுள்ளார்.

இங்கு நாம் கட்டுரைக்கு எடுத்துக் கொண்ட காண்டம் ஏழினுள் 'கிட்கிந்தா' காண்டத்தில் உள்ள வாலி வதைப் படலமாகும்

இமையா தேவர்களுள் இணையின்றி விளங்கியவனும், வச்சி' ராயுதத்தைத் தன் வலிமைக்கு அடையாளமாக கொண்டவனும் ஆன இந்திரனின் மகனுன 'வாலி' வலிமையால் உயர்ந்து, புரமெரித்தவனிடத்திலிருந்து எதிர்த்தவரிடம் செம்பாதி வலிமை பெறும் வரத்தினைப் பெற்று மேலும் உயர்ந்து, கயிலையைத்தூக்கிய இராவணனை தன் வாலினுல் கட்டி இழுத்து வந்த அருந்திறல் வாய்ந்த வாலி வலிமையால் மேலும் மேலும உயர்ந்து நின்ருன்.

அத்தகைய பேராற்றல் பெற்ற பெருவீரன் ஆன வாலி கிட்கிந்தையை ஆண்டு வந்தான். அப்போது சுக்கிரீபனுக்கும் வாலிக்கும் பகைமை மூண்டது. சுக்கிரீபனுக்கு இராமன் துணையாகிருன்.

முதலில் தோற்றேடியவனுக்கு இராமன் துணை கிடைததும். மீண்டும்வாலியைப் போருக்கழைக்கிருன்—போர் நடைபெறுகிறது —அப்போது எதிர்த்தவர் வலிமையில் பாதிபெறும்வரம்பெற்றவனு கையால் இராமன் மறைந்திருந்து அம்பு எய்கிருன். அவ்வம்பானது வாலியின் மார்பில்

''காரும்வார்ச்சுவைக்:கதலியின் கனியினைக் கழியச்
சேரும்சூரியிற்சென்றது''—57ஆம் பாடல்.

நான்கு பூதங்களின் ஆற்றலையும் ஒருங்கே அமையப்பெற்ற வாலி யி ன் மார்பில் வாழைப்பழத்துள் ஊசி செல்வது போல் இராமன் ஏவிய அம்பு சென்றது என்றும்...

அப்போது சூரியன் மகனை சுக்கிரீபனைப் பிடித்த பிடி நெகிழ்ந்தது-ஆனுல் அவன் மார்பை ஊடுருவிச்சென்று கொண்டி ருக்கும் பகழியைப் பற்றுதலை மட்டும் மறந்தானில்லை. இதனை

''வெய்யவன் தரு மதலையை
மிடல் கொடு கவரும்
கைய் நெகிழ்ந்தன
நெகிழ்ந்திலன் கடுங்கணைக் கவர்தல்'' ஷை படலம் 59

என்னும் பாடலால் அப்பகழியைப் பற்றினுன் என்றும்-பற்றி...

''வெற்றி வீரன் அடுகணை
அவன்மிடல் உரத்து ஊடு
உற்று அப்புறத்து உருதமுன்
உறுவலி கரத்தால்
பற்றி வாலினும் காலினும்
பிணித்தகப் படுத்தான்'' — ஷை படலம் 60.

என்பதால் மார்பினை ஊடுருவி செல்லும் போக்கில் இருந்து தடுத்து நிறுத்திட கை, கால், வால் ஆகிய வலிமை பொருந்திய உறுப்புக்களால் சிக்கெனப்பிடித்துத் தன் ஆற்றலுக்குட்படுத்திக் கொண்டான்.

இப்பாடலில் 'பிணித்தகப்படுத்தான்' என்ற தொடரால் இராமன் பகழியானது மார்பில் தைத்து முதுகு புறமாக வெளிவரும் முன்பே அதனுடைய போக்கினை மாற்றித் தன்குற்றத்துக்குக்

கொண்டுவந்தான் வாலி என்பதை அறிகிரும்.

அவ்வாறு இராம பாணத்தைத் தடுத்தபின் உருகுவான்-குதிப்பான் உதைப்பான். இக்கணையினை விண்ணுள்ளோரும் சரி மண்ணுள் ளோரும் சரி– என் மார்பில் எய்தி இருக்கமுடியாதே! வேறு யாராக இருக்கும் எனஐயுறுவன் — இதனை எய்தவன் யார்? அறிய வேண்டும் என்றஅவா எழுகிறது — அதனுல் முயன்று மீண்டும் கரததாலும் ,காலாலும், வாலாலும் பற்றி இழுக்கிருன் பகழி வெளிவராமையால் வருந்துகிருன்.

மீண்டும் அவன் சிந்திக்கிருன்:-

என்பெயரைக் கேட்டாலே தேவர்சள் நடுங்குவார்கள். ஆகை யால் இச்செயல் செய்ய அவர்கள் முன்வரார் — பின் — யாராக இருக்கும்.

திருமாலின் சக்கரமோ? அல்லது
சிவனின் குலமோ? இவையன்றி...
அறுமுகன் வேலோ—

இந்திரன் வச்சிராயுதமோ? இருக்கவே இருக்காது ஏன் எனின் என் மார்பைத் துளைத்துச் செல்லும் ஆற்றல் அவைகளுக் கெல்லாம் கிடையாதே...

ஆகையால் எப்படியாவது இச்சுடுசரம் யாருடையது என் பதை எப்படியும் அறிந்துவிட வேண்டும் என்ற வேட்கையால் தனது மார்பினை அசைத்து அதனை வெளிக் கொணர முயன்ருன்... முயன்ருன்: மார்போடு உயிரையும் எடுத்துச் செல்ல முயலும் இப் பகழி யாருடையது என அறிவன் என்று மீண்டும் முயன்ருன்... கை, கால், வால் ஆகியவைகளால் உறுதியாகப் பற்றி அப்பகழியை வெளியே இழுத்தான். அப்போது...

ஓங்கரும் பெருந்திறலுடை
மனத்தனுள் எத்தன்
வாங்கினன் மற்றவ் வாளியை
யாளிபோல் வாலி
ஆங்கு நோக்கினர் அமரரும்
அவுணரும் பிறரும்

வீங்கினர்கள் தோள் ''வீரரை
யார் வியவாதார்'' —ஷை படலம் 67 .

66 ஆம் பாடலிலும் ''பரமஸின்னவன் பெயரறிகுவன் எனப் பறிப் பான்''—என்று அப்பகழியை பறித்ததால்-67-ஆம் பாடலில் ... .

இராமனுல் தொடுக்கப்பட்ட அப்பகழியைச் சிங்கம்போல் வெளிக் கொணர்ந்தான். இக்காட்சியை தேவர்கள் பார்க்கின்றனர். அசுரர் களும் பார்க்கின்றனர் மகிழ்ச்சியால் அவர்கள் தோள்கள் பூரிக்கின்றன. இந்த இடத்தில் பகையாயினும் நட்பாயினும் வீரம் வீரத்தைப் பாராட்டும் என்பதை ''வீரரை யார் வியவாதார்'' என்று வேற்றுப் பொருள் வைப்பணி அமைத்துப் பாடியிருக்கும் திறம் நினைந்து நினைந்து இன்புறத்தக்கதாகும்·

அப்போது அம்புதைத்த இடத்திலிருந்து யுகமுடிவில்தோன் றும் வெள்ளத்தின் பெருக்குபோன்று சென்னீர் பெருக் கெடுத்தது: 68

அந்தச் சென்னீர் பெருக்கினைக் கண்டு சுக்கிரீபனும் மயங்கி நிலத்தில் சாய்கிருன்— 69

பறித்த வாளியைப் பருவலித்
தடக்கையால் பற்றி
இறுப்பன் என்று எழுந்தனன்
மேருவை யிறுப்போன்
மூறிப்ப னென்னினு முறிவது
அன்ருமென மொழியாப்
பொறித்த நாமத்தை யறிகுவன்
நோக்கிருன் புகழோன் — ஷை படலம் 70.

மேருமலையை ஒடிக்க வல்லவனுன வாலி தன் மார்பில் இருந்து வெளியெடுத்த வாளியை முறிப்பன் என்று மூறிக்க மூயன் றும் முடியாமையால் அதில் பொறித்துள்ள பெயரினை அறிவன் என்று அவ்வாளியைக் கையில் வைத்துப் பார்த்தான்... அப்போது

''மும்மை சால் உலகுக் கெல்லாம்
மூலமந்திரத்தை முற்றும்

தம்மையே தமர்க்கு நல்கும்
தனிப் பெரும் பதத்தைத் தானே
இம்மையே எழுமை நோய்க்கு
மருந்தினை இராமனென்னும்
செம்மைசேர் நாமந்தன்னைக்
கண்களில் தெரியக் கண்டான்'' —ஷி படலம்: *71.*

ஆக இப்பாடலில் பறித்த வாளியை வாலி பார்த்த பொழுது அவ் வாளியில் 'இராமன்' பெயர் பொறித்திருத்தலை வாலி தன் கண்களா லேயே பார்த்தான்...

"செம்மைசேர் நாமந் தன்னைக் கண்களில்
தெரியக் கண்டான்'' — கண்டான் ... வாலி

இராமனை ஏச — இராமன் உரிய காரணங்களைக்கூற, முடிவில் உண்மை உணர்ந்தபின் வாலி இராமனை வணங்கி, புரமெரித்தவன் தந்த வரங்களை எல்லாம் ஊடுருவி, என்மார்பையும் ஊடுருவிச் சென்றது உன்சரம் நன்று...

சுக்கிரீபன் பிழை செய்யினும், என்மீது ஏவிய பகழி என்னும் கற்றினை அவன்மீது நீ ஏவல். அனுமனை உன் தனுவென நினை. என் நம்பியை உன் தம்பியாக நினைப்பாயாக என்று இயம்பி—

" என்றவற் கியம்பிப் பின்னர்
இருந்தன னிளவல் தன்னை
வன்றுணைத் தடக்கை நீட்டி
வாங்கினன் தழுவி மைந்த
ஒன்றுனக்குரைப்ப துண்டா
லுறுதியஃதுணர்ந்து கோடி
குன்றினும் உயர்ந்த தோளரய்
வருந்தலை என்றுகறும்''. —ஷி படலம் *131*

இப்பாடலில் தன் தடக்கை நீட்டித் தழுவினன் என்று கூறுகிறது.

இனி வாலி சுக்கிரீபனை அடைக்கலம் தருமிடத்தில் *138*-ல்...

" என்னவித்தகைய வாய
உறுதிகள் யாவும் ஓங்கும்

பின்னவற்கியம்பி நின்ற
பேரெழிலானை நோக்கி
மன்னவர்க் கரசன் மைந்த
மற்றிவன் சுற்றத் தோடும்
உன்னடைக்கல மென்றுய்த்தே
உயர்க்கரமுச்சி வைத்தான்"

இப்பாடலிலும் வாலி சுக்கிரீபனை அடைக்கலம் தருமுகத்தான் தன் இரு கரங்களையும் தூக்கி உச்சிமீது வைத்து வணங்கினன் என்று கம்பர் கூறுகிருர். வாலி அங்கதனுக்கு ஆறுதல் கூறுமுகத்தான்

"ஆயன பலவும் பன்னி
அழுங்கினன் புழுங்கி நோக்கித்
தீயுறு மெழுகிற் சிந்தை
யலவரும் செங்கண் வாலி
நீயினி யயர்வா யில்லை
யென்று தன் நெஞ்சிற் புல்லி
நாயகனிராமன் செய்த
நல்வினை பயனீதென்ருன்" — 146.

இங்கும் வாலி அங்கதனை "நீயினியயர்வாயல்லை என்று தன் நெஞ் சிற்புல்லி"—என்பதால் தன் மார்புறத் தழுவினன் என்று அறிகிருேம்

பிறந்தவுயிர் இறக்கும்-ஆகவே என்னைப் பொறுத்தவரை இராமன் நன்மையே செய்துள்ளான் என்றும்...

அறியாமையால் இவன் யாரோ என நினைத்து விடாதே இறைவனே இவ்வடிவு தாங்கி வந்துள்ளான். அவனை வணங்கிப் பிறவிப் பிணி அறுப்பாயாக எனவும்...

உயிர்களின் பக்குவமுணர்ந்து அவைகளுக்கேற்ப நன்மையைச் செய்துவரும் பரம்பொருள் இவனே...

என்றன னினைய வாய
உறுதிகள் யாவும் சொல்லித்
தன்றுணைத் தடக்கை யாரத்
தனையனைத் தழுவி சாலக்

குன்றினும் உயர்ந்த திண் தோள்
குரக்கினத் தரசன் கொற்றப்
பொன்றிணி வயிரப் பைம் பூட்
புரவலன் தன்னை நோக்கி... 150

இப்பாடலினும் 'தடக்கையாரத் தனையனைத் தழுவி' என்றும் கூறுகிறார். அடைக்கலம் ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாக இராமன் உடைவாளை ஏற்றுக்கொள்க என்று கூறியதும் வாலியின் உயிர் பிரிகிறது. இறுதியாக இராம பாணமானது ...

"கையவண் நெகிழ்த லோடுங்
கருங்கணை காலன் வாலி
வெய்ய மார்பகத்துள் தங்காது
உருவி மேக்குயர மீப் போய்த்
துய்ய நீர் கடலுள் தோய்ந்து
தூய்மலர் அமரர் தூவ
ஐயன் வெந் விடாத கொற்றத்
தாவம் வந்தடைந்ததன்றே"—*153.*

அப்பொழுது பிடித்த பிடி தளர்ந்ததனால் கொடிய அம்பு இயமனை ஒத்த வாலியினுடைய வலிமை மிக்க மார்பின் கண் தங்குதலை விட்டு உருவிச்சென்று எழுந்து மிகவும் மேலே போய் தூய நீருடைய பெரும்புறக் கடலுள் மூழ்கி தூயமலர்களைத் தேவர்கள் சொரிய இராமனுடைய முதுகை விட்டு நீங்காத வெற்றியினை உடைய தூணியின் கண் வந்து சேர்ந்தது.

ஆக இப்பாடலில் இருந்து வாலியின் மார்பில் கனிந்த வாழைப்பழத்தின் ஊசி புகுவதுபோல் புகுந்த இராமனுடைய இராம பாணம், இயமனை ஒத்த வலிமை வாய்ந்த வாலியின் மார்பின் கண் குத்தி நின்ற கணையை வாலியின் கை, புறம் போகவிடாமல் பிடித்து இழுத்து நிறுத்தியது என்றும். வாலியின் வலிமை குறைந்த பின் அதாவது உயிர் போனபின் கைபிடி நெகிழ்ந்தது என்றும் அதனால் வாலியின் மார்பை ஊடுருவி புறம் வந்தது என்றும்——

புறம் வந்த 'இராமபாணம்' மேலெழுந்து கடல்நீரில் மூழ்கி எழுந்து அமரர்கள் மலர்சொரிய மீண்டும் இராமன் அப்புறுத் தூணியுள் புகுந்தது எனவும் அறிகிறோம்...

இப்பாடலில் வரும் 'உருவி' என்ற சொல்லைச் சிறிது சிந்தித்துப் பார்க்கற்பாலதாகும்.

உருவி என்றால் முன்புகுந்து பின்புறமாக வெளிவருவது. அதாவது தடுத்து நிறுத்தும் பகுதியைக் கிழித்துக்கொண்டு எதிர்பக்கத்தோடு வெளிவருவது என்பதாகும்

இதே பொருளில் கம்பர் 'உருகி' என்ற சொல்லைப் பெய்திருக்கும் இடங்களுள் சில:

மராமரம் எய்த படலத்தில் 14-ஆம் பாடலில்:

''எழுமா மரமுருவிக்
கீழுலகம் என்றிசைக்கும்
ஏழும் ஊடுபுக்கு உருவிப்பின்
உடனடுத்தியன்ற
எழிலா மையான் மீண்டதவ்
விராகவன் பகழி
ஏழு கண்டபினுருவுமால்
ஒழிவதன் றின்னும்''.

இப்பாடலில் ஏழென்னும் எண்ணுடைய பெரிய அம்மரங்களை ஊடுருவிச் சென்று கீழுலகமென்று சொல்லப்படுகின்ற ஏழின் கண்ணும் ஊடுருவிச்சென்று-மேலும் ஊடுருவிச்செல்ல ஏழு இன்மையால் இராகவன் பகழி இராமனையே வந்தடைந்தது

அதாவது மரத்தின் முன் புகுந்து புறம்வரும் செயலால் கம்பர் 'உருவி' என்ற சொல்லைப் பெய்துள்ளார்.

கும்பகருணன் வதைப் படலம் 334 ஆம் பாடல்:

''அண்ணல் விற்கொடுங்கால் வீசைத்
துரைத்தன வலைகடல் வறளாக
உண்ணசிற்பன உருமையுஞ்கடுவன
மேருவை உருவிப் போய்
விண்ணகத்தையுங் கடப்பன
பிழைப்பில மெய்யூன மேற்சேர்ந்த

கண்ணுதற் பெருங் கடவுடன்
கவசத்தைக் கடந்தலே கதிர் வாளி'

இப்பாடலிலும் 'மேருவை உருவிப்போய் விண்ணகத்தையுங் கடப்பன' என்பதால் மேருமலையையும் ஊடுருவிச்சென்று வானத்திடத்தையும் கடப்பன என்பதால் மேருமலையையும் துளேத்துச் செல்லும் தன்மையை 'உருவி' எற சொல்லால் விளக்குகின்ருர்.

மேலேகூறிய இருபாடல்களிலும் பெய்துள்ள 'உருவி' என்ற சொல்லே இராமனல் மறைவாக நின்று வாலியின் மார்பில் செலுத்தப்பட்ட அப்பகழி மார்பில் புகுந்து வாலியின் முதுகுவழியாக புறம்வந்ததால் அவ்விடத்திலும் 'உருவ்' என்ற சொல்லேப் பெய்துள்ளார்.

வாலிவதைப் படலம் 153 ஆம் பாடலில் வரும் 'கையவண் நெகிழ்தல்'' ''வெய்யமார் பகத்துள் தங்கா துருவி'' என வரும் தொடர்களால் அப்படலத்தில் சிறிது முன்சென்று சில பாடல்களே மீண்டும் திருப்பிப் பார்க்க வேண்டிய நிலே ஏற்பட்டுள்ளது.

வாலி வதைப் படலம் 57 ஆம் பாடலில் மறைவாக இராகவன் நின்று ஏவப்பட்ட பகழி கனிந்த வாழைப்பழத்தில் ஊசி புகுவது போல் வாலியின் வலிமையான மார்பினுள் புகுந்தது என்றும்

59-ஆம் பாடலில் மார்பினுள் கணே புகுந்ததும் சுக்கிரீபனே விட்டுவிட்டு அக்கடுங்கணேயினேக் கையால் பற்றினன் என்றும்...

60 ஆம் பாடலில் கையால் பற்றி இழுத்த பின்னும் அதன் போக்குத் தடைபடாது உள் செல முற்பட்டதால் காலினலும், கையினலும், வாலினலும் பற்றி இழுத்தான் என்றும்.

61 ஆம் பாடலில் தன் வலிமையைவிட இப்பகழி வலிமை வாய்ந்தாக இருப்பதால் இதனே விண்ணுள்ளோரும்,மண்ணுள்ளோரும் விட்டிருக்முடியாது. வேறு யார் விட்டிருக்க முடியும் என ஐயுறுகிறுன் என்றும்...

62 ஆம் பாடலில் இவ்வாறு பற்றி இழுத்தும் அப்பகழி வெளிவராமையினல் வருந்தி மலே உருண்டது போல் பூமியில் விழுந்து உருகுவான் என்றும்...

63, 64ஆகிய பாடல்களில் தேவர்களும் இச்செயல் செய்திருக்கமுடியாது... காரணம் அத்துணை வலிமை அவர்களுக்குக் கிடையாது. பின் ...திருமாலின் சக்கரப்படையோ? அன்றி சிவனின் சூலமோ? அதுவமில்லையேல் ஆறு முகன் வேற்படையோ? அன்றி இந்திரன் வச்சிராயுதமோ? இருக்கவே இருக்காது ... ஏன் என்றால் அவைகளுக்கெல்லாம் என் மார்பை ஊடுருவும் ஆற்றல் கிடையாதே என்றும் ...

65ஆம் பாடலில் இவ்வம்பு வில்லினால் ஏவப்பட்டது அல்ல வாய்மை உடைய முனிவர்கள் ஏவியிருப்பாரோ? என்றும் ஐயுற்று வலிமை எல்லாம் கூட்டி பற்களைக் கடித்து மார்பை உழுக்கினன் என்றும் ...

66 ஆம் பாடலில் வலிமை பொருந்திய தன் மார்பு துளைபடி மாறு கணை செலுத்தியவன் உண்மையிலே சிறந்தவனாகத்தான் இருக்கவேண்டும் என்று எண்ணுகிறான்...

67 ஆம் பாடலில் மீண்டும் 'முயல்கிறான்; கையாலும், காலாலும், வாலாலும் உறுதியாகப் பற்றுகிறான் மார்பில் இருந்து வெளியே எடுக்கிறான்..

இப்பாடலில் 'வேற்றுப் பொருள் வைப்பணி' அமைத்துப்பாடி பகைவனையும் பாராட்ட வைத்துள்ள திறம் நினைந்து நினைந்து இறும்பூதடையலாமல்லவா?

68,69 ஆம் பாடல்களில் மார்பில் இருந்துஅப்பகழியைவெளியே எடுத்தமையால் அம்பு தைத்த இடத்தில் இருந்து குருதியானது பெருக்கெடுத்தது. எப்படி...

பெருகிய சென்னீர் அலைசுருளுகின்ற கடலைப்போல ஆரவாரித்து யுகமுடிவில் உலகைச் சூழும் வெள்ளம்போல் மூடி, காடுமலை ஆகியவைகளைத் தாண்டிக் கடலைச் சென்றடைந்தது என்றும், இதனைப் பார்த்து சுக்கிரீபன் மயங்கி நிலம் சாய்ந்தான் என்றும் கூறுகிறார்.

இங்கு ஒன்று நினைவில் கொள்ளவேண்டும். கணையை வெளியெடுக்காமல் தைத்திட்ட இடத்தில் கையினாலும், காலினாலும், வாலினாலும் அசைக்கத்தான் முடிந்தது எனறால் அவ்விடத்தில் சென்னீர் கசிவுதான் ஏற்பட்டிருக்குமேயன்றி யுக முடிவில் ஏற்படும் நீர் பிரளயம் போல் சென்னீர் பெருக்கெடுத்து ஓடியிருக்க இடமில்லை...

(தொடரும்)

# தமிழ்-நாடகத் தந்தை
# சங்கரதாசு சுவாமிகள்

திரு. செஞ்சொற் பாவலர் ப. சங்கரலிங்கம்

முத்தமிழ் வாழ்ந்தநாட்டில் முத்தமிழ் வளர்ப்பதற்கே
முத்தமிழ்ப் புலமைமிக்க முத்தெனப் பிறந்தவர்தான்
சங்கர தாசரெனும் செந்தமிழ்ச் செம்மலாவர்!
பங்கமே சிறிதுமில்லாத் தங்கந்தான் அடிகளாரே!
ஐம்பதே ஆண்டுகளாய் நைந்ததோர் நாடகத்தைப்
பைம்பொனாய்க் காத்தவர்தான் பகலவனாய் வாழ்ந்தவர்தான்
சங்கர தாசரெனும்! மங்காத கலைநிலவு!
அங்கமெலாம் கலைத்துறைக்கே அர்ப்பணித்த மாமேதை!
நிலமென வளஞ்செய்யும் நிலாவென உலாவரும்
பழமென இனிக்கின்ற பத்திபோல் மணக்கின்ற
பதினெட்டு நாடகத்தைப் பைந்தமிழைப் பிழிந்தெடுத்தே
அதிசயிக்கப் படைத்திட்டார்! ஆயிரம் சுவைகூட்டி!
ஆங்கிலத்தில் பேசுவதும் அருந்தெலுங்கில் பாடுவதும்
ஈங்குள்ளோர் பெருமையென எண்ணியதோர் காலத்தில்
நாடகத்தால் நந்தமிழை நாட்டகத்தே பாய்ச்சியவர்
பாடலால் நாளெல்லாம் பக்திரசம் பரப்பியவர்!
நவரசக் கலைவளர்த்து நம்தாயைப் பேணியவர்!
தவத்திரு அடிகளாவர்! தமிழ்த்தாயின் தலைமகனே!
தென்பாண்டி நாட்டினிலே தீரமறக் குடியினிலே
கண்போன்ற அடிகளாரைக் கவின்மிக்க தாமோதர
நன்மகன் ஈன்றுதந்தார்! நலஞ்சேர்த்தார் தமிழ்மண்ணில்
தண்டபாணி சாமியிடம் தமிழ்கற்று நம்சாமி
வெண்பாவும் கலிப்பாவும் விரைந்துதான் பாப்பாடி
பதினாறாம் வயதினிலே பதிநாற வைத்துவிட்டுக்
கதியேதான் தமிழென்று கால்வைத்தார் நாடகத்தில்!
இரணியன் எமதர்மன் இராவணன் சனிஈசன்
திறத்தினை வெளிகாட்டித் திகைக்கவைக்கும் நடிகனாய்
அடிவைத்து நடைநடந்தார்! அதிசயத்தார் மக்களெல்லாம்!
படிமீதில் வெறுப்புற்று பக்திகடல் குளித்திட்டு
ஐம்பொன் முருகனின் அழகினிலே ஈடுபட்டு

ஐம்பது ரூபாயுடன் ஆண்டியாய் ஆகிவிட்டார்!
பையவே சென்றிட்டார்! பதிதோறும் வலம்வந்தார்!
பொய்யற்ற கோலங்கண்டு போற்றினர் சாமியென்றே!
புதுக்கோட்டைப் புகழ்மன்னர் பூண்டியா பிள்ளையவர்
மதிவல்ல சாமியின் மாசற்ற திறம்வியந்து
வண்ணமும் சந்தமும் வந்துநிற்கும்! சிந்துபாடி!
அண்ணல்தன் அருளறிந்தே ஆதரித்தார் மகவாக்கி
தமிழ்நாட்டின் தவப்பயனாய் தவத்திரு அடிகளாரே
தமிழ்வளர்க்க கலைவளர்க்க தமிழ்நாடு தழைத்தோங்க
கயலெனவே நாடக வயலுளே கால்வைத்தார்!
மயிலெனவே கைவண்ணம் மயங்கிடவே காட்டிவிட்டார்!
புகழ்மிக்க நடிகரினைப் போற்றிடவே ஈன்றெடுத்தார்!
இகலற்றுக் கலைவளர்த்தார்! இலக்கணம் தனைப்படைத்தார்
சன்மார்க்க சபையினையே சொந்தமாய்த் துவங்கிநல்ல
பண்பல்ல கிட்டப்பா மாரியப்பா தமைத்தந்தார்!
நாடக நடிகரிடம் மலிந்திருந்த பிழைகண்டு
ஆடகப் பொன்னாக ஆக்கிடவே சிறுவர்கூட்டி
பாலமீன ரஞ்சினி சபைநாட்டி புகழ்மீட்டி
நாளெலாம் மின்னிடும் நடிகரினை முன்வைத்தார்
பக்கவாத நோய்தானே பாழ்படுத்த சாமியினைப்
பக்கத்தில் அமர்ந்திருந்து பாராட்டி இயக்கிவிப்பார்!
நோயாலும் நொடியாலும் நலிந்திருந்த காலத்தும்
தாயாகி கலைத்துறையைத் தலைநிமிர நடத்திவந்தார்!
வாய்பேசாக் காலத்தும் வண்ணக்கை முன்நீட்டிச்
சாய்ந்திருந்த கலையினையே சதிராடச் செய்துவிட்டார்!
புதியதோர் கதையமைப்பு! பூப்போன்ற கருத்துக்கள்!
கதிர்போன்ற கற்பனைகள்! கலைமணக்கும் உரையாடல்!
எதுகையினை மோனையினை இவர்நாடிச் செல்வதில்லை!
பதுகைநல் மகள்போல வந்துமுன்னே நின்றிருக்கும்!
இனிக்கின்ற பாடல்கள்! எளிமைமிகு சொல்லோட்டம்!
அணிசெயும் காட்சிகள்! அழகுசேர்த்தே இயக்குவித்தல்
இத்தனையும் முத்தாக்கி எடுத்திடுவார் முத்தாரம்!
புத்தமுது போல்படைப்பார்! பொதுமக்கள் ஈயாவர்!
ஓர்இரவில் நாடகத்தை ஒப்பில்லா முறையினிலே
பேராளன் படைத்திடுவான்! பெருமையினால் தாய்நிமிர்வாள்!
சண்முகம் பிள்ளையெனும் சந்தப்பா வல்லோரின்
கண்டிராசா நாடகத்தைக் கண்டிட்டுப் பாராட்டி

வறுமையிலே நெளிகின்ற வண்டமிழ்ப் புலவருக்கே
ஒருநூறு தந்திட்டார்! உயர்உளமோ கடலாகும்!
சுந்தரர் பவனிவந்தார்! செந்தமிழ்ப் புலவரெல்லாம்
பந்தியே வைத்தார்கள்! பாடுக சாமியென்றார்!
ஆண்டசக் கரவர்த்தி அழகான சந்தப்பா
நீண்டதோர் பாவினையே நெடுநேரம் பாடிவிட்டார்!
ஆண்டுதான் வந்திட்டபின் ஆண்டவனே! அதுகண்டு
தேன்பாட்டை நிறுத்தினார்! தீந்தமிழ்ச் சாமிகளே
"சேதுபதிச் சீமானைச் செந்தமிழால் பாடிடுக!
மாதேவர் போற்றிடுக! மிகுபொருளே பெற்றிடுக"
என்றிட்டார் பற்பலரே! இம்மண்ணில் மனிதரினை
என்றுமே பாடாத இணையில்லா அடிகளாரே
மறுத்திட்டார்! "மன்னவனைப் பாடிடினோ என்புலமை
புரியுமோ! மண்ணாளிற்கு! மன்னவனோ என்னைவிட
எத்துறையில் உயர்ந்தவன்! எதுக்குநான் பாடவேண்டும்
வித்தகன்யான் மறவனே! வேந்தனும் மறவனென்பர்"
அடிகளார் பாடலினை அழகாக அச்சியற்றி
படித்திட வெளியிடவே பலர்வந்தார் பறவையாக!
இலவசமாய்த் தருவதாயின் என்பாட்டை வெளியிடுக!
நலம்பெறவோ வளம்பெறவோ நற்றமிழை விலைபகர
என்றுமேயான் சம்மதியேன்! இதுஉறுதி! முழுஉண்மை!
என்றுதான் மறுத்துவிட்டார்! ஏற்றமிகு சாமிகளே!

● பல்லா யிரமாகப் பண்டைத் தமிழ்ச் சுவடி
எல்லா விடத்தும் இயன்றவற்றை—பல்லோரைத்
தூண்டித் தொகுத்தான் துணிமறத் தொல்குடிப்
பாண்டித் துரைத்தேவன் பார்.

● சென்னை யரசியலார் செந்தமிழ்ச் சொல்லையெல்லாம்
முன்னும் அகர முதலியெனத்—துன்னுவிக்க
வேண்டி யமைத்த வியவர் குழுவுறுப்புப்
பாண்டித் துரைத்வேன் பங்கு.

# தனிமொழி-குடிலன்

திருமிகு, பூ. சொல்விளங்கும்பெருமாள்

[தொகுதி—70 பகுதி-1ன் தொடர்ச்சி]

எண்ணிக்கையும் அவற்றின் நீளத்தையும் குறைத்திருந்தால் நாடகச்சுவை கூடியிருக்கும். குடும்பத்தில் குழந்தைகள் பெருகினுல் தாய் தந்தையரின் நலன் பாதிக்கப்படுவது போல் தனிமொழிக் கூட்டம் மனேன்மணிய நாடகத்தைப் பாதித்துள்ளது.

7.0. குடிலன்: தனி மொழிகளில்தான் குடிலன் குடிலனுகக்காட்சி தருகிருன். மற்றய வேளைகளில் அமைச்சனுய்; தொண்டு பூண்டொழுகும் அடிமையாய்த்தான் சீவகனிடம் நடந்துகொள்கிருன். குடிலன் குடிலனுகஇல்லை '- Iam not what I am' எனும்இயாகோவைப் போல் குடிலன் அரசனை சிறிதும் மதிக்கவில்லை என்பதனை அவனது எண்ண ஓட்டம் தெரிவிக்கிறது. 'எத்தனை பித்தனிவ் வரசன்' என்றும்' 'எடுப்பார் கைப்பிள்ளை' என்றும் 'அரசன் போல் இலை பேயர்' என்றும் அவன் கூறுவதிலிருந்து அவனது கருத்தை அறிகிறோம். ஆனுல் தனிமொழி தவிர்த்த பிறமொழிகளில் அவன் வாய் அரசனைப் புகழ்வதைப் போன்று வேறுயார் புகழ்ந்தார்.

7.1. 'புத்தியே சகல சக்தியும்' என்று உறுதியாக நம்பும் குடிலன்". மதுரையாம் மதுநகர் விடுத்தம் மன்னனைப், புதியதோர் பதிக்குக் கொணர்ந்த'' நோக்கத்தையும்அவனது'இட்டமாம்வகையில்'புரிசை கட்டுவித்ததையும் முதல் அங்கம் ஐந்தாம் களத்தனிமொழியில் கூறுகிருன்''. நாமே யரசும் நாமே யாவும்'' என்பதே அவனது ஆசை. மனேன்மனியைப் பலதேவனுக்கு மண முடிக்க வேண்டும்; மன்னன் முடியைத்தான் சூட வேண்டும் எனும் வஞ்சக எண்ணங்களைச் செயற்படுத்தவே, வேண்டுவன செய்யத்துணிகின்ருன். தன் மகன் மீது சிறிதும் நல்லெண்ணம் இல்லாத குடிலன் அவனை எட்டிக்கு உவமித்துக் கூறுவது நியாயமே. அருகுளதுஎட்டியேயாயினும் முல்லைப், படர்கொடிபடரும்'' எனும் குடிலனின் மன ஓட்டம் அவனது முதற்சூழ்ச்சியை வலுப்படுத்துகிறது. மனேன்மணியைப் பலதேவனுக்குத் திருமணம் முடிப்பது எனும் எண்ணங்கூட தன் மக

னுக்கு உயர்வு வரும் என்ற எண்ணத்தால் எழுந்தது அன்று; தனது அரசாட்சி ஆசைக்கு அது ஏற்றது எனும் எண்ண எழுச்சியால் ஏற்பட்டதென்றே கூற வேண்டும்.

7.2. மனோன்மணியைத் தன் பதவிக்கு மகன் மூலம் உதவியாக்க எண்ணியவன் அதற்கடுத்த தடை அரசனேயன்றோ என எண்ணி அதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டாமோ என சிந்திக்கிறான். "அரசர்க் காயுள் அற்பமென் றறைவர்" என்கிறான். அரசன் இறந்தால் மனோன்மணிக்கு அரசு வரும்; அவளைத் தன் கோழை மகனுக்குத் திருமணம் செய்து விட்டால் அவன் பெயரில் தான் அரசனாகலாம். மேலும் மனோன்மணி இவன் பக்கம் இருப்பதால் மக்கள் யாரும் குழப்பத்திலும் இறங்கார். ஆகவே நிரம்ப சிந்தித்துச் சிறிது பேசுகிறான்.

"மாறன் மாண்டான் மன்றலும் போனது" "மாண்டான்" "போனது" எனும் இறந்த கால வினைமுற்றுக்களைநோக்கும் போதுமனத்தளவில் குடிலனின் திட்டப்படி இவையிரண்டும் நடந்து முடிந்து விட்டன. இந்த எதிர்காலத் திட்டங்கள், நடத்தி முடிக்க வேண்டியவை, இத் தனி மொழியால் வெளிப்படுகின்றன.

1) மன்றல் போவதற்கு வழி? "நாமவன் பால்விடும்" தூதுவர் நலம் போல் மெள்ள அவன்றன் செருக்கினைக் கிள்ளிவிட வேண்டும்.

2) அரசன் சாவதற்கு வழி?

"போர் வந்திடி லிவண் நேர்வந் திடுமெலாம்
யார் இறவார்கள்? யார் அறிவார்கள்"

3) மன்றலும் போய் மாறனும் மாண்டானயின்?

"முடிதன் அடிவிழில் யாரெடுத் தணியார்?" என்று தர்க்க முறைப்படி, தான் மன்னனுவதற்குப் போடும் திட்டங்களை எல்லாம் வருணிக்கின்றான் - அதன் வழி நடக்கின்றான். தனி மொழி வாயிலாகவே இத்திட்டங்களை அறிகிறோம்.

7.3. மனிதர்களின் இயல்பையும் மக்களிடையே உலவி வரும் தர்மம், தானம் போன்றவற்றின் தவறான எண்ணமும் அங்ஙனம் தர்ம தானம் புரிவோரின் உள்நோக்கங்களையும் குடிலனின் தனிமொழிகள் காட்டுகின்றன. கோணல் கண்ணாடியில் தோன்றும் உருவமும் கோணலாகவே தெரிதல் போன்று குடிலனின் கோணல் மனதிலும் சிந்தனைகள் நெளிகின்றன.

"தீது நன்றென ஓதுவவெல்லாம்
அறியார்க் கறையும் வெறுமொழியலவோ?" என்றும்

"புண்ணியம் சீவகா ருண்ணிய மெனப்பல
பிதற்றுதல் முற்றும் பித்தே" என்றும் குடிலன் கூறுவதிலிருந்து உலகில் எவருமே உத்தமராக இருக்க முடியாதது போன்றன்றே தோன்றுகிறது. உண்மையதுவன்று; வண்ணக் கண்ணுடி போட்டு நோக்குவாருக்குப் பொருளின் நிறமும் அவ்வாறே போலியாய்த் தோன்றல் போல் உள்ளம் கோணிய குடிலனின் கணிகளுக்கு உலகத்துப் புண்ணிய, நன்மை, தீமைகளும் தன்னல நோக்கமுடையனவாகவே தெரிகின்றன.

7.4 சூழ்ச்சியும் வஞ்சமும் உடையோர் மற்றையோர் பேச்சிலும் அவற்றையே காண்பார் எனும் உண்மை குடிலனின் மொழிகளில் காண்கிறோம் 'நின்மனம் நினைத்தவை யனைத்தும் நிகழுக' என்று ஒரு சேவகன் பொதுவாகக் கூறிச் சென்ற மொழிக்கு, கைரேகை பார்ப்போன் சாதாரணக் கோடுகளுக்கும் ஆயிரம் குறி சொல்லும் வதைப்போல குடிலன் எத்தனையோ காரணம் கற்பிக்கிறுன். இவ்விடத்திலுள்ள குடிலனின் தனிமொழி அவனது இயல்பினை அவனே அறிந்துள்ளான் என்பதனை உணர்த்துகிறது "குற்றம் உள்ளோர் கோழையர் என்பதும் சற்றும் பொய்யல சான்று நம்மிடத்தே, கண்டனம்". இத்தனி மொழி இன்னெருவகையிலும் முக்கியத்துவம் வாய்ந்தது.

8.0 குடிலனின் தீய நெஞ்சிற்குள்ளும் தூய ஒளி ஒன்று தோன்றி மறைகிறது. முற்றும் தீயரும் முற்றும் நல்லரும் அறவே இல்லை என்பதும் ஓரளவு புலனுகிறது.

"வஞ்சனையாற் பெறும் வாழ்வீ தென்னே" என்றும்
"பிறர் பொருள் வெளவும் பேதையிற் பேதை
எறிகடல் உலகில் இலையிலை" என்றும் குடிலனும் எண்ணுகிறுன் பிறரிடம் பேசினுல் அவனியல்பென விடுக்கலாம். தனிமொழியில் வருவதால் சிறப்பாகச் சிந்திக்கத் தூண்டுகிறது. கற்பாறையில் நீர் சுரப்பது போல் அல்ல—மண்டும் இருளில் மின்னல் போல்—ஆம் மின்னல் போல்தான்—தோன்றியதும் மறைந்து விடுகிறது. ஒரு கணம் அவனையும் அறியாமல் அவன் உள்ளம் பேசியது; மறுகணம் "நில், நில்! நீதியை நினைத்தோ நின்றேன் "என்று மீண்டும்

வஞ்சக இருளில் புகுந்து கொள்கிருன். ஆயினும் ஒரு கணம் தோன்றி மறைந்த நல்லெண்ண மின்னல் வீச்சால் குடிலனை எடை போடுவது கடினமாகவே உள்ளது. மற்ருெரு இடத்திலும் குடில னின் தனிமொழி இக்கோணத்தில் செல்கிறது. போர் நிகழப்போகும் காலையில்,

"ஒருவன் தாசைப் பெருக்கால் உலகில்
வருதுயர் கடலிற் பெரிதே" என்று தொடங்கி அவனது எண்ணம், இறக்கும் வீரருக்காக இரங்குகிறது. மறுகணம்,

என்னை என்மதி இங்ஙனம் அடிக்கடி
என்னையும் எடுத்தெறிந் தேகுதல் சீச்சீ" என்று இரக்கத் தின் பக்கம் சாய்ந்த தன் இதயத்தை இறுக்கிப் பிடித்துக் கொள்கி ருன். வீரர்கள் தேவையின்றி இறப்பது தனக்காகவே என்பதை யும், அவனது ஆசையின் கொடுமையையும் உணர்கிருன். அவன் இருண்ட உள்ளத்தில் இவ்வாறு இடையிடையே தோன்றி மறை யும் மின்னல் அவனை உலுக்கிவிடுகிறது. பின் தன் எண்ணத்திற்கு அவனே காரணம் கண்டு பிடிக்கிருன், உழவர், நெசவாளர், பல் லக்குத் தாங்குவோர் துயர்பட்டால் தான் மற்றையோர் வாழமுடியும்

"பல பெயர் துக்கப்பட்டால் அன்றி
உலகில் எவரே ஒரு சுகம் அணைவார்?"என்றுகூறி,ஆகவே "இரங் கல் என் பயன்? என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொள் கிருன். ஆக, பட்டத்திற்கும் பதவிக்கும் ஆசைப் பட்டான் என்பது உண்மையாயினும் அது தவறு, கொடுமை. பாவம் என்பதனையும் உணர்ந்தே செய்கிருன்- ஆகவே அவனது கொடுமை பன்மடங்கு அதிகமாகி எவருக்கும் அவன்மீது கண்ணேட்டம் வராது செய்து விடுகிறது. 9.0. சீவகனது ஆன்மீக வாழ்விற்கும் அகச் செம்மைக் கும் அரண்போல் அமைந்து நின்று காப்பவர் சுந்தரமுனிவர்; அவ னது புறவாழ்வைப்போற்றி உயிர்காக்கும்கேடயமாகவிளங்குபவன் நாராயணன். இவ்விருவருமே குடிலனது முதல் எதிரிகளாவர் 'முனி வரும் வர வர மதியிழந்தனரே' என மன்னன் கூறும் அளவிற்கு கொண்டு வந்து ஒரு கவசத்தைப் பறித்தான்; முதல் போர் தோல் விக்குக் காரணம் நாரணனே எனக்கூறி அரசனின் மற்ருெரு கவசத் தையும் நீக்கிவிட முயன்ருன். ஆயினும் முனிவரும், வீரனும் அழிம் பனைத் தெரிந்துகொண்ட அளவிற்குப் பின்னவன் முன்னவரைத் தெரிந்துகொள்ளவில்லை; ஆகவே அழிக்க நினைந்தவன் அழிந்தான்.

"தப்பினுய் இருமுறை தப்பிலி நாரணன்

கெடுத்தான் பலவிதம்"

என்றும் 'கெடுத்தான் இங்கும்', என்றும் குடிலன் தனதுள் பேசுவ தொன்றே நாரணன் பலமுறை குடிலனது சூழ்ச்சி நிறைவேருது கெடுத்துளான் என்பதனை விளக்கும். ஆகவேதான் மற்ருெரு தனி மொழியில், "எதுவுமிந் நாரண னிருக்கில் அபாயம்" எனச் சூழ்ந்து "வேரறக் களைகுதும்" என மன வைரம் பூண்டு, சீவகன் வாயால் நாராயணனை, "செய்குவன் இப்போ தேசிரச் சேதம்" எனக் கூற வைக்கின்ருன்.

9.1. தனது சூழ்ச்சிகளும் எண்ணங்களும் ஈடேருமல் போயி னும் அவன் தோல்வியைக் கண்டு துவண்டிடவில்லை "இதுவரை நினைத்தவை எல்லாம் போயின புதுவழி இருதுவம்; போயின போகுக" என்றே துணிகின்ருன். பலதேவனுக்கும் மனேன்மணிக் கும் திருமணம் நடந்தால் நன்றென்றன்ருே இத்தனை சூழ்ச்சியும் செய்தான். ஆனுல் பாசறை வெளியில அவனது தனி மொழியில், திருமணம் கெடினும் தீங்கில்லை ஈங்கினி" என்கிருர்". வதுவை போயினென் ஆயினென்; பேயன் நம்மகன்" என்று திருமணம் நிக முப் போகும் அந்த நேரத்தில் அக்கரையின்றி இருக்கின்ருன். எந் தத் திருமணத்திற்காக முதலிலிருந்தே திட்டமிட்டு வந்தானே அது நிறைவேறவிருக்கும் இறுதி வேளையில் தன் நோக்கத்தை வேறுபக் கம் திருப்பிக் கொள்கிருன்.

9.2. "ஊக்கமே பாக்கியம்", "புத்தியே சகல சத்தியும்" என றெல்லாம் தனது மனவலிமையில் அளவு கடந்த நம்பிக்கை கொண்டு, "ஊழ் எனப் பகர்வதெல்லாம் பாழ்" என்று நாத்திக வாதம் பேசுவான் போல் திமிருடன் செருக்கி இருக்கிருன். இந்த அளவற்ற தன்னம்பிக்கையே ஊழாகி அவனை வீழ்த்திவிடுகிறது.

9. 3. ஒரு நாட்டின 'தாரும் நீரும்' அந்நாட்டின் மானம் என்று மதியாத குடிலன், புருடோத்தமன் அவன் வெற்றியின் சின்னமாகச் சீவகனிடம், "வேண்டிய நீரும்" விழைந்ததோர் தாரும்

பாண்டில் பாண்டிலா யாண்டுகள் தோறும்'' அனுப்புவதில் தவ றென்ன எனத் தனக்குள் கேட்டுக் கொள்கிருன். பதவி ஆசை நாட்டுப் பற்றையும் மான மதிப்பையும் இழக்கச் செய்து விடுகிறது. மன்னவன் என்றபேர் ஒன்று'' தந்து விட்டால் நாட்டின் மானத் தைத் தாரொடு நீராய்ப் பிறருக்குத் தாரை வார்த்திடுவான்.

*10.0.* முடிவுரை: குடிலனது தனிமொழிகளில் இருந்து அவனது உள்ள ஓட்டம் தெளிவாகச் செல்கிறது என்றும், தான் அரசனுவ தற்குரிய வழிவகைகளை ஆய்ந்து இடையூறுகளைத் திட்டமிட்டுத் தகர்க்க முயல்கிருன் என்பதும், அக்கொடிய உள்ளத்திலும் நன் மை தோன்றி மின்னலாய் மறைகிறது என்பதும், மற்றையோரை மதியா அளவற்ற தன்னம்பிக்கைக் கொண்டவன் என்பதும், நோக் கங்களை உடனுக்குடன் மாற்றிதன்னைத்தானே ஏமாற்றிக் கொள் கிருன் என்றும், பிள்ளைப் பாசமோ நாட்டுப் பற்றோ மான உணர் வோ சிறிதும் அற்றவன் என்பதும் அறிகிறோம்,

**10.1.** குடிலனது தனிமொழிகள் மட்டும் இந்நாடகத்தில் அமையா விடில் அவனது மற்றைய பேச்சுக்களை ஆராய்வாருக்குக் குடிலனை விடச் சிறந்தாரில்லை எனத்தோன்றும். குடிலனைக் குடிலனு கக் காட்டுவது அவனது தனி மொழிகளே.

---

- நன்னூல் பலவற்றின் நன்மணிப் பாத்தொகுத்த
  பன்னூற் றிரண்டென்னும் பண்டாரம்—என்னேரும்
  வேண்டிற் றெளிதாய் விரைந்து கூட்டுண்ண வைத்தான்
  பாண்டித் துரைத்தேவர் பார்த்து''

- கோவை யுலாமாலை கூறுங் கலம்பகமே
  பாவின் தொகையாம் பனுவல்கள்—மேவு தொன்மை
  ஈறு தொடங்கி யெளிய விலைப்பதிப்பான்
  தேறுபாண் டித்துரைத்தே வன்.

- செந்தமிழ் என்னும் சிறந்தமிழ் மாதிகைதான்
  உந்தி மணிபொன் னுகுமருவி—நந்தவுரை
  மாண்ட அறிவாய்வு மல்கிவெளி வந்ததுவும்
  பாண்டித் துரைத் தேவன் பாடு.

# தவமிருந்த தண்டமிழ்மறவர்

டாக்டர் மெ சுந்தரம்
எம். ஏ., எம். லிட்., பி எச். டி.,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் &
தமிழ்த்துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை-5

## நக்கீரர்:

இருபதாம் நூற்றாண்டு நக்கீரராக இலங்கிய பெருமகனார் டாக்டர் இலக்குவனார் ஆவார்கள். கொண்ட கொள்கைக்காகக் கோலேந்தியவர்களின் சீற்றத்தையும் பொருட்படுத்தாமல் கொடுஞ் சிறை புகுந்த கோமகன் ஆவர். அடையாத இன்னல் பல அடைந் தாலும். உடையாத உள்ளத்தோடு இறுதி வரை வாழ்ந்து வெற்றி கண்ட கொற்றவன் அவர்.

## பெருமிதம்:

சங்ககாலப்புலவர்களுக்கு இருந்தபெருமிதஉணர்ச்சி, பேராசிரியர் இலக்குவனார் அவர்களிடம் இயல்பாகவே அமைந்து சிறந்தது. இது அவரிடம் வாழ்வில் தென்றலையும், புயலையும் மாறி மாறி அளித்தது. என்றாலும் அவர் அவற்றிற் கெல்லாம் கவலைப் படாமல், மாறாத வாழ்வுடையோராக இறுதி வரை இருந்தார்.

## தவமிருந்த தமிழ்:

தண்டமிழ்ப் பூஞ் சோலையில் இந்தி எனும் மந்தி புகுந்து, சோலையினை அழித்து, மலர்களைச் சிதைக்க முற்பட்ட நேரத்தில், சோலைக் குச் சொந்தக்காரர் என்னும் முறையில், மந்தியை விரட்டி அடிக்க மார்தட்டி முன் வந்த மறவர் இலக்குவனார். அந்தப் போரில் புற முதுகிடாமல், விழுப்புண் யெய்திய வீரர் அமரர் இலக்குவனார்.

இந்தித் திணிப்பை எதிர்த்து, மொழி அறப்போர் தொடங்கியது. அம்மொழி அறப்போரில் முன் வைத்த காலைப் பின் வைக்காமல், வேல்கொண்டெறிந்தநேரத்திலும்விழித்தகண் இமைக்காமல்பாசறை அமைத்து, படை வீடுகண்டு அவை கண்டு வெற்றி கொண்ட கன்னித் தமிழ்க் காவலர் பேராசிரியர் இலக்குவனார் அவர்கள்.

### வேலூர்ச் சிறை:

வேலூர்ச் சிறையில் இவ் வீரத் திருமகன் அடைக்கப்பட்டார். ஏன்? தமிழுக்குத் தொண்டு புரிந்த குற்றத்திற்காக. முத்தமிழுக்குத் தொண்டு புரிந்தது குற்றம் என்ருல், முக்காலும் இத் தரணியில் அக் குற்றத்தைப் புரிந்து கொண்டுதான் இருப்பேன் என முழங்கிக் கொண்டே சிறை புகுந்தார் செந்தமிழ் மறவர். அங்கு சிறைக் கோட்டத்தை தச் செந்தமிழ்க் கோட்டம் ஆக்கினர்.

### முரசொலியில் ஓவியம்:

தண்டமிழாசான் — தமிழ் மொழித் தானைத் தலைவன் இலக்குவ ணர் வெஞ் சிறையில் தள்ளப்பட்ட கொடுஞ் செய்தி கண்டு கொந் தளித்து எழுந்த முரசொலி 'தமிழன்னை சிறை வைக்கப்பட்டாள்'' என்ற தலைப்பில் பேராசிரியர் இலக்குவனர் சிறைக்குள் அடைக்கப் பட்டிருப்பதாக ஓர் ஓவியம்தீட்டியிருந்தது. 'தமிழ் சிறைக்குள் தவமி ருக்கிறது' என்று தலையங்கம் எழுதியது இதனுல் முரசொலியின் மீது பாதுகாப்புச் சட்டம் படையெடுத்தது.

### பாதுகாப்புச் சட்டம்

தொண்டாற்றுவோர் அத்துணைபேர் மீதும் பாதுகாப்புச் சட்டம் படையெடுத்தது. அப்படையெடுப்புக் கண்டு பைந்தமிழ் உள்ளங் கள் எள்ளி நகையாடின,

### கலைஞரின் குமுறல்:

இது பதவிப் பாதுகாப்புச் சட்டம். இந்தி அரக்கிக்கு நடைபாவாடை விரித்துஅம் 'மொழி'யாம் பழிக்குப்பாதுகாப்பளிக் கும் சட்டம். இலக்குவனர் என்ன குற்றம் செய்தார்? பாதுகாப்புச் சட்டத்தின் பார்வைக்கு இலக்காக? வேல் கொண்டு எறிந்தாரா? வாள் கொண்டு அழித்தாரா? ஈட்டியால் தாக்கினுரா? விற்போர் புரிந் தாரா? அம்பு எய்தாரா? என்ன குற்றம் செய்தார்? எதற்காகப் பாது காப்புச்சட்டம் ஏவப்பட்டது? மொழித் தொண்டு செய்தது குற்றமா? முத்தமிழுக்குத் தொண்டு புரிந்தது குற்றம் என்ருல் அக் குற்றத்தை நாங்கள் எங்கள் இறுதிச் சொட்டு இரத்தம் இருக்கும் வரை, இறுதி மூச்சு விடும் செய்து கொண்டுதான் இருப்போம். தண்டமிழ்ப் புல்லர்களே! தரணி பொறுக்குமோ இத்தவற்றினை? பேராசிரியப் பெருமக்களே! உங்க

எில் ஒருவர் இன்று வெஞ்சிறைக் கோட்டம்புகுந்தார். 'மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை, எம்மை மாட்ட நினைக்கும் சிறைச் சாலை என்ற சிந்துபாடி அச் செந்தமிழ்ப் புலவன் சென்று விட்டார். பைந் தமிழ் வாழப் பாதை வகுத்துச் சென்று விட்டார் அவர். ஆற்றுப் படை பாடிய அருந்தமிழ்ப் புலவர் பெருமக்களே இந்தியைத் தவிர வேற்றுப் படை அறியாமாற்றுப் படையறியா மண்ணில் பிறந்த மறக்குடிப் பெருமக்களே அருந்தமிழ்ப் புலவன் சிறை புகுந்தான். அன்னை கண்ணீர் துடைக்க அன்னையின் துயர் களைவதால் ஆன்றோ ரே! சான்றோரே! உங்கள் பங்கென்ன? அன்னை குரல் கொடுக்கிறாள். முதல் களபலி முத்தமிழ்ப் புலவன் ஆயிற்று. பரணி பாடியோரே! உங்கள் பங்கென்ன? தரணியை நாம் ஆளவேண்டாமா? மாற்றார் மண் இது ஆவதா? மறக்குல மக்காள் மறு மொழி என்ன? என்று பேராசிரியர் இலக்குவனார் அவர்கள் சிறை புகுந்த மறுநாள், மதுரை யில் சந்தைப் பேட்டையில் நடந்த பொதுக் கூட்டத்தில் உணர்ச்சி பொங்க, உருக்கத்துடன், கூடியிருந்த இலட்சக்கணக்கானோர் விழி கள் குளமாகும்படிவீர உரையாற்றினார்.

## ஆசான் மாணவர்:

ஏன் தமிழவேள் கலைஞர் அங்ஙனம் வீர உரையாற்றினார்? வெங் கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள் என்று ஏன் போர்ப் பரணி பாடினார்? அப்போர்ப் பரணி யின் இலக்கியமாக ஏன் திகழ்ந்தார்? அவர் அறிவார்–தமிழ் அருமை அவர் அறிவார் தமிழாசான் அருமை. பேராசிரியர் இலக்குவனார் தமி ழவேள் கலைஞர் அவர்களின் தமிழாசிரியர், திருவாரூர் உயர் நிலைப் பள்ளியில் இலக்குவனார் ஊட்டிய மொழி உணர்ச்சி கலைஞரை கன்னித்தமிழவேள் ஆக்கியது. தண்டமிழ் மறவராக தமிழகத்தில் உலாவச் செய்தது. அவர் தமிழாசானுக்கு உற்ற துயரைத் தனக் குற்ற துயராக எண்ணி வருந்தினார். தமிழ்த் தொண்டே தலைத் தொண்டாகக் கருதும் தமிழவேள் கலைஞர். அதனால் தான் தமிழ் காக்கத் தண்டவாளத்தில் தலை வைத்து படுத்து தமிழ் காக்கத் தலைக் கொடுத்தான்' என்றவிருது பெற்று தலையெழு வள்ளலில் தலைமையான வள்ளலாய் இன்று விளங்குகிறார்.

## கால்நடைச் செலவு:

கல்வி நிலையங்கள் அனைத்திலும் தமிழே தனி பயிற்று மொழி யாக வேண்டும். வேற்று மொழி பயிற்று மொழி என்பது தமிழ் மண்

ணில் வேறூன்ற முடியாத கொள்கை. ஆதலால் தமிழ் பயிற்று மொழி திட்டத்தினை சிற்றூரும், பேரூரும் அறிந்து செயல்படக் கால் நடையாகவே அனைத்து இடங்களுக்கும் சென்று கொள்கை விளக்கம் செய்ய வேண்டும் என்ற சீரிய குறிக்கோளினை மேற் கொண்டு வழி நடைப் பயணம் மேற் கொள்ளத் தலைப்பட்டார். ஆனால் சூழ் நிலையும் மக்கள் உணர்ச்சி நிலையும் ஒத்து வராததால் அதனை கை வீடும்படி ஆயிற்று. வழி நடைச் செலவினைக் கைவிட்டாரே அக் குறிக்கோள் அம்மொழி உரவோன் உள்ளத்தில் வேர் வீழ்ந் திருந்தது.

## புறத் தொண்டும் அகத்தொண்டும்:

இங்ஙனம் தண்டமிழ் வாழ புறவினைப் பணி ஆற்றிப் புறத் தொண்டிற்குப் பொது நிலைப் பாடிய புலவர் பெருந்தகை, அகத் தொண்டு பல புரிந்து அருந்தமிழ் வாழ ஆற்றுப் படை பாடினார். அந்த முத்தமிழ்த் தொண்டுள் முதல் தொண்டு, தொல்காப்பிய தொண்டாகும்

## தொல்காப்பியம்:

முதன் முதல் தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த மூதறிஞர் டாக்டர் இலக்குவனார் அவர்கள் ஆவார்கள். வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட வண்டமிழர் உள்ளப் பாங்கினை வெளியுலகும் கண்டுணரும் வண்ணம் இம் மொழி பெயர்ப்பு தெளி வோடும் வரையறுத்தும் இருப்பது நிறைவளிக்கிறது. இதற்கு அணிந் துரை வழங்கியுள்ள மூதறிஞர் அண்ணா அவர்கள் இம் மொழி பெயர்ப் பினையும், விளக்கத்தினையும் போற்றிப் பாராட்டி அளித் துள்ள அணிந்துரை இந் நூலுக்கு ஏற்றமும் தோற்றமும் அளிக் கிறது.

## தொல்காப்பிய ஆராய்ச்சி:

தொல்காப்பியத்தினை மொழி பெயர்த்த கையோடு தொல் காப்பிய ஆராய்ச்சியும் எழுதியிருப்பது, இவர் தம் தொல்காப்பிய புலமையினையும், தொன்மைத் தமிழர் நாகரிகத்தில் இவர் கொண் டுள்ள ஈடுபாட்டினையும் விளக்குவதாகும்.

## இந்நூலில்

உயர் கலைகளுக் கெல்லாம் பிறப்பிடமாகக் கிரேக்கநாட்டையே கூறுவர். ஆனல் தொல்காப்பியத்தை ஆராய்ந்து கற்போர் அவ்வாறு

கூறுர். பல உயர் கலைகளின் பிறப்பிடம் தமிழகமே என்று தலை நிமிர்ந்து சாற்றுவர்,'' என்று டாக்டர் இலக்குவனர் அவர்கள் கூறியிருப்பது நாகரிகத்தின் தொட்டில் நற்றமிழ்நாடு என்ற வரலாற்றுக் கூற்றினை மெய்ப்பிப்பதாகும்.

## பழந்தமிழ்:

இந்நூலில் சங்க கால தமிழ் மொழியின் உயர் தனிச் செம்மை தன்மையினையும் நினைப்பதற்குஎட்டாத நெடுங்காலத்திற்கு முன்னர் இருந்தே, இம்மொழி வரையறுத்த இலக்கணத்தினையும்வளமான இலக்கியங்களையும் கொண்டு இலங்கிய பான்மையினையும் அகச் சான்று புறச்சான்றுகளுடன் நிறுவி இருப்பது இவர் தம் ஆராய்ச்சி மதி வன்மையினைப் புலப்படுத்துவதுவதாகும்.

## இலக்கியர் கூறும் தமிழர் வாழ்வியல்: (சங்ககாலம்)

சங்க காலத் தமிழர் தம் அக வாழ்வையும், புற வாழ்வையும் எடுத்து விளக்கும் கருத்துக் கருவூலம் இந்நூல் ஈரங் காட்டி அகம் மேற் கொண்ட தமிழர் வாழ்வில் ஏற்பட்ட இன்பத்தினையும். வீரம் காட்டி புற வாழ்வு மேற் கொண்ட தமிழர் வாழ்வில் ஏற்பட்ட பெருமிதத்தினையும், அகத்திணை,புறத்திணைக்கூற்றுக்கள் வாயிலாக விளக்கியிருப்பது, இது ஒரு முற்றிய நூல் என்பதற்குச் சான்று பகர்கின்றது.

## Tamil Language;-

மொழி நூலார் கருத்துக்களையும் விளக்க மொழி (Philologists) மொழியியலார் (Linguists) கூற்றுக்களையும் தமிழ் மொழி அமைப்போடு ஒப்ப நோக்கி ஆராய்ந்து. இருவரும் ஒன்றுபடும் இடங்களையும், வேறுபடும் இடங்களையும், எடுத்துக் காட்டித் தம் முடிவுகளைச் சான்றுகளுடன் விளக்கி இருப்பது இவர்தம் மொழி நூல் புலமைக்குச் சான்று அளிக்கிறது. மேனாட்டு மொழி நூல் கொள்கைகள் பற்றி பல்வேறு கருத்துக்கள் நாட்டில் உலாவி வருகின்றன. அவற்றையெல்லாம் ஆய்ந்து தமிழ் மொழி அமைப்பிற்கு ஏற்புடையன எவை, ஏலாதன எவை என்று விளக்கி இருப்பது பெரிதும் போற்றிப் பாராட்டற் பாலதாகும்.

**Tolkappiyam (in English) with critical studies:-**

இது பற்றி தொடக்கத்திலேயே கூறப்பட்டுள்ளது.

**திருக்குறள் எளிய பொழிப்புரை**

மக்கள் மன்றத்தில் குறளின் குரல் கேட்க பேராசிரியர் எடுத்துக் கொண்ட நன் முயற்சி இது தமிழ் மரபிற்கு முரணுகாமல் அரண் பயக்கும் உரை இது. பல்வேறு உரையாசிரியர்களின் கூற்றுக்களினுல் காணப்படும் முரண்பாடு நீக்கி தொன்மை தமிழ் இன பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் ஏற்ற முறையில் உருவாக்கியுள்ள தண்டமிழ் இது.உரைபேராசிரியர்இலக்குவனர் அவர்களின்உள்ளத்தினைக் காட்டும் உரை எனலாம்.

இங்ஙனம் அகத் தொண்டு பல புரிந்து மொழிக்கு ஏற்றமும், தோற்றமும் அளித்த ஏந்தல் இலக்குவனர் அவர்கள் ஆவார்கள்.

தாய் மொழிக்கு அகத்தாலும், புறத்தாலும் தொண்டு செய்து மூத்துயர்ந்த முதறிஞர்களின் முன்னணியில் இருப்பவர் டாக்டர் சி. இலக்குவனர் அவர்கள். உடலைவருத்தியும், உள்ளத்தைவருத்தியும் தொண்டு செய்ததோன்றலின் புகழ் தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பது ஒருதலை. இலக்குவனர் உணர்வுகள், தமிழவேள் டாக்டர் கலைஞர் அவர்கள் பொன் மொழிப்படி இன்று தமிழர் உள்ளந்தோறும், இல்லந்தோறும் பரவியுள்ளது. அந்த நல்லுணர்வுகள் நற்றமிழ் இனத்தை எதிர்காலத்தும் வழி நடத்திச் செல்வதாக.

டாக்டர் மெ. சுந்தரம்.
எம். ஏ., எம். லிட்., பி எச். டி.,
தலைமைத் தமிழ்ப் பேராசிரியர் &
தமிழ்த்துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி,
சென்னை–5

# திராவிட மொழிகளில்

## வண்ணனை அமைப்பும் – வரலாற்று அமைப்பும்

திருமிகு இரா. கோதண்டராமன் எம். ஏ, எம். ஏ

தொகுதி 71 பகுதி 3 ன் தொடர்ச்சி

**வரலாற்றுநிலை–அடிக்குறிப்பு:**

1. இக்கட்டடத்தில் தமிழில் காணப்படும் தேர்ச்சி, பயிற்சி ஆட்சி, தாழ்ச்சி போன்ற சொற்களின் அமைப்புக்களையும் கருத்தில் கொள்ளலாம். தேர், பயில், ஆள், தாழ் ஆகிய வினைகளின் அடியாகத் தோன்றிய மேற்படி சொற்கள் தொடக்கத்தில் வினைமுற்றுக்களாக நடைபெற்று பின்னர் ஒடுங்கிய நிலையில் முற்றுப் பொருண்மையை இழந்தன வாதல் வேண்டும். இச் சொற்களின் வரலாற்று, அமைப்பைப் பின் வருமாறு ஆராயலாம்.

1. தேர்ச்சி < * தேரிச்சி < * தேரிய்ச்சு < * தேரிய்த்து < * தேர்-இய்-து
2. பயிற்சி < * பயில்ச்சி < * பயிலிச்சி < * பயிலிய்ச்சு < * பயில்-இய்-து
3. ஆட்சி < * ஆள்ச்சி < * ஆளிச்சி < * ஆளிய்ச்சு < * ஆளிய்த்து < * ஆள்-இய்-து
4. தாழ்ச்சி < * தாழிச்சி ஆடின்று தாழிய்ச்சு < * தாழிய்த்து < * தாழ்–இய்-து.

தேர்ச்சி, பயிற்சி, ஆட்சி, தாழ்ச்சி போன்ற சொற்கள் உகர ஈற்றனவாக அமையாமல் இகர ஈற்றனவாக அமைந்ததற்குப் பின்வரும் காரணத்தை எண்ணிப் பார்க்கலாம். இச் சொற்களின் மூலஅமைப்பில் துகிரக் கிளவியின் முன் நிகழும் -இல்- என்பதில் உள்ள இகரத்தின் செல்வாக்கு ஈற்று உகரத்தை இகரமாகத் திரியச் செய்தது. இதனை உயிர்இயைபு (Vowel Harmony) என்று குறிப்பர் மொழியியலார். இங்ஙனம் ஈற்று உகரம் இகரமாகத்திரிந்தமைவதற்கு -ய்ச்து->ய்ச்த்>ச்ச் என்ற ஒலித்திரிபும் ஒரு காரணமாகும். இகரமும், சகரமும் தோற்றத்தில் அண்ணப் பகுதியைப் பின்புலமாகக் கொண்டவையாதலால் ஈற்றில் நிகழும் உகரம் எளிதில் இகரமாகத் திரிந்து விடுகின்றது.

கன்னடத்தில் செய்வித்தற் பொருண்மையை உணர்த்தும் வினையடிகள் (Causative Verbs) -சு (-cu) அல்லது - இஸு ஈற்றன வாக உள்ளன. (HKL பக் 134&208). எ-டு அமர்சு (amarcu), உருள்சு (urulcu); அமரிஸு உருளிஸு இத்தகைய வினையமைப் புக்களும் தொடக்கத்தில் முற்றுப் பொருண்மையினவாக நடை பெற்று பின்னர் அப் பொருண்மையினை இழந்திருக்கக் கூடும். இது மேலும் ஆய்வுக்குரியது.

---

தமிழில் வழங்கும் ஆடிற்று, பாடிற்று, போயிற்று போன்ற வினை முற்றுகள் வினையடி + இல் + து என்ற அமைப்பினவாகும்1 வரலாற்று நிலையில் — இல் —, — இய் — ஆகிய இரண்டு கால இடைநிலைகளும் — இன் — என்னும் கால இடைநிலைக்கு மிக முந்தியனவாகும்.

* செய்தாம் வாய்பாட்டு வினைகள்: தமிழகத்தின் வட மாவட் டங்களில் பேசப்படும் தமிழில் செய்தாங்க, வந்தாங்க, இருந்தாங்க போன்ற வினையமைப்புக்கள் இறந்த காலப் பொருண்மையை உணர்த்தும் பலர்பால் வினைமுற்றுக்களாக நடைபெறுகின்றன. குமரி மாவட்டத்து நாடார் பேச்சுத் தமிழில் இதே பொருண்மை செய்தாவ, வந்தாவ இருந்தா வபோன்ற பலர்பால் வினைமுற்றுக் களால் உணர்த்தப்பெறுகின்றது. இவ் இருவகை வினைமுற்றுக்களை யும் முறையே செய்தாங்க செய்தாவ என்ற வாய்பாட்டினவாகக் கொண்டு அவற்றைப் பின்வருமாறு ஆராயலாம்.

1. செய்தாங்க < * செய்தாம்-க.

* செய்தாம் - < * செய்தாய்ம் < * செய்தாய் - உம்.

* செய்தாய் - < * செய்து - ஆய்.

---

1. ஆடின்று, பாடின்று, போயின்று போன்ற வினையமைப்புகள் வலித்தல் விகாரம் பெற்று ஆடிற்று, பாடிற்று, போயிற்று போன்ற வினையமைப்புக்கள் தோற்றம்கொண்டனவாக வாதிப்போரும்உளர் வண்ணனை இலக்கணங்களில் ஆளப் பெறும் கலைச்சொற்கள் தவ றுன கண் மூடித்தனமான விளக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் இப்போக்கு மொழி வளர்ச்சியின் நிலைகளை அறிந்து கொள்ள உத வாது.

2. செய்தாவ < * செய்தாப < * செய்தாம்ப < * செய்தாம்-ப

* செய்தாம் < * செய்தாய்ம் < * செய்தாய் - உம்.

* செய்தாய் - < * செய்து - ஆய்.

இவ் ஆய்வினின்றும் செய்தாங்க, செய்தாவ ஆகிய இரு வாய்பாட்டு வினைகளும் * செய்தாம்- வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றி வழங்குவன என்பது புலனாகும். வரலாற்று நிலையில் அமையும் * செய்தாய் வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றிய செய்தாம் வாய்பாட்டு வினைகள் பழந்தமிழில் தன்மைப் பன்மையைக் குறிக்கும் இறந்தகால வினைமுற்றுக்களாக நடைபெறுகின்றன. உண்டாம், உரைத்தாம், தின்றாம் ஆகியவை உரையாசிரியர் சேனாவரையரின் எடுத்துக்காட்டுக்கள். (தொல். சொல். 202)

* செய்துவு வாய்பாட்டு வினைகள்: கன்னடத்தில் செய்தவு வாய்பாட்டு வினைகள் உணர்த்தும் பொருண்மையை * செய்துவு வாய்பாட்டு வினைகளும் உணர்த்தி நிற்கின்றன. * செய்துவு வாய்பாட்டு வினைகளின் வரலாற்று அமைப்பை வாய்பாட்டு நிலையில் * செய்துவு < * செய்துபு < * செய்தும்பு < * செய்தும்-பு என ஆராயலாம் இவ் ஆய்வினின்றும் * செய்துவு வாய்பாட்டு வினைகள் வரலாற்று நிலையில் * செய்தும்-பு என்ற வாய்பாட்டு அமைப்பினவாக வழங்கியமை புலனாகின்றது இவ் வாய்பாட்டு வினைகள் * செய்தும் வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும். காணிக்காரர் மொழியில் சில * செய்தும் வாய்பாட்டு வினைகள் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக நின்று எதிர்காலப் பொருண்மையைக் குறித்து நிற்கின்றன

எ-டு இடிச்சும் 'இடிப்பேன், இடிப்போம், இடிப்பாய், இடிப்பீர்-(கள்), இடிப்பான், இடிப்பாள், இடிப்பார் (கள்), இடிக்கும்'

இணெச்சும் 'இணைப்பேன், இணைப்போம் ........ இணைக்கும்'

எரிசசும் 'எரிப்பேன், எரிப்போம், ........ எரிக்கும்'

ஒடிச்சும் 'ஒடிப்பேன், ஒடிப்போம் ........ ஒடிக்கும்'

இச் செய்தும் வாய்பாட்டு வினைகள் பழந்தமிழில் தன்மைப்பன்மைப் பொருண்மையை உணர்த்தும் போக்கை தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். (சொல் சேனா 202) இவ்வாய்பாட்டு வினைகள் தமிழின் பிந்திய வளர்ச்சியில் முற்றுப் பொருண்மையை இழந்து எல்லா இடப் பெயர்களோடும் பொருந்தி இரு வேறு பொருண்மைகளை உணர்த்துகின்றன. பின்வரும் எடுத்துக் காட்டுக்களில் இதனைக் காணலாம்.

அ நீ இழித்தும் பழித்தும் பேசுவாய்.

நான் நின்றும் அமர்ந்தும் பேசினேன்.

கண்ணன் கண்டும் கேட்டும் கற்றான்.

கோதை இடித்தும் புடைத்தும் பழகினாள்.

கூந்தல் நீண்டும் அடர்ந்தும் வளரும்.

ஆ. நான் வந்தும் அவன் படிக்கவில்லை.
நீ கேட்டும் அவள் கொடுக்கவில்லை.

அவன் கொடுத்தும் அவள் வாங்கவில்லை.

காய் கனிந்தும் இனிக்கவில்லை.

இவ் எடுத்துக் காட்டுகளில் உள்ள செய்தும் வாய்பாட்டு வினைகள் அனைத்தும் நிகழ்நிலை (Synchronic Level) யில் தனித்தொடரன் (Simple Sentences) களில் நிகழாமல் இணைத்தொடரன் (Compound Sentences)களிலும்,பின்னல்தொடரன் (Complex Sentences) மட்டுமே நிகழ்கின்றன. பின்னல் மற்றும் இணைத் தொடரன்களில் நிகழும் செய்தும் வாய்பாட்டு வினைகள் முற்றுப் பொருண்மையை இழந்து எச்சப் பொருண்மையை மேற்கொண்டதுடன் மேலே அ. பிரிவில் நிகழும் போது ஒரு பொருண்மையையும், ஆ. பிரிவில் நிகழும் போது இன்னொரு பொருண்மையையும் உணர்த்தத் தொடங்கின வாகக்கருதலாம் தொடக்கத்தில் செய்தும் வாய்பாட்டு வினைகள் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொது வினைகளாக நடைபெற்றிருக்கலாம். இக் கூற்று மேலும் ஆய்வுக்குரியதாகும்.

* செய்யுவு வாய்பாட்டு வினைகள்: * செய்யுவு- வாய்பாட்டு வினைகள், தன்மை, முன்னிலை, உயர்திணைப் படர்க்கை ஆகியவிகுதிகளை ஏற்று எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் முற்று வினைகளாக நடைபெறும் நிலை தமிழிலும், கன்னடத்திலும் காணப்படுகின்றது. எ-டு தமிழ் * புகழுவு- ஏன் / ஓம் / ஆய் / ஈர் (கள்)/ ஆன் / ஆள் / ஆர் (கள்); கன்னடம்: கொடுவெ (னு) < * கொடுவு எ (னு) 'கொடுப்பேன்; கொடுவெவு (< * கொடுவு-எவு 'கொடுப்போம்' கொடுவி (< * கொடுவு-இ) 'கொடுப்பாய்', கொடுவிரி < * கொடுவு-இரி) 'கொடுப்பீர்கள்', கொடுவனுகொடுவுஅனுகொடுப்பான்', கொடுவனு (< * கொடுவு அனு 'கொடுப்பாள்', கொடுவளு (< * கொடுவு-அளு' கொடுப்பார் (கள்); கொவுது (< * கொடுவு-து) 'அது கொடுக்கும்', கொடுவுவு (< * கொடுவு வு) 'அவை கொடுக்கும்' *1* தமிழில் * செய்யுவு வாய்பாட்டு வினைகள் விகுதிகளின் முன் * செய்வு வாய்பாட்டு வடிவனவாக ஒடுங்கி நிற்பதும் உண்டு. எ-டு உணருவேன் / உணர்வேன்; உணருவோம் / உணர்வோம், உணருவாய் / உணர்வாய், உணருவீர் உணர்வீர், உணருவான் / உணர்வான், உணருவாள் / உணர்வாள், உணருவார்/– உணர்வார். விதிகள் ஏற்காத நிலையிலும் * செய்யுவு வாய்பாட்டு வினைகள் * செய்வு வாய்ப்பாட்டினவாக ஒடுங்கி நிற்கற்பாலன வாகும். தமிழில் வழங்கும் உணர்வு, உயர்வு, தாழ்வு, ஆய்வு, சாய்வு போன்ற வினைப்பெயர்கள் * செய்யுவு வாய் பாட்டினவாகிய * உணருவு, * உயருவு, * தாழுவு, * ஆயுவு, * சாயுவு ஆகியவற்றின் ஒடுக்கங்களாகும் கல்வி, செல்வம், போன்ற சொற்களும் * செய்யுவு வாய்பாட்டுவினைகளின். ஒடுக்கங்களாகிய * செய்வு வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியவையாகும். இத்தகைய சொற்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

(தொடரும்)

---

*1* கன்னடத்தில் * செய்யுவு—வாய்பாட்டு வினைகளை அடுத்து அஃறிணைப்பொருண்மையை உணர்த்தும் விகுதிகளும் சேரும்.

# செந்தமிழ் ஏடு!

தமிழ்ப் பெருஞ் சான்றோர்களே!

நான்காம் தமிழ்ச் சங்கம் என்னும் நற்றமிழ்க் கோயிலை நிறுவி காலத்திற்கும், கன்னித் தமிழுக்கும்பெருமை தேடித்தந்தபெரு மணச் செம்மல், விண்ணவர்க்கும் எட்டாத புகழை மண்ணிலே எட்டி நின்ற தண்ணார் தமிழ்க் காவலன், நற்றமிழ்ப் பாவலன் வள்ளல் பாண்டித்துரைத் தேவரவர்களால் தொடங்கப் பெற்றது "செந்தமிழ் இதழ்"!

கடந்த எழுபத்தி இரண்டாண்டுகளாக தனித்தமிழால் உணர் ஊட்டி தரணியெங்கும் தமிழ்மணம் பரப்பி வருகின்றது என்பதை அறியாதார் இலர்.

வயங்கு மொழிப் புலவர்களும், குன்றுத் தமிழுணர்வுடைய நற்றமிழ்ச் சான்றோர்களும், தண்ணார் தமிழன்பர்களும் 'செந்தமிழ் இதழ்' உறுப்பினராகி ஒல்லும் வழியில் ஆக்கமும், ஊக்கமும் தந்துதவ வேண்டுகிறோம்.

அன்புசால்

ஆ. ஆண்டியப்பன்
(பொறுப்பாசிரியர், செந்தமிழ் இதழ்)

# நன்னெறியில் ஓர் உவமை

ச. விமலா நடராசன் எம். ஏ,

மைசூர்—6.

'நன்னெறி' என்னும் நீதிநூல் துறைமங்கலம் சிவப்பிரகாசரால் யாக்கப் பெற்றது. இற்றைக்கு ஏறத்தாழ முன்னூறு ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்டது.

மக்கட்கு இன்றியமையாத நீதிகளை அழகிய உவமைகளுடன் இந்நூல் எடுத்துரைக்கின்றது. ஒவ்வொருபாடலிலும் முதலிரண்டு அடிகள் ஒருநீதியை விளக்குவன. பின்னிரண்டு அடிகளில் உவமை அமைந்து கிடக்கின்றது சில பாடல்களில் உவமை ஓரடியிலும் மகடூஉ முன்னிலை ஓரடியிலும் அமைந்துள்ளன.

சிவப்பிரகாசரை அறியாத தமிழ்ப் புலவரோ, சைவரோ இலர். வீரசைவத்தைத் தழுவியஇப்புலவர் எண்ணிறந்த நூல்கள் யாத்துள் ளார். சைவ சமய முதல்வர்களாகிய நால்வர் மீதும் இவர் பாடியுள்ள 'நால்வர் நான்மணி மாலை' நவில்தொறும் நயமுடையது. இவர் தம் முடைய ஞானசிரியராகிய சிவஞான பாலய்ய தேசிகர் மீது கொண்ட அன்பின் மிகுதியால் பாடிய பனுவல்கள் பற்பல. அந்தாதி, தாலாட்டு, நவமணிமாலை, தூது,கோவை, உலா, தல புராணம், கலம்பகம், பிள்ளைத்தமிழ், திருப்பள்ளியெழுச்சி எனப்பற்பல துறைகளில் கைநனைத்தவர் இவர்.

நன்னெறி ஒரு அழகிய நீதிநூல் வாழ்வில் கருத்தூன்றிக் கைக் கொள்ள வேண்டியபல ஒழுக்க நன்னெறிகளை எளிமையாக விளக் குவது. நீதிகளை கட்டளைகளாகக் கொடுக்காமல், அழகியபழகிய உவமைகளுடன் சேர்த்துக் கொடுத்திருப்பது இலக்கியச்சுவையை யும் தந்து நிற்கின்றது.

அன்றாட வாழ்வில் பயின்றுவழங்கும் பல நிகழ்ச்சிகளும் புராண நிகழ்வுகளும் பன்னெடுங்காலமாக உவமைகளாக எடுத்தாளப் பட்டு வந்துள்ள உவமைகளும் இந்நூலில்உள்ள நாற்பது பாடல் களிலும் வருகின்றன.

நிலவை உவமையாக எடுத்தாளாத புலவர்களே இல்லை எனலாம். சிவப்பிரகாசரும்,

"மதியின் கலையளவு நின்ற கதிர்" *[நன்...13]*

"—திங்கள்

கறையிருளை நீக்கக் கருதா துலகில்

நிறையிருளை நீக்குமே நின்று" *[நன் ...10]*

"பொங்காது அழற்கதிரால் தண்ணொன்

கதிர் வரவால் பொங்குங் கடல்" *[நன்...18]*

"அஞ்சுமோ

மண்ணிற் புலியை மதிமான்" *[நன்...29]*

என நான்கு பாடல்களில் தண்மதியை உவமையாக எடுத்தாளுகின்றார்.

இவற்றுள்,

"தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் —திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே னின்று"

என்றொரு பாடல் உள்ளது.

இப்பாடலுக்கு ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள், "சந்திரனானவன் தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல், ஆகாயத்திலே நின்று உலகத்து நிறைந்த இருளை நீக்குவான்; அதுபோல் மேலோர் தமது குறைநீங்குதலை நினையாராகி, மனம் இளகி பிறர்க்கு உண்டாகிய வெவ்விய குறையை நீக்குவார்" என்று உரையெழுதுவார்.

இப்பாடலைக் கற்குந்தொறும் ஏதோவொருகல் தடுக்கி நிற்பது போன்ற உணர்வு எழுவதைப் பலமுறை உணர முடிகின்றது. பொதுவாகத், திங்களை உவமை கூறும் போது, அதன் கறையைக்களங்கமாக —அதாவது குற்றமாக எடுத்தாள்வதே நம்மனோர்

வழக்கு. இவ்விடத்தும் நாட்டார் அவர்களும் "சந்திரனனவன் தனது களங்கமாகிய இருளை நீக்குதற்கு நினையாமல்" என்றே பொருள் எழுதுகின்றார்.

இவ்வுவமை, 'தங்குறையைப்பெரிதாக எண்ணாமல் பிறர்குறை துடைக்க முந்துறூஉம் பெரியோருக்குக் கூறும்போது 'கரும்பிடைக் கணு' போலச் சுவை குறைப்பதாக உளது.

"தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்க"

[குறள்]

"பிறர் பழியும் தம்பழிபோல் நாணுவர்"

[குறள்]

என்ற குறளிலும் பிறர் பழிக்கே தம்பழிபோல் அஞ்சி நடுங்குவர் பெரியோர் எனக் குறிக்கிறார். முதலில் தன்னிடம் இருக்கும் குறையை நீக்கினாலே பிறருடைய குற்றத்தை எடுத்துரைத்து நீக்க இயலும் என்பது குறள் கூறும் வழி.

கிறித்தவ மறைநூலும் "முதலில் உன் கண்ணிலுள்ள உத்தரத்தை எடுத்துப்போடு. பிறகு உன் சகோதரன் கண்ணிலுள்ள துரும்பை எடுக்க வகைபார்" என்றுரைக்கின்றது. தன்னிடம் உள்ள குறைசிறிதாகவேயிருந்தாலும், அதுவே விளக்கமாகத்தோன்றுமாதலின். அவரவரிடம் உள்ள குறையை 'உத்தரம்' என்றும், மற்றவரிடம் உள்ள குறையைத் 'துரும்பு' என்றும் கூறினர்.

உலக வழக்கிலும், தன்னைத்தானே திருத்திக் கொள்ளாது, பிறரைத் திருத்த வருபவரை "ஊருக்குத் தாண்டி உபதேசம்; உனக்கும் எனக்கும் இல்லை என்றல்லவா இருக்கிறது" என்றும் எள்ளி நகையாடுவதையும் காணலாம்.

அன்றியும், நன்னெறி ஆசிரியர் பிறிதிடங்களில் பெரியோருக்குக் காட்டும் உவமைகளுடன் இவ்வுவமையையும் ஒத்துநோக்கின், இதன் பொருத்தமின்மை தெற்றெனப் புலப்படும்.

''பெரியவர் தந்நோய்போற் பிறர்நோய் கண்டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க— தெரியிழாய்
மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே கண்'' [நன்: 20]

என்பார்.

''கைம்மாறுகவாமற் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயலுதவி தாஞ்செய்வர்— அம்மா
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியானதாம் மென்று''[நன்:27]

என்றும்,

''பேரறிஞர் தாக்கும் பிறர்துயரந் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார்—நேரிழாய்
மெய் சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேற்
கைசென்று தாங்குங் கடிது''[நன்:31]என்றும்

பெரியோரது பிறர் நலங் கருதும் பண்பை அழகும்,ஆழமும் நிறைந்த உவமைகளால் விளக்குவார்.

தம்குற்றத்தை நீக்காமல் பிறர் குற்றத்தை நீக்க முன் வருபவரை நம் இலக்கியங்கள் எவையும் இற்றை நாள் வரை போற்றியதில்லை. அப்படித் தங்குற்றங் கடியாது, பிறருக்கு வழிகாட்ட வருவது திருமந்திரம் உரைக்கும், ''குருடும் குருடும் குருட்டாட்டமாடிக் குரு டும் குருடும் குழியில்'' விழுவதற்கு ஒப்பாகவே அமையும்.

பெரியோர் ''தங்குறை காணது பிறர்குறை நோக்குவர்'' என்று கூறுங்கால், இது அவருக்குள்ள பொருட்குறை,நலக்குறை போன்றவை. அவற்றையும் நோக்காது மற்றையோருடைய குறையை நோக்க முன் வருபவர் என்பதுவிளக்கமுறும். இவ்விடத்துக், 'குறை' என்பது 'துன்பம்' என்ற பொருளில் வந்ததேயல்லாமல் 'குற்றம்' என்ற பொருளில் வரவில்லை என்பது தெளிவுறத் தெரிகின்றது.

''தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்''

என்ற முதலிரண்டு அடிகளில் பொருள் தெளிவாய்புலப்படுகின்றது அடுத்து வருகின்ற

"—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே யின்று"

என்ற உவமை வரும்போதுதான் தடுமாற்றம் உண்டாகின்றது.

"மண்டு பிணியால் வருந்து பிறவுறுப்பைக் கண்டு கலுழும் கண்ணை"யும், "வலியனதாம் மென்று முதிர் சுவை நாவிற்கு விளைக்கும் முளைக்கும் எயிற்றையும்" "மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடி,கடிது சென்று தன்மேற் தாங்கும் கை"யையும் உவமையாகக் கூறியது அத்துணை பொருத்தமாக இல்லை.

சந்திரனின் கறை, அதற்கொரு களங்கமாக—மருவாக—குற்றமாகவே காட்டப்பட்டு வந்துள்ளது. அதே மரபினடியில்தான் நாட்டாரவர்களின் உரையும் அமைந்துள்ளது இக்குறை நீங்காக் கலைமாமதியைத் தங்குறை காணாது பிறர் குறை நீக்க முன்வரும் பெரியோருக்கு உவமித்திருப்பது அவ்வவளவு பொருந்துவதாயில்லை.

● "பைந்தமிழ்ச் சோலையான பாண்டி மதுரையில் நான்காவது தமிழ்ச் சங்கத்தை நாட்டிய வள்ளலே நின்னைக் காணும்போது எத்தனையோ பெருமைகள் அலைமோதிக் கொந்தளிக்கின்றன. பாரிவள்ளல் முல்லைக் கொடிக்குத் தேரைத்தந்தது போலத் தமிழ்க்கொடி வளர நினதுமாளிகைச் செல்வத்தையே தந்தனை.

(தவத்திரு, கவியோகி)

# "வாலி வதைப் படலம்"

## பாடல்கள் ஒப்பாய்வு

புலவர் வை. தங்கமணி.

பி. கே. என். உயர்நிலைப் பள்ளி, திருமங்கலம்.

[தொகுதி 71 பகுதி 3 ன் தொடர்ச்சி]

"வாங்கினன் மற்றவ் வாளியை

யாளிபோல் வாலி" - என்று கூறி இருப்பதால் – ஆளியை வெளியெடுத்து விட்டான் என்பதால் தான் ... அவ்விடத்தில் இருந்து சென்னீரானது ...

"மோடு தெண்டிரை முரிதெரு
கடலென முழங்கி
ஈடு பேருல கிறந்துள
தாமெனற் கெளிதோ
காடுமா நெடு விலங்கல்கள்
கடந்ததக் கடலின்
ஊடு போதலுற்றதனை

யொத்துயர்ந்துள துதிரம்" – சென்னீர் பெருக்கெடுத்த விதத்தினைக் கம்பர் கூறியவாறு காண்கிறோம். இதனை நன்கு நினைவில் கொள்ள வேண்டும்.

70 ஆம் பாடலில் அவ்வாறு பறித்த வாளியைப் பருவலி தடக்கையால் பற்றி இறுப்பன் என்று மேருவைமுறிக்கும் ஆற்றல் பெற்ற வாலி முறிக்க முயல்கிறன். ஆனல் அவ்வாறு செய்ய இயலவில்லை ஆகையால் இப் பகழி யாருடையது? பெயர் அறிவோம்எனப் பார்க்கிறன்.

இங்கும் முறித்திட முற்பட வேண்டுமேல் மார்பில் அதனை வைத்துக் கொண்டு முறிக்கும் செயல் செய்ய முற்பட்டிருக்க முடியாது. ஏன் என்ருல் அஃது முடியாத செயல் ஆகையால் வெளியே எடுத்து தான் இருகையாலும் கணையினை இருபக்கமும் பற்றிதான் இச் செயல் செய்ய முற்பட்டிருக்க வேண்டும் என்பதையும் அறிய வேண்டும்.

முறிக்க முடியவில்லை. பகழியைப் பார்க்கிறன். அதில் ...

(71) உலகம் மூன்றினும் வாழ்கின்ற உயிர்களுக்கு மூலமந்திர மாகவும் வழிபடுவோருக்குப் பதம் நல்குவதாகவும், ஏழுபிறவிகளை யும் அறுக்கும் மருந்தாகவும் விளங்கும் 'இராமன்' என்றபெயரினைக் கண்களால் கண்டான் ...

கண்டபின் இராமனை வாலி வைகிறான். இராமன் காரணம் கூறு கிறான். உண்மை உணர்ந்த வாலி *131* ஆம் பாடலில்...

"இருந்தனன் இளவல் தன்னை: வன்றுணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி" என்பதால் சுக்கிரீபனைத் தனது இரண்டு கரங் களையும் நீட்டி தம்பியை அருகழைத்து மார்புறத் தழுவினான் என்ற றிகிறோம்.

*71* ஆம் பாடல்வரை பேசப்பட்டப் பகழியின் பேச்சில் 152ஆம் பாடல்வரை பேசப்படவில்லை.

(71 ஆம் பாடலில்) மார்பில் இருந்து பிடுங்கி வெளியெடுத்துப் பார்த்ததில் வாலி இராம நாமம் தென்பட்டதும் அப்பகழியை என் செய்தான்.கீழே போட்டுவிட்டானா? அன்றி அதனை இரு கைகளாலும் பிடித்திருந்தானா? அதனை இரு கை களாலும் பிடித்திருப்பின் தம்பியை எவ்வாறு மார்புறத் தழுவியிருக்க இயலும் - ஒருக்கால் அப்பகழியை ஒருகையிலேயே வைத்திருந் தானா? இதுபோல் *146* ஆம் பாடலில் அங்கதனை "தன்னெஞ்சிற் புல்லி" என்றும் *150* ஆம்பாடலில்' தன்றுணைத் தடக்கையாரத்தனை யனைத்தழுவி" என்றும் வருகிறது இவ்வாறு ஒருகையில் பகழியை வைத்துக் கொண்டு மார்புற இருகரம் நீட்டித் தழுவினான் என்பது பொருந்துவது அன்று. ஒருக்கால் அவ்வாறுதான் நடைபெற்றது என்று ஏற்றுக் கொண்டால் கூட

*138* ஆம் பாடலில் அங்கதன் அடைக்கலம் தருதல் என்ற தலைப் பில்அமைந்துள்ள பாடலடியையும் சிறிது உன்னிப் பார்க்க வேண் டும்.

பாடலடி இதோ ...

"மற்றிவன் சுற்றத்தோடும்"
உன்னடைக்கல மென்றுய்ந்தே
யுயர் கரம்உச்சி வைத்தான்"

உயர்ந்த கரங்களைத் தலைமேல் குவித்து வணங்கினன் என்றிருப்ப தால் கணை கையில் இல்லை என்றறியலாம் அல்லவா?

எனின் கணை எங்கே?

நாம் தேடி அலைவதைப் பார்த்துவிட்ட கம்பர் (படல இறுதி 153 ஆம் பாடலில்) கணை எங்கும் செல்லவில்லை. வாலியின் மார்பில் தான் குத்தி நின்றது என்றும், அதனைப் புறம்போக விடாமல் வாலி யின் கரம் அதனை உறுதியாகப் பற்றி இருந்தது என்றும் கூறுகிருர்.

இங்கு வாலியின்கை நெகிழ்ந்ததினுல் வெய்ய மார்பில் தங்காது புறம்வந்து, உயர்ந்து கட லில் நீராடி, அமரர் மலர்தூவ ராகவன் அம்புருத் தூவியுள் வந்து சேர்கிறது என்று பாடி முடிக்கிருர் .

இதுவரை சிறிதளவே நம்மை மயங்க வைத்த கம்பர் இப்போது முழுக்கலுமாக நம்மை மயங்க வைத்துவிட்டுப் படலத்தையும் முடித்துவிட்டாரே!

மார்பில்தான் கணை குத்தி நின்றது. அதனைக் கைத்தடுத்து நிறுத் தியது என்ருல் ...

1. ஊழிக்கால நீர்ப்பெருக்கு போல் சென்னீர் பெருக்கெடுத்தோடி யிருக்க முடியுமா?
2. இருகரத்தாலும் பகழியைப் பற்றி முறிக்க முற்பட்டிருக்க முடி யுமா?
3. சுக்கிரீபனை இருகரம் நீட்டி ஆரத் தழுவியிருக்க முடியுமா?
4. அங்கதனை மார்புற ஆரப் புல்லியிருக்க முடியுமா?
5. இருகரம் தூக்கித் தலைமேல் வைத்து இராகவனை வணங்கி இருக்க இயலுமா?

எனின் கணை எங்கே...?

இதோ 153 ஆம் பாடலில்தான் கடலில் மூழ்கி எழுந்து இராக வனிடே சேர்ந்து விட்டது என்று பாடி இருக்கிருரே என்று ஏற்றுக் கொண்டால் முன்புள்ள சில பாடல்கள் சிக்கல்களைத் தருகின்றன· முன்புள்ள பாடல்களை ஏற்றுக் கொண்டால் இறுதிப் பாடல் பெருஞ் சிக்கலைத் தருகிறது.

கம்பர் மயக்கத்தை ஏற்படுத்தவோ-சிக்கலை உண்டாக்கவோ விரும்புவர் அல்லர்-சிக்கலையும், மயக்கத்தையும் நீக்கும் பணியே அவருடைய பணி...

இராமனுடைய இராம பாணமானது ஏவியதும் எதிரியை அழித்துவிட்டு மீண்டும் இராமரிடமே வரும் ஆற்றல் வாய்ந்தது ஆகையால்தான் கைநெகிழ மார்பின் வழியாக முதுகைக் கிழித்து வெளிவந்து, கடலில் மூழ்கி அமரர் மலர் தூவ இராமனிடம் வந்தது என்று பாடுகிருர்.

இனி இந்த இறுதிப் பாடலான 153 ஆம் பாடல் சில பிரதிகளில் காணப்படவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

இக்கருத்தினை ஏற்றுக் கொண்டால் இராமபாணம் மீட்டது எவ் வாறு என்று பாடாத குற்றத்திற்குக் கம்பர் ஆளாக வேண்டியது வரும். ஆகையால் படியெடுத்தோர் அதனை விட்டிருக்கலாம் என்று கொள்ளலே ஏற்புடைத்தாகும்; ஏற்றதுமாகும்.

ஒருக்கால் வாலி வதைப் படல இறுதிப் பாடலான ‘கையவன் எனத் தொடங்கும் பாடல் இடைச் சொருகலாக இருக்குமோ என்ருல் அதுவும் ஏற்றுக் கொள்ளும் கருத்தாகவும் இல்லை. ஏன் என்ருல் கம்பனுடைய அனைத்து முத்திரைகளும் அடங்கியுள்ள பாடலாக இதுவும் காணப்படுகிறது. அவ்வாறு காணப்பட்டாலும் இடைச் சொருகலே என்று ஏற்றுக் கொண்டால்... இராகவனுடைய பகழி எவ்வாறு மீண்டது...?

வாலி கணையினை வெளியெடுத்து இராம நாமம் கண்டதும் அக் கணை இராமனிடம் சேர்ந்ததாகக் கம்பர் பாடிஇருப்பார். அப்பாடல் படி எடுத்தோரால் விடுபட்டிருக்கலாம் என்ருல் அதுவும் பொருந்து வதாக இல்லை.

ஒருக்கால் இந்த 153 ஆம் பாடல் இப்படலத்தில் 72 ஆம் பாட லாக இருக்குமோ? என்ருல் இதுவும் ஏற்றுக் கொள்ள முடியாததா கிறது.

ஏன் என்ருல் முன்பு பகழி மீண்டதாகப் பாடப் படுதலோ -இறு திப்பாடல் முன் இருந்திருக்க வேண்டும் என்று கொள்ளுதலையோ கொண்டால் பின்புள்ள நிகழ்ச்சிகளனைத்தும் தள்ளவேண்டியதிருக் கும்.

எப்போதும் ஏவப்பட்ட இராமபாணமானது தனக்கிடப்பட்ட அனைத்துப் பணியினையும் செவ்வனே செய்து முடித்த பின்தான் ஏவியவரைச் சென்றடையும். இராமபாணம் எங்கெல்லாம் ஏவப்பட்டுள்ளதோ அங்கெல்லாம் மேலே கூறிய முறையில் தான் நடந்துள்ளது என்று யாவரும் அறிவர். அவ்வாறிருக்க தன்பணி முடியாமுன்னம் திரும்பியது என்று பாடுதல் தகுமா? கம்பருக்கு முறையாகுமா? ஆகையால் வந்த வேலைகள் அனைத்தும் முடிந்தபின் திரும்புவதாக அமைத்து இறுதியில் பாடப்பட்டுள்ளதே பொருந்துவதாகும்.

இனி இப் பாடலில் பாடபேதம் உள்ளதாகவும் காட்டப்பட்டுள்ளது.

கையவன் என்பதற்குக் கையவன் ஏன்றும்; நெகிழ்தலோடும் என்பதற்கு நெகிழ்த்தலோடும்; என்றும் உருவி என்பதற்கு அகன்று என்றும் அமர்தூவ என்பதற்கு அமரர்சூட்ட என்றும் ஐயன் வெந்விடாத என்பதற்கு ஐயன் பின் தூங்கும் என்றும் இருப்பதாக அறிகிறோம்.

தாரை புலம்புறு படலத்தில் 21 ஆம் பாடலான 'புதல்வன் பொன் மகுடம்' எனத் தொடங்கும் பாடலுக்குப் பின் 'கையவன்' எனத் தொடங்கும் பாடல் எழுதப்பட்டு வாலி வதைப் படலம் முடிந்தது என சிலப் பிரிதிகளில் காணப்படுகிறதாம்!

மேலே கூறிய பாடபேதமும், 'கையவன்' எனத் தொடங்கும் பாடல் தாரை புலம்புறுப்படலத்தில் அமைத்திருப்பதாலும் சிக்கல் அவிழ்க்கப் படுவதாக தெரியவில்லை.

ஆகையால் பாடல் வேறு விதமாக அமைந்திருக்கவேண்டும் என்று அறிகிறோம். அறிஞர்கள் நன்கு சிந்திப்பார்களாக.

● *"யாப்பறிவார் நீப்புணர்வார்"*

"ஒருவர் உரைக்க, அது வளராநின்று அவர் உரை குறுக நிமிர்கின்ற இயல்புடையதாய், ஒருவராலும் முற்றக் கூற முடியாததாயுள்ளது. உலகத்துப் பெருமலை போலத் தமிழ்ப் பெருங் காவியங்கள் எல்லாவற்றினும் பெரிதாய் இனிமை மிகுந்தது கம்பராமாயணமும் திருக்குறளுமாம்"

**இலக்கியச் சிந்தனை 6**

# திருமணப் பேச்சு

புலவர். கு. சின்னையன்
தஞ்சை

முன்னுரை:-

'திருமணம்' என்ற சொல்லைக் கண்டதும், ''யாருக்கு? எங்கே? எப்பொழுது?'' என்று எண்ண வேண்டாம். 'பேச்சு' என்றதும் மண மக்களை வாழ்த்திப் பேசும் பேச்சாக இருக்குமோ? என்றும் கருத வேண்டாம்.

இன்றைய திருமணப்பேச்சு, கதம்பம் போன்றிருக்கிறது. மண மாகாத சிறியோர் முதல், பேரன் பேத்தி எடுத்த பெரியோர் வரை, மணமக்களை வாழ்த்திப் பேசுகின்றனர்கள். மற்றும், பல்வேறு அரசியல் கட்சிக்காரர்களும், கட்சிகளிற் சேராத சிலரும் பேசுகின் றனர்கள். வேறு சிலர், தமக்கு வெளியில் பேச வாய்ப்பில்லாததை எண்ணிவிவாகக் கூட்டத்தை விவாதக் கூட்டமாகக் கருதிக் கொண்டு, சொற்போர் புரியத் தொடங்கிவிடுகின்றனர்கள் இஃது கேட்போருக்குப் பெரும் போராகவே இருக்கின்றது. இத்தகைய பேச்சுகளைக் குறித்து இங்கு எழுதி இடத்தையும் காலத்தையும் வீணாக்க விரும்பவில்லை.

தூதரும் தரகரும்:-

இன்றைய மணமக்களுட் சிலர், தாங்களாகவே மணத்தைப் பேசி முடித்துக்கொள்கின்றனர். வேறுசிலர், பெரியோர் மூலம் முடித் துக்கொள்கின்றனர். மற்றும் சிலர், சொத்தையும் வேலை வாய்ப்பையும் கருதி முடித்துக் கொள்ளுகின்றனர். வேறுசிலர். தரகர் மூலமும், தூதர்மூலமும் முடித்துக் கொள்கின்றனர். ஆனல் ஒரு சிலர் மட்டும், கடிதங்கள் மூலமாகவே முடித்துக்கொள்ளுகின் றனர்கள்.

அக்காலத்தில், மணமக்கள் தாங்களாகவே முடிவு செய்து, திரு மணத்தை முடித்துக்கொண்டபின், சிக்கல்கள் சில தோன்றின,

இதனைத் தடுப்பதற்காகவே, பெரியோர்கள் ஆய்ந்து முடிவு செய்து, திருமணத்தை நடத்தி வைத்திருக்கின்றார்கள். தூதர் மூலமும் சிற்சில திருமணங்கள் முடிந்திருக்கின்றன.

அதிவீரராம பாண்டியர் இயற்றிய நைடதத்தில், நளன் — தமயந்தி கதை கூறப்படுகின்றது. இவ்விருவரிடமும், தூதுசென்று, திறமையாகப்பேசி, உண்மை இயல்புகளை உரைத்த தூதின் பெருமையை அன்னப் பறவைக்களித்திருக்கின்றார் ஆசிரியர்.

திருமணத்தின் நோக்கம்:-

திருமண வாழ்க்கையில், அன்பு பண்பாகவும், அறம் பயனாகவும் அமைந்திருக்க வேண்டுமென்று இலக்கியங்களில் கூறப்பட்டிருக்கின்றன. இவற்றை அடைதற்காக அக்கால மக்கள் திருமணம் புரிந்து கொண்டார்கள். இக்காலத்தில் ஓட்டல் உணவு ஒத்துக் கொள்ளவில்லை என்று சிலரும், சொத்திற்காகச் சிலரும், இன்ப நுகர்ச்சிக்காகப் பலரும் மக்கட் பேற்றிக்காகச் சிலரும், வற்புறுத்தலுக்காகச் சிலரும் மணம் புரிந்து கொள்ளுகின்றார்கள் இவர்களிடம் அன்பையும் பண்பையும் எதிர்பார்ப்பது, காளைமாடு கன்று போடும் என்று எதிர்பார்ப்பதை ஒத்ததாகும். அன்பையும் அறனையும் கடைப்பிடித்து வாழ்வோரும் மிகவும் அருமையாகக் காணப்படுகின்றார்கள்.

தரகர்களின் திறமை:-

இன்றைய மணமக்களுட் பலர், தம் வாழ்க்கையில் பெரும் ஏமாற்றங்களையே காண்கின்றார்கள். இவர்களுட் சிலர், தரகர் மூலம் மணம்புரிந்து கொண்டவராயிருக்கின்றார்கள். வேறு சிலர், தாமாகவே மணம் முடித்துக் கொண்டவர்களாயிருக்கின்றார்கள்.

திருமணத் தரகர்களிற் சிலர், அரிச்சந்திர பரம்பரையினராயிருக்கின்றனர். மற்றும் சிலர், சகுனி பரம்பரையைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றார்கள். இவர்களுள் வெள்ளையுள்ளம் படைத்தோர் ஒரு சிலரேயாவார்கள்.

பெண்ணிற்காகப்பேசும் தரகர் சிலர், கண்ணில்லாதவளைச் 'செந்தாமரைக் கண்ணி' என்றும், அழகில்லாதவளைச் 'சௌந்தர நாயகி' என்றும், வன்குரல் உடையவளைத் 'தேன்மொழியாள்' என்றும், மணிக்கட்டே சொந்தமாகக் கொண்டிராதவளை 'மாட

மாளிகை உடையவள்' என்றும், நன்னடத்தை இல்லாதவளைக் 'கண்ணகி தேவி' என்றும் சிறப்பித்துக் கூறுகின்றனர்.

ஆணிற்காகப் பேசும் தரகர் சிலர், எழுந்து நடக்கமுடியாதவனை 'வீமசேனன்' என்றும் நற்குணமில்லாதவனைக் 'குணக்குன்று' என்றும் அறிவற்றவனை 'அறிவுடை நம்பி' என்றும், உலகமறியாதவனை 'உலகளந்த நம்பி' என்றும், அழகே அமைந்திராதவனைச் 'சுந்தரமூர்த்தி' என்றும், யாருக்கும் அடங்காமல் திரிபவனைக் 'குணசீலன்' என்றும், செல்வம் இல்லாதவனைக் 'குபேரன்' என்றும் வருணிப்பதுண்டு. இங்ஙனம், தரகர் சிலர் வருணித்துக் கூறுதலைக் கொண்டு அவர்களை யாரும் தவருக எண்ணுவதில்லை. தரகர் இல்லையெனில் பலருக்கு வாழ்வே இல்லை. 'சொல்வார் சொன்னலும் கேட்பவர்க்கு மதி எங்கே போயிற்று, என்பது பழமொழி.

இவர்கள், ''ஆயிரம் பொய்யைச் சொல்லியாவது ஒரு கலியாணத்தை முடிக்க வேண்டும்'' என்னும் பழமொழியை அடிப்படையாகக்கொண்டே பொய்யை மெய்யாக்கி வருகின்றனர். 'பொய்மையும் வாய்மை இடத்த' என்பது வள்ளுவர் வாக்கு இதனல்தான் இவர்கள் ''பொய்யை மெய்யாகக் கூறுவதைத் தர்ம நெறியாகக் கொண்டிருக்கின்ருர்கள்'' என்று எண்ண நேரிடுகின்றது. பேச்சுத் திறமையால் மயங்காதவர்களும் மயங்கி விடுகின்ருர்கள். இவை யாவும் மக்களிடம் நிகழும் திருமணப்பேச்சாகும்.

திருமணத்தூதர்:-

மன்னர் பேசும் திருமணப் பேச்சு வேறுவகையானதாகும். சுயவரத்தின் மூலம், அரசகுடும்பத்தில் பிறந்த பெண், தனக்குப் பிடித்தமான அரசனைத் தானே தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை பெற்றிருந்திருக்கின்ருர்கள். பெரியோர்கள் முயற்சியாலும் தூதர் வாயிலாகவும் திருமணங்கள் நடை பெற்றிருக்கின்றன. நாட்டில் நடை முறையில் இருந்து வரும் பழக்கத்திற்கு நேர் மாருக ஏட்டு வழக்கில் தூதர் மூலம் அரசன் பெண் கேட்கும் செய்தி கூறப்பட்டிருக்கின்றது இச்செய்தியைச் சிற்றிலக்கியங்களாகிய கலம்பக நூல்களால் அறிந்து கொள்கிருேம்.

''மறவர் குலத்தில் தோன்றிய மங்கையொருத்தியை மணம் புரிந்து கொள்ள விரும்பிய மன்னன் ஒருவன், தன் எண்ணத்தை

ஓலையில் எழுதித் தூதன் மூலம் அனுப்புவான். (பெண்ணிற்கல்ல; பெண்ணின் தந்தைக்கு;) அவ்வோலையைக் கண்டமறவன். மன்னர் குலத்தின் இழிவையும், மறவர் குலத்தின் உயர்வையும் கூறி பெண் கொடுக்க முடியாதென மறுத்துரைப்பான்''. என்பது, மறம் என்ற துறையின் இலக்கணமாகும்.

''மன்னனுக்குப் பெண் கொடுக்க முடியாது என்று மறவன் மறுத்துக் கூறுவான்'' என்பதை இக்கால மக்கள் பலர் ஏற்றுக் கொள்ளார் ஏனெனில், இக்காலத்திருமணங்கள் பல, பொருளை அடிப்படையாகக் கொண்டே நடைபெற்று வருகின்றன. ஆதலால் மறவன் மறுத்துரைப்பது மதியற்ற செயல் என்று மக்கள் கருதுவதும் இயற்கையானதேயாகும்.

மன்னனும்-மறவனும்:-

அரசனுடைய குறிக்கோள், ஆட்சிபீடத்தை அந்நியருக்கு விடக்கூடாதென்பதாகும். மறவனின் குறிக்கோள், எதிரிகள் தன் நாட்டில் புகாதவாறு அவர்களை எதிர்த்துப் போரிட்டு வீரத்தைக் காக்க வேண்டுமென்பதாகும் மன்னன் ஆட்சி புரிவதைச் சிறநத தெனக் கருதுகின்ருன். மறவன் வீரமுடன் போரிட்டு வெல்வதையே சிறந்ததெனக் கருதுகின்ருன். எனவே, அரசனுக்குப்பெண் கொடுத்தால், தன்பரம்பரை வீரம் இழந்த பரம்பரையாகி விடும் என்று கருதியே, மறவன் மறுத்துரைக்கின்ருன். இத்தகைய செய்திகளைக் கூறும் 'மறம்' என்னும் துறையில் அமைந்த செய்யுள் கருத்தொன்றினை இனி ஆராய்வோம்.

சிவப்பிரகாசர் இயற்றிய திருவெங்கைக் கலம்பகத்தில், 'மறம்' என்னும் துறையிலமைந்திருக்கும் செய்யுள் நம் சிந்தனையைக் கவர்வதாயிருக்கின்றது· மன்னன் தூதன் மூலம் அனுப்பிய ஓலையைக் காண்கின்ருன்.

உரையாடல்:-

மறவன் :- மணம் பேச வந்த தூதனே! உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கின்றதா? உன் இளவரசனுக்காகவா என் பெண்ணைக் கேட்க வந்தாய்.

தூதன்:-ஆம்! மன்னுதி மன்னன்! என் இளவரசன். அவ்வரசனுக்குப் பெண் பேச வந்திருக்கின்றேன்.

மறவன்:- தன்மனைவியை அழைத்துக்கொண்டுபோய் மற்றொருவனிடம் விலைபேசி வீற்றவன்யார்? உனக்குத்தெரியுமா?
தூதன்:- ஆம்! அரிச்சந்திரன்.

மறவன்:- காதலித்த மனைவியைக்காட்டிற்கு அழைத்துக்கொண்டு அரை ஆடையுடன் அவளை அங்கேயே விடுத்து ஓடியவன்யார்?
தூதன்:- நளச்சக்கரவர்த்தி.

மறவன்:- தன் மனைவியை அயலானொருவன் தூக்கிக்கொண்டு போனபின் மதிமயங்கி வானரங்களை யெல்லாம் படைவீரர்களாகச் சேர்த்துக்கொண்டு தன் மனைவியை மீட்கச் சென்றவன் யார்?
தூதன்:- இராமன்.

மறவன்:- அரசவையில் நிறுத்தி மனைவியை, மானபங்கப்படுத்த எண்ணி, அவளுடைய ஆடையை உரிந்தபோது, கோபங்கொண்டு எதிர்க்காமல், பொறுமையோடு பார்த்துக்கொண்டிருந்தவர்கள்யார்?
தூதன்:- பஞ்ச பாண்டவர்கள்.

மறவன்: இங்ஙனம், மன்னுதிமன்னர்களெல்லோரும், மனைவியைக் காக்கும் வலிமை அற்றவர்களாய் இருந்திருக்கின்றார்கள் என்பதை இவ்வுலகமே அறிந்திருக்கின்றது. உலகநிலை இங்ஙனமிருக்க,உன் இளவரசன் மட்டும் எங்ஙனம் வீரமுடையவனாக இருக்கமுடியும்? இவனுக்குப் பெண்கொடுத்தால் மறவர் குலத்தின் மாண்பு அழிந்துவிடும்: எனவே பெண்கொடுக்க மாட்டேன்.

தூதன்:- மன்னனிடம் சென்று என்ன சொல்வதென்றே எனக்குப் புரியவில்லை. என்னசெய்யலாம்.?

மறவன்:- ஆம்! நீசென்று அவனுடைய முகத்தில் எச்சிலைத்துப்பு. இந்த ஓலையைக் காற்றில் பறக்கவிடு. திருமணப்பேச்சைப் பேசினால் அவன் வாயைக்கிழி,
தூதன்:- தாங்கள் என்ன கூறினீர்கள்'என்று கேட்டால் நான் என்ன சொல்வது?

மறவன்:- நாங்கள் திருவெங்கை மாநகரில் வாழும் வேடுவர்கள் வெற்றி என்ற செல்வத்தை வேந்தர்கட்குக் கொடுப்பவர்கள். எங்கள் குலத்துடன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பினர் சிவபெருமான். இதற்காகத் தன் மகனுகிய முருகக் கடவுளுக்குஎங்கள் குலத்தில் பிறந்த வள்ளியை, மணம்பேசி முடிக்க எண்ணினர். எங்கள் விருப்பத்தைப்பெறுதற்காகவே, எம்குலத்தில் தோன்றிய கண்ணப்பர் கொடுத்த எச்சில் உணவுகளையெல்லாம் உண்டு, எங்கள் அபிமானத்தைப் பெற்று, வள்ளியைத் தன் மகனுக்கு மணம் பேசி முடித்தார்.

தூதன்:- உங்கள் குலத்தில் பிறந்த பெண்ணை, உங்கள் குலத்தில் தோன்ருத முருகனுக்குக் கொடுத்திருக்கும் போது, நீங்கள் மட்டும் ஏன் மறுக்கின்றீர்கள்?

மறவன்:- எனக்குக் குல வேறுபாடில்லை. வீரம் பொருந்தியவர் எவரோ? அவரெல்லாம் எம்குலத்தவர் என்றே கருதுகின்றேன். முருகனின் வீரத்தை நீ அறியவில்லை? அறிந்திருந்தால் இவ்வாறு கேட்டிருக்க மாட்டாய். முருகனுக்குப் பெண் கொடுத்தற்கு மற்ருேர் காரணமும் உண்டு. வள்ளி எங்கள் குலத்தில் வளர்ந்தவளே தவிர பிறந்தவளல்லள். என்பதையும் நீ எண்ணிப்பார்க்க வேண்டும். அவள் எங்கள் குடும்பத்தில் பிறந்தவளாக இருந்தால் கண்டிப்பாகக் கொடுத்திருக்க மாட்டோம்.

தூதன்:-வணக்கம். வருகின்றேன்.

இங்ஙனம் மறவனுக்கும் மன்னர் தூதனுக்கும் நிகழ்ந்த உரையாடற் கருத்தை உள்ளடக்கிய செய்யுள் இதுதான்:-

விற்ற தார்? கலை பாதியோடுவனத்திலேயழ விட்டதார்?
வெஞ்சிறைபுக விட்டதார்? துகில் உரிய
விட்டுவிழித்ததார்?
உற்ற தாரமும் வேண்டுமென்றினி மன்னர் பெண்கொள ஒண்ணுமோ?
உமிய டாமண மென்ற வோலை கிழித்து காற்றிலுருட்டடா

வெற்றியாகியமூத்தி தந்தருள் வெங்கைமாநகர் வேடர்யம்
விமலரானவர் எமையடுத்தினி தெங்கள் மிச்சில் மிசைகந்தபின்
பெற்ற வேலர் தமக்குயாமொரு பெண்வளர்ப்பிணீ லீக்தனம்
பெற்றபிள்ளை கொடுப்பரோ இதன் பேய்பிடித்திடு தூதரே.

முடிவுரை:- கலம்பக நூல்களில் பதினெட்டுவகையான துறைகள் அமைந்திருக்கின்றன. ஒவ்வோர் துறையிலும் துறைக்கேற்ற பொருள்கள் இனிதே விளக்கப்பட்டிருக்கின்றன. இத்துறைகளுள் மறம் என்ற துறையிலமைந்த செய்யுளொன்றை மட்டும் இங்கு ஆராய்ந்தோம். எஞ்சிய துறைகளில் கூறப்பட்டிருக்கும் கருத்துக் களும் கற்றின்புறத்தக்கனவாயிருக்கின்றன. இருப்பினும், ஒருபானை சோற்றுக்கு ஒருசோற்றைப் பதம் பார்ப்பது போல் ஒருதுறையையே நோக்கினேம் திருமணத்தரகர்களை நம்பி வாழ்க்கையில் ஏமாற்ற மடைந்திருக்கின்ற சிலருக்கு, இத்தலைப்பிலமைந்த செய்திகள் சிறிது ஆறுதல் அளிப்பதாக அமைந்திருப்பதோடு எதிர்கால வாழ்விற்குத் தரகர்களை எதிர்பார்ப்பவர்க்கும் இஃது முன்னறிவிப் பாகவும் அமைந்திருப்பதை அனைவரும் உய்த்துணர்ந்தறிந்து இன்புறுவார்களாக.

——

## ● தமிழுக்குக் கதி.

தமிழ்மக்கள்வைத்தற்குரியதமிழ்நூல்கள்ஒன்றுகம்பராமா யணம், மற்றொன்று திருக்குறளுமாம். அவற்றுள் குறள் முதலாவதாகவும், இராமாயணம் இரண்டாவதாகவும் வைத் தற்குரிய கருவூலமாகும். கம்பரும், திருவள்ளுவருமே தமிழுக்குக்கதி. அவர்கள் பெயர்களில் உள்ள முதலெழுத்துக்கள் மேற்கூறிய கருத்துக்கொண்டதாகும்.

# தமிழ்ச் சங்கத் தமிழ் ஆய்வுக் கழகம்

'பாரெல்லாம் பைந்தமிழ் பரவுக'

—பாண்டித்துரைததேவர்.

தமிழ்ச் சங்கத் தமிழ்ஆய்வுக் கழகத்தின் சார்பில் செப்டம்பர். திங்கள் 22ஆம் நாள் மாலே 4 மணிக்கு 'அனுமன் தூது' என்ற தலைப்பில் மதுரைக் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் திருமிகு. சீனி. சௌமிய நாராயணன் எம். ஏ. அவர்கள் ஆய்வுரை நிகழ்த்தினுர்கள். நிர்வாகக்குழுஇயக்குநர் திருமிகு, தெய்வசிகாமணி பி. எ. பி. எல்., அவர்கள் தலைமை தாங்கினுர்கள். தலைமையுரையின் போது இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து தமிழ்ச்சங்கம் நடத்தி வருவது தமிழ்ச் சங்கத்தின் பெருமைக்குச் சான்று பகரும் என்ருர். புலவர் வி. சி, சீனிவாசன் அவர்கள் வரவேற்புரை வழங்க மாணவர் ஆறு. பாலசுப்பிரமணியன் நன்றி நவின்ருர். மொழி வணக்கம் பாடித் தொடங்கிய ஆய்வுரை நாட்டு வாழ்த்துடன் முடிவுற்றது.

# அனுமன் தூதும் ஆழியோன் தூதும்

## 1. தூதுவரும் இலக்கனமும்

### தூதுவர் மூவகைப் படுவர்

தானறிந்து கூறும்தலே, மற்றிடையது
கோனறைந்தது ஈதென்று கூறுமால்–தானறியாது
ஓலேயே காட்டும் கடை என்றெரு மூன்றும்
மேலேயோர் தூதுரைத்த வாறு'——பாரவெண்பா.

இம் மூன்றில் பரிமேலழகர் முதல் இரண்டினை அதாவதுதான் வகுத்துக் கூறுவான், கூறியது கூறுவான் என்பனவற்றை ஏற்று மூன்ருவதான தானறியாது ஓலேயே காட்டுவானே விட்டு திருக்குறள் தூது அதிகாரத்தில் அவற்றிற்குரிய இலக்கணங்களே வகுத்து க் காட்டுகிருர். இனி அவர் காட்டும் இலக்கணங்களைக் காண்போம்.

**தூதுவருக்குரிய பொது இலக்கணங்கள்**

வள்ளுவரின் தூது என்னும் அதிகாரத்தின் முதல் இரண்டு குறள்களையும் தூதுவருக்குரிய பொது இலக்கணமாக வகுத்துக் காட்டுகிறார் அவையாவன-தன் தலைவனிடத்தும் சுற்றத்தாரிடத்தும் அன்புடமை, அமைச்.- பூணற்கு ஏற்ற நற்குடிப் பிறப்பு, அரசர் விரும்பும் பண்புடமை. அரசர்க்கு ஆவன அறியும் அறிவுடைமை, ஆராய்ந்த சொல் வன்மை, ஆகியவையாம்.

**தான் வகுத்துக் கூறுவானுக்குரிய சிறப்பிலக்கணகம்**

அடுத்த ஐந்து குறள்களையும் இதன்பாற் படுத்துகிறார். அவை-நீதிநூல் வல்லனுதல், இயற்கை அறிவுடையனுதல், கண்டார்விரும்பும் தோற்றப் பொலிவு, ஆராய்ந்த கல்வி, வெய்ய சொல் நீக்கி கேட்பவர் மனம் மகிழுமாறு தொகுத்துரைக்கும் ஆற்றல், தான் நீதிநூல் கற்ற ஆற்றலால் தான் மேற்கொண்ட செயலை பகை வேந்தர் மனம்கொள்ளச் சொல்லி அவர் செயிர்த்து நோக்கற்கு அஞ்சாது காலத்தோடு நோக்கி செயலை முடித்தல்; செயல் செய் முறை, காலம், இடம் அறிதல்.

**கூறியது கூறுவானுக்குரிய இலக்கணம்**

அவ்வதிகாரத்தின் கடைசி மூன்று குறள்களை இதன் பாற் படுத்துகிறார். அவ்விலக்கணங்கள் ஆவன-பொருள் காமங்களால்:-தூய்மை, துணிவுடமை, பகைவர் அவையில் தனக்குத் துணையுடைமை, மெய்மை, தனக்கு வரும் ஏதத்திற்கு அஞ்சி அரசனுக்குத் தாழ்வான சொற்களை வாய்சோர்ந்தும் கூருமை, இறுதி பயப்பினும் அஞ்சாது, தன் மன்னனுக்கு உறுதி பயப்பன செய்தல்.

மேற்கண்ட தூதிலக்கணத்தின் படி காப்பியங்களில் காணும் முதல் வரிசைத் தூதுவர்களில கம்பனின் அனுமனும், வில்லியின் ஆழியானும், (கச்சியப்பரின், வீரபாகுபும்) முதல் நிலை பெறத் தகுந் தவர்கள். இவர்களின் இத்தூதின் தன்மையை ஒப்பிட்டு ஆராய்தல் அறிவுக்கு இன்பம் பயப்பதாம். முதற்கண் இராமதூதனின் செயல்களையும் தன்மைகளையும் ஆராய்வோம்.

## அனுமன் தூது

*முன்னுரை:-*

அனுமன் சென்ற தூதுகள் மூன்று. அவற்றில் இரண்டு புறத் தூதுகள். ஒன்று அகமும் புறமும் கலந்தது. முதலில் சுக்கிரீவனின் ஒற்றனாக இராம இலக்குவரைக் காணச் சென்று நட்புத் தூதனாகச் செயல்படுகிறான். அடுத்து இராகவனின் தூதனாக இலங்கை சென்று பிராட்டியை அகத்தூதனாகவும், இராவணனைப் புறத்தூதனாகவும் கண்டு வருகிறான். மூன்றாவது இராமன் திரும்பும் செய்தியை பரதனிடம் கூறும் புறத்தூதுவனாகச் செயல்படுகிறான். இம்மூன்று தூதுகளிலும் இலங்கை சென்ற தூதே மிகச் சிறப்புடையதாக அமைகிறது. அதன் வாயிலாகவே அனுமன் 'இராமதூதன்' என்னும் சிறப்புப் பெயர் பெறும் நிலையை எய்துகிறான். அனுமனுக்குச் சிரஞ்சீவித் தன்மையை அளிப்பதும் இத்தூதே. அனுமன் மூன்று தூதுகளிலும் ஒற்றுவேலை மேற்கொண்டாலும் அவனை வெறும் ஒற்றனென்று சொல்ல முடியாது. ஏனெனில் ஒற்றன் ஒற்றறி செய்தி கொண்டு வருவானே யொழிய தலைவனைத் தவிர பிறரிடம் தன்னை வெளிப் படுத்திக் கொள்ளமாட்டான். ஆனால் அனுமனோ இம்மூன்று நிலைகளிலும் யார் யார் பால் செல்கிறானோ அவர்களிடம் தன்னை வெளிப்படுத்திக் கொண்டு தன் தலைவனின் செய்தியைக்கூறி சந்து செய்விக்கமுயன்று அவர்தம் செய்தியினையும் தன் தலைவனுக்கு உணர்த்துகிறான். இம்மூன்றுநிலைகளிலும் அனுமனின் முதல் நிலைத் தூதுவனின் இலக்கணத்திற்கேற்ற ஆற்றல் சுடர் விட்டொளிர்கிறது. இது எங்ஙனம் என ஆய்வோம்.

**சுக்ரீவன் சார்பில் இராகவன் பால் சென்ற நட்புத் தூது:—**

இது அனுமன் மேற் கொண்ட புறத்தூது. இராம இலக்குவர் இரலையின் குன்றின் மேல் ஏறி வருகின்றனர். அவரைப் பகைவர் என அஞ்சிய சுக்ரீவன் அஞ்சி மலை முழையினுள் ஒடுகிறான். அப்போது தன் ஐயத்தினால் ஏற்பட்ட அச்சத்தை அமைச்சனான அனுமனிடம் கூறி 'இவர் காண்மினோ' 'நீதியா நினையின்' எனக் கட்டளையிடுகிறான். இதன் பொருளாவது இவர்களைக் கண்டு அரசியல் நீதிக்கேற்ப யாரென்று ஆராய்ந்து கண்டறி என்பதாகும். தன் தலைவன் கட்டளையை ஏற்றுக் கொண்ட அனுமன் அவர்களை நோக்கிச் சென்ற தொலை தூரத்திலிருந்தே அவர்கள் வடிவமும் செயலும் ஆய்ந்து 'இவர் வாலியின் ஆட்கள் அல்ல' எனத் தேறு

கிருன். பின் சுக்ரீவன் முதலியோருக்கு ஆறுதல் கூறித் தன் செயலைச் செவ்வனே செய'மாணி' வடிவில் புறப்படுகிருன். இங்கு அனுமனின் இயற்கை அறிவும் ஆராய்ந்த கல்வியும் வெளிப்படுகின்றன பின் அருகில் நெருங்கி அவர்தமைத் தோற்றத்தாலே எடையிட்டு பேரன்பிற்கு உரியவராகக் காண்கிருன். எனினும் எச்சரிக்கையாக 'கவ்வையின்ருக நும் வரவு' என பல பொருள்பட வரவேற்கிருன். இச் சொற்கள் அனுமனின் சொல்லாற்றலை உணர்த்துகின்றன இச் சொற்ருெடர் மூவகைப் பொருளைப் பெற்றிருப்பதை உணர்ந்து மகிழ்கிருேம். 1. "நும் வரவினுல் நுங்களுக்குத் துன்பம் இன்றி அமைவதாகுக" என்ற வாழ்த்தலுடன் 2. "நும் வரவினுல் எமக்குத் துன்பங்கள் இல்லாமல் நீங்குவதாகுக" என்ற வேண்டல் விருப்பத்துடன், 3 "நும்வரவினுல் எமக்குத் துன்பங்கள் ஏற்படாமல் இருப்பதாகுக" என்ற ஐய எச்சரிக்கைப் பொருளும் தொனிப்பதைக் காண்கிருேம். அனுமனைக்கண்ட இராகவன் 'யார்' என வினவ அனுமன் வாய்மை பிறழாது மாணிவடிவத்துடனேயே தன் உண்மை வரலாற்றைக் கூறுகிருன். பின் சுக்ரீவனைக் காண விரும்பிய இராமனிடம் தன் தலைவனின் துன்பநிலை கூறி 'சரணமாக அடைபவரைக் காத்தல் அறம்' என்ற நீதியைக் காட்டித் தன் தலைவனுக்கு நலம் சேர்க்க முயலுகிருன். இலக்குவன் வாயிலாக இராமன் வரலாறு உணர்ந்தபின் இராமனைத் தான் கொண்ட வடிவத்துடன் வணங்க இராமன் வியப்பெய்து 'மாணி வடிவத்தனுகிய நீ என்னை வணங்குதல் அறமோ?' என்ன அனுமன் 'யான் அரிக்குலத்தான்' என்று தன் உண்மைப் பேருருக் காட்டுகிருன். பின் சுக்ரீவனை அழைத்து வருவதாகச் சென்று இராமன் செய்திகளைச் சுக்ரீவனுக்கு அறிவித்து அச்சம் போக்கி இராகவன் பால் உய்த்து இராமனின் உயிர்த்துணைவனுக்கினுன். அத்துடன் சுக்ரீவன் மனதில் ஐயம் போகுமாறு இராமனை மராமரம் எய்யுமாறும் இலக்குவனை துந்துபி எலுமபை எற்றுமாறும் செய்து சுக்ரீவன் மனதில் வாலிவதத்திற்கான நம்பிக்கையை ஊட்டுகிருன் இதற்குமேல் கலன்காண் படலத்தில் 'சானகியை' மீட்டல்' முதலா 'வாலிவதம் முதலா' என்ற உணர்ச்சி வழிச் சிக்கல் தோன்ற அனுமன் உணர்ச்சி வழிப் படாத தன் அறிவுச் சமன்பாட்டால், வாழிவதம் முதலில் நடந்தால்தான் சானகியைத் தேடி அடையத் தக்க படைபலம் பெற முடியும் என விளக்குகிருன் இங்ஙனம் தன் தலைவன் மற்றும் இராகவன் ஆகிய இருவருக்கும் நலம் பயக்கும் முறையில் இத்தூதுப் பணியை

முடிக்கிறன். இதில் அனுமனுடைய இயற்கை அறிவையும், ஆராய்ச் சித் திறனையும், நீதி நூல் கல்வியுடன் காலம் இடம் செயல் அறிந்து வினை செய்யும் ஆற்றலையும், தன் தலைவனுக்கு ஆவன செய்யும் திறப்பாட்டையும் இராகவனே கண்டு,

"நாட்படா மறைகளாலும் நவை படா ஞானத்தாலும்

கோட்படா பதமே ஐய குரக்குருக் கொண்டதென்று"

வியக்குமாறு அமைந்த உருவச்சிறப்பினையும், வெய்ய சொல் நீக்கி கேட்டவர் மனம் மகிழுமாறு சொல்லும் சொல்லாற்றலினையும் காண்கிறோம்.

**இராகவன் தூதன்:-**

இது அனுமன் ஏற்கின்ற இரண்டாம் தூது.சீதையைத் தேடும் வேலை தொடங்குகிறது. அனைத்து வானரர்களும் இவ்வொற்று வேலையை மேற்கொள்ளுகின்றனர். ஆனல் அனுமன் ஒருவனுக்குத் தான் அத்துடன் தூதுப்பணியும் கிட்டுகிறது. சுக்ரீவனே ஏற்கனவே இராமன் யார் என்பதை ஒற்றுல் அறிந்து பின் தூதுவனுய்ச் செயல் பட்டு வாலிவதத்தை நிகழ்த்திய பெருமையைக் கருதியே போலும்

"தென்றிசைக்கண் இராவணன் சேணகர்

என்றிசைக்கின்ற தென்னறி வின்னணம்

வன்றிசைக்கினி மாருதி நீயலால்

வென்றிசைக்குரியார் பிறர் வேணடுமோ" என்ற பாராட்டுடன் அவனுக்குரிய பணியினையும் குறிப்பினல் அறிவித்து, வானரர்களில் வலியரான தாரைமைந்தன் அங்கதனையும் எண்கின் வேந்தன் சாம் பவந்தனையும் உடன் படுத்துகிறன். இராகவனே இன்னும் ஒருபடி மேலாக அவனையே சீதையின் பால் விடுக்க தன் அகத்தூதனுகத் தேர்ந்து

"மாருதியை நிறையருளா லுற நோக்கி நீதி வல்லோய்:

காண்டி எனிற்

குறி கேட்டி" என வேறு கொண்டிருந்து' சீதையின் வடிவச் சிறப்பும் அடையாளச் செய்திகளையும் கூறி, ஆழியையும் நல்கி விடுக்கிறன். இங்ஙனம் சுக்ரீவன் குறிப்பினல், இராகவன் சார்பில்

சீதைபால் செல்லும் அகத்தூதோடு. அங்குள்ள நிலைக்கேற்ப இராவணன் பால் புறத்தூதையும் மேற்கொண்ட நிலையில் புறப்படுகிறான். சிறந்த அமைச்சன் என்ற நிலையில்செல்லுமிடத்தின் தன்மைக்கேற்ப புறத்தூதைத்தானாகவே தீர்மானிக்கும் உரிமை இங்ஙனம் குறிப்பினால் அனுமனுக்கு அளிக்கப்படுகிறது.

தென்றிசையில் சென்ற வானரங்கள் பல இன்னல்களைக் கடந்து தன் கடலை அணுகி சம்பாதி வாயிலாகச்சீதையை இராவணன் இலங்கையில் சிறை வைத்திருப்பதை உறுதி செய்து கொள்ளுகின்றன அத்தோடு இலங்காபுரியின் கிட்டுதற்கருமையை அவன் வாயிலாகவே உணர்ந்து அனைத்து வானரரும் பின்வாங்குகின்றனர். அடக்கமுடைய அனுமனைச் சாம்பன புகழ்ந்து ‘நீரே இதற்கு வல்லீர்’எனப் பணிக்க முன்பே சுக்ரீவனாலும் இராகவனாலும் இதற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட அனுமன் முப்பெரும் பணிகளை, அதற்குமேல்தான் ஒருவனே மேற்கொண்டு புறப்படுகிறான். 1. சீதை இருக்குமிடம் காணும் ஒற்றாடல் 2. கண்டபின் காகுத்தன் செய்தி கூறி அவள் உளம் தெற்றி செய்தி பெறும் அகத்தூது. 3. அதன் பின் இராவணன் பால் இராமன் ஆற்றல் உணர்த்தி, நீதி கூறி அவனைச் சந்திற்குத் திருப்பும் அரசியல் புறத்தூது. இதில் முதற்கண் செய்ய வேண்டுவது சீதை இருக்குமிடம் நாடும் ஒற்றாடல் பணியாதலால் அது முடியும் வரை தன்னை வெளிப்படுத்திக்கொள்ளா ஒற்றனாகவே செயல் படுகிறான். இரண்டாவது அகத்தூதுவனாக சீதைபால் செல்லுங்கால் அப்பணிக்கேற்ப தன்னை அவளுக்குமட்டும் யார் எனக் காட்டி நம்பிக்கையூட்டி செய்தி சொல்லி செய்தி பெறுகிறான். அப்பணி முடிந்த பிறகே தன்னை அரசியல் புறத்தூதனாக மாற்றி வெளிப்படுத்தும் செயல்களை மேற்கொள்ளுகிறான். இங்ஙனம் அனுமன் முச்செயல்களையும் செவ்வனே முடிக்கும் திறத்தினைக் காண்போம்.

அனுமன் மகேந்திரமலையின் மேல் நின்று கடல் கடக்கும் ஆற்றல் தோன்ற பேருருக் கொள்கிறான். பின் கடலில் பாய்ந்து வடக்கெழுந்திலங்கை செல்லும் பரியைதிப் போலும், ஊழிநாள் டைபால் செல்லும் உவா மதியினைப்போலும். கடலெலாம் கலங்கத் தாவும் கலுழனைப்போலும் இலங்கை நோக்கிச் செல்கிறான் இடையில் நன்றி உணர்வுடன் அனுமனுக்கு விருந்தோம்பல் செய்ய மைந்நாகம் எழுகிறது.

"ஈண்டு கடிதேகி இலங்கை விலங்கல் எய்தி
ஆண்டாள் அடிமைத் தொழில் ஆற்றலின் ஆற்றல்
உண்டேல்
மீண்டுயான் நுகர்வேன் உன் விருந்தென" கூறி மேற்
செல்கிறுன்

காகுத்தல் பணியே கண்ணுய்க் காண்ட கொலின் மைந்தன். சோதனைக்கு வரும் சுரசையை வென்று அங்காரதாரகையை அலமரக் கொன்று இலங்கையின் பவளவெற்பில் பாய்கிறுன். பாற்கடல் வண்ணனுன அனுமன். துறக்கம் போன்ற இலங்கையை நோக்கி வியந்து பாராட்டுகிறுன். இராவணனின் ஆட்சியும் மாட்சியும் அவனை வியப்பிற்குள்ளாக்குகின்றன. நல்ல உள்ளத்துடன் அத்தனையும் அவனது மறச்செயலால் அழியப்போகிறதே என்று பின்னுல் இரக்கமும் கொள்வான். ஊருக்குள் நுழைய தன். மேனி சுருக்கிப்புற மதிலைத் தாவி உள்ளே பாயும்போது இலங்கை மாதேவி எதிர்ப்படுகிருள் இலங்கை மாதேவி அனுமனுடன் போர் உடற்றி வீழ்ந்து பின் பிரமன் ஆணை நினைந்து மனம் தேறி அனுமனை வாழ்த்தி அகலுகிருள். ஊருக்குள் நுழைந்த அனுமன் புற நகரில் கும்பகருணன், வீடணன், இந்திரசித் அக்கன் மற்றும் படைத் தலைவர் ஆகியோரின் இருக்கைகளைக் கண்டு அவர் தம் ஆற்றலையும் தன்மைகளையும் எடை போட்டவாறே இடை நகருக்குள் புகுகிறுன் அங்கு தேடியபின் அக நகருள் புகுந்து இராவணன் மாளிகையைச் சுற்றியுள்ள அவன் உரிமைமகளிராய் விளங்கும் இயக்கியர், அரக்கியர், வித்யாதரப் பெண்கள் ஆகியோரின் இருப்பிடங்களைக்கண்டு மந்தோதரி மாளிகையைக் காண்கிறுன். அங்கு மந்தோதரியைப் பத்தினிப் பெண்களுக்குரிய ஒரு சில பொது அடையாளங்கள் காரணமாக சீதையோ என ஐயுற்று உடனயே

"கானுயத்தார் இராமன் மேல் நோக்கிய காதல் காரிகையார்க்கு
மீனுயர்த்தவன் மருங்குதான் மீளுமோ? நினைந்தது மிகை,

எனத்தேறுகிறுன். பின் இராவணனை அவன் மாளிகையில் விரகத்தால் தவிக்கும் நிலையில் கண்டு சீற்றம் முற்றித் தெற நினைக்கிறுன். உடனே 'நேமியோன் பணியன்ருல்' என அமைந்து தேடலை மேற்கொள்ளுகிறுன். இராவணன் நிலைகண்டு தன் நுண்ணுணர்வால்

சீதை உயிரோடு இருப்பதை உணர்ந்து தேறுதல் கொள்ளுகிருன். தேடி மனஞ்சலித்த நிலையில் அசோக வனத்தைக் காண்கிருன். அங்கு அரக்கியரால் புடை சூழப்பட்ட கற்பின் கனலியை அடையாளத்தால் தேர்ந்து, காணும் காலம் நோக்கி ஒரு மரத்தில் மறைந்து அமருகிருன். அப்போது சீதை பால் காதலை இரக்க இராவணன் வருகிருன். இருவர் தம் உரைகேட்டு,

''கூசி ஆவி குலை உறுவாளையும்
ஆசையால் உயிர் ஆகழிவானையும்
காசில் கண்ணினை சான்றெனக் கண்டு''

நிலை உணர்ந்து ''வாழி சானகி; வாழி இராகவன்; வாழி நான்மறை; வாழிய அந்தணர்; வாழி நல்லறம்; என வாழ்த்துகிருன். இராவணன் தன் ஆசை நிறைவேருச் சீற்றத்துடன் சீதையைத் தெருட்டி ஏக, அரக்கியர் சீதையை நெருக்கி அச்சுறுத்துகின்றனர். பின் திரிசடை அடக்க அடக்குகின்றனர். இத்துடன் அனுமனின் ஒற்றுடல் பணி நிறைவு பெற்றுவிடுகிறது. அடுத்த பணியாம் அகத்தூதை மேற்கொள்ள நினைத்து தன் விஞ்சை ஆற்றலால் அனைத்து அரக்கியரையும் உறக்கத்தில் ஆழ்த்துகிருன். இராவணன் சொற்களாலும் அரக்கியர் தெருட்டலாலும் வருந்திய சீதை அனைவரும் உறங்குந் தருணம் நோக்கி உயிர் மாய்த்துக் கொள்ள ஆயத்தமாகிருள். இதை அவள் செயற்குறிப்பினல் உணர்ந்த அனுமன் 'அண்டர் நாயகன் அருள் தூதன் யான் எனத் தொண்டை வாய் மயிலினைத் தொழுது தோன்றுகிருன்' ஒற்றன் தூதனுக வெளிப்படுவதை 'தோன்றினன்' என்ற சொல்லினல் கவி காட்டும் பாங்கு துய்த்து இன்புறற்குரியது. அனுமனின் சொல்லாற்றல் சுடர் விடுகிறது அவன் அறிவு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. 'தூதன்' என்று தோன்றியவன் முதற்கண் தான் அங்கு எப்படிவந்தான் என்பதைக் கூறி, இராமனின்தூதன் என்பதற்குச் சான்ருக இராமனின் வடிவழகை விவரித்து, பின் நம்பிக்கை ஏற்படுமாறு இராமன் கூறிய அடையாளச் செய்திகளைக் கூறி இறுதியில் அவனளித்த அடையாளப் பொருளாம் ஆழியைக் காட்டுகின்ருன். முதலிலேயே ஆழியைக் காட்டாது படிப்படியாக நம்பிக்கை ஊட்டுமாறு செய்திகளைக் கூறி இறுதியில் அவற்றிற்கு முத்தாய்ப்பு வைத்தாற் போல் ஆழியை அளித்தது அனுமனின் பேரறிவிற்கு எடுத்துக்காட்டாம். இங்ஙனம் முழு நம்பிக்கையூட்டியபின் சீதை பிரிந்த பின் இராமனது நிலை:

செய்தி, ஆகியவற்றைக் கூறி இராமனுக்கு சீதைபால் உள்ள பெருங் காதலினைப் புலப்படுத்துகிறான். கடல் கடந்த தன் பேருருவை அவன் காட்டி அவள் மனதில் விரைவில் விடுதலை பெறும் நம்பிக்கையை வித்துகிறான். அவளை உடன் கொண்டு செல்ல உடன்படுமாறு வேண்டுகிறான். அது தூயவன் வில்லாற்றலுக்கு மாசு என அன்னை மறுக்க இராமனிடம் கூறச் செய்திகள் இறைஞ்சுகின்றான். சீதை கூறிய செய்தியில் அவலமும் ஆற்றாமையும் ஊடுருவுவதைக் கண்டு அனுமன் அவள் உளம் தேறுமாறு பலவற்றைக் கூறி இறுதியில்

''சூராவருங் குழலி இக்குறித்த நாளிலே
விராவரு நெடுஞ்சிறை மீட்கிலானெனில்
பராவரும் பழியொடும் பாவம் பற்றற்கு
இராவணன் அவன் இவன் இராமன்னெறனன்''

இதனால் மனந்தேறிய அன்னை இராமனிடம்கூற அடையாளச்செய்திகளைக் கூறி சூடாமணி அளிக்கப் பெறுகின்றான். இத்துடன் அனுமனின் அகத்தூது முடிகிறது. இதன் கண் அனுமனின் ஆவன அறியும் அறிவும், காலம் இடம் அறிந்து செயல் படும் திறன், ஆராய்ந்த சொல் வன்மை, நீதிநூல் வன்மை ஆகிய பண்புகள் விளங்கக் காண்கிறோம்.

**அனுமனின் இரண்டாம் தூது:-**

அனுமனை வெளிப்படையாக இராமனோ, சுக்ரீவனோ, இராவணனைச் சந்தித்துச்செய்திசொல்லி, அவன்உளம் அறிந்துவரக் கூறவில்லை. காரணம் சீதையை இராவணன் தான் தூக்கிப்போய், இலங்கையில் சிறை வைத்துள்ளான் என்பதை உறுதியாய் அறிந்த பிறகுதான் அத்தகைய தூதை அவர்கள் பணிக்கஇயலும். எனவே சுக்ரீவன் குறிப்பாக 'வன்றிசைக்கு நீயலால்வென்றிசைக்குரியார்பிறர் வேண்டுமோ' எனக்கூறி அவனுக்கு முழு உரிமையும் வழங்கிச் செயல்படக் கூறுகிறான். எனவே சீதை இலங்கையில் சிறைப்பட்டிருப்பதை உறுதியாகக் கண்டுணர்ந்தபின் அனுமன் சுக்ரீவன் குறிப்புணர்ந்து தென்றிசைத் தண்டநாயகன் அங்கதன் தூதுவன் என்ற முறையில் தானே இராகவன் சார்பில் இராவணனிடம் தூது பேசமுடிவெடுக்கிறான். இதை கம்பன்

''சிறித்தொழின்முடித்தகறல் தீதென தெரிந்தான்
மறித்துமொர் செயற்குரிய காரியம் மதித்தான்''

என்று குறிப்பிடுகிருன்.

எனவே அனுமன் தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்றும் மூதற் கட்டமாக பொழிலிறுக்கிருன். ஒற்றனுக இலங்கையில் புகுந்ததால் நேரடியாக வாயில் வழியேதான் இன்னுர் தூதுவன் எனக் கூறி இராவணனைச் சந்திக்க வாய்ப்பில்லை. எனவே போர் உடற்றி அதன் வாயிலாக இராவணனைத் தன் ஆற்றல் தோன்றச் சந்தித்து சந்து பேச விழைகிருன். தனது ஆற்றலைக் காட்டுவதன் மூலம் இராவணனுக்கு 70 வெள்ளம் வானரப்படைகளின் ஆற்றலையும் அதன் தலைவனுன இராகவனின் ஆற்றலையும் ஓரளவிற்கு உணர்த்த வழி செய்கிருன். எனவே அதற்கு முன்னேடியாக பொழிலிறுத்துப் பூசல் விளைத்து எதிர்த்த எண்ணிறந்த அரக்கர்களையும் படைத் தலைவர்களையும் அக்குமாரனையும் கொன்று, இறுதியில் பிரமன் மதிப்பளிக்க வேண்டுமென்ற உணர்வால் இந்திரசித் எய்த அப்படைக்குபடைக்குக் கட்டுண்டு இராவணன் அவையை எய்துகிருன்: அவனைக் கண்ட இராவணன்,

'நேமியோ குலிசியோ, நெடுங்கணிச்சியோ
தாமரைக் கிழவனே தறுகட் பஃறலைப்
பூமிக் கொருவனே?' என்று வியந்து கேட்க அனுமன் தன்
தலைவன் பெருமை தோன்ற

''சொல்லிய அனைவருமல்லன் சொன்னவப்
புல்லிய வலியினேர் வல் பூண்டிலன்
அல்லியங் கமலமே அனைய் செங்கணேர்
வின்லிதன் தூதன் யான் இலங்கை மேயினேன்'' என்று

தொடங்கி,

இராமனின். ஆற்றலைப் பரக்கக் கூறுகிருன் பின்

',அன்னவர்க் கடிமை செய்வேன் நாமமும் அனுமன் என்பேன்.
நன்நுதல் தன்னைத்தேடி நாற்பெருந் திசையிற் போந்த

"மன்னறிந்த றென்பால் வந்த தானைக்குமன்னன் வாலி
தன் மகனவன்றன் தூதன் வந்தனென் தனியே"

என்று முடிக்கிருன். முன்பு, 'வில்லிதன் தூதன் இலங்கை மேயினேன்' என்று கூறிய அனுமன் இங்கு 'வாலி தன் மகன்றன் தூதன் வந்தனென் தனியேன்' என்று முரண் படக் கூறுகிருனே எனில் அற்றன்று. 'வில்லிதன் தூதன் யான் இலங்கை மேயினேன்' என்று கூறுவதிலிருந்து அவன் இலங்கை வந்த முதல் காரணமாகிய சீதை பால் வந்த அகத்தூதினைக் குறிப்பிடுகிருன் வாய்மை பிறழாத அனுமன். இதன் வாயிலாக நேரடியாக இலங்கை புகாமைக்கும் புகுந்த உடன் இராவணனைக்காண வராமைக்குமான காரணம் குறித்துக் காட்டப்படுகிறது. பின் 'வாலிதன் மகன் அவன் தூதன் வந்தெனன் தனியே' என்பதன் வாயிலாகச் சுக்ரீவன் குறிப்புக் கொண்டு, அங்கதன் தலைமையின் கீழ் வந்துதான், அவன் உடன் பாட்டுடன் இராவணன் பால் புறத்தூதை மேற்கொண்ட நிலையைச் சுட்டிக் காட்டுவதுடன் தனக்குத்துணையாகப் பெரும் வானரப்படை தென் கடற்கரையில் காத்திருக்கும் நிலையையும் இராவணனுக்குச் சுட்டிக் காட்டுகிருன். அத்துடன் இராவணனிடம் வாலிபற்றிக் குறிப்பிட்டு அவன் ஆணவத்திற்கு ஒரு அதிர்ச்சியையும் ஊட்டு கிருன். அனுமன் எதிர்பார்த்தபடி வாலியின் பெயர் வரக் கேட்ட இராவணன் சிறிது குழைந்து 'வாலி வலியனே' என்ன அனுமன் நகைத்து அஞ்சலை அரக்க அஞ்சன மேனியான் தன் அடுகணை ஒன் ருல் வெஞ்சின வாலி மீளான்' வாலும் போய் பிளிந்ததன்றே' என்று இராவணனுக்குஅச்சமூட்டும்வகையில்கேலிசெய்கிருன். இராவணன் வாலியின் வாலின் ஆற்றலை அனுபவத்தால் உணர்ந்து 'அவன் வால் செலாத வாய்அலதிஇராவணன் தன் கோல் செலாது. குடைசெலாது' என்பதைஉணர்ந்து அவனேடுநட்புக்கொண்டான். இராவணனுக்கு வாலியின் இறப்பினுல் இரண்டு அதிர்ச்சி எற்பட வாய்ப்புண்டு. 1. இராம இராவணப் போரில் வாலியின் துணை கிட்டாது. 2. தன்னை வென்ற வாலியேஇராகவன்கணைக்கு இலக்கானுல் அதுவும் ஒரே காலுக்குள் ருல்தான் அழிவதும்போர் ஏற்பட்டால் உறுதியாம் இந்த இரண்டு அதிர்ச்சிகளையும் இராவணனுக்கு உண்டாக்கி 'சந்து' க்கு மனம்திருப்ப வகை கோலுகிருன். எனவே' அஞ்சலை அரக்க'என்ற தொடங்கி அச்சமூட்டும் செய்தியையே கூறுகிருன். எனினும் காமத்தினுல் கருத்திழந்த அரக்கர்கோனுக்கு அது உரைக்கவில்லை.

எனவே அனுமன் அடுத்தபடியாக அவனுக்கு நீதி கூறி அறிவு கொளுத்த விழைகிருன். தான் தூது வந்தது சுக்ரீவன் சொல்லிய சொற்களை அவனிடம் கூறவே என்று தொடங்கி பல் வகையில் அறமுறைகளை எடுத்தியம்புகிருன். இராவணனே அவற்றின் பால் சிந்தை செலுத்தாது 'தூதனுய் வந்த நீ அரக்கரை கொன்றது என்' என்ன,

"காட்டுவாரின்மையால் கடிகாவினை
வாட்டினேன் என்னைக் கொல்லவந்தார்களை
வீட்டினேன்பின்னும்மென்மையினுல்-1உன்றன்
மாட்டு வந்தது காணும் மதியால்2

என்று தன் செய்கைக்கும் ஆற்றலுக்கும் சிறந்தவிளக்கம் தருகிருன். கேட்ட இராவணன் சீறிக் கொல்லப்புக அறவோன் வீடணன் தடுக்கிருன். இராவணன் ஏவலால் அரக்கர் வரலில் தீ வைக்க அதன் வாயிலாகவே இலங்கை முழுதும் எறித்து சீதையைக்கண்டு, தான் திரும்பும் செய்தி அறிவித்து வணங்கி மீண்டும் மகேந்திரத்தில் வந்து குதிக்கிருன். வானரரிடம் அடக்கம் காரணமாக ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டுமேகூற ஏனையவற்றை அவர்கள்

"பொருதமை புண்ணே சொல்ல, வென்றமை போந்ததன்மை
உரைசெய, ஊர் தீயிட்டது ஓங்கிரும் புகையே ஓதக்
கருதலர் பெருமை தேவி மீண்டிலாச் செயலே காட்டத்
தெரிதர உணர்தேம்" என அறிந்து பாராட்டுகிருர்கள்.

அடுத்தபடியாக இராமனிடம் விரைந்து வரும் அனுமன் அவனைத் தொழாது தென்திசை நோக்கி சனகியைத் தொழுது கொண்டே வருகிருன். இதனுல் குறிப்புணர்வதில் வல்ல கோசலாதிபன்

"வண்டுறை ஓதியும் வலியள் மற்றிவன்
கண்டது முண்டு"

எனத்தேறுகிருன். இங்ஙனம் வந்து சேர்வதற்குமுன்னே குறிப்பினுலே செய்தி உணர்த்தும் அனுமன் வந்து சேர்ந்தபிறகு பிற செய்திகளைச் சொல்லினுல் உணர்த்துகிருன். இவை சொல்லின் செல்வனின் ஆற்றலுக்கு எல்லை காட்டுவன.

1. அடக்கத்தால்
2. கண்டு செய்தி உரைக்கும் கருத்தால்.

"உன்பெருந் தேவிஎன்னும் உரிமைக்கும் உன்னைப் பெற்ற
மன்பெரும் மருகிஎன்னும் வாய்மைக்கும் மிதிலை மன்னன்
தன் பெருந் தனயை என்னும் தகைமைக்குத்தலைமை சான்றாள்.
என் பெருந் தெய்வமையா இன்னமும் கேட்டி என்பான்'

"உன்குல முன்னதாக்கி உயர் புகழ்க் கொருத்தியாய
தன்குலந்தன்னதாக்கி தன்னை இத் தனிமை செய்தான்
வன் குலம் கூற்றுக் கீத்தவ் வானவர் குலத்தை வாழ்வித்து
என்குலம் எனக்குத் தந்தான் என்னினிச் செய்வ தெம்மோய்''

"விற்பெருந் தடந்தோள் வீர வீங்கு நீர் இலங்கை வெற்பின்
நன்பெரும் தவத்தளாய நங்கையைக் கண்டேன் அல்லேன்
இற்பிறப் பென்பதொன்றும் இரும்பொறை என்பதொன்றும்
கற்பெனும் பெயரதொன்றும் களிநடம் புரியக் கண்டேன்''

இனி இப்பாடல்களில் காணும் அனுமனின் சொல்லாற்றற் சிறப்பினைச் சிறிது நுகர்வோம்.

முதற்பாடலில் தனிப்பட்டவர்களாய இராமன், தயரதன், ஜனகன், என்போரின் பெருமையை மனைவி, மருகி, மகள் என்ற நிலையில் நிலை நிறுத்தும் தேவி, இராகவனைக் கண்டதிலிருந்து அவனையே தெய்வமெனக் கொண்ட அனுமனை அவன் வாலில் அரக்கர் நெருப்பு வைத்தபொழுது, தாயின் அருள் உள்ளத்தால் கற்பினல் தூயேன் என்னில் எரியே அவனைச் சுடல்' எனக் கட்டயிளைட்டுக் காத்து, அவனுக்குப் பெருந் தெய்வமாகிவிட்டாள். தன் கற்புத் தீயின் ஆற்றலால் அரக்கர் தீயைக்குளிர்வித்த அன்னை அனுமனின் பெருந் தெய்வமானதோடு இவ்வொரு செயலாலேயே தன் கற்பின் திட்பத்தைக் காட்டி மனைவி, மருகி, மகள் என்ற நிலைகளையும் உறுதி செய்துவிட்டாள் என்று அனுமன் கோடி காட்டுகிறான். இப்படி தனிப்பட்டவர்களை மட்டுமா வாழ்வித்தாள்? அன்னை. குலங்களை எல்லாம் கரையேற்றி விட்டாள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதத்தில். பிறந்த குலம், புகுந்த குலம், இரண்டையும் உன் பெயராலும் தன் பெயராலும் விளங்கச் செய்து விட்டாள். 'குழந்தை கிணற்றில் விழுந்தால் ஒக்க விழும் தாயைப்

போல்' வானவர் குலத்தை இராவணன் கொடுமையிலிருந்து காக்க, தன்னைத் தானே துன்பத்திற்காளாக்கிக் கொண்டு, அரக்கர் குலத்தைக் கூற்றின் வாய்ப்படுத்துகிறான். வானவர் குலம் அடிமைத் தளையினின்று கடைத்தேறப் போகிறதென்றால் அரக்கர் குலம் இராமன் கையால் மாய்ந்து பாபத் தளையினின்று கடைத் தேறப் போகிறது. இனி வானரக் குலத்திற்குக் கிடைக்கும் பேறுதான் பெரும்பேறு. ஏற்கனவே பல் மன்னர்களால் விளக்கம் பெற்ற ரகுகுலத்தையும் ஜனககுலத்தையும் இராமன் பெயராலும், தன் பெயராலும், விளங்குவைத்தாள் என்றால், இதுவரை பெயர் ஏதும் பெறாத வானரக் குலத்தை அனுமனுக்குச் சிரஞ்சீவித் தன்மை அருளியதன் மூலம் அவன் பெயராலேயே விளங்க வைத்து விடுகிறாள் என்று பெருமை தோன்ற சுட்டுகிறான் இரண்டாம் பாடலில். அடுத்தபாடலில் அனுமன் இன்னும் ஒரு படி மேலாகவே சீதையைப் பாராட்டுகிறான. குலங்காத்த சீதை இங்கு குணங்காத்த சீதையாக மாறுகிறாள். அவள் வெறும் தவம் செய்யும் தையாலோ. தவம் செய்த தவமாம் தையலோ அல்ல இரும்பொறை, இற்பிறப்பு கற்பு ஆகியவற்றின் மொத்த உரு. இப்பண்புகள் தமக்கு சீதை உருவில் ஓர் வடிவமைந்தமைக்கு களிநடம் இடுகின்றன. இங்கு கம்பனே அனுமனில் கரைந்து சொல்லாற்றலைவெளிப்படுத்துகிறான்.

## பரதன் பால் சென்ற தூது

இது ஒரு பெருந்தலைவனிடமிருந்து அவனுக்கு உட்பட்ட ஒரு சிறு தலைவனுக்கு செய்தி கூறும் தூது. வெறும் செய்தியோடு இருந்திருந்தால் இத்தூதிற்கு அவ்வளவு சிறப்பு இருக்காது. இச், செய்தி ஒற்றறிந்து சிறு தலைனின் உயிர் காக்கும் செய்தி. இராவண வதம் முடிந்து மீட்சிப் படலத்தில் இராகவன் சீதையுடனும், துணைவர்களுடனும் அயோத்தி நோக்கி வந்து கொண்டிருக்கிறான். பரத்துவாசமுனிவன் எதிர்கொள்ள புட்பகம் அங்கு இறங்குகிறது. முனிவனே அண்ணலைக் கண்ட களிபேருவகையில் விருந்துக் கழைக்கிறான். பரதனையேநினைத்து வந்துகொண்டிருக்கும் அண்ணல் பரத்துவாசன் சொல்லைத் தட்டமுடியாத நிலையில் மாருதியிடம் தன் மோதிரம் கொடுத்து "மாருதி ஈண்டச் சென்று தீதின்மை செப்பியத் தீயவித்து இளையோன் நின்ற நேர்மையும் நினைவும் தேர்ந்துஎம்மின் நேர்தல் நன்று" என்றுகூறுகிறான். இராகவன் செய்தியைக் கூர்ந்து

பார்த்தால் இராகவன் தீதின்மை செப்பும் வெறும் செய்தி மட்டும் கூறி அனுப்பவில்லை. ஒற்றறியும் பணியையும் கூறி விடுக்கிறான். 'இளையோன் நின்ற நேர்மையும், நினைவும் தேர்ந்து எம்மின் நேர்தல் நன்று' என்ற சொற்கள் இதைப்புலப்படுத்துகின்றன. சாதாரண நோக்கில் 'பரதன் எப்படிப்பட்ட நிலையில் உள்ளான். என்னையே நினைத்துள்ளானு? அல்லது அரசியல் ஈடுபாட்டால் சிறிது என்னை மறந்த நிலையில் உள்ளானு என்பதை அறிந்து சொல் என்றுபொருள் படும் சொற்கள். அரசியல் நோக்கத்தோடு பார்க்குங்கால் வேறு பொருளையும் கொண்டு அமைவனவாக இருக்கின்றன. அயோத்தி மாநகரை 14 ஆண்டு காலம் பரதன் ஆண்டுள்ளான் இப்போது இராமன் அவ்வரசுரிமையைப் பெற அயோத்தி செல்கின்றான். ஒருக்கால் நல்ல தன்மையுள்ள பரதனையும் இந்த 14 ஆண்டு கால அரசுரிமைச் செல்வம் சிறிது மாற்றியிருப்பதற்கு வாய்ப் புண்டல்லவா? துய்த்த இன்பத்தை துறத்தல் வல்லோர்க்கும் அரிது எனவே இப்போது பரதன் அரசை எனக்காகத் துறக்கும் மன நிலையில் உள்ளானு அல்லது அரசாட்சியை மேலும் தொடர விழைகின்றானு, என்று அறிந்து வா என்ற பொருளைத் தருகிறது என்று கொள்வதற்கும் பொருத்தமாக இச் சொற்கள் அமைந் துள்ளன. இதற்கேற்றாற் போல் மூல நூலில் இக் கருத்துக்கள் அனுமனிடம் இராமனால் வெளிப்படையாகவே சொல்லப்படுகிறன இதை அதற்கும் புறம்பில்லாமல், அதே நேரத்தில் இராம பரதர் களின் பாத்திரப் பண்பு சிதையாமல் இரு பொருள்பட கம்பன் அமைத்திருக்கும் பாங்கு வியந்து பாராட்டற்குரியது.

இராகவன் எதிர்பார்த்தது போலவே பரதன் இராமன்வர வேண்டிய நாளில் வராதது கண்டு தீயில் விழ ஆயத்தமாகிறான். இதை எதிர் பார்த்துத்தான் போலும் அனுமனிடம் 'தீயவித்து' என்றகட்டளையும் இராகவன் இட்டான் போலும். இதைக் கண்ட அனுமன் வான வெளியினின்றே 'ஐயன் வந்தனன்' 'ஆரியன் வந்தனன், என அலறிக்கொண்டே வந்துதீயைக்கையால்பிசைந்துகரியாக்கி, பரதனை காக்கிறான் இலங்கைத்தூதின் போதுதீவைத்த அனுமன் அயோத்தி தூதில் தீ அணைக்கிறான். தன் தலைவன் வாய்மை பிறழாதவன் என்பதைக்காட்ட தவணை முடிய இன்னும் 40 நாழிகைகள் இருப் பதை எடுத்துக்காட்டுகிறான். இராம வருகைக்கு ஏதுவாக அவன்

ஆழியையும் காட்டி பரதனை ஆற்றுவித்து, பிற செய்திகளையும் கூறுகிறான். பின் பரதனின் ஐயம் முற்றிலும் நீங்கத்தான் யார் என்பதையும் தெரிவிக்கிறான். இங்ஙனம் அனுமனின் மூன்றாம் தூது முடிகிறது.

அனுமனின் முதல் தூது சுக்ரீவனின் உயிர் காத்து அவன் பட்டாபிஷேகத்திற்கடிகோலுகிறது. இரண்டாம் தூது சீதையின் உயிர் காத்து வீடணனின் பட்டாபிஷேகத்திற்கடிகோலுகிறது. மூன்றாம் தூதோ பரதனின் உயிர் காத்து இராம பட்டாபிஷகத்திற் கடிகோலுகிறது.

○ **காவியம்**

"பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ் சொற்புலவனே சேயிழையா"

○ **வர்ணனை.**

"யாதேனும் ஒரு பொருளை, அதன் பலதிறப்பட்ட இயல்புகளையும் அறிவு எளிதிற் பற்றுமாறு, அழகும் சுவையும்பட விவரித்துக்கூறுவதுதான் வர்ணனை"

# பரி பாடல் கூறும் வைணவம்

(ஆராய்ச்சிக் கட்டுரை)

திரு R. பத்மநாபன், B. A., B. T.,
வேலூர்-12

சைவ சித்தாந்தத்திற்குச சிறப்பாக அமைந்திருப்பதைப் போல், வைணவ சம்பிரதாயத்திற்கும் தொன்று தொட்டு எண்ணற்ற நூல்கள் மிகவும் சிறந்த முறையில் உதவி செய்து வந்திருக்கின்றன வென்பதை நாமெல்லோரும் நன்கறிவோம் இத்தமிழ் நூல்களில் சாமவேத சாரமாக விளங்கும் நம்மாழ்வாரின் திருவாய்மொழி உட்பட பிரபந்தங்களும், ஏறத்தாழ 10,600 பாடல்கள் கொண்ட இராமாவதாரம் என்ற கம்ப இராமாயணமும், வில்லிபுத்தூர் ஆழ்வார் பாடிய வில்லி பாரதமும், பாரதத்தில் அடங்கிய பகவத்கீதையும், கோதை நாச்சியார் திருவாய் மலர்ந்தருளிய திருப்பாவையும் குறிப் பிடத்தக்கவை. ஆனல் காலத்தால் பழமைவாய்ந்தகடைச்சங்கத்துப் புலவர்கள் அருளிச்செய்த எட்டுத்தொகை நூல்களுள் ஐந்தாவதாக விளங்கும் 'ஓங்கு பரிபாடல்', அருமையும், பக்திப் பெருமையும் வாய்ந்தது. பரிபாடல் என்பது பிரிந்து வருவதென்றும் கூறுவர். தெய்வச் செந்தமிழில் சிறந்த நூல்களில் ஒன்ருகத்திகழும் பரிபாடல் கூறும் வைணவத்தைப் பற்றி ஆராய்வோம்.

சங்க நூலாகிய பரிபாடலில் முதன்முதலில் எழுபது பாடல்கள் இருந்தனவென்றும், அப்பாடல்களுள் எட்டுப் பாடல்கள் திருமா-லுக்கும், முப்பத்தொன்று முருகனுக்கும், ஒன்று சாடு கிழாளுக்கும், இருபத்தாறு வைகையாற்றிற்கும், மதுரைக்கு நான்கும் இருந்தன வென்று அறிகிரேம். ஆனல் இப்பொழுது முதலிலிருந்து தொடர்ந்து இருபத்து இரண்டு பாடல்களும், பழைய உரைகளிற் காணப்படும் இரண்டு முழுப்பாடல்களும், சில உறுப்புக்களே கிடைத்துள்ளன. இவ்விருபத்து இரண்டு பாடல்களுக்குள் திருமாலுக்குரியவை ஆறு பாடல்கள்; அதாவது 1, 2, 3, 4, 13, 15 பாடல்களும்; முருகனுக்குரி-யவை-8 எனவே இப்பதினன்கு பாடல்களும் கடவுள் வாழ்த்தே; வைகைக்குரியவை எட்டுப்பாடல்கள். அதாவது 6, 7, 10, 12, 16, 20, 22 வது பாடல்களாகும்.

நமக்குக் கிடைத்துள்ள பாடல்களில் இரண்டிலிருந்து இருபது பாடல்களுக்குத்தான் அந்தந்தப்பாடலை இயற்றிய ஆசிரியரின் பெயரும், அவற்றிற்கு இசையமைத்தோரின் பெயரும் நமக்குத் தெரிய வருகின்றன; ஆனாலும் திருமாலுக்குரிய 13 வது பாடலுக்கு இசைவகுத்தவரின் பெயர் தெரியவில்லை எனலாம்.

பரிபாடலுக்குப்பலர் உரையெழுதியிருக்கிறார்கள்;ஆனால்திருக் குறளுக்கு உரையெழுதிய பதின்மருள் மிகச் சிறந்த, காஞ்சி வாழ்பரிமேலழகர்' உரையே சாலச் சிறந்ததென்று கொள்ளலாம். காரணம், இவர் திருமாலிடத்தும், திருமாலடியாரிடத்தும் அளவற்ற ஆழ்ந்த அன்பு பூண்டிருந்ததேயாகும்.

திருவாய்மொழி சாமவேத சாரமாக உள்ளது. என்பதை முதன்முதலில் அறிந்தோம் அதுபோல் திருமாலின் பிறப்புகள் பலவற்றையும் சாமவேதம் எடுத்துக் கூறுகிறது என்ற திரண்ட, ஆழ்ந்த கருத்தையும் பரிபாடலில் பார்க்கக் காண்கிறோம்.

பரிபாடலில் திருமாலுக்குரிய 1, 2, 3, 4, 13 15-ஆம் பாடல் களைப் பற்றி மேலும் சற்று விரிவாக ஆராய்வோம். குறிப்பிடப்பட்ட இப்பாடல்களெல்லாம் ஆழ்ந்த பொருட்செறிவும்,உயர்ந்த கவிதைச் சிறப்பும் ஒருங்கே சேர்ந்து அமைந்திருப்பதைப்படிப்போர் நன்கு-ணர்வர்; இவை வைணவ பக்திமார்க்கத்தில் மணி போல் திகழும் பூங்காவை ஒத்த திவ்யப்பிரபந்தங்களின் சீரிய உட்கருத்துக்களைப் பெற்றிருக்கின்றனவென்று துணிந்து கூறலாம். இப்பாடல்கள் 25 அடி முதல் 140 அடிவரையுள்ள பாக்களாகக் காணப்படுகின்றன. இவை இசைப்பாக்களாய் இருந்தலால் பரிபாடலில் இசை வகுக்கப் பட்டுள்ளது என்பதை முன்னமேயே அறிந்தோம்.

கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள பதினான்கு பாடல்களுள் முதல் பாட்டைப் பாடியவர் யாரென்று இதுகாறும் தெரியவில்லை; இரண்டாம் பாடலைப் பாடியவர் கீரந்தையார்; இதற்கு இசை வகுத்தவர் சண்முகனார்; 3, 4, 5-ஆம் பாடலைப் பாடியவர் கடுவன் இளவயினனார்; இப்புலவர் திருமாலுக்குரிய 3, 4-ஆம் பாடலையும் முருகப்பெருமானுக்குரிய 5-ஆம் பாடலையும் பாடியிருப்பதால், அவரிடத்தும் அன்பு பூண்டவரென்று தெரிகிறது. 3, 4, பாடலுக்கு

இசை வகுத்தவர் பெட்டனுகனுர் என்பவர். 13-ஆம் பாடலைப் பாடியவர் நல்லெழுனியார்; இப்பாடலுக்கு இசை வகுத்தவர் இன்னுர் என்பது இதுகாறும் தெரியவில்லை.

15-ஆம் பாடலைப் பாடியவர் இளம்பெருவழுதி என்ற பாண்டியர் பெருங்குடியிற் தோன்றிய ஒரு பேரறிஞர் என்று கூற லாம். இப்பாடலே இப்புலவரது பரந்த விரிந்த அறிவிற்குத்தக்க சான்ருகும். 'உண்டாலம்ம' என்ற செய்யுளைப்பாடி, உலகப்புகழ் பெற்றிருப்பதுபோல், இப்பெரும்புலவரேபரிபாடலில்15ஆம்பாடலும் பாடியிருக்கக்கூடும் என்று கொள்ளுதல்முறையாகும். சிறப்பான இப் பாடலுக்கு இசை வகுத்தவர் மருத்துவன் என்கிற மருத்துவளல் அச்சுதனுர் என்பவரே ஆவார்.

முதற் பரிபாடல் திருமால் வழிபாடு என்பது திருமாமகளோடு கூடிய வழிபாடாகவே கூறுகிறது. 'மாயுடை மலர் மார்பு' என்று குறிப்பாகக் கூறுவதிலிருந்து இக்கருத்து நன்கு தெரிய வருகிறது. ஆதிசேடனைத் திருமாலுக்கு நாகட்பாயாகக் காட்சியளிக்கிறது என்பது இப்பாட்டின் முதலடியான 'ஆயிரம் பிரிந்த', என்ற சொற் ருெடரிலிருந்து தெரிய வரும். இப்பாடல் திருமாலின் கருடசேவற் கொடியையும், சங்கு, பகைவரை ஒழிக்கும் சக்கரம் ஆகியவற்றைப் போற்றி, அவற்றைத் தாங்கும் திருமாலின் திருவடிகளையும் வணங்கு கின்றது. இக்கருத்து திவ்யப்பிரபந்தங்களின் கருத்துக்குப் பொருத் தமாக இருப்பதைக் காண்க.

தவிர, இப்பாடல் திருமகள் நாதனுகிய திருமாலை

'நலமுழுதளை இய புகரறு காட்சிப்
புலமும் பூவறு நாற்றமும் நீ
வலனுய ஒழிலியுமாக விசும்பும்
நிலனு நீடிய இமயமு நீ,'

என்று கற்பனை அழகுடன் வருணிப்பதால், எல்லாத் தெய்வங் களுக்கும் திருமால் அந்தர்யாமி என்ற நம்மாழ்வார் திருவாய் மலர்ந்த திருவாய்மொழிக்கருத்து இப்பாடலில் நன்கு பிரதிபலிப் பதைக் காணலாம்.

எழுபத்தாறு அடிகள் கொண்ட இரண்டாவது பாடல் மிகச் சிறந்த பரிபாடல் பாக்களில் ஒன்ருகும். ஆதிமுதல்வனை திருமால் தீய ஊழிகள் கழிய உலக நலனுக்காக வராகாவதாரம் எடுத்து, செய்தற்கரிய அவதாரச் செயலைப்போற்றுகிறது. பல தேவருக்கு இறைவனுக இருந்தாலும், 'புநீதயிருளுடுக்கைப் பொலம்பினைக் கொடியோர்க்கு மூதியையென்போர்க்கு முதுமை தோன்றல், என்ப, தற்கிணங்க, சிறந்த முறையால் பல தேவருக்கு மூத்தவராகின்ருர் என்றும், உலகத்திலுள்ள பொருள்களையெல்லாம் நிலை பொறுத்து நிற்கும் அந்தர்யாமியான பரம்பொருள் எம்பெருமான் திருமாலே என்றும், திருமாலை அழகு சொட்டச்சொட்ட வாழ்த்துகின்றது. மேலும் இப்பாடல் திருமாலின் படைகளில் ஒன்ருன சக்கராயுதத் தையும், திவ்யத் திருமேனியையும், தேவர்களுக்கு உணவான அமிர்தத்தைக் கடைந்து கொடுக்கும், தனிப்பெரும் ஆற்றலையும் வியந்து, புகழ்ந்து, வாழ்த்தி வணங்குகிறது.

திருமாலுக்குரிய பாடல்களில் மிகவும் பெரியது மூன்ரும் பரிபாடலே; இப்பாடலில் 94 அடிகள் உள்ளன, இப்பாடல் பஞ்ச பூதங்களும், சந்திரனும் சூரியனும் ஐந்து கோள்களும், பசுக்களும் கணக்கற்ற தேவர்களும் திருமாலிடம் தோன்றி பாந்து, விரிந்து கிடக்கின்றன வென்று வேதங்கள் கூறுவதைப்போல், மீண்டும் எடுத்துக்கூறி, திருமாலின் திருவடிகளைப் போற்றிப் புகழ்கின்றது

மேலும் கேசி என்ற கொடிய அசுரனை ஒழித்ததைப்பற்றியும் மோகினியாக வந்து, அசுரர்களை வதஞ்செய்து, அமரர்களுக்கு அமுதத்தை அளித்த திருக்கைகளைப் பற்றியும் வாமனவதாரத்தில் திருமால் உலகளந்த காலத்தில் அசுரர்களை வதைத்து, உலகத்தைக் காப்பாற்றிய அருஞ் செயலைப்பற்றியும் விளக்குகின்றது இப்பாடல் திருமாலின் சிறந்த அம்சங்களை சாமவேதம் எடுத்துக்காட்டுகின்றது என்பதை முன்னமேயே கூறினேம் இதே கருத்து மற்றெரு தடவையும் இப்பாடலில் பிரதிபலிப்பதைக் காண்கிரேம் எல்லா நலன்களும் பெற்ற ஆதிமூலமும், அந்தர்யாமியுமான திருமாலிட மிருந்தே ஜீவராசிகளுக்கு வருகிறன்னவென்று இப்பாடல் கூறுவ தாகும். இதே சீரிய கருத்து திருவாய்மொழியிலும் ஆங்காங்கு பிரதிபலிப்பதைக் காணலாம்.

நான்காம் பரிபாடல் படிப்போர் உள்ளங்களைப் பிணிக்கும் முறையில் திருமாலின் திவ்யதிருமேனியைச் சிறப்பித்துக் கூறுவ

தோடல்லாமல் நரசிங்காவதாரத்தையும், வராகாவதாரத்தையும் அவ்வவதாரங்களின் மேன்மையையும் கூறுகிறது இப்பாடல் மேலும் கருடக் கொடியின் சிறப்பினையும், திருமாமகள் வசிப்பதும், துளவத்தால் மணங்கமழும் பொன் போன்ற ஸ்ரீவத்ஸத்தையுடைய மார்போடு கூடிய திருமாமகள் நாதனையும் போற்றிப் புகழ்கிறது. 'அவரவர் ஏவலாளனு நீயே, அவரவர் செய்பொருட்காரணமு நீயே', என்று கூறும் இப்பாடலின் இறுதியடிகள் கடவுளுக்கும், அன்பர்களுக்கும் உள்ள தொடர்பினைத் தெள்ளத்தெளிய கூறு கிறது. இதே கருத்து திருவாய்மொழியிலும், திருப்பாவையிலும், இன்னும் மற்ற பிரபந்தங்களிலும் பர்க்கக் காண்கிறோம்.

பதின்மூன்றும்பாடல் அறுபத்து நான்கு அடிகளைக்கொண்ட ஒருபாடல், திருமாலை அனுபவித்து, அனுபவித்து உய்வு பெற்ற ஆழ்வார்கள் அருளிச் செய்த பிரபந்தங்களைப் போல் சிறப்புமிக்க தொரு பாடலாகும், ஓசை ஒளி, சுவை முதலியவற்றால்உணரப்படும் நீர் என்றும், நிலமென்றும், பல்லுயிர்களைக் காக்கும் பரந்தாமன் என்றும், எங்கும் பரவியிருக்கும் பரம்பொருள் என்றும், தோன்றி யதும்,தோன்றுகின்றதும்,தோன்றப்போகும் ஊழ்வினைகளைக்கடந்து நிற்கும் தனிக் கடவுள் திருமாலே என்றும் போற்றுகிறது. முற்பிறப் புக்களில் செய்த தவப்பயனால் திருமாலின் திருவடிகளைக்கையால் தொழுது, நாவால் போற்றி,மனத்தால் வணங்கி வாழ்த்துவது பெரும் பேறுகும்; அதற்குமேல் ஆசைப்படுவது வேறொன்றுமில்லை என்ற சீரிய கருத்து திவ்யப்பிரபந்தங்களின் கருத்துடன் பொருந்தியிருப் பதைக் காண்கிறோம்.

திருமாலை வாழ்த்தும் 15-ஆம் பாடல் அறுபத்தாறு அடிகளைக் கொண்டிருந்த போதிலும், பக்திச்சுவையுடன் சொல் நயமும் இயற்கை எழிலும் மிகுதியாகக் கொண்டதொரு சிறப்புமிக்க பாட லாகும். பொற்குடத்திற்குஇடம் பெற்ற பொட்டு போல் அஃது விளங்குகிறது என்று கூறலாம். பல்வளஞ் சுரக்கும் திருமாலிருஞ் சோலைமலையே இப்பூவுலகில் சாலச்சிறந்ததென்று பறைசாற்றுகிறது இதேமலையில் சிலம்பாறு பாய்வதோடல்லாமல், பற்பல சுனைகளையும் தன்னகத்தே நிரம்பப் பெற்றிருக்கிறது. வானளாவிய மரங்களும், செடி கொடிகளும் திருமாலின் புகழை உலகெங்கும் ஓங்கச் செய்கின்றனவாம். இம்மலையில் பாயும் மந்தி களும், கூட்டங்கூட்டமாக அகவும் மயில்களும், கூவும் குயில்களும்

எங்கும் நிறைந்திருப்பதால், இக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருமாலைப் பாட வந்த புலவர், கிருங்குன்றம் என்ற திருமாலிருஞ்சோலைமலையைத் தெய்வமாகவே கருதி, அம்மலை நிற்கும், 'திசை தொழுதனின் சென்மின்', என்று இரு கரங் கூப்பி வணங்குவதைக்காண்கிறோம். பல தேவரும், தண்டு, சங்கு, சக்கரம் முதலிய படைக்கலங்களையேந்திய திருமால் உறையும் திருக்குன்றத்தின் அடிவாரத்திலேறும் தாம் வாழவேண்டுமென்று வேண்டிக் கொள்வதோடு இப்பாடல் முடிகிறது. என்னே இப்பாடலின் கவிதைச் சிறப்பு! ஆசிரியரின் தீவிரபக்தி!

பரிபாடல் திரட்டில் முதற்பாடலில் 82 அடிகளும் திருமாலையும், ஆயிரம் திருமுடிகளைக் கொண்ட ஆதிசேடனையும் வணங்கி வாழ்த்துவதைக்காண்கிறோம். பிரபந்தங்களைப் போல் இப்பாடலும் வைணவ சமயவாழ்க்கையைச்செவ்வனே சமைப்பதற்கு மிகமிகத்தேவை. இங்ஙனம் திவ்யப்பிரபந்தங்களின் கருத்துக்களைத் திரும்பத்திரும்பப் பிரதிபலிக்கும் பரிபாடலை ஆஸ்திக உலகம் என்றென்றும் போற்றி, உலகுக்குத் தொண்டு புரிய வேண்டுகிறோம்.

எழில் சொற்களும், சீரிய கருத்துக் களும்கொண்ட பரிபாடல் வைணவர் தனது தமிழ்த் தொண்டை தரணிக் கெடுத்தோத போதுயானது.

# திராவிட மொழிகளில்

## வண்ணனை அமைப்பும் - வரலாற்று அமைப்பும்

திருமிகு. இரா. கோதண்டராமன் எம். ஏ. எம். ஏ

தொகுதி 71 பகுதி 3ன் தொடர்ச்சி

கல்வி < * கல்வு — இ. * கல்வு < * கலுவு

செல்வம் < * செல்வு—அம். * செல்வு < * செலுவு.

தமிழில் காணப்படும் பெய்வி, கொய்வி, ஆடுவி, பாடுவி போன்ற வினைகளும் செய்வு (< * செய்யுவு) வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றினவாதல் வேண்டும். இதனைக் கருத்தில் கொண்டு செய்வி வாய்பாட்டு வினைகளாகிய இவற்றை வாய்பாட்டு நிலையில் * செய்வு—இ எனக்கொண்டு, இகரத்தின் முன் நிகழும் * செய்வு—என்னும் வினையைச் * செய்யுவு—என்பதன் ஒடுக்கமாகக் கருதலாம்.

* செய்யுவு வாய்பாட்டு வினைகளின் வரலாற்று அமைப்பை * செய்யுவு < * செய்யுபு < * செய்யும்பு < * செய்யும்—பு என ஆராயலாம். இதனைக் கருத்தில் கொண்டு உணர்வு, உயர்வு, தாழ்வ, ஆய்வு, சாய்வு, கல்வி, செல்வம் போன்ற சொற்களின் வரலாற்று அமைப்பை ஆராய்தல் வேண்டும். 1 மேற்படி ஆய்வில் * செய்யும்பு வாய்பாட்டு வினைகளின்றும் * செய்யுபு வாய்பாட்டு வினைகளும், * செய்யுபு வாய்பாட்டு வினைகளினின்றும் * செய்யுவுவாய்பாட்டு வினைகளும் தோற்றம் கொண்ட செய்தி புலனாகின்றது.

1. இவ் ஆய்வு சங்க இலக்கியங்களில் வழங்கும் தன்மை ஒருமை எதிர்கால வினைமுற்றுக்களாகிய மொழிவல் (குறுந்தொகை 273 4), நாணுவல் (நற்றிணை 326 5), வருவல் (ஷி 162 6), செல்வல் (ஷி 258.2) போன்ற செய்வல் (< * செய்யுவல் < * செய்யுவு—அல் வாய்பாட்டு வினைகளுக்கும் பொருந்தும் மேற்படி வினைகள் பின்வருமாறு ஆராயப்பெறும்

1. மொழிவல் < * மொழி—அல். * மொழிவு — < * மொழிபு < * மொழிம்பு < * மொழிம்—பு. * மொழிம்— < * மொழியும் [< * மொழியும்
2. நாணுவல் < * நாணுவு—அல். * நாணுவு— < * நாணுபு [ < * நாணும்பு < * நாணும்—பு
3. வருவல் < * வருவு—அல். * வருவு — < * வருபு < * வரும்பு < * வரும்—பு
4. செல்வல் < * செலுவல் < * செலுவு— அல் * செலுவு— < * செலுபு < * செலும்பு < * செலும்—பு.

பழந்தமிழில் வழங்கும் செய்பு வாய்பாட்டு வினைகள் அனைத்தும் ஃ செய்யும்பு வாய்பாட்டு வினைகளினின்றும் தோன்றிய ஃ செய்யுபு வாய்பாட்டு வினைகளின் ஒடுக்கங்களாகும். ஃசெய்யுபு (< செய்பு) வாய்பாட்டு வினைகளும், அவற்றின் திரிபாகிய ஃ செய்யுவு (< செய்வு) வாய்பாட்டு வினைகளும் அகர விகுதியை ஏற்று செய்யுப, செய்யுவ வாய்பாட்டினவாக அமைந்து முறையே பலர்பால் பொருண்மையையும், பலவின்பால் பொருண்மையையும் உணர்த்தும் எதிர்கால வினைமுற்றுக்களாக வழங்கும் நிலை சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது. செய்யுப (<செய்ப) வாய்பாட்டு வினைகளிலும், செய்யுவ (< செய்வ) வாய்பாட்டு வினைகளிலும் ஈற்றில் நிகழும் பகரத்தையும் வகரத்தையும் முறையே பலர்பால் வினைமுற்று விகுதியாகவும், பலவின்பால் வினைமுற்று விகுதியாகவும் கொள்வார் தொல்காப்பியர்.

1. அர் ஆர் ப என வரூஉம் மூன்றும்
பல்லோர் மருங்கிற் படர்க்கைச் சொல்லே.(சொல்.சேனா 206)

2. அ ஆ வஎன வரூஉம் இறுதி
அப்பான் மூன்றே பலவற்றுப் படர்க்கை (சொல். சேனா 216)

தொல்காப்பியரின் இக்கூற்று வண்ணனை நிலை (Descriptive Level) யில் பொருந்துமே தவிர வரலாற்று நிலையில் பொருந்தாது.

பழந்தமிழில் பலவின்பால் முற்றுப் பொருண்மையை உணர்த்தும் செய்யுவ (< செய்வ) வாய்பாட்டு வினைகள் கன்னடத்தில் நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் பெயரெச்சங்களாக நடைபெறுகின்றன.

ஆடுவ (HGOK). பக்கம் 171) 'ஆடும்/ஆடுகின்ற'
ஆள்வ (< ஃ ஆளுவ) (ஷை 173) 'ஆளும்/ஆளுகின்ற'
ஊதுவ (ஷை 176) 'ஊதும்/ஊதுகின்ற'
எய்துவ (ஷை 178) 'எய்தும்/எய்துகின்ற'

பொகழ்வ (< ஃ புகழுவ) (ஷை 208) 'புகழும்/புகழ்கின்ற'

ஒரே அமைப்பினவாகிய செய்யுவ வாய்பாட்டு வினைகள் தமிழில் முற்றுப் பொருண்மையையும், கன்னடத்தில் பெயரெச்சப்பொருண்மையையும் உணர்த்துவதை நோக்கும்போது,பெயரெச்சப்பொருண்மையை உணர்த்தும் வினைகள் அனைத்தும் தொடக்கத்தில் முற்றுப்

பொருண்மையை உணர்த்தினவாகக் கருதத் தோன்றுகிறது. இதனை அரண் செய்யும் வகையில் செய்த வாய்பாட்டு வினைகள் பழந் தமிழில் பலவின்பால் முற்றுப்பொருண்மையை உணர்த்துவதையும் இன்றும் செய்யும் வாய்பாட்டு வினைகள் தமிழில் பெயரெச்சப் பொருண்மையுடன் முற்றுப்பொருண்மையையும் உணர்த்துவதை-யும் அமைவதைக் கருத்தில் கொள்ளலாம். செய்த வாய்பாட்டு வினைகளின் தொன்மை வடிவமாகிய * செய்தய் வாய்பாட்டு வினைகள் செய்தெ வாய்பாட்டினவாகி காணிக்காரர் மொழியில் இருதிணை ஐம்பால் மூவிடங்களுக்கும் பொதுவாக நின்று முற்றுப் பொருண்மையை உணர்த்துவதை நோக்கும்போது இக் கருத்து மேலும் வலுப் பெறுகின்றது. பேச்சுத் தமிழில் பெயரெயச்சப் பொருண்மையை உணர்த்தும் ஆடின, பாடின போன்ற வினைய-மைப்புக்கள், இலக்கிய வழக்கில் பலவின்பால் முற்றுப்பொருண் மையை உணர்த்துவதையும், இவற்றின் மூலவடிவங்களாகிய * ஆடினய், * பாடினய் போன்ற வினைகள் ஆடினே, பாடினே என அமைந்து முன்னிலை ஒருமை முற்றுப் பொருண்மையை உணர்த்து வதையும், தெலுங்கில் பெயரெச்சப் பொருண்மையை உணர்த்தும் ஆடின, பாடின ஆகியவற்றின் மூல வடிவங்கள் (* ஆடினய், * பாடினய்) பலவின்பால் முற்றுப் பொருண்மையை உணர்த்து வதையும் பெயரெச்சப் பொருண்மையை உணர்த்தும் வினையமைப் புக்கள் தொடக்கத்தில் முற்றுப்பொருண்மையை உணர்த்தின வாதல் வேண்டும் என்பதற்குக் கூடுதல் சான்றுகளாகக்கொள்ளா லாம்.

தமிழில் நிகழ்வு அல்லது எதிர்வுப் பொருண்மையை உணர்த்தும் வினையாலணையும் பெயர்களை செய்பவன், செய்பவள், செய்பவர், செய்பவை ஆகிய வாய்பாடுகளின் கீழ்க் கொணரலாம் இவ் வாய்பாட்டு வினையாலணையும் பெயர்களை * செய்பவு—அன்/அள்/அர்/ஐ என்ற அமைப்பினவாகக் கொண்டு அவற்றின் பகுதி யாக நடைபெறும் * செய்பவு—வாய்பாட்டு வினையமைப்புக்களைப் பின்வருமாறு ஆராயலாம்.

* செய்பவு— < செய்பபு < * செய்பம்பு < * செய்பம்-பு
* செய்பம்— < * செய்பய்ம் < * செய்பய்—உம்
* செய்பய்— < * செய்பு—அய்
* செய்பு— < * செயுபு < * செயும்பு < * செயும்—பு
* செயும்— < * செய்—உம்

பழந்தமிழில் பயின்று வழங்கி இன்று வழக்கற்றுப் போன வினையமைப்புக்கள் பின் வருவனவற்றையும் கருத்தில்கொள்ளலாம்.

பிழிவனம் (பத்துப்பாட்டு 8.60)
நடுங்குவனம் (பத்துப்பாட்டு 8.133)
நடுங்குவனள் (பதிற்றுப்பத்து52.21)
வருவனன் (நற்றிணை 339.5)
வீங்குவனள் (நற்றிணை 179.6)
அறைவனர் (பத்துப்பாட்டு 6.362)
தூங்குவனர் (பத்துப்பாட்டு 6.627)
தருவனர் (நற்றிணை 8.6)
எறிவன (நற்றிணை 375.8)
சுற்றுவன (நற்றிணை 5.4)
மறுகுவன (பத்துப்பாட்டு 6.276)
குடைவன (குறுந்தொகை 46.4)

மேற்படி வினையமைப்புக்களை செய்வனம், செய்வனள், செய்வனர் செய்வன ஆகிய வாய்பாட்டினவாகக் கொள்ளலாம். இவ்வாய் பாட்டுவினைகளை * செய்வன் (< * செய்வனு—அம்/அள்/அர்/அ என்ற அமைப்பினவாகக் கொண்டு அவற்றின் பகுதியாக விளங்கும் * செய்வனு—வாய்பாட்டு வினையமைப்புக்களைப் பின் வருமாறு ஆராயலாம்

* செய்வனு—/ * செய்வநு— < * செய்வந்நு < * செய்வந்து < * செய்வம்—து

* செய்வம் — < * செய்வய்ம் < * செய்வய்—உம்
* செய்வய்— < * செயுவய் < * செயுபய் < * செயும்பய் < * செயும்பு—அய்
* செயும்பு— < * செயும்—பு
* செயும்— < * செய்—உம்.

இவ் ஆய்வில் * செய்வன், * செய்வனு, செய்வம், * செய்வய், * செயும் ( > செய்யும்) ஆகிய வரலாற்று வினைவடிவங்கள் தென்படுகின்றன. இவற்றுள் செய்வன், செய்வம், செய்வய் (> செய்வை/செய்வ), செயும் ஆகிய வாய்பாட்டு வினையமைப்புக்கள் தமிழில் முற்றுப் பொருண்மையை உணர்த்தும் வினைகளாக நடைபெறுகின்றன. செய்வனு என்னும் வாய்பாட்டு வினையமைப்பு கன்னடத்தில் ஆண்பாற்பொருண்மையை உணர்த்தும் எதிர்கால

வினைமுற்றுக்களாக நிகழ்கின்றன.

* செய்வாம் வாய்பாட்டு வினைகள்: தமிழகத்தின் வட மாவட்டங்களில் வழங்கும் பேச்சுத்தமிழில் காணப்படும் வருவாங்க, செய்வாங்க, போவாங்க போன்ற பலர்பால் எதிர்கால வினைமுற்றுக்களையும், குமரிமாவட்டத்து நாடார் தமிழில் காணப்படும் வருவாவ, செய்வாவ, போவாவ போன்ற பலர்பால் எதிர்கால வினைமுற்றுக்களையும் முறையே செய்வாங்க, செய்வாவ ஆகிய வாய்பாட்டு வினைகளாகக் கொள்ளலாம். இவ் இரு வாய்பாட்டு வினைகளையும் பின்வருமாறு ஆராயலாம்.

1. செய்வாங்க < * செய்வாங்கு—அ. * செய்வாங்கு < * செய்வாம்—கு
2. செய்வாவ< * செய்வாவு—அ.
* செய்வாவு— < * செய்வாபு < * செய்வாம்பு < * செய்வாம்—பு.

இவ் ஆய்வினின்றும் செய்வாங்க செய்வாவ ஆகிய இருவாய்பாட்டு வினைகளும் * செய்வாம்—என்னும் வாய்பாட்டு வினைகளின் அடியாகத் தோன்றியமை பெறப்படுகின்றது. ஆண்பாற்பொருண்மையை உணர்த்தும் செய்வான் வாய்பாட்டு வினைகளையும் * செய்வ்வாம் வாய்பாட்டு வினைகளின் மீது தோன்றியனவாகக் கருதலாம். பின்வரும் ஆய்வு இதனைப்புலப்படுத்தும்.

செய்வான் < * செய்வானு/ * செய்வாநு < * செய்வாந்து < * செய்வாந்து < * செய்வாம்—து

கு, பு. து ஆகிய கிளவிகளின் முன் நிகழும் * செய்வாம் வாய்பாட்டு வினைகளின் வரலாற்று அமைப்பைப் பின்வருமாறு ஆராயலாம்.

* செய்வாம் < * செய்வாய்ம் < * செய்வாய்—உம்.
* செய்வாய்< * செய்வு—ஆய்
* செய்வு— < * செயுவு < * செயுபு < * செயும்பு < * செயும்—பு.
* செயும் < * செய்—உம்.

இவ் ஆய்வில் காணப்படும் செய்வாம் வாய்பாட்டு வினைகள் தன்மைப் பன்மை எதிர்கால வினைமுற்றுக்களாகவும், செய்வாய் வாய்பாட்டு வினைகள் முன்னிலை ஒருமை எதிர்கால வினைமுற்றுக் களாகவும் தமிழில் நடைபெறுகின்றன.

*செய்தவம் வாய்பாட்டு வினைகள்: வடமாவட்டங்களில் வழங்கும் பேச்சுத்தமிழில் வந்தவங்க 'வந்தவர்கள்' இருந்தவங்க 'இருந்தவர்கள்', செய்தவங்க செய்தவர்கள்' போன்ற அமைப்பினவாகிய வினையாலணையும் பெயர்கள் காணப்படுகின்றன. இத்தகைய வினையாலணையும் பெயர்களை செய்தவங்க வாய்பாட்டினவாகக் கொண்டு அவற்றைப் பின்வருமாறு வாய்பாட்டு நிலையில் ஆராயலாம்.

செய்தவங்க < *செய்தவங்கு—அ
*செய்தவங்கு— < *செய்தவம்—கு
*செய்தவம்— < *செய்தவய்ம் < *செய்தவய்—உம்
*செய்தவய்— < *செய்தவு—அய்

செய்தவு— இதன் அமைப்பு செய்தவன், செய்தவள் செய்தவர், செய்தவை ஆகிய வாய்பாட்டு வினையாலணையும் பெயர்கள் பற்றிய ஆய்வில் விளக்கப்பெற்றுள்ளது.

இவ் ஆய்வின் ஒரு கட்டத்தில் *செய்தவம் என்ற வாய்பாட்டு வினையமைப்பு ஒன்று தென்படுவதைக் காணலாம். இவ்வாய்பாட்டு வினைகள் பழங்கன்னடத்தில் செய்தவன் என்னும் ஆண்பாற் பொருண்மையை உணர்த்தும் வினையாலணையும் பெயர்களாக நடைபெறுகின்றன (HKL பக்கம் 145) எ—டு பந்தவம் (bandvam) 'வந்தவன்', *செய்தவம் வாய்பாட்டு வினையமைப்புக்களை அடுத்து துகரக்கிளவி பொருந்திய நிலையில் செய்தவன் வாய்பாட்டு வினையாலணையும் பெயர்கள் தோன்றினவாகத் கருதலாம். இதனைப்பின் வருமாறு விளக்கலாம்

*செய்தவம்—து > *செய்தவந்து > *செய்தவந்நு > *செய்தவநு— *செய்தவனு > செய்தவன்.

(தொடரும்)

**புதினம் தொடர்ச்சி**

# காலமும் கோலமும்

[கவியோகி சுத்தானந்த பாரதியார்]

## 8. தொலைபேசியிலே

அறிவொளி மறுநாட் காலை தனியாக மீனாட்சி சந்நிதிக்குச் சென்றான். இன்று தேங்காய் பழம் வாங்கிக் கொண்டு சென்றான். அருச்சனைக்குச் சீட்டும் வாங்கிக் கொண்டான். காலை 6 மணி முதல் அங்கே கூட்டம் வந்தது பல பேர் அருச்சனைக்குக் காத்திருந்தனர். அறிவொளி தர்மகர்த்தாவைப் பார்த்தான். "அண்ணா, நான் உள்ளே சென்று அம்மனைக் காணவேண்டும்; இரண்டாவது, நேற்று நான் கேட்ட பாட்டு என் உள்ளத்தை உருக்கி விட்டது; அதைப்பாடிய சக்தியின் பெயர் அமுதமாம். மீனாட்சி அம்மன் அருளால் நான் அவள் பாட்டை மறுபடியும் கேட்க வேண்டும்." என்று பேச்சைத் தொடங்கினான்.

தருமகர்த்தா: தங்கள் பெயர் என்ன? என்ன செய்கிறீர்?

அறிவொளி: என் பெயர் ஞானப்ரகாசம்; அறிவொளி என்று வைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்குத்தனித் தமிழில் விருப்பம் மிகுதி.

தருமகர்த்தா: நீர்தான் அறிவொளியா? அப்படிச் சொல்லும்: பேச்சழகன் என் மைத்துனன் அவன் தங்களைப்பற்றிச் சிறப்பாகச் சொன்னான். தாங்கள் என்ன செய்கிறீர்கள்?

அறிவொளி: நான் கல்லூரியில் இறுதி B. Sc. படிக்கிறேன். கணக்கிலும் பௌதிகத்திலும் எனக்கு ஆர்வம் அதிகம். அத்துடன் தமிழ் இலக்கியமும் படிக்கிறேன், இதுகாறும் எனக்குக் கடவுளிடத்தில் நம்பிக்கை இல்லாதிருந்தது. நான் யாரையும் வணங்கியதில்லை. நான் வணங்காமுடிப்பித்தன்.

தர்ம: அப்படியெல்லாம் சொல்ல வேண்டாம். முதலில் மீனாட்சி தரிசனம் செய்து வாருங்கள் என்று நேராக குருக்களிடம் அழைத்துச் சென்றார். குருக்கள் 'நட்சத்திரம் என்ன' என்று கேட்டார் எனக்கு ஆகாயத்தில் மினுக்கும் உடுக்களே தெரியும். அறிவொளியின் ஆர்வம் நிறைவேறுக என்று அம்மனுக்கு மலர்தூவுக; மந்திரம் தமிழிலேயே நடக்கட்டும்.'' குருக்கள் தமிழிலேயே அருச்சனை செய்து முடித்து கற்பூரம் காட்டி அறிவொளிக்குக் கனிகளும், தேங்காய் மூடியில் திருநீறு குங்குமமும் வைத்துத் தந்தார். தருமகருத்தா அவனை அழைத்துக்கொண்டு கோயிலை வலம் வந்து பிறகு வீட்டிற்கு இட்டுச் சென்றார். அவர் வீடு மேலாவணி மூல வீதியில் அழகாக அமைந்திருந்தது. அதில் இரண்டு மாடிகள் இருந்தன. உள்ளே சென்றதும், தருமகருத்தாவின் மனைவி ஒரு வெள்ளித்தட்டில் பொங்கலைக்கொண்டு வந்து வைத்தாள். அறிவொளி சிறிது உண்டு, "வீடு சுத்தமாயிருக்கிறதே மிக்க மகிழ்ச்சி திருவாசகம் பாடுகிறேன் கேளுங்கள்'' என்றான். அப்படியே பாடினான். அடுத்த வீட்டுக் காரரெல்லாம் வந்து கூடிவிட்டனர். குரல் தெளிவாயிருந்தது "மெய்தான் அரும்பி'' பாடிய பிறகு "ஒருவனே போற்றி ஒப்பில் அப்பனே போற்றி''...... என்று பாடும்போது அறிவொளி கண்ணீர் விட்டான். திருவாசகத்தில் மெய்மறந்தான். 'யானேயோ தவம் செய்தேன்...' என்ற பாட்டைப் பாடிய பொழுது டிரங்...டிரங்!... தொலைபேசி அழைத்தது; குருக்கள் பேசுகொம்பைக் காதில் வைத்துக் கொண்டு ஓம், யாரது', என்று கேட்டார். நான்தான் மாமா, அமுதம்', என்றதும் அமுதமா, நேற்றுப் பாட்டு மிகமிக நன்றாயிருந்தது அம்மா. எல்லோரும் கேட்டு மகிழ்ந்தனர்.

அமுதம்: காதினால் கேட்டென்ன, உள்ளத்தால் கேட்க வேண்டும். நானா பாடுகிறேன்? தேவி மீனாட்சி பாடுகிறாள்.

தர்மகர்த்தா: ஐயம் என்ன? அங்கயற்கண்ணிதான் தங்கள் உள்ளத்திலிருந்து இன்னிசை பொழிகிருள். அப்பா நன்ருயிருக்கிருரா? தம்பிகளுக்கு தேர்வு முடிந்ததா? தாங்களும் மேற்கொண்டு படிக்கவேண்டுமே?

அமுதம்: அப்பா தொலைபேசி மேற்பார்வைக்குத் திருமங்கலம் சென்றிருக்கிருர். நான் இசைச் செல்வத்தையே சிறப்பாகக் கல்லூரியில் கற்க வேண்டுமென்று அப்பா சொல்லுகிருர்.

தர்ம: அத்துடன் நாட்டியமும் கற்ருல் நன்ருயிருக்கும்.

அமு: நாட்டியம் கற்று முடித்து விட்டேனே! ஏழு வயதில் தொடங்கி பதினெறு வயதுக்குள் நாட்டியம் கற்று அரங்கேற்றியாகி விட்டது. நடனஞ்சலி என்ற நூல் முழுதும் நாட்டியமாடி படம்பிடித்து ஆல்பத்திலே ஒட்டி வைத்திருக்கிறேன். இப்போது இசையுடன் தமிழும் தாவரமும், முதன்மையாகப் பயில்வேன். இசையின்பத்தில் செடிகளும் ஈடுபட்டு வளம்பெறுவதாக J. C. போஸ், லூதர்பர்பேங்கு போன்ற அறிஞர் கருதுகின்றனர். நானே ஒரு தோட்டம் போட்டு தண்ணீர் வார்ப்பதுடன் இசையையும் வார்த்து வளர்க்கப் போகிறேன். பாட்டும் பயிரும் என்ருெரு நூலும் எழுதுவேன்.

தர்ம: அமுதப்புலமை அற்புதமானது; அங்கயற்கண்ணி வெற்றியருளுக—

அமு: வெள்ளிக்கிழமைகளில் மீனுட்சி சந்நிதியில் பாடுவதற்கு நீங்கள் தடையில்லாது ஏற்பாடு செய்ய வேண்டும். எனது தோழி வீணுவும் யாழ்மீட்ட இசைந்துள்ளாள். என்வாழ்வெல்லாம் மீனுட்சிக்கே வேள்வியாக வேண்டும்.

தர்ம: அதுவே என் இன்பம். அவ்வாறே செய்வேன். அடுத்த வெள்ளிக்கிழமை தாங்கள் இன்பத் திருப்புகழ் பாட வேண்டும்.

அமுதம்: சொல்ல நினைத்தேன்: தாங்களே சொல்லிவிட்டீர்கள் இன்பத்திருப்புகழ்முழுதும் சித்தாந்தக்கருத்துக்களே. அவற்றைப் பாடுவதே சமயத்தைப் பரப்புவதாகும்.

தர்ம: இந்தக்காலம் இசையின்பத்துடன் சமய உண்மைகளைச் சொன்னாலே மக்கள் சுவைத்துக் கேட்கின்றனர் அம்மா. தாங்கள் அடியார்களுடைய வரலாறுகளையும் இசை விருந்தாக அளித்தால் நன்றாக இருக்குமே.

அமு: அடுத்த ஆண்டு முதல் நான் இசைச் சொற்பொழிவுகள் ஆற்றுவதாக உள்ளேன். எல்லாம் மீனாட்சி சகாயம். சிவப்பழம் சங்கரன் எப்போது வருவான்?

தர்ம: நமது பையன் சங்கரன் சென்னையில் லயோலா கல்லூரியிலே படிப்பை முடித்து விட்டான். அவன் M. Sc. எழுதியிருக்கிறான். இரசாயனத்தில் நல்ல அறிவு. அவன் நன்றாகப் பிடில் வாசிக்கிறான் மிருதங்கம் அடிக்கிறான் அவன் வாழ்க்கை எந்தப் பாதையில் திரும்புமென்று தெரியவில்லை. தன் பெயரைக்கூட அன்புக்கனி என்றுவைத்துக்கொண்டிருக்கிறான். அவனும் தனித்தமிழ் வேட்பவனே.

அமு: நல்லதுதானே; தமிழர் தமிழகத்திலே தூயதமிழ்பேசி தமிழர் பண்பாட்டை வளர்ப்பது தகவே; நல்லது வணக்கம். டக்! பேச்சுக்கொம்பு கீழே வைக்கப் பட்டது. இந்தப் பேச்சையெல்லாம் அறிவொளி காது கொடுத்து நுனித்துக் கேட்டுக்கொண்டிருந்தான். பேச்சு நின்றதும் அறிவொளி ஆவலாக "நான் தேடிய பொருள் கிடைத்து விட்டது; அமுதமும் கல்லூரி மாணவியா? அவள் வீட்டுமுகவரி என்ன"? என்று தர்மகர்த்தாவைக் கேட்டான்.

தர்ம: அறிவொளி, அமுதத்தை நீ எப்படிப் பார்க்கிறாய்? அவள் வீட்டுவிலாசம் உனக்கு எதற்கு? அவளுண்டு, படிப்புண்டு, பாட்டுண்டு. அவள், அப்பா ஆணையில்லாமல் யாரையும் காண்பதில்லையே.

அறிவொளி; என் உள்ளத்தைக் கவர்ந்த இசைச் செல்வம் எந்த வீட்டில் எழுந்தது என்பதை நான் அறியக்கூடாதா? அண்ணு, அமுதம் என்ற பெயர் தமிழ்போலவே இனிக்கிறது. அமுதம் ஆடல், பாடல், அழகு, அறிவு, அனைத்திலும் சிறந்து விளங்குகிருள். அந்தச் செல்வியின் தாய் தந்தையரைக்கண்டு இவ்வளவு நல்ல ஆன்மாவைப் பெற்றதற்காக நன்றி கூறத் தான் கேட்கிறேன். எனக்கு வேறு அவா கிடையாது.

தர்மகர்த்தா: அமுதம் தந்தை மலையப்பர் இங்கே மின்கண்காணி (Electric Supervisor) அவர் சிறந்த குருபக்தர். எளிய நிலையிலிருந்து தன் முயற்சியால் முன்னேறிய உழைப்பாளி. அவர் குரு சமயோகி, கவி, மவுனி, ஞானி, உலகறிந்த புலவர். அவரே அந்தக்குடும்பத்திற்கு வழி காட்டி. நாங்களெல்லாம்சமயோகியின் அன்பர். கடவுள் ஒன்று, உலகம் ஒன்று, வானம் ஒன்று, உயிரினம் ஒரே ஆன்மரேயக்கூட்டம் என்பது அவர் கொள்கை; அதுவே எங்கள் நம்பிக்கை.

அறிவொளி: அவ்வாறே என் சிந்தனையும் என்னை உந்திச்செல்லு கிறது. அமுதம் வீடு எங்கே--சொல்லும்.

தர்ம வீடு ஆற்றைத்தாண்டி, அழகர் கோயில் பாதையில் உள்ளது. முதலில் சொக்கிகுளத்தருகேயுள்ள மின்வாரிய அலுவலகத்திற்குச் செல்லுங்கள். மலையப்பரைக் காண்பீர்.

மின் வாரியத் தலைவர் மீனுட்சி சுந்தரனுரே என் தந்தை. நான் மலையப்பரை எளிதாகக் காண்பேன்......... சென்று வருகிறேன்.

## 9: கலையும், மலையும்

(தொடரும்)